Koviloor Digital Library

அகண்ட பாரத

தேவி

கட்க ▽ மாலா மண்டலியின்

ஒரே தீர்வு

ACC NO: 5218
R65

Koviloor Digital Library

உ

ஸ்ரீமாத்ரேநம:

(முதல் பாகம்)

புருஷார்த்தம் - தர்மம் (அறப்பேறு)

சமர்ப்பணம்

தர்மம் (அறம்) – அர்த்தம் (பொருள்) – காமம் (இன்பம்) – மோக்ஷம் (வீடு) ஆகிய நான்குவித நிதிகளையும் (புருஷார்த்தங்கள்) ஈட்டித் தரவல்ல நான்கு பாகங்கள் கொண்ட இந்நூதனத் தோத்திரத்திரட்டு (நான்கு அரிய தோத்திரங்களின் தொகுப்பு), நம் பாரதப் புண்யபூமியின் மக்களுக்கு

குறிப்பாக இளைய தலைமுறைக்கு நெஞ்சார்ந்த நல்லாசிகளோடு சமர்ப்பணம்.

முன்னுரை

ஆயிரமாண்டு

மூன்றாம் ~~நூற்றாண்டு~~ துவங்கி இரண்டாவது ஆண்டில் வாழ்கிறோம். இந்தக் கணக்கு ஆங்கிலேயர் நிறுவியது. இதற்கு முன்னரேயே நம் தமிழ் மண் எத்துணை சிறந்த நாகரிகத்தோடு வாழ்ந்து கொண்டிருந்தது என்பதனைக் கட்டியம் கூறும் கருவூலமாக, காலத்தால் மறையாத கல்வெட்டெனத் திகழ்வது திருவள்ளுவர் பெருமான் வழங்கியுள்ள திருக்குறள் எனும்

Koviloor Digital Library

தந்நிகரிலாப் பொக்கிஷம். (தற்போது திருவள்ளுவர் ஆண்டு 2034 நடைபெறுகிறது.)

இந்தப்பொக்கிஷம், எந்தக் காலத்திற்கும், எந்த நாட்டுக்கும், எந்த மக்களுக்கும் ஏற்புடையதாக, நன்மையே விளைப்பதாக அமைந்து வழிகாட்டியாக நிலைக்கக்கூடிய அந்தஸ்தோடு சுடர்விட்டுப் பிரகாசிக்கும் சாஸனம். அநேகமநேகம் உலகமொழிகளில் வெளியாகி உலாவந்து கொண்டிருக்கும் வரப்பிரசாதம்.

இன்னும், ஐயாயிரம் ஆண்டு தொன்மையான தொல்காப்பியம், புறநானூறு, பின்னர் சோழர்கால ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் என்று நீதி உரைதாங்கிய அநேகம் நிதிக்குவியல்களில் புகுந்து பார்த்தால், நம் முன்னோரின் மாண்பும், கண்ணியமும், நாகரிகமும், ஒழுக்கச் சிறப்பும், கட்டுப்பாடான, கட்டுக்கோப்பான, வாழ்க்கைக் கோட்பாடுகளின் வரையறை வழுவாத அணுகுமுறையும் இயக்கமும் எவரையும் பிரமிக்க வைத்து, நமது இன்றைய கேலிக்கூத்தான நவநாகரீகப் போக்கின் பேரோசையையும், போலித்தனத்தையும், “புல்” தன்மையையும் நினைத்து பரிதாபப்படவும் வெட்கப்படவும் வைக்கும்.

Koviloor Digital Library

இன்றைய இளைஞர், விதுர நீதியைப்படித்தால் நம் அன்றைய பாரதமும் அதன் பெருமக்களும், நாம் பெருமைப்பட்டு நெஞ்சை நிமிர்த்தி மார்தட்டிக்காட்டும் அளவுக்கு, எவ்வளவு மேன்மையாக, மேன்மக்களாக, வாழ்ந்து இறைவனுக்கினிய செல்வமாகத் திகழ்ந்தார்கள் என்பது தெளிவாய்ப் புரியும். அந்நாளைய மக்களும், நல்லவர்களும், தீயவர்களின் கை ஓங்கியதன் காரணமாய், பேரவதியுறுவதைத் தவிர்க்க, மாயக் கண்ணபிரான் அவதரித்து, ஆயுதத்தைத் தொடாமலேயே, தன் எண்ணத் திண்மையால் தனித்திறத்தால் அநீதியை அழித்தொழித்து விட்டு, நீதி நிமிர்ந்து நிலைத்து, மக்களுக்கு உறுதுணையாகவும், பாதுகாப்பாகவும், கேடயமாகவும், நல்வாழ்வுக்கு ஆதாரமாகவும், ஆதரவாகவும் பொருந்தி வழிநடத்த –

மக்கள் எவ்வாறு இறைவனை முழுமையாய்ப் புரிந்துகொண்டு, தர்மம் தழைக்க வாழ்ந்து, சுபீட்சம் நிறைய, சாந்தி நிலவ அஸ்திவாரமாய் அமைந்து கொள்ள வேண்டும் எனும் வரையறைகளைக் கொண்ட "பகவத்கீதை"யை உபதேசித்து விட்டுச் சென்றதை,புராணம் என்று தள்ளிவைத்துவிட்டு இன்று எதை எதையோ வழிகாட்டியாக அமைத்துக் கொண்டு அதன்

Koviloor Digital Library

மோஹத்தில் சிக்கிச் சீரழிவுடன் சீராடிக் கொண்டிருக்கிறோம்.

இளையபாரதமே! தமிழின இளம்செம்மல்களே, சற்றுப் பரிவுடன் செவிசாய்க்க வேண்டுகிறேன்! இசைவீர்களாக!

அன்று – ஆங்காங்கு –

சாமானியர் (பாமர மக்கள்) வாழ்க்கையின் புதிர்ப் போக்கினை நன்கு உணர முடியாமல் குழம்பி, தான்தோன்றித்தனமாய் எளியாரை வலியார் வாட்டும் கொடுமையினை இயல்பான தலைவிதியாய் ஏற்று மனித உருவில் நடமாடும் கால்நடையென வாழ்ந்த காலத்தில் –

இறைவன் திருவுள்ளப்படி, ஆங்காங்கே, வெவ்வேறு காலக் கட்டங்களில் – தேவதூதர்கள் தோன்றி மக்களை சமரசப்படுத்த அறத்தின் இன்றியமையாத் துணையை வலியுறுத்தி சமயம் எனும் அருங்குடையின் நிழலில் மக்களைத் திரட்டி இறைப்பற்றின் பெருமையை நிலைநாட்டி, ஒவ்வொருவரும் நல்லவராக வாழ்வதே நெறி என வரையறுத்து–

தம்முடன் கூடவே இருந்து நற்பணியாற்றிய நல்லவர்களிடம், வல்லவர்களிடம், தாம் வகுத்த வரையறைகளை பழுதுபடாமல் காத்து மக்களை

Koviloor Digital Library
வழிநடத்துமாறு பணித்து விட்டுத் தாம் வந்த வேலையை முடித்துக் கொண்டு திரும்ப இறைவனிடமே போய்ச் சேர்ந்தனர்.

எந்த சமயத்தின் தோற்றத்தை எடுத்துப் பார்த்தாலும் மேற்சொன்னவாறே அவை நிகழ்ந்தன என எவரும் எளிதாய் புரிந்து கொள்ளலாம். இந்த தேவ தூதர்களிடம் வேற்றுமை உணர்வே இருந்ததில்லை. யாவரையும் இறைவனின் குழந்தைகளாய்ப் பார்த்தார்கள். எளிமையாகவே வாழ்ந்து காட்டி நம்மை நற்குடிமகனாக வார்க்கப் பாடுபட்டார்கள். சகிப்புத் தன்மையின் பெருமையை நிலைநாட்டினார்கள்.

இது நான் ஸ்தாபித்த மதம் என்று அவர்கள் சொல்லவேயில்லை. தம்மை எக்கட்டத்திலும் முன்நிறுத்தாமல் இறைவனையே ப்ரதானமாய் வைத்து போதனை செய்தார்கள். பின்னால் வந்தவர்கள்தான் இவர்கள் பெயரில் அப்படிச் சொன்னார்கள்.

தேவ தூதர்கள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு மதங்கள் நிலவுகின்றன என்பதை ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை. அவர்கள் கண்ணில்பட்டதெல்லாம், அவர்கள் எந்த மக்கள் மத்தியில் அவதரித்தார்களோ அந்தமக்களின் தேவை பற்றித்தான்; கவலைப்பட்டதெல்லாம்,

Koviloor Digital Library

அம்மக்களின் மேம்பாடு பற்றித்தான்.

தேவ தூதர்கள் வேறு மதங்களை மறுக்கவோ, வெறுக்கவோ சொல்லவே இல்லை.

இறைவன் ஒருவனே என மட்டும் வலியுறுத்தினார்கள்.

உலகம் இறைவன் படைத்த பண்ணை வீடு. ஆங்கு உள்ளவை யாவும் அவன் செல்வங்கள். மக்கள் யாவரும் அவன் குழந்தைகள், ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தியே வாழ்ந்தாக வேண்டும், இதில் எந்தவித மாறு பட்ட கருத்துக்கும் இடமேயில்லை என அறுதியிட்டார்கள்.

இவ்வளவு சீரிய கட்டுப்பாடான கட்டளைகளை, தேவதூதர்களின் அடிச் சுவட்டைப் பின்பற்ற வந்தவர்கள், காலம் கரையக் கரைய, அக்கட்டளைகளை, ஒரு பரந்த நோக்கிலிருந்து குறுகிய நோக்கினுள் திணித்து, இது எம் மதம், எம் கடவுள், எம் கொள்கைதான் சீரியது என்றெல்லாம் பாகுபாடுகளையும் வேறுபாடுகளையும் பயிர் செய்து வெகுவாக, வேகமாகப் பரவ விட்டு, அந்த வேகத்தில் விளைந்த போட்டியால் பகைக் கண்ணோட்டம் விதைத்துக் கொள்ளவே –

Koviloor Digital Library

இன்று எம்மதமும் சம்மதமே என்ற நமது தொன்மையான பண்பாடு கொச்சைப் படுத்தப்பட்டு, மதச்சார்பின்மை (SECULARISM) எனும் போலியான கோஷம் வலுப்பெற்று அந்தந்த நாட்டின் மக்களே தங்கள் தங்கள் நாட்டில் முழுமையான சுதந்திரத்தோடு நிம்மதியாய் நடமாட முடியாமல் முட்டுக்கட்டை போட்டுள்ள கொடுமையை ஆழ்ந்து சிந்தித்துப் புரிந்து கொள்ள வேண்டும்.

எம்மதமும் சம்மதமே என்ற தொனியில் எவ்வளவு பரந்த நோக்கம் இழையோடுகிறது? சுதந்திர உணர்வின் தன்மை, அன்பின் தாக்கம், சகிப்புத் தன்மையின் ஆழ்ந்த பரிமாணம், எவ்வளவு தெளிவாகக் காட்சியளிக்கின்றன.

ஆனால் 'மதச்சார்பின்மை' எனும் கோஷத்தில் குறுகிய நோக்கமும் அடக்கு முறையும் எவ்வளவு சாமர்த்தியமாய் ஊடுருவியுள்ளது?

இது சரியா என்று ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்த இளைஞனும் சிந்திக்க வேண்டும். யாவரும் ஒன்று கூடி அழகான தீர்வை எட்ட வேண்டும். செய்வீர்களா?

Koviloor Digital Library

இன்று –

நீங்கள் காணும் சட்டம், காவல்துறை, நீதித்துறை இவை இரண்டு நூற்றாண்டு ஆங்கிலேய அங்கி அணிந்த சிறார்கள்! இவர்களை விட எத்தனையோ ஆயிரமாண்டு மூத்தவர்கள், நமது பாரம்பர்ய, கொத்தவால்கள், ஊர்க்காவலர்கள், தலையாரிகள், நாட்டாண்மைகள், பஞ்சாயத்தார்கள், கிராமாதிகாரிகள், நீதிபதிகள், இன்னும் ஏனைய மேலதிகாரிகள், இராணுவ வீரர்கள், ஒற்றர்கள், அமைச்சர்கள், சிற்றரசர்கள், மன்னர்கள், மாமன்னர்கள் ஆகியோர்.

இன்று முடியாட்சி வேண்டுமானால் முடிந்து போனதாக இருக்கலாம். ஆனால் மக்களின் வாழ்க்கை இயந்திரம் சீராக இயங்க மற்றெல்லாத் துறைகளும் முறைகளும் அமைப்புக்களும் இன்றியமையாத்தேவைதானே. அவை எவ்விதக் களிம்பும் படிய இடங்கொடாத உரமான உலோகத் தரத்தோடு இயங்கினால் தானே சுபீட்சமும் (தந்நிறைவும்) சாந்தியும் (அமைதியும்) நிலவ முடியும்? இன்றைய யதார்த்தத்தை கூர்ந்து கவனித்தால் நாம் எதிர்பார்க்கும் தரம் எங்கேனும் தட்டுப்பட வாய்ப்புள்ளதா? சிந்தியுங்கள்!

Koviloor Digital Library

அரசர் உட்பட, பண்டைய மேன்மக்கள் அவரவர் பொறுப்பை முட்கீரிடமாக ஏற்று எச்சரிக்கையோடு எவ்வாறெல்லாம் தம் பணியை ஒரு வேள்வித் தரத்தில் நிர்வகித்து வந்துள்ளார்கள் எனும் பேருண்மையை வரலாற்றிலிருந்து மேய்ந்து, அசைபோட்டு, தெளிந்து ஒரு புதிய யுகம் அமைக்க உங்களில் ஒவ்வொருவரும் ஆயத்தாமாகுங்கள்.

முதலில் அவரவர் வீட்டை எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் வீட்டிலுள்ளோரில் யார் நல்லவர் வல்லவரென உங்களுக்கு நன்கு தெரியும். அவரை முன்நிறுத்தி அவர் காட்டும் வழியில் அடியெடுத்து வையுங்கள்.

இப்படியாக ஒவ்வொரு வீட்டின் தலைவர்கள் ஒன்று சேர்ந்து அந்தந்த தெருவுக்கு ஒரு அறப்பாசறை அமைத்து அதன் தலைமையை போட்டியில்லாமால், ஒரு நல்லவரிடம், வல்லவரிடம் ஒப்படையுங்கள்.

அறப்பாசறையின் குறிக்கோள் – நற்பணிகள், ஆபத்துக்குதவுதல், ஒழுக்கத்தை நிலை நாட்டுதல், ஒழுக்கக்கேட்டை வேரறுத்தல், ஒற்றுமையை வலிவான அரணாக நிர்மாணித்தல், எளிமையாகவும் வெளிப்படை யாகவும் வாழும் பழக்கத்தை நடைமுறைப்படுத்த

Koviloor Digital Library

முழு முயற்சியுடன் ஈடுபடுதல், உங்கள் தெருவின் நாட்டாண்மை, பெருமை சேர்க்கும் விதமாகச் செயலாற்ற உங்கள் பரிவான ஒத்துழைப்பைத் தந்து செயலாற்றல், இன்னும் தேவைக்கேற்ற சீரிய பணிகள் என அமைய வேண்டும்.

இவ்வாறே பல தெருக்கள் கொண்ட பேட்டையில் அப்பேட்டைக்கு தலைவர்களாக பஞ்சாயத்தார்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் செம்மையாய்ச் செயல்பட ஆரோக்யமான சூழலை அமைத்துக் கண்காணித்து வாருங்கள்.

இதே போல் அடியிலிருந்து நுனி வரை அந்தந்தப் படியில் அமர வேண்டிய தலைமையை அதன் கீழே அடுத்த படியிலுள்ள தலைமைகள் போட்டியின்றி தேர்ந்தெடுக்க ஊக்கமளியுங்கள். போட்டி தவிர்க்க முடியாத ஒன்றாக நீதியின் அடிப்படையிலே எப்போதாவது நேருமானால் இருக்கவே இருக்கிறது – நமது பண்டைய குடவோலை ஏற்பாடு. அதனை மேற்கொள்ள வையுங்கள்.

"ராஜராஜசோழன், ராஜேந்திர சோழன், குலோத்துங்கசோழன், காலங்களில் முடியாட்சியோடு குடியாட்சியும் இணைந்து செயல்பட்டாற் போன்ற செய்தி வரலாறுகளில் ஒளிந்து கொண்டிருப்பது

Koviloor Digital Library

காணக்கிடைக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ப்ரபுக்கள் (குடியாட்சி பிரதிநிதிகள்) முடியாட்சியின் மனச்சாட்சியாக செயல்பட்டிருப்பார்கள் என ஊகிக்க நிறைய இடமிருக்கிறது, வரலாற்றின் ஓட்டத்திலே!"

எத்தனையோ நூற்றாண்டுகள் முதிர்ந்த ஜனநாயகம் என்று பெயரிடப்படாத, குடியாட்சி, முடியாட்சியோடு கைகோர்த்து நாட்டை நேரிய நெறிவழிப்பாதையில் இறையொளி வீச நடத்திச் சென்ற பெருமையை இன்றைய புதிய மேலைநாட்டு ஜனநாயகம் ஒரு நாளும் எட்டப்போவதில்லை.

எனவே, இந்தப் போலி ஜனநாயக எண்ணிக்கைச் சூதாட்டம் நமக்கு வேண்டவே வேண்டாம். மேலே குறிப்பிட்ட நம் பண்டைய ஜனநாயக, போட்டியின்றி தேர்ந்தெடுக்கும் மரபு அல்லது அவசியமென்றால் குடவோலை மரபு இவைகளும், நமது ஒழுக்கம் குன்றாத வாழ்க்கை முறையும் – இமயமென நிமிர்ந்து நிற்கக் கூடிய, தன்னுருமோஹமில்லாத –

Koviloor Digital Library

தன்னுருமோஹம்

(தற்பெருமை கொப்பளிக்கும் தன்னையே, தனது உருவத்தையே எதையும் விடமேலானதாக எண்ணும் மயக்கம்)

இது ஒரு கொடிய நோய். இதற்குரிய ஒரே மருந்தான தன்னடக்கம் (Humility) என்னும் மருந்தை நோயாளி விரும்பி ஏற்றுக் கொண்டாலொழிய வேறு மாற்று வழியே கிடையாது. இந்த தன்னுருமோஹம் எவ்வாறு மனிதனில் விதைத்துக்கொண்டு ஆழ்ந்து வேர் கொள்கிறது என்று ஆராய்வோம்.

நம் பெற்றோர் நமக்கு ஒரு பெயர் இடுகிறார்கள். குறிப்பாக சிறுவயதிலிருந்தே அவ்வப்போது நம் செயல்பாட்டினைப் போற்றியோ தூற்றியோ, நமது சூழல் நமக்கு ஒரு தனித்தன்மை ஏற்பட வாய்ப்பை வகுக்கிறது. நாமும் அடிக்கடி நம் பெயரை நினைவுபடுத்திக் கொண்டே – நாம் இப்படியாக வேண்டும், அப்படியாக வேண்டும் எனும் கற்பனையில் இறங்கி நம்பெயரைத் தாங்கிய நம் உருவத்தை அடிக்கடி நினைத்து ஓயாமல் அந்த உருவின் நினைவிலேயே, எதிர்காலக் கனவிலேயே கற்பனையான நமது அவ்வுருவை ஆராதிப்பதில் இறங்கி விடுகிறோம்.

Koviloor Digital Library

இறைவனை இசைவுடன் இடைவிடாமல் ஆராதிப்பதிற்குப் பதிலாக இறைவனின் கைப்பாவையான நம் உருவை வெகு முனைப்பாக ஆராதிக்கிறோம். அலட்சியப் போக்கும், திமிரும் நம் நடப்பில் இயல்பாக மாற வாய்ப்பு மலிந்து விடுகிறது.

இந்த தன்னுருமோஹத்தின் அநேக பரிமாணங்களைச் சுட்டும் பெயர்கள்தான் அஹந்தை, மமாகாரம், அஹங்காரம், ஆணவம், திமிர் என்பனவெல்லாம்.

அவற்றின் தத்துப் பிள்ளைகள்தான் பிறரை ஏளனமாக மதித்தல், எவர் சொல்லையும் காதில் விழுமுன்பே உதாசீனப்படுத்தல், பிறரைவிட தன்னை எல்லா விதத்திலும் சிறந்தவனாக எண்ணிக் கொள்வதோடு மட்டுமல்லாமல் எவரும் இதை முழுமையாக ஆமோதிக்க வேண்டுமென்று "இரட்டைவேடம் முதல் அடாவடி" வரை விதவித உத்திகளைக் கையாளல், போக்கிரித்தனம், காலித்தனம், பெண்களைக் கேலி செய்தல், பெண்களிடம் வம்பு முதல் பலாத்காரம் வரை எல்லாவித ஈனச் செயல்களையும் புரிதல், சமூக விரோதியாக, யாரும் தட்டிக் கேட்க முடியாத, சண்டியராக, தாதாவாக வளர ஆசைப்படுதல், சமூகத்திற்கு ஊறு விளைவிக்கும் எல்லாச் செயல்களிலும்

Koviloor Digital Library

நேரிடையாகவும், மறைமுகமாகவும் அங்கம் வகித்தல் ஆகியனவாம். இப்படியான ஒருவனை எந்தச் சமூகம்தான் சகித்துக்கொள்ளும்?

என்ன பேதைமை! இறைவன் படைத்த நமது சைதன்யத்திற்கு (தெய்வீகத் தன்மைக்கு) சேர வேண்டிய பெருமையை, நம் கற்பனையிலே தோன்றிய நிழலுக்குத் தந்து அதை வழிபடாத குறையாய்ப் பேணுகிறோம்.

ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய பிரச்சினை அல்லவா இது?

இந்நூற்றாண்டில் இந்த, தன்னுருமோஹ வெறி இன்னொரு முக்கியமான முனையில் புகுந்து பெரு நஷ்டத்தைத் தொடர்ந்து ஏற்படுத்தியவாறு தொடர்கிறது.

சுதந்திரம் வந்த பின் பிரச்சினைக்கு மேல் பிரச்சினையாக தோன்ற ஆரம்பித்தன.

ஆனால் பிரச்சினையின் முக்கியத்துவம் இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டு, பிரச்சினையைக் கையாள்பவரின் முக்கியத்துவம் பெரிய பூதாகாரமாக ஆக்கப்பட்டு, எந்தப் பிரச்சினையும் ஒரு முடிவுக்கு வராமலே தள்ளிப் போடப்பட்டு வந்துள்ளது. தீர்ந்த ஒரு சில பிரச்சினைகளோ புதிய புதிய கிளைப்

Koviloor Digital Library

பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதாக இந்த தன்னுருமோஹ வெறியாளர்களால் குழப்பப்பட்டு ஓயாத தலைவலியை நிரந்தரமாக்கியுள்ளதை நடுநிலையில் நின்று ஆழ்ந்து ஆராய்ந்தால் எந்த சிந்தனாவாதியின் கண்ணுக்கும் வெகு தெளிவாகப் புலப்படும்.

காஷ்மீர் பிரச்சினையை எடுத்துக் கொள்ளுங்கள். பிரச்சினை என்ன என்றே எவருக்கும் தெளிவாய்த் தெரியாது. பிரச்சினையைக் கையாள எத்தனையோ பேர் வந்து போய் விட்டார்கள். பிரச்சினை எனும் விஷயமே பெரும் பிரச்சினையாக மாறிவிட்டது.

காவிரிப் பிரச்சினையைப் பாருங்கள் மழைத் தண்ணீரும் மலைகளும் யாருடைய பாட்டன் வீட்டுச் சொத்துமல்ல. நதி உற்பத்தியாகி எந்த வழியாகவெல்லாம் சென்று கடலில் கலக்கிறதோ அவ்வழியிலுள்ள மக்கள் யாவருக்கும் அந்த நதி சொந்தம். உதாரணத்திற்கு, தமிழ்நாடு, காவிரி நீரை மறந்து விட்டு, எனக்குத் தண்ணீர் தரமாட்டாயல்லவா – சரி – ஒரு சொட்டு காவிரி நீர் கூட தமிழ்நாட்டுக்குள் நுழையக் கூடாது என வன்மையாகத் தடுத்தால், காவிரி நீர் வெள்ளத்தில் கர்நாடகமே மூழ்கித் தவித்து நிற்காதா ? நீர் யாருடைய சொத்துமல்ல! இதை யாராவது நினைக்கிறார்களா ? பிரச்சினை

Koviloor Digital Library

முக்கியமில்லையாம் — நாளைக்கு ஆறடி மண்ணுக்குள் புதைபடப் போகும், அல்லது பிடி சாம்பலாகப் போகும் — பிரச்சினையைக் கையாள்பவன்தான் முக்கியமாம் — என்ன கொடுமையடா, சாமி!

— இமயமென நிமிர்ந்து நிற்கக் கூடிய, தன்னுருமோஹமில்லாத இளஞ்செம்மல்களின் ஒற்றுமைத்தரமும் (ஏன்? தவமும் என்று சொன்னாலும் பொருந்தும்) துணை நின்றால் போதுமே! இதற்கிணையான ஜனநாயகம் வேறு கிடையாது. நமது பாரம்பர்யப் பொதுவுடைமைப் பண்பாற்றலுக்கிணையான பொதுவுடைமைத் தத்துவத்திற்கு நிகர் வேறு எங்குமே கிடையாது.

நமது கூட்டுக் குடும்பப் பண்பாட்டைக் கவனியுங்கள். இங்கேதான் பொதுவுடமை வேர் கொண்டுள்ளது. எவ்வளவு பேர் அக்குடும்பத்தில் பொருளீட்டுவோராக இருந்தாலும் — ஒருவர் அதிகம் சம்பாதிக்கலாம் அல்லது குறைவாக இருக்கலாம் —அக்குடும்பத்தில் யாவருக்கும் சம உரிமை உண்டு. பெண்களுக்கும் அவ்வாறே. ஒவ்வொருவருக்கும் ஒரு பொறுப்பு உண்டு. அதை தலைவர் அவரவர் திறன் தரம் அறிந்து வரையறுப்பர். அதை அவரவர் சரியாய் நிறைவேற்ற வேண்டும். தவறினால் தட்டிக் கேட்க அவ்வீட்டிலுள்ள யாருக்கும் உரிமை

Koviloor Digital Library

உண்டு. சரியான சமாதானம் சொல்ல வேண்டிய சுமை, பொறுப்பு வகிப்போர்க்குத் தவிர்க்கவியலா ஒன்று. இதேபோல்தான் சமூக அமைப்பும்! தவறு செய்யும் எவரையும் சமூகம் தட்டிக் கேட்கும். முறையான சமாதானமில்லாவிடில், விவகாரம் பஞ்சாயத்திற்குப் போகும். அங்கு விசாரித்து தீர்ப்பு வழங்கப்படும். எவ்வளவு பெரிய புள்ளியானாலும் தீர்ப்புக்கு உட்பட்டேயாக வேண்டும்

அன்று, இன்று போல் "இரட்டைவேடக்" கலாச்சாரம் (அலங்கோலம்) நடமாடவில்லை. கணவன்–மனைவி அந்தரங்க உறவைத் தவிர்த்து, யாவருடைய வாழ்க்கையும் திறந்த புத்தகமாக இருக்கும். எங்கே யார் என்ன தவறு செய்தாலும் சமூகத்தின் சுதந்திரக் காற்றில் கலந்து, விரைவில் ஊர்பூராவும் பரவிவிடும். குற்றம் விசாரணைக்கு வரும். உடன் தீர்ப்பு வழங்கப்பட்டு நிறை வேற்றப்படும். எனவே தவறு செய்ய எவரும் அஞ்சுவர். அன்று மானமே பெரிதென்று வாழ்ந்தார்கள். இன்று பணமே பெரிதென்று வாழ்கிறோம்! இது பெரும் தரவீழ்ச்சி அல்லவா?

மேலேகுறிப்பிட்டதைவிட எளிய, தெளிவான, சீரிய ஜனநாயகம், பொதுவுடைமை, நம்

Koviloor Digital Library

பாரதத்தைத் தவிர வேறு எந்த நாகரிகத்தால் நடைமுறைப் படுத்தியிருக்க முடியும்? சிந்தியுங்கள், சிந்தித்துத் தெளிவு பெறுங்கள். தெளிவு பெற்றுச் சரியான முடிவெடுங்கள். முடிவெடுத்தபின் செயலில் உடனடியாக இறங்கிவிடுங்கள்.

குறிப்பு : இன்று யாரையாவது எவராவது எதற்காகவாவது தட்டிக் கேட்க முடியுமா? கேட்டால் ஓர் ஏளனச் சிரிப்புத் தான் பதிலாக வரும். இதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? எந்தக்காலத்தில் இருந்துகொண்டு பேசுகிறாய்? தவறு செய்யாதவன் இங்கே எவன் இருக்கிறான்? என்பதுதான்!

★★★

மகாத்மா காந்தி நூல் முன்னுரையில்
அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம்
அவர்களின் வேதனையுரை குறிப்புக்கள்:–

சத்திய சோதனை

இந்த நிலவுலகில் ஒரு தெய்வபுருஷர் அவதரித்து 79 – வருஷகாலம் நம்மிடையே நடமாடிவந்தார்.

அப்பேர்பட்ட தெய்வ புருஷரான காந்திஜியை

Koviloor Digital Library

பெற்றெடுக்கும் பாக்யத்தை, இந்தப் பூலோகத்தில் எத்தனையோ தேசங்கள் இருந்தும், நம்முடைய இந்த பாரத நாடுதான் செய்திருந்தது.

காந்தி மகானையும் அவருடைய உபதேசங்களையும், அவர் காட்டிய வழியையும் விட்டால் இந்த நாட்டுக்கும் சரி, இந்த உலகிற்கும் சரி, வேறு விமோசனமே கிடையாது. ஆனால் இன்றைய தினம் காந்திஜி காட்டிய வழிக்கு நேர் எதிர் வழியில்தான் நாம் போய்க் கொண்டிருக்கிறோம்.

பொய்யையே அரசியலாகக் கொண்டி – ருக்கிறோம். மோசடியையே வியாபாரமாகக் கொண்டிருக்கிறோம். பணப் பேராசையும், அதிகார வெறியும் கொண்டு நாயினும் கேடாய் அலைவது நியாயம் என்கிறோம். இந்த வழியிலேயே போனால் வாழ்வு, சுமக்க முடியாத சுமையாகிவிடும்!

★★★

ஏங்கும் நிலை வரும்

சென்ற நூற்றாண்டுச் சுதந்திரப் போராட்ட காலத்தில், மூதறிஞர், மாமேதை, தீர்க்கதரிசி, சிறந்த அரசியல்வாதி, தேர்ந்த ராஜதந்திரி, தற்காலச் சாணக்யன் என்றெல்லாம் நம் நாட்டுத் தலைவர்களாலும், மேலை நாட்டு

Koviloor Digital Library

அறிஞர்களாலும அறியப்பட்ட –

காலஞ்சென்ற வரலாற்றுச் சான்றோன், தலைவர் 'இராஜாஜி' அவர்கள் 1930களில் சிறையிலிருந்தபோது எழுதிய டைரி குறிப்பில் "சுதந்திரம் நமக்கு கிடைத்த உடனேயே தொடர்ந்து என்ன வருமென்றால், தேர்தல்வரும், லஞ்சம் வரும், அநீதிவரும், அதிகார ஆணவம் வரும், திறமையற்ற நிர்வாகம் வரும். இதனால் இந்தியர் அனைவரும் வேதனைப்பட்டு, முன்பிருந்த அடிமை ஆட்சியின் நீதி, திறமை, அமைதி ஆகியவற்றோடு ஒப்பிட்டு 'ஏங்கும் நிலை வரும்.'

★★★

பாரத பூமியில் இடம் பெறும் ஒவ்வொரு வரலாற்றிலும் உலகின் வாழ்விற்கு நல்ல படிப்பினை அம்சம் ஒன்று இணைந்தே இருக்கும்.

இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றில் இந்தியா சுதந்திரம் பெற்றதும், அண்ணல் காந்தி அவர்கள் செயல்பட்ட விதமும் உலகிற்கு மாபெரும் வழிகாட்டியாக என்றென்றும் நிலைத்திருக்கும்.

கத்தியின்றி, இரத்தமின்றி யுத்தம் ஒன்று நடத்திய அஹிம்சை என்ற ஆயுதத்திற்கீடாக வேறொன்று கிடையாது – தன்னடக்கமும்,

Koviloor Digital Library

தெளிவும், தளரா உறுதியும் கொண்ட "சுயக்கட்டுப்பாடு" கையாளுகைக்கு மாற்றாக வேறு ஒரு உத்திரவாதமான வெற்றிப் பாதை கிடையாது எனும் பேராண்மை ஒலிக்கும் படிப்பினைகளுக்கு இணையானவை என்றுமே எங்குமே தோன்றமுடியாது.

இம்மாதிரி பாரதத்தைப் பார்த்து மற்ற தேசங்கள் உன்னத வாழ்வு வாழக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதுதான் இயற்கை நிறுவியுள்ள நியதி. அதனால்தான் ஞானத்தைத் தேடி அயல்நாட்டார் என்றும் இங்கு வந்த வண்ணமிருக்கின்றனர். இப்படி அவர்கள் நம்மை உயர்வாய் மதித்து இங்கு வரும் போது இன்று இங்கே என்ன காண்கிறார்கள்? அவர்கள் நாட்டு இசை, நடனம், கலாசாரம், நடை, உடை, பாவனை, இதர வக்ரங்களின் பரவலான நடமாட்டம், அரசியலில் மேலைப்பாணிக் கையாளுகை என அவர்கள் பின்னே விட்டுவந்தவை, மறக்க நினைத்தவை, எல்லாம் இங்கேயும் ஆட்டம் போடும் போது அவர்கள் என்ன நினைப்பார்கள்?

இளையதலைமுறையே? சிந்தித்துப்பார்க்க வேண்டும்? இந்த நிலை இழிவாகத் தோன்றவில்லை?

இறக்குமதி செய்து நாம் சீராடிக்

Koviloor Digital Library

கொண்டிருக்கும் இந்த அலங்கோலங்கள் தவிர்க்க இயலாதவை என நினைப்போர், அதன் உற்பத்திநாட்டுக்கே போய் வாழ்ந்து பாருங்கள். பின்விளைவின் பாதிப்பால் அவதியுற்று புத்தி வந்தபின் திரும்பி வாருங்கள், புனித வாழ்வை மேற்கொள்ள. தயவு செய்து சாக்கடையைக் கொண்டு வந்து கங்கையில் கலக்காதீர்கள். சாக்கடை இருக்குமிடத்திற்கே போய் வேட்கை தணியுமட்டும் குளித்து விட்டுப் பின் ஆய்ந்து, ஓய்ந்து, அடங்கித் திரும்பிவந்து சேர்ந்து கங்கையில் நீராடி தூய்மைப்படுத்தி கொண்டு உலகினுக்கு வழிகாட்டும் நல்வாழ்வை மேற்கொள்ளுங்கள், இது உங்களுக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது.

நாடு பாழாக இடங்கொடாதீர்கள். நல்ல மனங்கள் சோர்ந்து போக வாய்ப்பளிக்காதீர்கள்.

இதைச்செய்தாலே போதும். இதுவும் ஒரு தேசத்தொண்டுதான், சமூகத் தொண்டுதான்.

இன்றைய திரைப்படங்களில் சித்தரிக்கப்படும் சில கதாபாத்திரங்களைப் பார்க்கிறோம். அரபு நாடுகளுக்குப் போய் தோட்டி வேலை செய்துவிட்டு, ஒய்வில் வந்து, தாயகத்தில் கோட்டும் சூட்டும் டையும் கூலிங்கிளாஸுமாக சில நாள் போலி மகிழ்ச்சியிலே திளைத்து விட்டு,

Koviloor Digital Library

திரும்பவும் பழைய வேலைக்கே போவதைக் காட்டுகிறார்கள். கலாச்சாரக்கலப்படக் கோளாறுகள் தானே மனிதமனத்தை இவ்வாறு அலைக்கழித்து நல்வாழ்க்கையை மேற்கொள்ள விடாமல் சீரழிக்கிறது ?

இளைய செல்வங்களே! சிந்திக்க மாட்டீர்களா ?

இங்கே தொன்மையான, செவிவழிக்கதை ஒன்றை காண்போம்!

அரண்மனையில் அரசனின் இளமைததும்பும் மகள் ஒருத்தி தந்தைக்கு எண்ணை தேய்த்துக் கொண்டிருந்தாள். தற்செயலாய் எண்ணைக் கிண்ணத்தில் மகளின் வாளிப்பான அங்கங்களைக் கண்ட அரசன் மதியிழந்து, வெறியாகி பெண்ணைத் தொட்டான். பெண் இருட்டுவழியாய் ஓடிமறைந்தாள். சற்று நேரம் அங்கு மிங்கும் அலைந்து விட்டு மன்னன் மகளது அறைக்கு வந்து சேர்ந்தான். இருளடைந் திருந்தது. மஞ்சத்திற்கு வந்து தேடினான். கிடைத்தாள். அனுபவித்தான். போய்ச் சேர்ந்தான்.

மதிய உணவிலே ஒரு புதுமை! தங்கம், வெள்ளி, ஈயத்தாலான மூன்று கிண்ணங்களில் 'திரட்டுப்பால்' விளம்பப் பட்டு இருந்தன. அரசி, அரசகுமாரி இருவருமே அரசனுக்கு அமுது படைக்கலானார்கள்.

Koviloor Digital Library

அரசன் கேட்டான். இதென்ன மூன்று திரட்டுப்பால்? ஆம், அப்பா, சாப்பிட்டு விட்டு எது அதிக சுவையாயுள்ளது. சொல்லுங்கள், என்றாள் குமாரி.

கவனித்துச் சுவைத்த அரசன், எல்லாமே ஒரே சுவையாகத்தானே இருக்கிறது. மாறுதல் ஏதும் காணோமே, என்றான்!

அப்படியானால் மகளிடம் என்ன மாறுதலான சுவை தேடி ஓடினீர்கள் எனக் கேட்டாள், ராணி!

ஐயோ! என அலறினான். மன்னன் மாபாதகனானேனே என அரற்றினான்.

இல்லையப்பா, என் மஞ்சத்திலிருந்தது அம்மாதான் என்றாள், மகள்.

நீ என்மகள் இல்லை, எனது தாய்! என் கண்ணைத் திறந்தாய். கருத்தைப்புகட்டினாய்.

“கையிலே உள்ளதற்கு ஈடில்லை எனத் தெளிந்தால் கையிலே இல்லாததற்கு ஏன் கேடு நேரப்போகிறது?” இந்தப் பொன் மொழி இன்றே பறைசாற்றப் படட்டும் என்றான். பின் கானேகினான் தவம் செய்ய!

★★★

Koviloor Digital Library

'தென்னாடுடைய சிவனே போற்றி' எனும் அருள்வாசகம் நினைவுக்கு வந்த போது சிந்தனை கிளர்ந்தது. கருத்துக்கள் துளிர்த்தன. அவற்றை பகிர்ந்து கொள்ள வேட்கையும் எழுந்தது! தென்னாடு அமைதி தவழ்வது, ஆண்மையானது, அன்பு செறிந்தது, அறம்மிகுந்தது, சன்மார்க்க, சமரச நெறியில் திளைப்பது. ஏன் ? மங்கலமேவடிவான சிவன் அதன் தனி உடமையாளன், என்பதால்!

இங்கேதான் எல்லா மதத்தினரும் வாழ்க்கை நீரோட்டத்தில் சங்கமமாகி ஒருவருக்கொருவர் இன்றியமையாதவராக இசைந்து தம்மை அமைத்துக்கொண்டு கடமை தவறாத குடிமகனாக வாழ்வதில் பெருமிதப்படும் அமைதி விரும்பியாய் ஒளிவீசுகின்றனர். இந்த சமத்துவ வாழ்க்கையின் சாயல் வடக்கு மாநிலங்களில் பரவலாக இல்லை. நம் இளைய தலைமுறை இந்தக் கோணத்திலும் சிந்தனையைச் செலுத்தினால் பாரதபூமி முழுவதும் சமத்துவம் நிரம்பி வழிய வாய்ப்பு அண்மையிலேயே கைகூடலாம்! வாருங்கள்!

இறையின் துணை வற்றாத நதியாகப் பாய்ந்து வரப்போவதைக் கண்ணாரக் காணலாம்!

வாருங்கள் ! நூலுக்குள் நுழைவோம்!

நூல் ஊசிக்குள் நுழையும் – இணைப்பதற்கு!

நீங்கள் இணைந்தாயிற்று!

நூலுக்குள் நுழையுங்கள்! புதுயுகம் சமைக்க!

ஸத்யமேவ ஜயதே! வந்தே மாதரம்!!
மகா சக்தியே மக்கள் சக்தி!!!

Koviloor Digital Library

கவலை தரும் சில சரிவுகள் இங்கே சுட்டப்படுகின்றன

நாம் வாழ்வது துரதிர்ஷ்ட வசமாக, விளம்பர யுகமாய் உருவாகி உள்ளது. ஒரு பொருளின் மதிப்பை அனுபவத்தால் அறிந்தோ, அனுபவித்தவர் கூறக்கேட்டோ, அணுகுவது என்ற பாரம்பர்ய நிலை அடியோடு மாறிப்போய், பொருளுக்குச் சொந்தமான வியாபாரிகள் ஆரோக்கியமற்ற கொள்ளை லாபம் ஈட்டும் நோக்கோடு, போட்டி மனப்பான்மை தலைவிரித்தாட, எதையும் சந்திரன், இந்திரன் என்றோ, சுவர்க்கம் என்றோ அமுதம் என்றோ, மக்களின் அபிமான நட்சத்திரங்கள் வாயிலாய் பகட்டாக விளம்பரப் படுத்தி நம்மை ஏமாளியாக்கும் தாக்குதல்தான் தற்கால நியதியாகி இருக்கிறது.

மேலும் இப்போதெல்லாம் "பத்திரிகை தர்மம்" என்ற புனிதச்சொல் அளவுக்கு மீறி உபயோகப் படுத்தப் பட்டு நம்மை எதையும் நம்பவைக்கும் முயற்சி தீவிரமாகி இருக்கிறது.

உண்மையில் "பத்திரிகைதர்மம்" என்ற இப்புனிதச் சொல்லின் 'சத்திய நோக்கம்' இன்றைய நடப்புக்களில் ஐயத்திற்கிடமின்றிச் சிதைந்து, நலிந்து தான் காண்கிறது. ஒரு பத்திரிக்கையின் சொந்தக் கருத்து, 'தலையங்கம்' என்ற வட்டத்தினுள்ளேதான் இருக்கலாம். செய்திப் பகுதியில் நுழையவே

Koviloor Digital Library

கூடாது. ஆனால் நாம் காண்பதோ, உண்மை பல்வேறு நிறங்களில், பல்வேறு அளவில், மிகைப் படுத்தப் பட்டோ, சிதைக்கப்பட்டோ அல்லது திரித்து கூறப்பட்டோ தன் சுயஉருவை இழந்து, பலப்பல உருவத்தோடு ஒரே உண்மை அநேகம் பத்திரிக்கைகள் வாயிலாக வெளிவந்து, நம்மை வெவ்வேறாகப் பிரித்து, அதனின்று சில கோஷ்டிகளாக ஆக்கி, எந்நேரமும் நாம் சந்தேகமும், பயமும், துவேஷமும் கொண்டு வாழ்பவர்களாகி ஒரு ஸ்திரமற்ற தன்மையில் இயங்கும் தாழ்மையை இன்று அடைந்துள்ளோம். என்ன அவலம்! செய்திகளைத் திரித்துக் கூறித் தாம் சார்ந்திருக்கும் கொள்கைக்கு ஆதரவு திரட்டும் இழிநிலை மாறினால்தான் நமது பழைய மாண்புக்கு மீட்சி. இல்லையேல் எஞ்சி நிற்கும் யாவற்றுக்குமே வீழ்ச்சிதான்.

குற்றுயிராகிக் கிடக்கும் நமது பாரம்பரிய மரபுகள் புத்துயிர் பெற்றுப் பேரொளி வீச வேண்டுமானால், எழுத்துச் சிற்பிகள், சிந்தனைச் செல்வர்கள், சமூகஅமைப்பின் தர்மகர்த்தாக்கள், அறம் வளர்க்கும் ஆன்மிகப் பெரியோர், தர்மத்தைப் பேணிக்காக்கும் தூயோர், முடிவாக வருங்கால சந்ததிகளின் பெற்றோர், யாவரும் ஒருங்கிணைந்து கண்டிப்புடனும், கண்கா–ணிப்புடனும் களையெடுத்து முடித்து, ஒரு புதிய வழியை வகுத்துக் கடைப்பிடித்தால்தான், இப்போது புரையோடிப்போய் ஆக்கிரமித்துள்ள நச்சு நீங்கி, உண்மை தழைக்கும் நிலை உருவாகும்.

Koviloor Digital Library

ஓம் குருஸ்வரூபிண்யை நம:

இறைப்பற்று தரும் நம்பிக்கை, மகிழ்ச்சி, ஆற்றல், செல்வம், துணை, பாதுகாப்பு இவை வேறெங்கிருந்தும் கிடைக்காது! நம்மிலும் மேலான ஒருவரை அண்டி, வாய்மை கசங்கி விடாமல் நாம் நடந்து கொள்ளும்போது எவ்வளவு தன்னம்பிக்கையுடன் அவரது ஆதரவில் நடமாடுகிறோம்! விருப்பு வெறுப்புக்கிடம் தரும் மனிதர் துணையே இவ்வளவு வலிவாக இருக்குமென்றால், கருணையே வடிவான இறைவனின் துணை எத்துணை உயர்ந்ததாக இருக்கும் –சிந்திக்க வேண்டாமா?

அறவுரை

சகோதரத்துவம் – சமத்துவம் – சமரசம் – சமாதானம்

இவையே இயற்கையின் இயல்பு.

யாவும் ஒரு மூலத்திலிருந்தே தோன்றியதால் – சகோதரத்துவம்!

Koviloor Digital Library

யாவும் ஏதோ ஒன்றைப்பெற ஏதோ ஒன்றைத் தரவேண்டியிருப்பதால் – சமத்துவம்!

தோன்றிய யாவும் இயக்கத்தினால் குறையக் குறைய, திரும்பவும் துவக்க அளவுக்கே நிரம்பிவிடுவதால் – சமரசம்!

யாவும், எதுவாயினும் சரி ஒன்றையொன்று சார்ந்தே இயங்க வேண்டியிருப்பதால் சமாதானம்!

எந்த சித்தாந்தத்தை எடுத்துக்கொண்டாலும் ஆதியில் தோன்றிய ஆணும் பெண்ணும் ஈன்றெடுத்த மக்களால்தான் மனித சமுதாயம் விரிவடைந்து வந்துள்ளது, பெருகிவருகிறது எனும் பேருண்மையே ஒளிவீசுகிறது!

எனவே மனித சமுதாயமே ஓர் கூட்டுக்குடும்பம், உலகமே அதன் வீடு, என்பது மறுக்க முடியாத அடிப்படை.

ஆகவே யாவரும் சகோதரர்கள் – சமபங்காளிகள்.

இந்த உலகமோ மனிதன் தோற்றுவித்ததல்ல. மனிதன் தோன்றுவதற்கு முன்பே எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யவல்லதாக இயற்கையால் சமைக்கப்பட்டது.

Koviloor Digital Library

மனிதனுக்கான தேவை எதையும் பொறுப்பார்ந்த உழைப்பால் அடைந்து கொள்ளமுடியும். அடைந்துகொண்டு மகிழ்ச்சி பொங்க வாழலாம்.

சமத்துவத்தால், சமரசத்தால் அவரவர் திறனுக்கேற்றபடி உழைத்து தேவைக்கேற்றவாறு வாழ்ந்து கொள்வதே இயற்கை வகுத்துள்ள கடமையும், உரிமையும்.

இந்தக் கடமையும் உரிமையும் சமரசப் பாங்கிலே பிணைந்து பரந்து நடைபெற்றால்தான் சமாதானம் சிதையாமல் நிலைக்கும்.

இவ்வளவு எளிமையான தெளிவான நடப்பு எவ்வாறு ஏற்றத்தாழ்வுகளுக்கும், பிரிவினைகளுக்கும், வேறுபாடுகளுக்கும், முரண்பாடுகளுக்கும், பகையுணர்ச்சிக்கும், விசுவாச மாற்றத்திற்கும் போர்களுக்கும் ஆட்பட்டு இருளில் தள்ளப்பட்டு செயலற்றுக் கிடக்கிறது என்பதனை உடனே ஆராய்ந்து ஆவன செய்யாவிடில் மனிதன் அழிந்து போவான். ஆனால் அவனுக்காக படைக்கப்பட்ட உலகம் அழியாது. மனிதன் இல்லாமல் போனதால் சூன்யமாகிவிடாது. தாவரங்களும் உயிரினங்களும் வளர்வதும் அழிவதும் திரும்பத் தோன்றி வளர்வதுமாக இருந்து கொண்டேயிருக்கும்.

Koviloor Digital Library

மனிதனால் மனிதன்தான் அழிவானேயல்லாது உலகம் அழியாது. இவனுடைய விஷச் செய்கைகளின் உச்சக்கட்டத்தில் ஒரு சமயம் இந்த பூமியே வறண்டு சூன்யமாகிவிட்டாலும் வேறு ஒரு கோளில் புதிய உலகம் தோன்றும். அங்கே தாவரங்களும் உயிரினங்களும் உய்யும். ஆனால் பூமியைத் தான்தோன்றித்தனத்தால் அழித்த மனிதனுக்கு அங்கு இடமிராது. இவன் முடிந்தவன், முடிந்தவன்தான். இப்படி ஆக விடுவதற்கா மனிதனிடம் ஆறாவது அறிவை ஒப்படைக்கப்பட்டது? அந்த அறிவைக் கொண்டு இந்தக் கடைசிக் கட்டத்திலாவது மீளவழிதேட வேண்டாமா?

– ஆசிரியர்
த்ரிசக்தி பாததூளி
T.V. கல்யாண்

> இறை தந்த உலகமிது – இங்கு
> எவர்க்கும் சமஉரிமை விதி
> மறுத்தால் நீ ஒரு மிருகமடா
> மதித்தால் நீதான் மனிதனப்பா.

யாராக இருப்பினும் எந்நிலையில் உள்ளோராயினும் அவரவர் பெறும் வாழ்க்கைத்தரம், தர்மகர்த்தா என்ற நிலையில் அவர்கள் பெறும் ஊதியமே அன்றி, அவர்களை

Koviloor Digital Library

வந்தடையும் எந்த ஐச்வர்யத்திற்கும் எஜமானர்களாக முடியாது. எஜமானன் ஈசுவரன் ஒருவனே. எஞ்சிய ஜீவர்கள் யாவரும் அவனை அண்டியிருக்கும் நொண்டிகளே. இந்நொண்டிகள் சண்டிகளாகி விடுவதன் விளைவுதான் இந்த இழி நிலை.

இவ்வுண்மையை வலியுறுத்திச் சொல்வதால் மனிதனது தன்னம்பிக்கை வலிவு இழந்து போகும் என வாதிப்போர் சத்தியத்திற்கும் சமூகத்திற்கும் எதிரிகளே. அவர்கள், எற்கனவே பலவீனப்பட்டிருக்கும் நமது இழிநிலையினைப் பெரிதும் விரும்பிப் பயனடைய அலையும் குள்ள நரிகள், இதமானவர்களே அல்லர்.

அன்றி நாம் இப்பிரத்தியட்ச உண்மைகளைப் புரிந்துகொண்டு, புரையோடிப் போயுள்ள நமது நலிவு நோயை அறவே அகற்றிக் கொள்வதால் நாம் பெறும் தரம் வைரமென நம்மை உரமாக்கும். தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் தாழ்மை மறைந்து நம்மை நாமே உயர்த்திக் கொள்ளும் நலன் பெருகும்.

“தனி ஒருவருக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்” எனப்பாடி நமது தர்மகர்த்தா வாழ்க்கை முறை நலிந்து போனதை, பாரதி சாடியுள்ளதை இங்கு நினைவு கூர்வோம்.

Koviloor Digital Library

மீளவழி

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு நிதிகளில் தந்நிறைவு பெற்றுத் தேறும் வழி நான்கு தோத்திரங்களாக இந்நூலில் நூதனத் தோத்திரத் திரட்டில் இணைந்துள்ளது. ஒவ்வொரு மதத்திலும் இதே விதமான பலன்களை தரும் தோத்திரங்கள், பிரார்த்தனைகள் உண்டு. அவரவர் அவைகளைத் தேர்ந்தெடுத்து ஓதிக் கொள்ளலாம். இன்றைய நம் தேவை எது பெரியது என்ற கேள்வி அல்ல – எது நல்லது என்பதுதான். அது எது ?:

இறைப்பற்று !

வேற்றுமையில் ஒற்றுமை !

அன்பை மட்டுமே கொடுத்து
அன்பை மட்டுமே பெறுதல் !

TODAY

WE ARE OF DIVERSE FAITHS -
YET LET US UNITE
THRO' GOD-AWARENESS

Koviloor Digital Library

உ

ஆய்வு

தொலை நோக்கற்று தன்னலத்தோடு நல்லவைகளை உதாசீனம் செய்து ஆரோக்கியமற்ற ஆசைகளுக்கடிமையாகி மனிதன் தனது போக்கைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தரம் தாழ்த்திக் கொண்டே போக இடமேற்பட்டுப் போனதுதான் உலகியலில் சங்கமமாகிவிட்ட கடும் தொற்றுநோய்! பரவும் காட்டுத்தீ!

இது நியாயமா?

உணவுப்பொருட்களைவிட மருந்து வகைகள் அதிகம் தயாரிக்கப்படுகின்றன. –

குடிதண்ணீரைவிட மதுபானம் எளிதாகக் கிடைக்கிறது. –

தேவையான பொருட்களுக்குத் தட்டுப்பாடு, கட்டுப்பாடு –

தேவையற்ற நவீனங்கள் விரிவாக்கம், பரவலாக்கம். –

வீட்டில் வசிப்பதைவிட வெளியே அதிகம் வசிக்கிறோம். –

Koviloor Digital Library

உழைப்பைவிட கேளிக்கையில் அதிகநேரம் பாழாகிறது. –

வேலை நடப்பதைவிட வேலைநிறுத்தங்கள், தேக்கங்கள் அதிகமாகி விட்டன. –

ஆக்கப்பணிகளைவிட நாசவேலைகள் மலிந்து வருகின்றன. –

பிரச்சினையே இல்லாதவைகள் பெருஞ்சர்ச்சை யாக்கப்படுகின்றன. –

தீர்வு காண்பதைவிட பலப்பரீட்சை தீவிர மடைந்துள்ளது. –

சமாதானத்தைவிட சண்டைகள் மிகையாகி யுள்ளன. –

பாதுகாப்பைவிட விபத்துக்களும் ஆபத்துக்களும் விரிவடைந்துள்ளன. –

மக்களைத் துன்புறுத்தி அரசைப் பணியவைப்பது சிறந்த கலையாகிவிட்டது. –

தொண்டைவிட முரண்டு பிடித்துப் பழிதீர்ப்பதே குறிக்கோளாகிவிட்டது. –

உண்மையைவிட வேடதாரிகளின் அமோக வளர்ச்சி. –

நட்புணர்வைவிட பாசாங்கு, பிரச்சார மாயைகளின் ஆக்ரமிப்பு. –

Koviloor Digital Library

பரோபகாரத்தைவிட வழிப்பறிகளின் களியாட்டம்.

நீதியைவிட அநீதிக்கே கொண்டாட்டம். –

இறையுணர்வைவிட கிளுகிளுப்பூட்டும் கீழ்த்தர இன்பத்திற்கே முதலிடம்.

ஆனால்

சாமானியன் மட்டும் அன்றும் இன்றும் என்றும் ஏமாளியாகவே இருக்கிறான். எல்லாச் சுமைகளையும் ஏற்கிறான். கண்ணீர்கூடச் சிந்த மறந்துபோய் இயந்திரமாக வாழ்கிறான். இது சரியா ?

எனவே இப்போதாவது போர்க்கால வேகத்துடன் சீரமைப்பது அவசரமா ? இல்லையா ?

என்ன நேர்ந்த போதிலும் வருந்தை மனதார வரவேற்று அதற்குத் தன்னை இசைவித்துக் கொண்டு திருப்தியுடன் அமைதியாய் வாழ்வதே உலகுக்கு ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய தொண்டு. இதுவே வேதம், வேதாந்தம் எல்லாம்! இந்தக் கருத்துக்கு மாறுபடும் எந்த சித்தாந்தமும் காலத்தால் மறைந்துபோகும். ஆனால் மறைவதற்குள் அளவற்ற ரத்தம் சிந்திக் கணக்கற்ற இழப்புக்கள் அறுவடையாகி இருக்கும்.

Koviloor Digital Library

அறைகூவல்!

இளைஞர் பெருமக்களே! நம்பிக்கை நட்சத்திரங்களே! வரப்போகும் பொற்காலத்தின் ஏற்றமிகு சிற்பிகளே!

விழித்தெழுங்கள்! செயல்படத் தயாராகுங்கள்! இறையுணர்வு இழையோடாத எந்தச் சிந்தனையும் செயலும் இயல்பான நடப்புக்கு முற்றிலும் முரணானது; வளர்ச்சியைத் தடை செய்து அமைதியைக் குலைக்கவல்லது.

மனிதனைப் படைப்பதற்கு முன்பே வாழ்வதற்குத் தேவையான எல்லாச் சாதனங்களையும், வாழ்க்கைக்குத் துணை நிற்கும் ஜீவராசிகளையும் இறைவன் படைத்து முடித்திருக்கிறான்.

பிறகு மனிதனைப் படைத்து அவன் இவையாவற்றையும் முறையாகப் பயன்படுத்தி மகிழ்ச்சியோடு அமைதியாய் வாழ்ந்துகொண்டே நுகர்பொருள் குறையக்குறைய அவற்றை உரிய உழைப்பின் மூலம் மறுபடி ஈடு செய்துகொண்டு ஜீவராசிகளையும் நோய் நொடிக்கிலக்காகாமல் பராமரித்து, அந்தந்த இனத்தொகை தேவையான வரம்புக்குள் நிலை நிற்குமாறு கண்காணித்துக் கொண்டு, ஒரு தர்மகர்த்தாவாகச் செயல்பட

Koviloor Digital Library

அவனுள் அன்புணர்ச்சியையும், அறிவாற்றலை யும் இணைத்து, உலகில் சுபிட்சம், சாந்தி, நல்வாழ்வு, இவை தங்குதடையின்றி நிலவ வசதிகளையும், வாய்ப்புக்களையும் உலவ விட்டிருக்கிறான், இறைவன்!

தொடக்கத்தில், இப்படி நமது எந்த முயற்சியையும் எதிர்பாராமல் வழங்கப்பட்ட வசதிகளையும், வாய்ப்புக்களையும் காலங் காலமாக நாம் எப்படியெல்லாம் கையாண்டு இன்பங்களையும் துன்பங்களையும் அறுவடை செய்து வந்துள்ளோம் எனும் கணக்குகள் வரலாற்றில் தெளிவாகப் பதிவாகியிருக்கின்றன. அக்கணக்குகளை அப்போதைக்கப்போது தணிக்கை செய்து, விவாதித்து, பொருத்தமான மாற்றங்களை அறிமுகப்படுத்தி அமைதியையும், மகிழ்ச்சியையும், நிலைநாட்ட மேற்கொண்ட முயற்சிகள்தான் சாத்திரங்களாகவும் சூத்திரங்களாகவும் உருப்பெற்று இன்று வரை நல்வாழ்வுக்குக் கைகொடுத்து வருகின்றன.

ஆனால் அவ்வப்போது பேராசைக்கடிமை யாகிச் சிலர் அராஜகத்தின் மூலம் அமைதியையும், நல்வாழ்வையும் குலைப்பதும், மற்றவர்கள் ஒன்றுகூடி முயற்சி செய்து அராஜகத்தை அடக்கி அமைதியை நிலைபெறச் செய்வதும் சங்கிலித் தொடராக இடம் பெற்று

Koviloor Digital Library

வந்துள்ளதும் வரலாற்றில் பதிவாகியுள்ளன.

இதன் நடுவே பெண் இனத்தை தன்னில் சிறப்புப் பாதியாக மதித்துப் போற்றி வந்த ஆண் இனம், புலனடக்கம் என்ற ஆயுதத்தைக் கையாளத் தவறி, "கலாரசனை" எனும் போதைக் கடிமையாயிற்று.

அதன் விளைவாய்ப் பெண்களை ஒரு அஃறிணை நிலைக்குக் குறைத்து அவர்களை ஒரு போகப் பெருளாக நினைக்கும் தாழ்வு தோன்றியது. மிருகவுணர்ச்சிக்கு முதலிடம் கிடைத்துப் பெண்களை ஒரு கொத்தடிமையாகப் பார்க்கும் மூர்க்கத்தனம் முக்கியத்துவம் பெறலாயிற்று. இயல்பிலேயே சகிப்புத்தன்மை அதிகம் உள்ள பெண் இனம், ஆண் இனத்தைச் சகிப்புடன் அனுசரித்துச் செல்லச் செல்ல, பெண்களைத் தரம் தாழ்த்தும் உத்திகள் பலமுனைகளில், பல கோணங்களில் உருவாகி அப்புனித இனத்தின் ஆக்கம், ஆற்றல், கனிவு, பரிவு இவை தேய்ந்து, தொய்ந்து, தனித்தன்மை மங்கி, பெண்பாலர் மௌனக் கண்ணீர் சிந்தலாயினர்.

அந்த மௌனக் கண்ணீர் சாபமாகப் பரிணாமமடைய ஆரம்பித்து அதன் காரணமாய் தீயசக்திகளுக்கு வலிமை கூடவும், நல்லவைகள்

Koviloor Digital Library

நலியவும் உதவும் போக்குகள் சரளமாகத் தோன்றி நடமாட ஆரம்பித்தன. (இன்று மீள முடியாப் படுகுழியாய் உருவெடுத்துள்ள "எய்ட்ஸ்" ஆக்ரமிப்பும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பெண்–சாபத்தின் விளைவுதானே எனச் சிந்திக்கத் தவறிவிடக்கூடாது. பெண்ணில் "எய்ட்ஸ்" குடியேற வழிவகுத்துப் பின்னர் அதையே திரும்பச் சாபமாகப் பெற்ற அவலஜீவன் ஆண்–தானே என்ற உண்மையை அசைபோட்டு உணரவேண்டும்).

அந்தச் சாபத்தின் விளைவுதான் நாம் இன்று அடைந்துள்ள கையாலாகாத நிலை.

இது இருபதாம் நூற்றாண்டின் விபத்துக்ளில் ஒன்று.

மனிதன் நிதானத்தை நியதியாய்க் கைக்கொண்டு அமைதியைக் குறையாச் செல்வமாய்ப் பேணி வந்த வரையில் நிலைமை கட்டுக்கடங்கிச் சீராக இருந்து வந்துள்ளது. ஏற்றத்தாழ்வுகள் நேர்ந்தபொழுது ஒருங்கிணைவு மூலம் நிலைமை சீர்செய்யப்பட்டு அமைதி சிதையாது காக்கப்பட்டு வந்துள்ளது – இறைவனளித்துள்ள குணச்செல்வங்களான சமத்துவம், சமரசம், சன்மார்க்கம், சமநோக்கு, அன்பு, தயை, பரோபகாரம், நிதானம், தைர்யம், வீரம் இவைகள் மூலம்.

Koviloor Digital Library

காலப்போக்கில், இறைவனால் படைக்கப் படாத இல்லாமை, ஏழைமை, வேலையில்லத் திண்டாட்டம், பணம், கடன், வட்டி, ஜப்தி ஆயுதம், யுத்தம் இவைகளை மனிதன் தோற்றுவிக்க ஆரம்பித்தான்.

வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி ஒரு விளக்கம்

இது சுயநலமுள்ள மனிதன் தோற்றுவித்த "காகிதப்புலி" – பாமரனின் அறிவாற்றல் இன்மையால் 'யதார்த்தம்' என ஏற்றுக் கொள்ளப்பட்ட 'அநீதி'!

இறைவன் படைத்த உலகத்தில் எல்லாவசதிகளும் நிறைந்துள்ளன. திறனார்ந்த உழைப்பால் எல்லாவிதச் செல்வங்களையும் பெருக்கிக்கொண்டு, பயன்படுத்தியவாறு யாவரும் வளமாக வாழ்ந்து கொள்வதே 'இயற்கை' தோற்று வித்த நியதி! ஆகவே உள்ள வேலையை யாவருக்கும் பகிர்ந்தளிப்பதுதானே அறிவார்ந்த செயலாகும்! பின் வேலையில்லாத் திண்டாட்டம் என்பது பொய்க்கால் குதிரைதானே! எப்படி நிலத்தை ஆக்ரமித்துக்கொண்டு இதுஎன் உடமை என மனிதன் போலி நியதியை நிறுவினானோ

Koviloor Digital Library

அதேபோல்தான் வேலை வாய்ப்பையும் ஏகபோக உரிமையாக்கிக் கொண்டு–

'வேலையில்லாமையைப் பரவலாக்கிச் சுரண்டல் கலாசாரத்தை பெரிய விவசாயமாகக் கைகொண்டு, கபடமாய் மேல்தளவர்க்கம், நடுத்தரவர்க்கம், அடித்தளவர்க்கம் என அஸ்திவாரமற்ற போலி நிலைகளை நிரந்தரமாக்கி விட்டு இன்று இந்த 'போலி' அடிப்படையில் உருவான நடைமுறையை 'வாழ்க்கைக் கோட்பாடாக' உருவாக்கி அநேகம் சித்தாந்தங்களை வளரவிட்டவன் யார் தெரியுமா? அவன்தான் சந்தர்ப்பவாதி! இவனை அழித்துவிட்டு யதார்த்தவாதியை (இயற்கையுடன் ஒன்றிச் செயல்படும் ஆற்றல் மிக்க நல்லவர்களை) வெகுவாக விவசாயம் செய்து பெருக்கி புதுயுகம் உருவாக நிமிர்ந்து நிற்கும் குடிமக்களாக இன்றைய சாமானியரை நிமிர்த்திவைப்பதுதான் அவசிய அவசரத் தேவை. தவிர்க்க முடியாத வேள்வி! இளைய தலைமுறையே! இதை உடனே செய்ய சபதத்தை மேற்கொள்!

பேராசையால் சுய நலமுனைப்போடு தம் தேவைக்கதிகமாக ஒவ்வொருவரும் அள்ளி அள்ளிச் சேர்த்து வைத்துக்கொள்ள ஆரம்பித்ததால் பலருக்கு "இல்லாமை" நேர்ந்தது.

Koviloor Digital Library

சுயநலக் கூட்டம் பெருகி வலுவடைந்ததால் "ஏழைமை" அமலாகிப் பரவலாகியது.

இல்லாமைக்காளானோர் தட்டிக்கேட்க முனைந்தபோது "ருசிகண்ட பூனைகள்" கோஷ்டி சேர்ந்து தங்களை மேல்தள வர்க்கமாகப் பிரகடனப்படுத்திக் கொண்டு இல்லாதோரை அடிமைகளாக்கி அடக்கியாள ஆரம்பித்தனர்.

ஆள்வோருக்கு அளவுக்கு மீறிய வசதி— அடிமைகளுக்கு என்றுமே பற்றாக்குறை. பற்றாக்குறையை ஈடுசெய்ய, ஆள்வோர் அடிமைகளுக்கு "கடன் தருதல்" முறையை அறிமுகப்படுத்தினர். குறித்த தவணைக்குள் திரும்ப வராத கடனுக்கு "வட்டி" எனுமோர் "குட்டிப்பிசாசு" அறிமுகப்படுத்தபட்டது. அந்த வட்டியும் குறிப்பிட்ட தவணையில் வராவிட்டால் "வட்டிக்கு வட்டி" எனும், அட்டை (இரத்தத்தை உறிஞ்சி வாழும் ஒரு வகை ஜந்து) ஒட்டுச் சேர்க்கப்பட்டது. முதலும், வட்டியும், வட்டிக்கு வட்டியும் சேர்ந்து மூச்சுமுட்டும் அளவை எட்டியபோது "ஜப்தி" முறை அமலாக்கப்பட்டது. ஜப்தியிலே மூழ்காமல் தப்பிக்க பெண்டு, பிள்ளைகளையும் கொத்தடிமைத் தளையில் பிணைக்கும் அவலம் நேர்ந்தது.

பற்றாக்குறையும், கடனும், வட்டியும், மீள

Koviloor Digital Library

முடியாக் கொத்தடிமை முறையும் மாளா ஊர்வலமாகி, மிராசுதாரர், பண்ணையார், மிட்டாதார், ஜாகிர்தார், ஜமீன்-தார், குறுநில மன்னர், மன்னர், மன்னாதி மன்னர், இவர்கள் தம் பரிவாரமாக மேட்டுக்குடி மக்களான அதிகாரிகள் என ஒரு புறமும், மறுபுறம் சாமானியரும் இல்லாதோரும் மேஸ்திரி, ஏவலாள், காவலாள், அடிமைகள், கொத்தடிமைகள் ஆக உருவாகி அமலுக்கு வந்த தொடர்கதை துவங்கியது.

பண்டமாற்று முறையில் நடந்துவந்த கொடுக்கல் வாங்கல் நடைமுறைக்கு மாற்றாக "பணம்" என்ற அசுரவித்து விதைக்கப்பட்டுப் பயிராக ஆரம்பித்தது.

முதலில் நேர்மை, நாணயம் இவைகளின் ஆதாரத்தில் நடமாட ஆரம்பித்த பணம், பின்னர் பொய், கள்ளம், கபடம், சூழ்ச்சி, வஞ்சனை இவைகளின் ஆதிக்கத்தில் ஐக்கியப்பட்டு, கடன், வட்டி, வட்டிக்குவட்டி, வரிகொடாமல் ஏய்க்கப் பொய்க்கணக்கு, கருப்புப் பணம், அதைக் காத்துக்கொள்ள லஞ்சம், இன்னும் மோசடி– வழிப்பறி – இரவுக் கொள்ளை, பகல் கொள்ளை– இன்ன பிற தீயமுறைக் கையாளுகைகளால் பணம் வீங்க ஆரம்பித்து, வீங்கிய நிலை வடியாமல் உரம் பெற்ற நிலையாய் மாறப் புதுப்புது உத்திகள் தோன்றி மேலும் வீக்கம் அதனையும்

Koviloor Digital Library

உரமேற்றல் என விரிவடைந்து, பணம் தன்னைப்படைத்த மனிதனைவிடப் பெரிதாக, வலிதாக, அவனையே ஆட்டிப் படைக்க வல்லதாய் பரிணாமமடைந்து ஓர் அசுரத்தன்மையை எட்டியது.

இதுவும் இருபதாம் நூற்றாண்டின் விபத்துக்களில் ஒன்று

பணத்திமிரின் அழுத்தத்தைச் சுவைக்க, சூதாட்டங்கள், மதுவகைகள், போதைப் பொருட்கள், லாகிரி வஸ்துக்கள் கண்டு பிடிக்கப்பட்டன; அவைகள் கொள்ளைப் பணத்தை ஈட்டித்தரவல்ல சுரங்கங்களாகவும் அமைத்துக் கொள்ளப்பட்டன. இவைகளின் அறிமுகம் தாய்க்குலத்திற்குச் சவாலாகவும் சாபத்தேடாகவும் அரங்கேறின.

இதுவும் இருபதாம் நூற்றாண்டின் இன்னொரு பிரசவம்.

ஒவ்வொருவரும் மிகுந்த பணத்தையும், அதிக நிலப்பரப்பையும் அபரிமித ஆள்பலத்தையும் ஆக்கிரமிக்க உறுதுணையாய் விதவித ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆயுதங்கள் அபரிமிதமாய்க் குவிந்தபின் ஆணவம் தலைக்கேறி யுத்தங்கள் தோன்றின.

Koviloor Digital Library

யுத்தங்கள் வல்லரசுகளைத் தோற்றுவித்தன.

வல்லரசுகள் அடிமை நாடுகளை உருவாக்கின.

பேரழிவைத்தரும் புதிய புதிய ஆயுதங்கள் தீவிர ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டன.

ஒவ்வொரு வல்லரசும் புதிய புதிய அதிவிசையுள்ள ஆயுதக் கண்டுபிடிப்புக்களில் வெற்றி கண்டு ஒன்றையொன்று சந்தேகத்தோடும் பயத்தோடும், பகையோடும் அணுகிப் பரிமாறிக்கொண்டு, மிக்க எச்சரிக்கையுடன் புத்தி சாதுர்யத்தாலும், பணபலத்தாலும், படைபலத்தாலும் பேரம் பேசி ஒருவரையொருவர் கட்டுக்குள் வைத்துக் கொள்ளப்பார்க்கும்-முயற்சிகள் தொடர்ந்தன. அவ்வப்போது இந்தப் பேரப் பேச்சுக்களில் ஒருவர் கை ஓங்குவதும் மற்றவர் கொஞ்சம் விட்டுக் கொடுப்பதும் மாறி மாறி நிகழும் காட்சிகள் நிரந்தரத் தொடர் கதையாயின.

இந்தத் தொடர்கதையில், வல்லரசுகள் தம்தம் ஆதாயத்தையும், ஆதிக்கத்தையும் நிலை நிறுத்திக் கொள்ள, நாட்டுக்குநாடு பிரச்சினை கிளைக்கும் போதெல்லாம், அழையா விருந்தாளியாய் வலிய வந்து புகுந்து இருநாடுகளுக்குமிடையே ஒரு நிரந்தரத் தீர்வு

Koviloor Digital Library

நேர்ந்து விடாத வகையில் என்னென்னவோ உத்திகளைக் கையாண்டு, ஒரு சொக்கட்டான் ஆட்டத்தை நடத்தி தம்முடைய அந்தஸ்தும், செல்வாக்கும், வியாபாரமும், செல்வநிலையும் எள்ளளவுகூட குறைந்துவிடாமல் பார்த்துக் கொள்கின்றரே, எப்படி இவர்களுக்கு மட்டும் இது சாத்தியமாகிறது என்று எந்த நாடாவது சிந்திக்கிறதா ?

பின் தங்கிவிடக் கூடாது என்ற தவறான ஸித்தாந்தத்திலே மூழ்கி கண்மூடித்தனமாய்க் கடன் பட்டதால் வந்த வினைதானே, அவர்கள் நினைத்தபடியெல்லாம் நினைத்தபோதெல்லாம் நம்மீது சவாரி செய்யாத குறையாய் நம்மை ஆட்டி வைப்பது ! இவ்வுண்மை எந்தச் சிந்தனா– வாதியையாவது உறுத்துகிறதா ?

பூசல்கள் நிரந்தரமாகத் தொடர்ந்தால்தான் வல்லரசுகளுக்கு ஆதாயம்.

- ஆயுதங்கள் விற்கலாம்,
- கடன் சுமையை அதிகப்படுத்தலாம்,
- தம் நாட்டில் விலை போகாத பொருள்களை அண்டியிருக்கும் நாடுகளுக்கு வலியுறுத்தி விற்கலாம்,
- அந்த நாட்டில் உள்ள தரமான அத்தியாவசியப் பொருட்களைத் தமக்கே விற்கும்படி

Koviloor Digital Library

கட்டாயப்படுத்தலாம்,

- இன்னும் என்னென்னவோ வித்தைகள் காட்டி மேலும் மேலும் தங்களை மட்டும் வளர்த்துக் கொள்ளலாம்

எனப்பட்டியல் நீண்டுகொண்டே போகுமே தவிர குறையாது.

இருநாடுகளின் பகைதானே இத்தனை ஆதாயத்தை இவர்களுக்குத் தருகிறது? இவர்கள் வளர நாம் பகையாயிருப்பதுதான் தீனியா? எனும் வாதம் எந்த நாட்டுச் சிந்தனாவாதியின் கணிப்பில்லாவது சிக்குகிறதா?

எந்த நாட்டின் பத்திரிகாசிரியராவது இந்தக் கோணத்தில் தம் நாட்டுடன் பகையாயிருக்கும் நாடு சிந்திக்குமாறு சமாதானக் கட்டுரை ஒன்றை எழுதியதாக வரலாறு உண்டா?

நிற்க, இவ்விதப் பூசல் போட்டிகளுக்கிடையே சந்தடியின்றி ஒரு "பாதாள இராஜ்ஜியம் உருவாகி வளரலாயிற்று.

இதுதான் இருபதாம் நூற்றாண்டின் பேராபத்து நிறைந்த விபத்து

இயல்பாகவே குரூரமானவர்கள், கொடியவர்கள், நயவஞ்சகர்கள், எத்தர்கள்

Koviloor Digital Library

விடுதலையான குற்றவாளிகள், தப்பியோடிய கைதிகள், குற்றம் செய்துவிட்டுத் தலை– மறைவானவர்கள், ஆகியோர் இப்பாதாள இராஜ்ஜியத்தின் குடிமக்களானார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாகத் தான்தோன்றியாய்த் தம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்டு, தகாத முறைகளால் பெரும் பணத்தைச் சேர்த்துக் கொண்டு, வன்முறைக் கலாசாரத்தை வளர்த்து, புரட்சிகரமாய்க் குரல் கொடுத்துப் பிரபலமடைந்தவர்கள் இப்பாதாள இராஜ்ஜியத்தின் முடிசூடா மன்னர்களானார்கள்.

இவர்கள் பெரும் பணம் சேர்க்க, கள்ளச் சந்தையை உருவாக்கினார்கள். அந்நியச் செலாவணி மோசடிக்கு உறுதுணையானார்கள். சிறிய கள்ளச் சந்தை வியாபாரிகளுக்குப் பாதுகாப்புத் தந்து பணம் சேர்த்தார்கள். பெரும் பணம் படைத்தோருக்கும், அரசியல் வாதிகளுக்கும், பகை முடிக்க உதவும் கொலையாளிகளைப் பயிற்சி தந்து உருவாக்கித் தம் இயக்கத்தில் சேர்த்துக் கொண்டார்கள். இப்படி ஓர் புதிய கோணத்தில் "குண்டர் படை" எனும் இன்னுமோர் அசுர சக்தி தோன்றியது.

இப்புதிய அசுரசக்தியின் தயவை ஒவ்வொரு நாடும், பலபெரும் இயக்கங்களும் நாடவே,

Koviloor Digital Library

இத்தீயசக்திக்கு ஒரு நிரந்தர இடம் உருவாகும் வாய்ப்பு கிடைத்துவிட்டது. இந்தச் சக்தியும் உலகச் சந்தையின் பொருளாதாரப் போக்கை நேரடியாகப்பாதிக்கும், மறைமுகமாக நிர்ணயிக்கும் ஒரு முக்கிய அங்கமாக உருப்பெற்றுவிட்டது.

நாட்டுக்காக உயிரையே பணயமாக்கும் உயர்ந்த பாரம்பர்யமுள்ள "ஒற்றர் பிரிவு" இன்று பழங்கதையாகி உள்ளது. காசுக்காக எந்தத் தகவலையும் விற்கத் தயாராயிருக்கும் கயவர்தான் இன்று அந்த அமைப்பில் பரவி உள்ளனர். இவர்களிடம் விசுவாசம் என்ற புனிதத் தத்துவத்தை எவருமே எதிர்பார்க்க முடியாது. இவர்களில் பலருக்கு வெவ்வேறு வன்முறைக் கும்பலுடன் மறைமுகமாக, நிர்ப்பந்தத்தின் காரணத்தாலோ, ஆதாயத்தின் அடிப்படையிலோ தொடர்பு உண்டு.

இதுவும் இருபதாம் நூற்றாண்டின் பெரும் விபத்துதான்.

நம் அருமை வாரிசுகளுக்கு இதுவரை பட்டியலிடப்பட்ட அவலங்களைத்தான் சுமையாகச் சேமித்து வைத்துள்ளோம் என நினைத்துப் பார்க்கும் போது பாரதியாரின் –

Koviloor Digital Library

"நெஞ்சே பொறுக்குதில்லையே; இந்த
நிலை கெட்ட மனிதரை நினைத்து விட்டால்"
எனும் பாடல் நம் நெஞ்சைக் கசக்கிப் பிழிவதை உணராவிட்டால் நாம் என்ன மனிதன் ?

நம்பிக்கை வைக்க இடமே இல்லாமற்போய் விட்ட இன்றையப் பயங்கரச் சூழலில் – இனி நமக்குக் கை கொடுக்கக்கூடியது, ஆன்மீகப் பிணைப்பும் சமூக ப்ரகஞையும் ஒருங்கிணைந்த "பிரார்த்தனை" முறைகளும், முழு விழிப்போடு களையெடுக்கும் ஆர்வம் நிறைந்த "சுயக் கட்டுப்பாடு" இயங்குதல்களுந்தான்.

தாய்க்குலம் "பிரார்த்தனை" வேள்வியில் முன் நிற்கட்டும்.

ஆண் மக்கள் ஒரு சிறிய அளவில் பிரார்த்தனையோடு கூட, முழு அளவில் "சுயக்கட்டுப்பாடு" இயக்கத்திலே முன் நிற்கட்டும்.

முன்னம் சொல்லப்பட்ட "சாபத்தேட்டினுக்கு" பெண்களே தான் மாற்றுச் செய்தாக வேண்டும்.

அந்த "மாற்றை" அவர்கள் மனமுவந்து செய்வதற்கு ஆண்கள் தம் போக்கை மாற்றிக்கொண்டு, பெண்களைத் தெய்வமாய்ப் போற்றி நடக்கத் தலைப்படவேண்டும்.

Koviloor Digital Library

தாம் திருந்தியதை இறைவன் ஆமோதிக்குமாறு பலவிதமாகவும் உருப்படியாகச் செயல்பட வேண்டும்.

அப்புறம், பெண்கள், ஆண்கள் முன்னேற்றத் திற்காகத் தவம் செய்வர்.

ஆண்கள், சமூகத்தின் முன்னேற்றத் திற்காகத் தொண்டு செய்வர்.

இந்த இரு முனை முற்றுகை நிச்சய வெற்றியைத் தந்தே தீரும். தேவை – மனமாற்றமும், இறையிடம் நீங்காப்பற்றும், தன்னம்பிக்கையும், தளரா உறுதியும் தான்.

இது ஒன்றுதான் கடைசியாய் எஞ்சியிருக்கும் ஒரே தீர்வு!

இது மட்டுமல்ல – நம் வாரிசான இளைய தலை முறைக்கும் இன்றைய அவசரத்தேவையை உணரச்செயது அவர்தம் அபார ஆக்கச் சக்தியை நம் முயற்சிகளோடு பிணைத்தும் விடவேண்டும்!

மக்கள் வாழ்வின் ஒரு காலக்கட்டத்தின் வரலாறு, வன்முறையால் சிந்தப்படும் ரத்தத்தாலும் – சுரண்டல் மூலம் வஞ்சிக்கப்படும் இல்லாதோர் இயலாதோரான ஏழைகளின் கண்ணீராலும் – இந்நிலையைத் திருத்த முன் வராத வல்லவர்களின் இயலாமையாலும் –

Koviloor Digital Library

இதனைத் தட்டிக் கேட்காத நல்லவர்களின் மௌனத்தாலும் – எழுதப்பட்டிருக்குமானால், அதன் பழி அந்தக் காலக்கட்டத்தில் வாழ்ந்த இளைஞர் சமுதாயத்தையே சேரும்.

இன்றைக்கு மேலே சொன்ன மாதிரியான அவலங்களின் நடமாட்டம் கட்டுக்கடங்காத நிலையை எட்டியுள்ளதை யாரும் மறுக்க வியலாது.

ஆனால் செயல்பட்டுச் சீர்செய்ய வேண்ய பொறுப்பில் உள்ள இன்றைய இளைஞர் சமுதாயத்தின் நிலை என்ன?

இவர்கள் படித்து முடித்து விட்டு – பட்டதாரி களாய் – வேலை தேடி அலையும் பரிதாப ஜீவிகளாய் – பலர் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகிவிட்ட அனாதைகளாய் – படிப்புக் காலத்தில் படிப்பின் முழுப்பரிமாணத்தையும் ஜீரணிக்காமல், அரசியல் கட்சிகளின் ஆக்கிரமிப்பால் ஈர்க்கப்பட்டு, வெவ்வேறு சித்தாந்தங்களின் அடிவருடிகளாய்– படிப்புக் காலத்தில் கேளிக்கை என்றும், காதல் என்றும், தம் பருவத்திற்கும், பொறுப்பிற்கும் ஒவ்வாத முறையில் காலத்தையும், பெற்றோரின் பணத்தையும் விரயம்செய்த வீணர்களாய்– சுயசிந்தனை, தனித்தன்மை, சீரிய குறிக்கோள்

Koviloor Digital Library

இவை இல்லாத அபலவான்களாய் – வாழ்க்கைக் களத்தில் அரங்கேறி உள்ளனர். இப்படிப்பட்டவர்களால் உருவாகப் போகும் சந்ததிகள் எப்படிப்பட்ட பரிணாம நிலையில் வருங்கால சிற்பிகளாகப் பொறுப்பேற்க நேரும் எனும் கேள்வியை கேள்விக்குறியை – இன்றைய இளைஞர் சமுதாயத்தின் முன் வைக்கப் படுகிறது.

இதுவும் இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் விபத்துக்களில் ஒன்று.

இந்நிலைக்கு இவர்கள் தள்ளப்படுவதற்குத் தம்மையறியாமலே காலத்தின் வேகத்தில் கட்டுண்டு துணைபோன பெற்றோர் மீதும் குற்றம் சாட்ட வேண்டியது தவிர்க்கவியலாத ஒன்றே.

காலத்தின் கோலத்தால் இன்று தோற்று விக்கப்பட்டுள்ள நிலையைச் சற்று ஊன்றிக் கவனித்துப் பார்ப்போம்.

சாத்திரங்களிலும், பண்டைய வரலாறு களிலும் கூறப்பட்டுள்ள வழிமுறைகளை அவ்வப் போது ஆர்வத்துடன் ஆங்காங்கு கையாளப் பட்டு வந்திருந்தபோதிலும், அசுரசக்திகளின் வளர்ச்சி தடையின்றி நடைபெற்றுக்கொண்டே போகிறது.

இன்று அசுரசக்திகள் எட்டியுள்ள பரிமாணம் அதிகக் கவலைக்கிடமாக இருக்கிறது.

Koviloor Digital Library

இதற்கான பரிகாரம் தேடும் முயற்சி எந்த முனையிலிருந்தும் பொறுப்பு உணர்வுடன் முடுக்கிவிடப்பட வில்லை.

இந்தக் கவலையைப் பொதுமக்களும் பெரிதாகப் பாராட்டவில்லை.

ஆனால் கண்கூடாகத் தென்படுவதோ அவசரமாகச் செயல்பட்டுத் தீர்வுகாண வேண்டிய அபாயநிலையை அறிவித்துவிட்டது, பம்பாய் வெடிகுண்டுச் சம்பவம்.

இருபதாம் நூற்றாண்டின் மறக்க முடியாத சாபக்கேடு இது.

விழிப்புணர்வைத் தூண்டுவதற்காக "குரோம்பேட்டை செய்திகள்" பத்திரிக்கையில் வந்த தலையங்கம் ஒன்று இங்கே இணைக்கப் படுகிறது (நவம்பர் 1–15–2002)

தீவிரவாதமும், அமெரிக்காவும்

இந்தியாவில் பல ஆண்டுகளாகவே தீவிரவாதத்தின் நச்சுதன்மை பாகிஸ்தானிய தீவிரவாதிகளால் பரப்பப்பட்டு அதன் உச்சக்கட்டம் சென்ற ஆண்டு டிசம்பர் 13 அன்று இந்திய பார்லிமெண்ட்டுக்குள்ளேயே நுழைந்து விட்டது. சுட்டுக் கொல்லப்பட்ட அந்த

Koviloor Digital Library

தீவிரவாதிகள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டும், இந்தியாவின் கூக்குரலை காதில் போட்டுக் கொள்ள யாரும் தயாராக இல்லை.

எல்லை தாண்டிய தீவிரவாதத்தை ஒடுக்க, இந்தியா இராணுவத்தை எல்லையில் குவித்துவிட்டு உலக நாடுகளின் ஒப்புதலை நாடி நின்றது. எல்லோரும் சண்டை வேண்டாம் என்றார்களே தவிர, பாகிஸ்தானிய தீவிரவாதிகள் தொடர்ந்து இந்தியாவில் நடத்தி வரும் பயங்கர தாக்குதல்களுக்கு வழி சொல்லவோ அல்லது பாகிஸ்தானிய அதிபர் முஷரப்பைக் கண்டிக்கவோ இல்லை. 'முஷரப் நல்லவர் அவரால் இதை தடுக்க முடியும்' என்று சமாதானம் பேசியது அமெரிக்கா.

செப் 11, 2001ற்குப்பிறகு பின்லேடன் ஒருவனுக்காக ஆப்கானிஸ்தானத்தையே சல்லடை போட்டு தேடியதோடல்லாமல் தாலிபன் அரசை நீக்கி கர்சாய் அவர்களை பதவியிலமர்த்தி – எல்லாம் ஒரு சில மாதங்களிலேயே நடந்துவிட்டது. அமெரிக்காவில் உயிர் இழந்தவர்கள் மட்டும் மனிதர்கள்... இந்தியாவில் தீவிரவாதத்திற்காக தினம் தினம் உயிரிழப்பவர்கள் மனிதர்கள் இல்லை!

Koviloor Digital Library

சமீபத்தில் பாலஸ்தீனிய தீவிரவாதிகள் இஸ்ரேலில் மனித வெடிகுண்டுகளால் தாக்கிய போது பொங்கி எழுந்த இஸ்ரேல், பாலஸ்தீனிய அதிபர் அராபத் மாளிகையை முற்றுகையிட்டு, தண்ணீர், மின்சார சப்ளையை நிறுத்தி, பீரங்கிகளால் அவர் மாளிகையை சின்னாபின்ன மாக்கியதை அமெரிக்கா வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது. இப்போது ஈராக் நாட்டின் மீது தன்னிச்சையாக போர் நடத்த அமெரிக்க காங்கிரஸில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐ.நா சபை இந்த விஷயத்தில் ஒத்து வரவில்லை என்றாலும் அமெரிக்கா போர் தொடுக்குமாம். இந்த தீர்மானத்திற்கு ரஷ்யா, பிரான்சு, ஜப்பான், சீனா, இந்தியா போன்ற நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. ஓநாய்க்கண்ணீர் விடும் அமெரிக்கா, ஈராக் நாட்டின் மீது போர் தொடுக்க காரணம் என்ன? அழிவை ஏற்படுத்தும் இரசாயனப் பொருட்கள் ஈராக்கில் இருப்பதற்கு இதுவரை சாட்சியம் இல்லை. அப்படியே ஈராக்கில் உள்ளது என்றாலும் மற்ற நாடுகளில் இல்லை என்பதற்கு என்ன ஆதாரம்? ஈராக்கிற்கு பல எதிரி நாடுகள் இருக்கும் போது, சதாம் இரசாயன குண்டுகளை அமெரிக்காவில் மட்டும் பயன்படுத்துவார் என்பதற்கு என்ன உத்திரவாதம்? இந்தியாவில் நடந்து கொண்டிருக்கும் தீவிரவாதத்திற்கு பதில்

Koviloor Digital Library

சொல்ல முடியவில்லை. ஆனால் இல்லாத ஒன்றை அல்லது என்றோ நடக்க இருப்பதாக கருதுவதை வைத்து இன்று போர் தொடுக்க துடிக்கும் அமெரிக்காவின் உள்நோக்கம் என்ன ?

ரஷ்யாவில் இருப்பதுபோல் அமெரிக்காவில் எண்ணை வளம் இல்லை. அதனால்தான் தொடர்ந்து அரபு நாடுகளிடையே அமெரிக்கா தன் நட்பை தீவிரமாக வளர்த்து வருகின்றது. உலக எண்ணை வளத்தில் 11%ஐ தன்வசம் வைத்திருக்கும் ஈராக் நாட்டின் அதிபர் சதாமை வெளியேற்றி விட்டு தனக்கு சாதகமான ஆளை அங்கே உட்கார வைத்தால் அமெரிக்காவிற்கு கச்சா எண்ணை குறைந்த விலையில் தொடர்ந்து கிடைக்கும். மேலும் சதாம் அச்சுறுத்தலால் நிலை குலைந்து போயிருக்கும் மற்ற சில நாடுகளும் அமெரிக்காவிற்கு நட்புக்கரம் நீட்டும். 'ஈராக்கால் ஏற்பட இருந்த அழிவிலிருந்து நம்மைக் காப்பாற்றிய அமெரிக்கா' என்ற பெருமை உலக அரங்கில் பரப்பப்பட்டு பேசப்படும் போதே, புதிதாக அமைக்கப்படும் ஈராக் அரசிடமிருந்து பல ஒப்பந்தங்கள் அமெரிக்காவிற்கு கிடைத்துவிடும். ஒரு கல்லில் பல மாங்காய்.

நசுங்கிக் கொண்டிருக்கும் அமெரிக்கப் பொருளாதாரம் இந்தப் போருக்கு உதவ முடியாது என்றாலும் அமெரிக்கா தற்போது தன் வசமுள்ள பல்லாயிரம் பேரல் கச்சா எண்ணையை

Koviloor Digital Library

வெளிமார்கெட்டில் அதிக விலைக்கு (போர் சமயத்தில்) விற்று அதில் போர் செலவுகளை ஈடு செய்து பின் ஈராக்கிடமிருந்து குறைந்த விலையில் தன்னுடைய ஸ்டாக்கை நிரப்பிக் கொள்ளும். இந்த வித்தியாச விலையில் கிடைக்கும் லாபம் மட்டுமே பல மில்லியன் டாலர்கள் இருக்கும்.

ஈராக் போருக்கு அமெரிக்காவின் சுயலாபம் மட்டுமே காரணம். இதற்காக எத்தனை அப்பாவி மக்கள் கொல்லப்படப்போகிறார்கள்! எவ்வளவு அழிவு ஈராக்கில் ஏற்படும் எனச் சிந்தித்துப் பார்க்க அமெரிக்காவிற்கு நேரம் இல்லை.

பொறுமைக்கு எடுத்துக்காட்டான இந்தியா தீவிரவாதத்தை தூசி தட்டுவதுபோல் தட்டிவிட்டு அடுத்த வேலையைக் கவனிப்பதால் இந்தியாவில் அமைதியான வாழ்க்கை என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இனிமேல் தீவிரவாதச் செயல்களை தீவிரமாக நாம் எதிர்க்காவிட்டால் நாளடைவில் இந்த நச்சு, ஆணிவேரையே அழித்து நம் நாட்டை நிலை குலைய வைக்கும். வாழப்பிறந்த நாம், நிச்சயம் வாழ்ந்து இந்தத்தீபாவளி திருநாளில் ஒன்றுபட்டு வலிமையான இந்தியாவை உருவாக்க சூளுரைப்போம். – ஆசிரியர் –

★★★

Koviloor Digital Library

இன்றையச் சராசரி மனிதனின் சிந்தனை பலவாறாக அலைக்கழிக்கப்பட்டு சிதைக்கப் பட்டு ஒரு கையாலாகாத போக்கினைத் தழுவ வைத்துள்ளது. இதற்கான காரணங்கள் முறையாய் :–

1. நமது பாரம்பர்யச் சீரிய கலாச்சாரம் தனது தனித்தன்மையை இழந்து ஒரு கலப்படக் கேலிக் கூத்தாகி விட்டநிலை.
2. எவ்விதக் கையாளுகையினாலும் கட்டுப்படுத்த இயலாத ஏறுமுகமாகிவிட்ட விலைவாசியின் வேகம்.
3. சாதாரண விஷயமாயிருந்தாலுங்கூட அதிலும் லஞ்ச லாவண்யம் புகுந்துகொள்ளும் கேடு.
4. வன்முறையின் அடிப்படையில் தம் தம் கொள்கைகளைத் திணிக்கும் உத்திகள்.
5. கொள்ளையடிப்பதற்குத்தான் பதவி, நாட்டையோ, மக்களையோ, காப்பதற்கல்ல என வேரூன்றிவரும் அடாவடித்தனம்.
6. எந்தவித அமைப்பாயினும் ஆங்கு தலைமைக்குச் சிண்டு பிடி – அதனால் பிளவுபட்ட பிரிவுகள்– கோஷ்டிகளின் பலப்பரீட்சை– ஸ்திரமற்ற தன்மைக்கு ஆதிக்கம்!
7. தீயசக்திகளை மும்முறமாக விவசாயம் செய்து

Koviloor Digital Library

தம் தம் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டு ஆட்டம் போடும் பலவித அமைப்புக்கள்.

8. வெளிநாட்டு உறவுகளில், நாட்டு நலன்பால் தொலை நோக்கற்ற அணுகுமுறையோடு அவ்வப்போதைய நெருக்கடியை மட்டும் சமாளித்துக் காலூன்றிக் கொள்ளத் திணறும் சந்தர்ப்பவாத, தரவீழ்ச்சி.

9. மக்களின் நியாயத் தேவைகளைக் கணிக்க ஆற்றலில்லாதோருக்கு புதுப்புதுப் பதவிகளை நிறுவித் தந்து, சுரண்டல் ராஜ்யத்தை நிலை நிறுத்திக் கொள்ளுதல்.

10. ஆன்மீக அமைப்புக்களும் ஆக்கப் பணிகளுக்கு ஊக்கத்தை மழுங்கவிட்டு ஸமூகப்ரக்ஞை மங்கிய நிலையோடு, அரசியல் உத்திகளில் ஆர்வம் காட்டும் அவலப்போக்கு.

11. மக்களுடன் தொடர்பு கொள்ளும் எல்லா முனைகளும் போலி வாழ்க்கை. இரட்டை வேடம்,வன்முறை, தரங்கெட்ட ரசனை, உண்மைக்கு உதாசீனம் என இவைகளுக்கு ஆதரவு தரும் போக்கில் ஒன்றிவிட்ட நிலை.

12. யாருமே, எதைப்பற்றியுமே கவலை கொள்ளாத இயந்திரப்போக்கு. இடை இடையே எதை எதையோ அனுபவித்துவிட்டு அல்ப சந்தோஷப்பட்டுக்கொள்ளும் "புல்" தன்மை.

இருபதாம் நூற்றாண்டின் விபத்துக்களின்

Koviloor Digital Library

பட்டியலில் மேலே குறிப்பிட்டுள்ள பனிரெண்டு விபத்துக்களும் இருபதாம் நூற்றாண்டால் புதிதாய் வழங்கப்பட்ட நவீன விபத்துக்கள்

இப்படி ஒரு அவல ஊர்வலம் அரங்கேறக் காரணமான இன்றையத் தலைமுறையினர் கையைப் பிசைந்துகொண்டு வாளாவிருந்தால் எப்படி மீள்வது ?

நடக்கக் கூடாத இவ்வளவும் நடந்தேறி இருக்கும் போது நடக்க வேண்டிய நல்லவற்றை நம்மால் நடத்தி முடிக்க முடியாதா ?

அன்று அஹிம்சை என்ற ஆயுதத்தால் நம் சுதந்திரத்தை மீட்க வில்லையா ?

அதேபோல் இன்று சுயக்கட்டுப்பாடு என்ற சீரிய, ஸாத்வீக ஆயுதத்தால் சுபீட்சத்தை நிச்சயம் நிலைநாட்டலாம், ஒவ்வாத எதையும் இந்த அண்டத்தை விட்டே ஒட்டிவிடலாம்.

தயாராகுங்கள் ! சுயக்கட்டுப்பாடு என்ன என்பதை முதலில் பார்ப்போம்.

அசுரரைக்கூட இறைவனையே எளிதாய் எதிர் கொள்ள வைத்தது இந்தச் சுயக்கட்டுப்பாடு என்ற அணுகுமுறைதான்.

Koviloor Digital Library

இதைக் கண்ணுறும் ஒவ்வொரு நல்லோரும் வல்லோரும் சுயக்கட்டுப்பாடு என்னும் மஹத்தான தத்துவத்தை தம் தம் கோணத்தில் ஆய்ந்து, ஆராய்ந்து, விளக்கி, நடப்பிற்கொத்த முறையில் அறிமுகப்படுத்த முன் வருவரே யானால், அது வருங்கால சந்ததிகளின் பேரதிர்ஷ்டமாக மலரும்.

இருபத்தியோராம் நூற்றாண்டின் இணையற்ற பரிசாக இப்போதிர்ஷ்டம் உருவாகட்டுமே!

நிர்ப்பந்தத்தால், அவ்வப்போது, ஒவ்வொரு நாடும் தம் நாணய மதிப்பைக் குறைத்துக் கொள்வதும், எல்லை மீறிய பணத்தாலும், அசைக்க முடியாத செல்வாக்காலும், சில நாடுகள் தம் நாணய மதிப்பை உயர்த்திக் கொள்வதும், இதனால் விலைவாசி தாறுமாறாய் ஏறிக்கொண்டே போவதும் ஒரு நிரந்தர, இயல்பான நடைமுறையாகி விட்டது.

1930களில் வெறும் 13 ரூபாய்க்கு விற்ற தங்கச் சவரன் ஒன்றின்விலை 72 வருடங்கள் கழித்து ரூபாய் 4000 ஆக ஏறியுள்ளது. அதாவது 300 பங்குக்கும் மேல் அதிகரித்துள்ளது.

இப்படி நாட்டுக்கு நாடு ஆடும் சொக்கட்டான் ஆட்டத்தின் எல்லா மூலதனத்திற்கும் ஏழை என்று முத்திரை குத்தப்பட்டிருக்கும் சாமானியர்

Koviloor Digital Library

தான் அஸ்திவாரம் எனும் உண்மை ஒவ்வொருவருக்கும் புரிந்துவிட்டால், அப்புறம் சுயக்கட்டுப்பாட்டின் அவசரத் தேவையை எவரும் ஆழமாக உணரமுடியும்.

சுயக்கட்டுப்பாடு தத்துவத்திற்கு உயிர்த் துடிப்பு வந்துவிடும்.

சுயக்கட்டுப்பாடு எனும் தத்துவத்தின் ஒட்டு மொத்தப்பொருள்— ஒவ்வாததை ஒதுக்கி ஒடுக்கி, ஒழித்து விடுதலேயாம்.

உதாரணத்திற்கு குறைந்த அளவில் விஷத்தைத் தன்னுள் கொண்ட காப்பிக் கொட்டையின் விலை ஆலகால விஷமென ஏறிவிட்டது. இன்னும் ஏறிக்கொண்டே போகப் போகிறது. இந்தக் காப்பியை நம்மால் தவிர்க்க முடியாதா? ஆரோக்யமான பாலுடன் கலந்து ஏதோ ஒரு விதத்தில் ஊறுவிளைவிக்கும் இந்தக் காப்பியை விட்டு விலகும் மனத்திண்மை நமக்கு வராதா? இருபதாம் நூற்றாண்டில் தானே இப்பழக்கத்திற்கு அடிமையானோம்? முந்தைய நூற்றாண்டுகளில் வாழ்ந்த நம் முன்னோர்கள் நூறு வயது வரை ஆரோக்யமாக வாழவில்லையா? உணவில் சேர்த்துக் கொள்ளும் மருந்துச் சத்துள்ள பொருட்களாலும், கீரைகள், கிழங்குகள், காய்கறிகளாலும்,

Koviloor Digital Library

கண்பார்வை மங்காமல் பற்கள் விழாமல், இதயநோய், இரத்த அழுத்தம், இன்னும் இன்று உலவும் வித வித நோய்களுக்காளாகாமல் ஆரோக்யமான பழக்க வழக்க அடிப்படையில் அமைதியாக, திருப்தியாக, அன்பாக வாழ்ந்து காட்டவில்லையா ?

இனி, இருபதாம் நூற்றாண்டில் நம்மை அடிமை கொண்டவைகளின் அட்டவணையைச் சற்றுப் பார்ப்போம், அந்நியக் கலாச்சார மோஹம், சிகரெட், மதுவகை, போதை மருந்துகள், சினிமா, வானொலி, தொலைக்காட்சி, டிஸ்கோ, ஒட்டல், நமது கீழ்த்தர உணர்ச்சிகளை உரமூட்டி வளர்க்கும் பத்திரிக்கைகள், புத்தகங்கள், அடிக்கடி மாற்ற மெய்யும் புதுப்புதுத் தோற்றத்தை அறிமுகப்படுத்தி நம்மை அடிமை கொள்ளும் ஆடை அணிகள், காலணிகள், அணிகலன்கள், மாணவர்களுக்குப் படிப்பைவிட அரசியலில் மோஹமேற்படுத்தும் உத்திகள், சோம்பேறிகள் சுலபமாகச் சம்பாதிக்க வித விதக் குறுக்கு வழிகள், படிப்பில் மனிதாபிமானத்தையும் இறையுணர்வையும் தவிர்த்து வெறும் அசுரப்போட்டி மனப்பான்மைக்குத் தீனி போட்டு வளர்க்கும் வியாபாரக் கண்ணோட்டம், இன்னும் என்னென்னவோ !

Koviloor Digital Library

இந்த அவலங்களில்லாமல் தலைநிமிர்ந்து அமைதி தவழ வாழ்ந்து வரலாறு படைத்த நம் முன்னோர்கள் பத்தாம்பசலிகள், நாம் வருங்காலச் சிற்பிகள் எனக் கொள்வது ஈனமல்லவா?

சென்ற நூற்றாண்டில் காந்தியைத் தவிர வரலாறு படைத்த வேறொரு பெயர் உண்டா?

விளம்பரத்தாலும், பத்திரிக்கை ஆதரவாலும், கூலிப்பட்டாளத்தின் கோஷங்களாலும், குண்டர்களின் அடாவடியாலும் வரலாறு படைப்போராகக் காட்டிக் கொண்டு திரியும் கூட்டம் வெறுங்காளான்கள்தானே? இன்று எந்த அமைப்பின் சின்னமும் இறந்தவர்களின் படத்தைக் காட்டித் தானே மக்களிடம் ஓட்டு வேட்டையாட வருகிறது.

இவைகளுக்குக்கெல்லாம் எதிராக சுயக் கட்டுப்பாடு என்பது எவ்வளவு பெரிய பயனுள்ள ஆயுதம் எனும் உண்மையை நாம் எப்போது உணர்வது?

ஒவ்வொருவரும் இறையுணர்வார்ந்த, சமூக ப்ரக்ஞையிலாழ்ந்த, சுயக்கட்டுப்பாட்டினைச் சார்ந்த மனிதனாக வாழ ஆரம்பித்து விட்டால் பின் எந்தத் தீயசக்தியும் தலைதூக்க முடியாது.

Koviloor Digital Library

"சுயக்கட்டுப்பாடு" என்பது ஒழுங்கான நடைமுறைக்கு ஒவ்வாதவைகளையும், நீதிக்கு ஒத்து வராதவைகளையும், கட்டுபடி ஆகாதவைகளையும் முழு முயற்சியுடன் படிப்படியாய் ஒதுக்கி, ஒடுக்கி, ஒழித்துவிட்டு அவை இல்லாமல் நிம்மதியாய் வாழ வழிசெய்யும் ஓர் மாமந்திரம்.

இளைஞர் பெருமக்களே!

"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா"
எனும் பாரதியாரின் வார்த்தைகளால் இங்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

பொற்காலம் படைக்க முன்வாருங்கள்!

தினவெடுக்கும் தோள்களையும் ஊற்றெடுக்கும் ஆக்கச் சிந்தனைகள் கொண்ட மனத்தையும் ஒருங்கிணைத்து வரலாறு படைக்க வாருங்கள்!

இந்தியப் பண்பாட்டை எதிரொலிக்கும்
தூய ஆடைகளை அணியுங்கள்!

உங்கள் மரபுப்படி ஸம்ப்ரதாயமான
நெற்றிச் சின்னங்களை கம்பீரமாய் பளிச்சென்று அணியுங்கள்!!

Koviloor Digital Library

வரவேற்கத்தக்க சிகையலங்காரத்தை
மேற்கொள்ளுங்கள்!

நிமிர்ந்த நடை, உயர்ந்த பேச்சு,
நிதானம் காட்டும் முகம், புன்னகை தவழும்
உதடு, உரமேறிய நெஞ்சு இவற்றுடன்
வளைய வாருங்கள்.!!

மூலை முடுக்குகளையெல்லாம் ஆய்ந்து–
வேண்டாதவற்றை அப்புறப்படுத்துங்கள்,
வேண்டியவற்றைப் பத்திரபடுத்துங்கள்.
ஒவ்வாதவற்றை ஒதுக்கி ஒழியுங்கள்.
ஒத்துப்போவதை உரமாக்கி ஐக்கியப்படுத்திக்
கொள்ளுங்கள்.

எவ்விடத்திலும் ஏமாந்து விடாதீர்கள்!
எவரையும் ஏமாற்ற அனுமதிக்காதீர்கள்!
அதட்டாதீர்கள், பதட்டப்படாமல்
எவரையும் அன்பால் இனியவராக்குங்கள்!

எங்களால் சிதறுண்டு போனதை
உங்களால் சீரமைக்க முடியும்!

இறையின் துணையுண்டு,
எங்கள் ஆசியும் கூடவே உண்டு!

வாழ்வாங்கு வாழ்ந்து வான்புகழ் ஈட்டுக!
வரலாற்று நாயகராகி எம் நெஞ்சை நெருடுக!

Koviloor Digital Library

ஆணவத்தாலும் அறியாமையாலும் வினையை விதைத்தோம். அவலங்களுக் காளாகி அங்கலாய்க்கிறோம். வாளாவிருந்தால் எல்லாம் தானே சரியாகிவிடுமா? நாம்தான் முனையவேண்டும். யாவற்றையும் அதனதன் இயல்பான ஆரோக்கிய நிலைக்கு மீட்டாக வேண்டும்.

நூலை ஆழ்ந்து பலமுறை படித்தால் விபத்துக்களும் ஆபத்துக்களும் நம்மைச் சுற்றி முற்றுகையிட்டுள்ளது தெரியும். மீள்வதற்கான வழிகளும் புரியும்.

புரிந்து கொண்டபின் உங்கள் சூழலுக்கேற்ப இக்கருத்துக்களைப் பரப்ப, சாதிக்க முன்வாருங்கள். செயலாற்றி முன்னேறுவோம். அன்றாட வழிபாட்டு வேள்வியினைத் தொடர்வோம்.

தேவிபாததூளிப் பாசறை அமைக்க ஊக்கு விக்கும் முயற்சியாக, 1980 வெளிவந்த எனது "விடயபுரம் மஹான்" எனும் நூலில் வரும் ஒரு பகுதியை இங்கு சேர்க்கிறேன்.

Koviloor Digital Library

மகான்கள் தான் மக்களை வழி நடத்திச் செல்ல முழுத்தகுதியும் உரிமையும் பெற்றவர்கள். அரசியல்வாதிகள் அல்ல. இந்த உண்மையை இன்றைய சமுதாயம், குறிப்பாக இளைஞர் சமுதாயம், முழுமையாக உணர வேண்டும். வள்ளுவர் பெருமானின் சான்றோரிலக்கணம் இதற்குச் சான்று.

சென்ற தலைமுறைகளில் தந்நிகரிலா நேர்மையுள்ள மனிதர்கள் தியாகத் தீயில் தம்மைச் சுட்டுப் புடமிட்டு நம் பாரத நாட்டிற்கும் மக்களுக்கும் தொண்டாற்றினர். அத்தொண்டின் எதிரொலியிலேயே கடந்த தலைமுறை வாழ்ந்து முடித்தது. இப்போது துவங்கியுள்ள தலைமுறைக்கு அவ்வாறான தலைவர்களே இல்லாது தத்தளிக்கும் நிலை நேர்ந்துள்ளது. அரசியல் தலைவர்களின் தனிச்சிறப்பு அம்சம் முக்கியமற்ற விஷயமாக ஆக்கப்பட்டு, அரசியல் கட்சிகளின் செல்வாக்கு மட்டும் ஓங்கியுள்ளது. இது நாட்டுக்கோ, மக்களுக்கோ ஆரோக்கிய மானதல்ல. இன்றைய இளம் இரத்தத்திலிருந்து தியாகச் செம்மல்களான மகா புருஷர்களும், தன்னலம் பேணாத் தன்னிகரற்ற தலைவர்களும் தோன்றட்டும் எனப் பிரார்த்திப்போமாக.

Koviloor Digital Library

எந்த மூலையிலும் தகிடுதத்தம், லஞ்சவஞ்சம், ஏமாற்றுவித்தை, சராசரி மக்களின் அமைதியான வாழ்க்கைக்குப் பாதுகாப்பின்மை இவை மலிந்து கொண்டே போகிறது. ஒவ்வொரு பிரஜையும் தான் உண்டு வளர்ந்த தாய்ப்பாலுக்கு மாசு கற்பிக்கும் இழி செயல் எதிலும் சூழ்நிலை தன்னை ஈர்த்து விடாதவாறு நடந்து, தான் கையொப்பமிடும் தன் தந்தையின் பெயர்க்குறி எழுத்திற்குப் பெருமை சேர்க்கும் கண்ணியனாக வாழ்வது என்ற கட்டுப்பாட்டைத் தனக்குத்தானே நிறுவி நடக்கத் தலைப்பட்டால், நம் தலைமுறையிலிருந்தே பாலாறு, தேனாறுக் கனவுகளெல்லாம் நனவாகிவிடும். இதற்கான மனவுறுதியை நம் இளைஞர்கள் பெறவேண்டும் என இறையிடம் அடைக்கலம் கொள்வோமாக!

வரதக்ஷிணைக் கொடுமையொழிய ஒவ்வொரு இளைஞனும் வீரசபதம் எடுத்துக்கொள்ள வேண்டிய கட்டம் வந்துள்ளது. தங்கம், வெள்ளி விலை ஏற்றம் பெண்ணைப் பெற்றோரைப் பதற வைத்துள்ளது. அவர்களது பயம் நீங்க அபயவரம் நல்குவது இன்றைய இளைஞர் பெருமக்களின் பொறுப்பாகியுள்ளதை நினைவுபடுத்த ஆசைப் படுகிறோம்!

Koviloor Digital Library

தாய்க் குலத்தின் கவர்ச்சிமிகு தோற்றத்தினை மிகைப்படுத்திக் காட்டி மயக்கமூட்டி பாலுணர்ச்சிக்கு வெறியூட்டி வாழ்வுமுறை அலங்கோலத்தை எய்ய உதவும் வழி முறைகளுக்குச் சாவுமணியடிக்க வேண்டும். இதைச் செய்யத் தாய்க்குலத்தின் பூரண ஒத்துழைப்புத் தேவை. எந்தச் சகோதரியும் தனது உருவத் தோற்றத்தை இவ்வாறு ஒரு அலங்கோலச் செயலுக்குப் பயன்படுத்த இடந்தருவதில்லை எனும் நோன்பை மேற்கொள்ள வேண்டும். பெண்ணிலிருந்தே பிறந்து விட்டுப் பெண்ணை விலைபொருளாக்க நினைக்கும் அறியாமையிலிருந்து வருங்கால இளைஞர் சமுதாயமேனும் விடுதலை பெற வேண்டும். அதற்கு இன்றே அங்குரார்ப்பணம் நடக்கட்டும், இனிதே நிறைவேறட்டும், எனப் பிரார்த்திப்போமாக!

இனப்பெருக்கத்தைக் கண்டு அஞ்சிக் குரலெடுத்துக் கூவுகிறோம், மூலத்தை மறந்து. முன்பெல்லாம் உடலுறவு என்பது புனிதமான ஒன்றாக, எச்சரிக்கையுடன் நேரம் காலம் அறிந்து அனுபவிக்கும் ஒரு இன்பமாக, ஏன் நோன்பாகக் கூட மதிக்கும் அந்தஸ்தோடு இருந்தது.

Koviloor Digital Library

ஆனால் இன்றோ, உடலுறவென்பது பாலுணர்வையூட்டி வெறியேற்றும் கேளிக்கைச் சாதனங்களால் ஊக்குவிக்கப்பட்டு, நினைத்த போதெல்லாம் இயந்திர கதியில் இயங்குவது எனும் பழக்கமாக நிலைத்ததுதான், மக்கட்தொகை, காளான் என, காட்டாற்று வெள்ளமெனப் பெருகக் காரணம். இந்த விஷயத்தையும் சிந்தித்துப் பரிகாரம் தேடிப் பயனடைவோமாக!"

– த்ரிசக்தி பாததூளி

வேகத்தில் சிறந்தது விவேகம்!
தானத்தில் உயர்ந்தது நிதானம்!
இன்மையில் தாழ்ந்தது பொறுப்பின்மை
அண்மையில் சூழ்ந்தது பொறுமையின்மை

"நூல் வெளி வந்து இருபது ஆண்டுகளுக்கு மேலாகியும், மேற் குறிப்பிட்ட பெரும்பள்ளங்கள், புதை குழிகளாக உருவெடுத்துள்ளனவே தவிர சற்றேனும் யாரிடமும் எந்தப் பொறுப்புணர்ச்சியும் தலைதூக்கவில்லை. இத்தவற்றில் பங்கேற்பு பெருமளவு இளைய தலைமுறையைத்தான் சேரும் எனும் உண்மை எவ்வளவு கசப்பாய் உறுத்துகிறது!"

Koviloor Digital Library

புதிய எதிரி!

மக்களை மாக்களாக ஆக்கிவிட்டது, நாம் சுதந்திரம் அடைந்தபின் உருவாகிய "சந்தர்ப்பவாதக் கலாச்சாரம்"

இன்றைய போக்கில் :-

எது உண்மை, எது பொய் என வரையறுக்க முடியவில்லை.

யார் நல்லவன், யார் கெட்டவன் என அடையாளம் கண்டுகொள்ள முடிவதில்லை. யார் குற்றவாளி, யார் நிரபராதி என அறுதியிட முடியவில்லை. எந்த "கொள்கைத் தொகுப்பு" சமுதாயத்தின் நலனுக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும், நாட்டின் பாதுகாப்புக்கும் ஒத்துப்போகும் எனக் கணிக்க இயலவில்லை.

தடி எடுத்தவனின் தடாலடிக்கு முன்னே, தனி மனிதனின் உரிமை திக்குமுக்காடுகிறது, சில நேரங்களில் மூர்ச்சையாகிச் செயலிழந்து சாய்ந்தும் விடுகிறது.

காலங்காலமாகப் பழகி நாம் நன்கு புரிந்து கொண்ட ஒருவரைக்கூட, ஆபத்தில் நம் துணைக்கு வருவார் என நம்ப முடிவதில்லை. மாறாக நம் முழு வீழ்ச்சிக்கே கூட வித்திடலாம்

Koviloor Digital Library

என்ற சாத்தியக் கூறுதான் அங்கு ஒளிந்து கொண்டிருக்கக்கூடும் எனும் ஐயப்பாடு உறுதி பெறுகிறது.

ஆங்கிலத்தில் "கமிட்மெண்ட்" (Commitment) என்று சுட்டுவார்களே அந்த தார்மீக பொறுப்பு எதிலேயும் எங்கேயும் ஒட்டிக்கொண்டிருக்கக் கூட காணோம்.

நிலையான நீதிகள் தீயவர்களின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டு, பலவித நிற உருமாற்றங்களடைவிக்கப்பட்டு, சாமானியனுக்கு வெறுங்கானல் நீராக்கப்பட்டுள்ளன.

சுமார் எழுபது சதவிகிதப் பெரும்பான்மையினரான சாமானியர்க்கு இன்று எந்தவித அடிப்படை உரிமையும் கூட உத்திரவாதமில்லை. ஒவ்வொன்றுக்கும் ஒரு "இருட்டு விலை" கொடுக்காவிட்டால் சராசரி வாழ்வுக்கே வாய்ப்பில்லை என்பது இன்றைய கண்கூடு.

இந்த "இருட்டு விலை" நடமாடாத துறையோ, நிறுவனமோ, அலுவலகமோ எங்கேயும் இல்லை.

நர்சரி வகுப்பிலிருந்தே ஒவ்வொரு வருட நுழைவுக்கும் "இருட்டு விலை" அழுதாக வேண்டும்.

A. No. 5...
TR65

Koviloor Digital Library

கல்லூரி நுழைவுபற்றியோ கேட்கவே வேண்டாம்.

படிகள் மேலே போகப் போக இந்த இருட்டு விலை பல லட்சங்களைத் தாண்டிவிடும்.

டாக்டர் (மருத்துவர்) படிப்புக்கு இன்று 50 லட்சம் வரை "இருட்டுவிலை" நடமாடுவதாக கேள்விப்படுகிறோம். இப்படி அள்ளிக் கொட்டிய பணத்தை அந்த டாக்டர், நோயாளியை பலப்பல சோதனைகள் பெயராலும், புதுப்புது நோய்களின் பெயரைச் சொல்லி அச்சுறுத்தியும், நோயாளி நிரந்தரமாய் விடுபடாமல் ஒரு நோய் போனால் அடுத்த நோய் வந்து பிடித்துக் கொள்ள வாய்ப்பை உண்டாக்கும் பக்க விளைவுள்ள மருந்துகளைக் கொடுத்து, கொள்ளைப் பணம் ஈட்டும் உத்திகள் பரவலாக இடம் பிடித்து விட்டதே! இதை யார் சரி செய்யப் போகிறார்கள்?

படிக்க இடம் பிடிக்க " இருட்டுவிலை"

வேலை வேண்டுமா? 'இருட்டுவிலை' தந்தாலே வேலை!

இடமாற்றம் வேண்டுமா? அதற்கும் 'இருட்டுவிலை'

டெண்டரா? கொடு "இருட்டுவிலை!"

Koviloor Digital Library

இப்படி அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நடமாடும் இந்த 'இருட்டுவிலை' பூதத்தையும், இதனால் தோன்றிய லஞ்ச லாவண்ய அரக்கனையும், 'இளைய பாரதமே!' யார் முறியடிக்கப் போகிறீர்கள் ?

இவ்விவகாரத்தில் 'சுயக்கட்டுப்பாடு' ஆயுதம் நிச்சயம் ஒரு நல்ல தீர்வை ஈட்டித்தரும்! ஏன் யோசிக்கிறீர்கள்? எடுங்கள் "சுயக்கட்டுப்பாடு" ஆயுதத்தை!

இனி, "சந்தர்ப்பவாதக் கலாசாரக்" குழந்தையின் பிறவியை இங்கே சற்று உன்னிப்பார்ப்போம்.

சுதந்திரம் பெற்றவுடன் பொறுப்புடன் எதிர்காலத்திற்கான ஆக்கச் சிந்தனைகளில் ஆழ்ந்து இறங்காமல், "நமக்கு இனி ஏது நிகர்" எனும் அசட்டு தைரியத்தை அங்கியாக்கிக் கொண்டு உலக அரங்கில் "சபாஷ்" பெறும் மோஹத்திற்காளானோம். முன்னேறிய நாடுகளை நம்நாட்டுச் சூழலின் வாய்ப்புக்களோடு தீர்க்க தரிசனத்துடன் ஒப்பிட்டுப் பார்க்காமல் ஐந்தாண்டு திட்டங்களைப் புகுத்தி கண்மூடித்தனமாய்க் கடன் வாங்க ஆரம்பித்தோம். திட்டங்கள் ஆரம்பத்தில் ஒரு தரத்திலும் முடியும் போது காலதாமதம், விரயம்

Koviloor Digital Library

இவைகள் மலிந்த தரத்திலும் இயங்கி மேலும் கடன் சுமையேறியது.

அவ்வப்போது சில சீரிய தலைவர்களும் ஊழல் சகதியில் கால் வைத்துவிட, அவர்களை அப்போதே உரிய முறையில் தண்டித்துப் பதவி நீக்காமல் தாட்சண்யம் காட்டி தேக்கிவைத்துக் கொண்டது, ஊழல் கலாசாரம் வேர்கொள்ள வாய்ப்பளித்தது. இதே கையாளுகை வாடிக்கையாகி வழிவழியாய், ஊழல் வெகுவாய்ப்பயிராக ஆரம்பித்து இன்று எழுதாத சட்டத்தின் அந்தஸ்திற்கு உரமேற்றம் கண்டுவிட்டது.

ஊழலைக் கண்டிக்கிறேன் என்று புதுப்புது அரசியல் கட்சிகள் அரங்கேறின. அவைகளும் பதவிக்கு வந்தவுடன் ஊழல் போதைக்காளாகி, நம் பாரம்பர்யம், நாட்டின் முன்னேற்றம், மக்களின் நல்வாழ்வு, தங்களது தேர்தல்கால வாக்குறுதிகள் இவைகளை மனச்சாட்சி அளவில் ஒதுக்கி வைத்துவிட்டு, வெளிப்படையாய்க் கவர்ச்சியான கோஷங்களையும் கனவுகளையும் பிரச்சாரம் செய்து எதற்கெடுத்தாலும் அடுத்தவர்களை எதிர்த்தே ஏசுவதையும் கலையாக்கி, ஊழல் செய்தவனிடம் பங்கு பெறுவதும், தனக்கு வாய்ப்பேற்பட்டவுடன் இன்னும் அதிக

Koviloor Digital Library

ஸாஹஸமாய் ஊழல் செய்வதும், அதை வாரி வழங்கித்தன் பலத்தைப் பெருக்கி வன்முறையை வளர்த்து அடக்குமுறைக்கு வித்திட்ட துர்க்கதியும் நேர்ந்துவிட்டது. இன்று எதையும் எதுவும் செய்து அடக்க முடியாத அளவு இந்த "சந்தர்ப்பவாதக் கலாசாரம்" வேரோடியுள்ளது.

இனி மாக்களாகிப் போன மக்களை மீட்டு மாபெரும் மக்கள் சக்தியாக அவர்களை உரமேற்றி முடித்தால்தான் நாட்டையும் சமுதாயத்தையும் பேரழிவிலிருந்து காப்பாற்ற முடியும்.

இதற்கு எவரையும் நம்பிப் பிரயோசனமில்லை. குழம்பிப் போய் திக்குத் தெரியாமல் திகைத்து நிற்கும் இளைஞர் சமுதாயம் தான் விழித்தெழுந்து ஒன்று சேர வேண்டும். யதார்த்தத்தை நன்கு புரிந்து தெளிய வேண்டும்.

ஒழுக்கமற்ற எதையும் உதறித் தள்ளிவிட்டு ஒருமித்த மனத்தினராய் புதுயுகம் சமைக்கப் புறப்பட வேண்டும்.

இறையுணர்வில் முழுமையாய் லயமாகி ஒன்றிவிட வேண்டும்.

ஒவ்வாமை எதையும் அறவே ஒழிக்க வேண்டும்.

Koviloor Digital Library

ஒத்துவரக்கூடிய நல்லவற்றை உரமேற்றி உறுதுணையாக்கிக் கொள்ள வேண்டும்.

ஒருவரையொருவர் முழுமையாய் நேசிப்பதோடு பரஸ்பரம் ஒருவரையொருவர் எந்த பலவீனத்திற்கும் இரையாகிவிடாமல் கண்காணித்து ஒரு மாபெரும் மனித சக்தி வளர்ந்தோங்க அயராது பாடுபட வேண்டும்.

பெண்ணில் இனக்கவர்ச்சியைத் தேடாமல் தாய்மையை மட்டும் இனங்கண்டு போற்றிப் பேணிப் பாதுகாத்துத் தாய்க்குலத்தைத் தரமுயர்த்தி அவர்களது தாயுள்ளம் இந்தச் சிதைந்து போயுள்ள சமுதாயத்தை ஆசிகூறி உயர்த்தி வைக்க, சம பங்களித்துச் செயல்பட உரம் சேர்க்க வேண்டும்.

இறைப் பிரார்த்தனையால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை. அதனிலும் கூட்டுப் பிரார்த்தனைக்கு ஈடான வேறெதுவும் இல்லவே இல்லை. கடந்த அண்மைக் காலங்களில் கூட்டு பிரார்த்தனையின் வலிவினுக்குச் சான்று கூறும் வரலாற்றினை நினைவு கூர்ந்து வசப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நல்லவற்றை விதைத்தால் நல்லவைதான் விளையும். அல்லாதது இடையே புகுந்து விதைத்துக் கொண்டுவிடாமலும் கண்காணிக்க

Koviloor Digital Library

வேண்டும். பிரார்த்தனை ஒரு நோன்பாகவும் வேள்வியாகவும் மலர வேண்டுமேயல்லாது ஒரு பொழுதுபோக்குத் தரத்திற்கும், தனிமனித வழிபாட்டு உத்திகள் தோன்ற இடமளிப்பதாகவும், அவநம்பிக்கை, மூட நம்பிக்கை இவை ஊடுருவ வாய்ப்பளிப்பதாகவும் மாறிவிடாமல், குறிக்கோளினுக்கே முதலிடம், ஈடுபடும் நபர்களுக்கல்ல எனும் முழுமையான தெளிவு இம்முயற்சிக்கு அஸ்திவாரமாக அமைய வேண்டும்.

புண்ணைச் சொறிவதில் உள்ள சுகத்தைக் கைவிடச் சொல்கிறானே எனத் திகைக்க வேண்டாம். புண்ணைச் சொறிந்து சொறிந்து ரத்தம் கசிந்து சீழ்பிடித்துப் புரையோடிவிட்டது. இதை முழுமையாய்க் குணப்படுத்த மருந்தும், பத்தியமும் அவசியம்.

மருந்து -- பிரார்த்தனை! பத்தியம் -- ஒழுக்கம்!

இதைவிட்டால் வேறு சிகிச்சையே இல்லை. எனவே ஒன்றுபடுவோம். செயலில் இறங்குவோம்.

பிரார்த்தனையால் என்ன சாதித்து விடமுடியும் என ஐயுறுவோர்க்கு உள்ள ஒரே பதில் :--

வாழ்வுக்கான எல்லாத் தேவைகளையும் உருவாக்க நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்

Koviloor Digital Library

இவற்றை நம்மைப் படைப்பதற்கு முன்னமேயே படைத்து , நம் தேவைகளை இனிதே முழுமையாய்ப் பூர்த்தி செய்து கொள்ளப் பகுத்தறிவையும் படைத்துள்ள இறைவனால் ஆகாதது என்று ஏதேனும் இருக்க முடியுமா – சிந்தித்துக் கொள்ளுங்கள்.

நற்செய்தி

பொற்காலம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.

இன்று நம் நாட்டையும், சமுதாயத்தையும் முற்றுகையிட்டு வாழ்க்கைச் சக்கரத்தையே திக்குமுக்காடவைக்கும் வலிமை பெற்றுள்ள அவலப்போக்குகள் படிப்படியாய் மறைந்து இன்னும் பத்தே ஆண்டுகளில் நம் பாரதப் பெருநாடு முதன்மையான நாடாக பரிணாமம் அடையப்போகிறது. ஐயத்திற்கே இடமில்லை. உறுதியாய் நம்பலாம்.

இன்றைக்கு 25 வயதுக்குக் கீழேயுள்ள இளைஞர் சமுதாயம்தான் வரப்போகும் மறுமலர்ச்சி யுகத்தின் மாண்புமிகு சிற்பிகள்.

இவர்களை விழிப்புறச்செய்து, செம்மையாய் வழிநடத்த, விரைவிலேயே அநேகம் மாநிலங் –

Koviloor Digital Library

களிலிருந்து புதுப் புதுச் சிந்தனாவாதிகள் உருவாகப் போகின்றனர்.

அவர்கள் ஓர் புதிய கல்விமுறையை அறிமுகப்படுத்துவார்கள். அக்கல்விமுறை புரட்சியானதாகவும், எளிமையானதாகவும், ஆக்கப்பணிகளுக்கு மட்டுமே ஊக்க மூட்டுவதாகவும், ஒவ்வொரு மனிதனையும் உரமேறிய முழுமனிதனாக வார்ப்படம் செய்யவல்லதாகவும் அபரிமிதச் செலவில்லா ததாகவும் அமைந்து உலக வரலாற்றின் சாதனைகளில் இடம் பெறப்போகிறது.

அந்தச் சிந்தனாவாதிகள் அநேகமனேகம் பிரிவுகளிலிருந்தும், துறைகளிலிருந்தும் வெளிவருவார்கள். ஆன்மீகத்துறை, நீதித் துறை, காவல்துறை, மருத்துவத் துறை, விஞ்ஞானத் துறை, கணிதத் துறை, கல்வித் துறை, கலைத் துறை, எளிய பாட்டாளிகள் வர்க்கம், பெரிய மிராசுதார்கள் என்று வெவ்வேறு இடங்களிலிருந்தும் இம்மஹா புருஷர்கள் நம்பிக்கை நட்சத்திரங்களாய் வெளிவந்து வழிநடத்தப்போகிறார்கள்.

ஓர் சிறு ஆன்மீகக் கணிப்பு: நாம் திருந்தத் திருந்த இன்றுள்ள நல்லவர்கள் சிந்தனையில் இறைவன் புகுந்து புதுப்புதுத் தலைவர்களை நிச்சயம் உருவாக்கி வெளிக்கொணர்வான்.

Koviloor Digital Library

சுருங்கச் சொன்னால், இந்தியா சுதந்திரம் அடைய எவ்வெவ்வாறான சீரிய தலைவர்கள் தோன்றினரோ அதே போன்ற மறுபதிப்பாய் இந்தப் புனிதப் புரட்சிப்படை அரங்கேறும்.

இவர்கள் முதன்முதலாய் வலியுறுத்தப் போவது "ஒழுக்கம்" என்ற மூலதனத்தைத்தான். இதற்கடுத்ததாய் " சுயக்கட்டுப்பாடு" என்ற அரணைச் செம்மைப்படுத்துவார்கள். அதன்பின் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் எனும் செம்மறியாட்டுப் போக்கில் அமிழ்ந்துள்ள "மயக்க"த்திலிருந்து யாவரையும் மீட்பார்கள்.

இதன்பின் ஒவ்வொருவரையும் அவரவர் திறனுக்கேற்ப ஓர் கடமை வீரனாக, வருங்கால வரலாற்றுச் சிற்பியாக உருவாக்குவதற்கு உழைப்பும் படிப்பும் இணைந்த புதிய கல்வி முறையை அறிமுகப்படுத்துவார்கள்.

இந்தக் கல்விமுறையில் தேர்வு முடிந்து வெளியே வருபவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆளாக மாட்டார்கள். வேலை கிடைத்தால் அதில் சேர்வார்கள். கிடைக்காவிடில் பலர் இணைந்து கூட்டுறவு தொழிலில் இறங்குவார்கள். அல்லது தனி நபராகத் தமது திறனை நிலை நாட்டி சமுதாயத்திற்கு முக்கியத் தேவையை பூர்த்தி

Koviloor Digital Library

செய்யும் ஒரு சிறந்தவனாக நிமிர்வார்கள். வருங்காலச் சிற்பிகளாய் மலர்ந்து வரலாறு படைப்பார்கள். முன்னோடியாய் ஒளிவீசி நாட்டுக்கும் வீட்டுக்கும் பெருமை சேர்ப்பார்கள்.

இது நடந்து முடியும் போது வேறு ஒரு புதிய சாதனையும் அரங்கேறும்.

ஆன்மீகமும் விஞ்ஞானமும் ஒன்றாக இணைந்து "பல அரிய ஆக்க பூர்வமான கண்டு பிடிப்புக்களை" அறிமுகப்படுத்தியிருக்கும். பஞ்ச பூதங்களின் வளங்கள் ஆங்காங்குள்ள தேவைக்கேற்ப பெறப்படும் வாய்ப்புக்கள் எளிதாக்கப்பட்டிருக்கும்.

பண்டமாற்றுப் பாங்கில்லாமல், பகுத்தறிவுப் பாங்குடன் ஒவ்வொருவரும் இறையுணர்வில் லயித்து முன்னேற்றமடைவார்கள்.

மேலும் ஆன்மீகச் சந்தையில் எப்படியோ புகுந்து ஆட்டிப்படைத்து வரும் எத்தர்கள் மறைந்து போவார்கள்.

மூடநம்பிக்கைகள் போன்ற ஏனைய அலங்கோலங்களும் தறிகெட்டு ஓடிவிடும்.

Koviloor Digital Library

மேலே சொன்ன திட்டப்படி சாதித்து முடிக்கும்போது பாரம்பர்யப்படி பாரதம் உலகின் ஆசானாக ஒளிவீசும்.

இப்படியெல்லாம் நடக்கவிருப்பதை ஐயப்பாடு, தாமதம், தடங்கல், இவை ஆக்ரமித்துச் சிதைக்காமலிருக்கவே மிகச் சக்திவாய்ந்த இத்தோத்திரத்திரட்டு அறிமுகமாகிறது.

ஒவ்வொருவரும் இதனை தினமும் வழிபாட்டுக் கடமையாகச் செய்வதோடு மட்டுமல்லாமல் தங்கள் வாரிசுகளையும் முழுமுயற்சியுடன் இவ்வழிபாட்டில் ஈடுபடுத்தி, வருங்கால வரலாற்று நாயகர்களாக அவர்கள் உருவாவதற்குத் துணை நிற்க வேண்டும். இங்கே சற்றுச் கவலையுடன் இன்றைய நிலையை சிந்தித்துவிட்டு மேலே செல்வோம்.

> இவ்வளவும் நடப்பது சாத்தியமா என அவநம்பிக்கை வேண்டாம். கலிமுடிய இன்னும் எத்தனையோ ஆயிரமாயிரம் ஆண்டுகளைத் தாண்டியாக வேண்டும்.

Koviloor Digital Library

இன்று எங்கு பார்த்தாலும் இருபதாம் நூற்றாண்டின் அறுவடையாக–

ஊழலின் மறுக்கவியலா ஆதிக்கம்–

ஏமாற்றுக்களின் எதிர்க்கமுடியாத எக்காளம்–

இரட்டை வேடத்தின் ஆழமான ஊடுருவல்–

விதவித கொள்ளைகளின் வினோத அதிரடிகள்–

போதைப் பொருட்களில் புதுப்புதுப் பரவலாக்கம்–

வன்முறையின் கோர தாண்டவம்–

மனிதன் அன்பை மறந்துவிட்டான்– நம்பிக்கையை இழந்து வருகிறான்!

இந்த துர்க்கதிக்கு நமது அருமைச் சந்ததிகளை வாரிசாக்கிவிட்டுப் போவது நியாயமா? அவர்களுக்கு தர்மத்தைப் போதிக்கத் தவறிய குற்றத்தை நாம்தானே செய்துள்ளோம் ? மாற்றுக்கள் செய்து நிலையை சீர்செய்துவிட்டுப் போகவேண்டாமா?

இனியாவது விழித்தெழுங்கள் இறைச் சக்தியை சரணடைவோம். அன்றாட வழிபாட்டுத் தொகுப்பினை இப்போதிருந்தே ஆர்வத்துடன் மேற்கொள்வோம்.

Koviloor Digital Library

எதிலும் ஆக்கபூர்வமான வெற்றியை நோக்கியே முன்னேறும் திறனைத் தன்னுள்ளே அடக்கியிருக்கும் மூலதனமான "ஒழுக்கம்" எனும் தத்துவத்தைப் பற்றிச் சற்று அசை போட்டுப் பார்ப்போம்.

சென்ற இருபதாம் நூற்றாண்டின் முன்பாதிவரை இந்த "ஒழுக்கம்" எனும் தத்துவம் ஏட்டுச் சுரைக்காயாகி விடாமல் நாட்டு நடப்பின், வாழ்க்கைச் சக்கரத்தின் அச்சாணியாக இருந்தது.

பின்பாதியில் சுதந்திர இந்தியாவின் ஆட்சி தொடங்கியதுமே "ஒழுக்கத்" தத்துவத்தின் முக்கியத்துவம் செயல் முறையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலக்கப்பட்டு ஆனால் பேச்சளவில் நடமாட்டத்தில் இடம் கொண்டு, பின்னர் படிப்படியாய் "ஏட்டுச் சுரைக்காய்" அளவுக்குத் தாழ்த்திக் கொண்டு வரப்பட்டுவிட்டது. ஒழுக்கம் என்ற சொல்லே இன்று பேச்சில் கூட அடிபடுவதில்லை.

ஒழுக்கத்தில் ஊன்றி நின்று செயலாற்ற வேண்டிய அரசு இயந்திரம், அரசியல் தலைமையிலுள்ளோரைச் சார்ந்தோருக்கும் "ஜால்ராக்களுக்கும்கூட" சலுகை காட்ட வேண்டிய தர்மசங்கடங்களில் சிக்கி ஒவ்வொரு

Koviloor Digital Library

சீரிய மதிப்பும் தன் திறனை இழக்க ஆரம்பித்து இன்று கொத்தடிமை நிலைக்குத் தாழ்ந்தும் போய் விட்டது.

இடையே வன்முறை கலாசாரம், சந்தர்ப்பவாத உத்தி, இரட்டைவேடைத்தனம் இவை தோன்றின.

என்ன விலை கொடுத்தாவது தவிர்த்தோ, தடுத்தோ, இருக்க வேண்டிய வேறு ஒருவித தர வீழ்ச்சி வேர்விட்டுக் கொண்டது.

அதுதான் – தீர்க்தரிசன நோக்கை கையாளாமல் தீவிர தன் உரு மோஹ வலையில் வீழ்ந்து, தான் சொல்வதே சரி; பிறர் சற்றேனும் யோசியாமல் அதை ஏற்கவேண்டும் எனும் கண்மூடித்தனமான வேகம். இதனை நாம் இங்கே ‘அசட்டு அவசரம்’ எனும் பெயரால் குறிப்பிட்டுக் கொள்வோம்.

சுதந்திரம் பெறுவதற்கு அவசரப்பட்டோம்.

நாட்டைத் துண்டாட ஒப்புக்கொண்டோம்.

சுதந்திரதாகத்தை இன்னும் சற்று ஆறவிட்டு, தள்ளிப்போட்டு, இஸ்லாமிய நன்மக்களையும், கிறிஸ்தவப் பெருமக்களையும், சளைக்காத அன்பால் நம்முடன் ஒருங்கிணையச் செய்து, சுதந்திரத்தைப் பெற்றிருந்தோமானால், இன்று

Koviloor Digital Library

நாம் அகண்ட பாரத பூமியாக, ஒரு வல்லரசாக உயர்ந்திருப்போம்.

இன்றுள்ளது போன்ற பகை உணர்வு, வேற்றுமையுணர்வு, ஸ்திரமற்ற தன்மை இவற்றின் சாயல்கூட இல்லாமல், முஸ்லிம், கிறிஸ்தவ சகோதரர்கள், தாம் இந்தியர்கள் என்ற ஆழமான உணர்விலே வாழ்ந்த காலம் அது என்பது இப்போது நினைவுக்கு வரும்போது நன்மனங்கள் அந்நாளை நினைந்து ஏக்கத்திற்களாகாமல் இருக்க முடியுமா ?

பிறருடைய கணிப்புக்களுக்கு மதிப்புக் கொடுக்கும் நமது சீரிய மாண்பையும், சுதந்திரம் பெறும் அவசரத்தில், அலட்சியப்படுத்தியதன் விளைவுதான், பின்னர் நேர்ந்த, நமது படிப்படியான பின்னடைவுகள்.

எல்லோருமாக காந்திஜியை நெருக்கினார்கள். அவரும் அவசரத்திற்கு இடம் தந்தார். சுதந்திரம் வந்தது.

ஆனால் காந்திஜியின் ஆத்மபலம் சற்று தளர்வு கண்டது. கண்மூடி வேகத்தில் 'நவகாளி யாத்திரை' என என்னென்ன உத்திகளையோ கடை பிடித்தார். அவை எதிர்மறை விளைவுகளுக்கு அஸ்திவாரமாய் அமைந்தன.

Koviloor Digital Library

சுதந்திரம் கிடைத்தவுடன் காந்திஜி ஓர் அரிய உருப்படியான கருத்தை வெளியிட்டு வலியுறுத்தினார். 'சுதந்திரம் அடைவதற்குத்தான் காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. நோக்கம் இப்போது கை கூடிவிட்டது. இனி காங்கிரஸ் வேண்டாம். கலைத்துவிடுவோம், என்றார். எவரும் ஒத்து வரவில்லை.

அப்படி அன்று காங்கிரஸ் கலைக்கப்பட்டிருந் தால், நமது தொன்மையான, சீரிய ஜனநாயகப் பண்பாடு வலுப்பெற்று, அடியிலிருந்து துவங்கி பஞ்சாயத்ராஜ் மூலம், உச்சியில் செம்மையான தலைமை அமைந்து, அரசியல் கட்சிகளே இல்லாமல் – நேர்மையான நல்லவர்கள், வல்லவர்கள், கோபுரம் போன்ற தேசியவாதிகள் ஆளும் இந்தியாவாக நிமிர்ந்திருப்போம். ஊழல் கலாசாரமும் பயிராகி இராது. இப்படியாக அந்த நல்வாய்ப்பும் அவசரக் காற்றிலே கலைந்து போயிற்று.

பின்னர்,

சுதந்திர அரசு அமைப்பதிலாவது செம்மையாகச் செயல்பட முடிந்ததா? இல்லையே! காங்கிரஸில் மிகச்சீரிய, தேசியசிங்கங்கள் எனத்தகும் அநேகம் மூத்த தலைவர்கள் இருந்தனர். இவர்களில் எவரும்

Koviloor Digital Library

திறமையிலோ, தன்மையிலோ யாருக்கும் குறைந்தவரில்லை.

இந்நிலையில் யாருடைய மனமும் புண்பட்டுக் கசந்துவிடாமல் சமாளிக்க, ‘இளைய தலைமுறை’ என்ற ‘சந்தர்ப்பவாத’ முத்திரையைப் பயன்படுத்தி, நேருஜியிடம் தலைமை தரப்பட்டது.

அந்தச் சமயம் எல்லோரும் நேருவிடம் எதிர்பார்த்தது – ‘இளம் இரத்தமானாலும்’, ‘நற்குடிப்பிறப்பின் அடிப்படையிலே,’ பெரியோரைக் கலந்தே நாட்டுக்கு நல்ல முடிவுகளைத் தேர்ந்தெடுப்பார், எனும் நம் பண்பார்ந்த பண்டைய மரபைத்தான்.

ஆனால் நடந்ததோ வேறு. நேருவின், அன்றைய வைஸ்ராய் மவுண்ட்பாட்டன் நெருங்கிய நட்பு, நேருவின் மேனாட்டுக் கலாசார மோஹம், சற்று நாத்திக வாடைவீசும் அணுகு முறை, எதையும் மேலை நாட்டுத்தனத்திலே சிந்திப்பது, எதிலும் அவசரப்போக்கு, துதி கேட்பதில் மயக்கம், உலக அரங்கில் தன் மூலமாக இந்தியா பெறப்போகும் உயர்ந்த அந்தஸ்து எனப் பகல்கனவுகளால் நிறைக்கப்பட்ட வேகத்தோடு – காந்திஜியின், சுதந்திர இந்தியாவின் செல்லப் பிள்ளையாக நேருஜி அரசுக் கட்டிலேறினார்.

Koviloor Digital Library

மாறாக, சர்தார் வல்லபாய் படேல், ராஜாஜி போன்ற தீர்க்கதரிசன, முழு தேசியப்பண்பாட்டில் ஊறியவர்களின் தலைமை இந்தியாவுக்கு வாய்த்திருந்தால் – மேனாட்டுக் கலாசாரமோஹம் இவ்வளவு வலுவாக ஊடுருவியிருக்க முடியாது.

காஷ்மீரும், ஹைதராபாத் நிஜாம் போல நிரந்தரமாய் இந்தியாவுடன் ஐக்கியமாகி இருக்கும்,

நமது பாரதம் விவசாய அடிப்படையிலே உருவான நாடானதால், நாட்டின் எல்லா நதிகளையும் ஒருங்கிணைத்து பெரும் கால்வாயாக காஷ்மீரத்திலிருந்து கன்னியா–குமரிவரை நீர்வழிப் போக்குவரத்திற்கும், பாசனத்திற்கும், அபரிமித மின் உற்பத்திக்கும் வசதியும் வாய்ப்பும் அளிப்பதாக ஐந்து முதல் பத்தாண்டு காலத்தில் நிறுவிமுடித்து, விவசாயத்தில் பெரும்புரட்சி, அமோக விளைச்சல், மாபெரும் முன்னேற்றம், கிராமம் ஒன்றுவிடாமல் மின்வசதியில் தந்நிறைவு, நீராவிப்படகு, சிறுகப்பல் மூலம் பயணிகள், சரக்குகள் போக்குவரத்தில் பெரும் விரிவாக்கம் என வசதிகள் பரந்து, விரிவடைந்து, அடுத்துத் தொடரும் பத்தாண்டுகளில் இதனால் நேர்ந்த கடனையும் அடைத்துவிட்டு,

Koviloor Digital Library

அதற்கடுத்த பத்தாண்டுகளில் உலகச் சந்தையில் உணவுப்பொருள் வர்த்தகத்தில் கணிசமான அந்தஸ்துள்ள நாடாக உயர்ந்திருப்போம்.

நம் கைவினைப்பொருட்கள், டாக்கா மஸ்லின் தரை விரிப்புகள் போன்றவை முன்னேற்றம் அடைந்து அந்நிய நாட்டில் வெகுவான வரவேற்பைப் பெற்றிருக்கும்.

அந்நிய நாட்டு சுற்றுலாப் பயணிகளின் பெருவாரியான வருகையால் அபரிமித வருமானம் என ஆரோக்யமான லாபங்களோடு –

இன்னும் –

சீனாயுத்தம் நேர்ந்திராது.

பாகிஸ்தான் போரும் மூண்டிராது.

உணவில் மேல் இடம் வகிக்க வாய்ப்பு ஏற்பட்டதால், எல்லா நாடுகளும் நட்பு பாராட்டி இருக்கும்,

இந்தியா ஒரு போதும் கடனாளி ஆகி இருக்காது.

விவசாயக் கலாசாரம் அடித்தளமாய் அமைந்ததால் இரட்டைவேடத்தனத்திற்கு இடம் கிடைத்திருக்காது.

Koviloor Digital Library

ஊழல் நோய் கடும் தொற்று நோயாக விச்வரூபம் எடுத்திருக்காது.

உண்மையும், எளிமையும், தேசீயமும் தலைநிமிர்ந்து நின்றிருக்கும். சூட்டு, கோட்டு, பூட்ஸ், டை, இவை ஆக்கிரமித்திராது.

முக்கியமாகப் பெண்கள் எந்த அவலத்தின் தாக்குதலுமின்றி பெருமையுடன் வாழ்ந்து கொண்டிருப்பர். இன்னும் என்னென்னவோ முன்னேற்றங் களும், நன்மைகளும் விளைந்திருக்கும்.

நம் பாரதபூமி முன் நாளில் என்றுமே ஏழை நாடாக இருந்ததில்லை. இங்குள்ளச் செல்வச்செழிப்பை அறிந்துதான், அந்நியர், இங்கு பல முனைகள் மூலம் உட்புகுந்து வேர்கொண்டனர். நமது பண்டைய செல்வங்களில் பல இன்றும் வெளிநாடுகளில் இருப்பது யாவரும் அறிந்ததே. உதாரணத்திற்கு – கோஹினூர் வைரம், மயில் சிம்மாசனம் ஆகியவை. (இது பசித்தவன் பழங்கதையை அசைபோடும் செயல்தான் – உணர்கிறேன்.)

"காலம் கனிந்து வந்திருக்கிறது. கைநழுவ விடாதீர்கள். வர இருக்கும் பொற் காலத்தை நிறுவப்போகும் இளம் தலைமுறையே! இன்றே ஓர் சபதம்

Koviloor Digital Library

எடுத்துக்கொள்ளுங்கள். செயலாற்ற விட்டுப்போன மேலே குறிப்பிட்ட, ஆக்கப் பணிகளை உங்கள் ஒரே குறிக்கோளாக முன்வைத்துச் செயல்பட்டு, வெற்றிகண்டு, அந்தவெற்றிக் கனியை உங்கள் வாரிசுகளிடம் சேர்த்தே தீருவோம் என்று இந்தக் கணம் முதல் இறைவுணர்வார்ந்த வேகத்தோடும், தேசீயவெறியோடும் செயல்பட்டால் சரியாக பதினாறே ஆண்டுகளில் பதினாறு கலைகளும் நிறைந்த முழுநிலவாக பாரத அன்னை பிரகாசிப்பாள்."

இனி, திரும்ப நேருஜியிடமே வருவோம்.

நேருவின் ஆட்சியிலே வகுப்புவாதக் கலவரம் முற்றியது.

இந்தியா துண்டாடப்பட்டது.

பிரச்சினை ஏற்படாதவகையில் காஷ்மீரை, முழுமையாக, அறுதியாக இணைக்காமல் வழவழாத் தன்மையில் கையாண்டு காஷ்மீரை நிரந்தரப் பிரச்னையாக்கிய பொறுப்பு பெருமளவில் நேருஜியையே சாரும்.

ஏதோ பெரியவர்களாகப் பார்த்து நம்மிடம் பொறுப்பை ஒப்படைத்துள்ளார்கள் என

Koviloor Digital Library

அடக்கமாகக் கொள்ளாமல், காலம் கரையக் கரையு, இந்தியாவைத் தன்முதாதையர் சொத்தென மதிக்கும் மயக்கத்திற்காளாகி, இந்தியாவைத் தன் வாரிசுகளே ஆளவேண்டும் எனும் தவறான ஆசைக்கு ஆளானார், இயல்பால் சிறந்த மனிதரான நேருஜி.

நேருஜியின் இந்த ரகசிய ஆசையை நன்கு அறிந்துகொண்டு அதற்காதரவான போக்கை மேற்கொண்ட 'சில தலைவர்கள்,' ஊழல் கலாசாரத்திற்கு வித்திட்டனர். அவர்களிடம் தனக்கு நேர்ந்துவிட்ட கடமை உணர்விலே, நேருஜி, அவர்களை எச்சரித்ததோடு விட்டு விட்டதால், போகப்போக, காங்கிரஸ் கட்சி ஊழல் கலாசாரத்தின் முன்னோடியாக அரங்கேறும் வாய்ப்பு நிறுவப்பட்டது.

இந்தியாவின் துர்த்தசை ஆரம்பம் ஆயிற்று.

காந்திஜி கொலையுண்டார்.

ஊழல் கலாசாரம் கிளைக்கத் துவங்கியது.

> இங்கே ஓர் பின்குறிப்பின் இணைப்பு! 1969ல் அறிஞர் அண்ணா காலம் ஆனார். தமிழ் நாட்டில் ஊழல் செழிக்கலாயிற்று

Koviloor Digital Library

விடுதலை இயக்கத்தின் வலுவான தூண்களாயிருந்த சில தலைவர்கள் இயற்கை யெய்தினர். சில தலைவர்கள் திட்டமிட்டு ஓரங்கட்டப்பட்டு, வெளியேறினர். மேலும் சிலர் வெறுத்துப்போய் ஒதுங்கிக் கொண்டு விட்டனர்.

நேருஜி இயற்கையெய்தினார். இந்த நல்லமனிதரின் பெயரைக் கசப்போடு நினைவுறுத்துவதாக இவரது செயல்கள் இடம் பெற்றுவிட்டன.

நம்நாட்டின் தன்மை, பண்பு, பண்பாடு இவைகளை இளவயதில் சரியாகக் கணிக்கும் வாய்ப்பும், ஆற்றலும் இல்லாமல், மீளா மேலைநாட்டு மோஹத்தில் மூழ்கி எல்லா எண்ணங்களிலும் மேலைநாட்டுத் தனத்தைக் குழைத்துப் பூசிக்கொண்டு, ஐந்தாண்டு திட்டங்களின் மூலம் இந்தியாவை மீளாக் கடனாளியாக்கியது.

"பாகிஸ்தான் கைவசம் உள்ள காஷ்மீரப் பகுதி" எனும் பிரகடனத்திற்கு வாய்ப்பளித்தது

காஷ்மீரை நிரந்தரப் பிரச்சினையாக்கியது.

பஞ்ச சீல், இந்தோ—சீனி பாய் பாய் கோஷங்களால் தோற்று, இந்தியாவின் கணிசமான நிலப்பரப்பை சீனா விழுங்கிக்கொள்ள இடம் தந்தது.

Koviloor Digital Library

வாரிசு அரசியல் புக வாய்ப்பேற்பட்டது.

எதனாலும் சீர்செய்யமுடியாத ஊழல் கலாசாரம் தோன்ற இடமளித்தது.

ஆகியவைதான் அவரது நிரந்தரப் பரிசுகள் –

(இந்தியனுக்கு!) பாரதப்பெருமக்களுக்கு!

(இந்திய மண்ணுக்கு!!) பாரதத்திருநாட்டிற்கு!

நேருஜி இயற்கையெய்தியபின்,

வெகு குறைவான காலமே ஆண்ட பாரத திலகம் லால்பஹதூர் சாஸ்திரி புதிரென எதிர்பாராத விதமாய் ரஷியாவில் காலமானார்.

தட்டிக் கேட்க ஆளில்லா நிலையைப் பல உத்திகள் மூலம் உருவாக்கிப் புதிய தலைமை, சந்தர்ப்பவாத அரசியிலில் இறங்கியது.

ஒழுக்கம் நடைப்பிணத்தின் நிலைக்குத் தளர்ந்தது.

மக்கள் கண்களில் மண்ணைத்தூவி உண்மையிலிருந்து அவர்கள் பார்வையைத் திசை திருப்பி, அரசு அடிக்கடி புதுப்புது கோஷங்களை உண்டாக்கிப் பரவவிட்டு, ஏதோ கிடைத்துவிட்டது அல்லது கிடைக்கப்போகிறது

Koviloor Digital Library

என மக்களை மெத்தனப்போக்கில் திளைக்க வைக்கும் ஓர் புதிய சாஹஸம் தோன்றியது. ஏழ்மையை விரட்டுதல், உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் என என்னென்னவோ உயிரில்லாத கோஷங்கள்.

இந்த அயல்நாட்டு முதலீடு விவகாரம், பிள்ளை பிராயத்தில் கேட்ட ஒரு கதையை நினைவுபடுத்தி விட்டது. இரண்டு சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒருவன் சொன்னான். 'டேய், போய் உங்க வீட்டிலிருந்து ஆழாக்கு அவல் கொண்டு வா, என் வீட்டிலிருந்து என் பங்குக்கு ஆழாக்கு உமிகொண்டு வருகிறேன். உமியையும் அவலையும் நன்றாகக் கலந்து, பின் ஊதி, ஊதித் தின்னலாம்' என்று! உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், அந்நிய முதலீடு இவைகளுக்கும் மேற்சொன்ன கதைக்கும் ஏதோ உறவு இருப்பதுபோல் தோன்றவில்லை?

அயல் நாட்டுக் கொள்கைகளில் புகழ் தேடும் மனப்பான்மை தோன்றி அண்டை நாடுகள் மீதான போரில் உறுதியான நிலை எடுக்காமல் தீர்க்க தரிசனமின்றி வழவழாத் தன்மையில் இறங்கி பொறியிலகப்பட்ட எலியானோம்.

அன்னை இந்திரா மாய்க்கப்பாட்டார்.

Koviloor Digital Library

ஆனால் அவர் கடைபிடித்த உத்திகள், மாநிலக் கட்சிகளுக்கும் பரவி அலாவுதீன் விளக்காகப் பயன்பட ஆரம்பித்தது. எஞ்சியிருந்த நல்ல தத்துவங்களும் நலிய ஆரம்பித்தன.

பின்னர் ராஜீவ் காந்தி அநியாயமாய்ப் பலியானார்.

வன்முறையும் ஊழலும் லஞ்சமும் ஊழிக்கூத்தாடத் தொடங்கி, நாட்டில் நல்லவனை சல்லடை போட்டுத் தேடும் தாழ்வுக் காளானோம்.

இப்படிப் படிப்படியாக அநியாயமாய் நாம் இழந்த மூலதனமான ஒழுக்கத்தை, எதையும் சாதிக்கவல்லத் தந்நிகரற்ற தத்துவத்தை, இப்போதிருந்தே புதிய இள இரத்தம் பாய்ச்சி உரமூட்டி நமக்கு இனி என்றும் பிரியா உறுதுணையாய் அமைத்துக் கொள்ள முழுமூச்சுடன் செயல்பட்டேயாக வேண்டும்.

மறுபடியும்

"ஸத்யமேவஜயதே"

"வந்தேமாதரம்"

இவை தாரகமந்திரமாக வேண்டும்.

Koviloor Digital Library

இன்றைய வாழ்க்கை முறையிலிருந்து ஒழுக்கம் வெகுவாக விலக்கி வைக்கப் பட்டிருக்கும் விபத்து, சுயநலமிகளின் விரிவாக்கத்தால் நேர்ந்த ஒன்று.

மமதையை மனிதனில் வரம்பு மீறிவளரவிட்டதால் வந்த வினை.

ஆகவே முதலில் ஒழுக்கத்தை புத்துயிர்ப்பித்து, அதன் மூலஸ்தானத்தில் இருக்கை பெறச் செய்ய வேண்டும்.

ஒழுக்கத்தின் பரிமாணம் என்ன, தன்மை என்ன, பலன் என்ன என்பதைப் பார்ப்போம்.

இந்த ஒழுக்கம் நான்கு பரிமாணங்களைக் கொண்டது.

அதன் ஆழம்— சுயத்தேவை நிறைவேற வேண்டிப் பொது நலத்தைக் கண்ணும் கருத்துமாய்ப் பேணி ஒழுகுதல்.

அகலம் — அவரவர் திறனுக்கேற்ற கடமையை சற்றும் தயக்கமோ தாமதமோ ஏற்படாமல் பொறுப்புடன் செய்து முடித்தல்.

உயரம் — பரஸ்பரம் கபடமின்றி அன்பு செலுத்தி அன்பைப் பெற்று அமைதியைப் பாதுகாத்தல்.

Koviloor Digital Library

உயிரோட்டம் – உண்மைப்பாங்கிலேயே நிலைத்து, சரியாக இயங்கி, பயன்பெற்று, மகிழ்ச்சியை அடைந்து, இறைவனிடம் நன்றி குன்றாமல் வாழ்தல்.

மேலே சொன்ன நான்கு பரிமாணங்களையும் கவனித்தால் முதல் மூன்று பரிமாணங்களும் நான்காவது பரிமாணத்தில் வேர்கொண்டிருப்பது புரியும்.

இயற்கை மூலங்களான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், இவற்றில் எதுவும் மனிதனால் தோற்றுவிக்கப்பட்டதல்ல. இவ்வைந்தின் பௌதிக, ரசாயன இன்னும் ஏனைய உட்கிடக்கை உபமூலங்களின், திறன்களின் வெவ்வேறு விகிதாசாரக்கலவை மூலமாய் தோற்றுவிக்கப் பட்டவைதான் நாம் காணும் (ஜீவராசி உட்பட) யாவும். இதில் மனிதனுமே அடக்கம்.

ஆனால் மனிதனுக்கு மட்டும் பகுத்தறிவு என்ற ஆறாவது அறிவை அதிகப்படியாய் அமைத்துத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஏன்? யாவற்றையும் ஆள்வதற்கு!

அதாவது அவரவர் திறனுக்கேற்ற உழைப்பை ஊக்குவித்துச் செயல்பட வைத்தும், பயன்களை பாரபட்சம் இன்றிப் பங்கீடு பெற வைத்தும், இயங்குவதற்கு!

Koviloor Digital Library

பேணிக் காப்பதற்கு!

அனுபவிப்பதற்கு!

பயன்படுத்துவதால் குறைந்து போவதைத் திரும்ப ஈடுசெய்வதற்கு!

எதுவும் வரம்புக்கு மீறிப் பெருகி விடாமலும், வறட்சிக்கிலக்காகிக் குன்றிவிடாமலும் கண்காணிப்பதற்கு !

இவ்வளவையும் மனிதன் திறம்படச்செய்து முடிப்பதற்கு அவனுள்ளே பகுத்தறிவோடு அவனது "பலவீனமாகவும்" உருவாகக் கூடிய ஆபத்தைத் தன்னிலடக்கிய "பலம்" ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. அதுதான் "நான்" "எனது" எனும் ஆணவம் (மமதை) – அதாவது தன்முனைப்பு. எதிலும் தன் கோணத்தை முன்வைத்தே செயல் படும் துடிப்பு. இந்தத்துடிப்பு முன்னம் குறிப்பிட்ட 'தன்உருமோஹ'மாக அவதாரமெடுத்துவிட்டால் சீரழிவுதான் அறுவடையாகும்.

மாறாக, இந்தத் துடிப்பை சந்தர்ப்பத்தின் தேவைக்குட்பட்ட வரம்பினுள்ளடக்கிக் கட்டுப்பாட்டுடன் ஒழுக்கம் குன்றாமல் செயல்படும் ஆற்றல் உள்ளோர்தான் நல்லவர், வல்லவர், வழிநடத்தத் தகுதி உள்ளவர். இவரது

Koviloor Digital Library

அறிவுரைக் கிணங்க பலர் செயல் படும் போது அங்கே சுபீட்சம் பெருகும், அமைதி நிலைக்கும்.

தம் கணிப்பாற்றலால், வரம்பு மீறிச் செல்வோரை இவர்கள் அடையாளம் காட்டும் போது பதட்டப்படாமல் மற்றவர்கள் அவர்களை கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து சமரசப்படுத்தி இயங்க வைப்பர்.

'தன் உருமோஹ' மாயையில் சிக்காத பெரிய மனிதரை மட்டுமே தலைவனாக ஏற்றுக் கொள்ளும் திண்மையுடன் அன்றையச் சமூஹம் இயங்கியது.

இப்படியான ஓர் அரிய பாரம்பர்ய மரபில் பிணைந்து அமைதியாக அநேகமாயிரம் ஆண்டுகளாய் நாம் வாழ்ந்து வந்ததைப் பற்றி நம் பண்டைய இலக்கியங்களில் சான்றுகள் காணலாம்.

மிகச் சீரிய ஒழுக்கமான பிறன்மனை விழையாமை எனும் ஆழ்ந்த தத்துவம் சமூகத்தால் வெகு கடுமையாகக் கண்காணிக்கப்பட்டு அக்கட்டுப்பாடு எந்த மூலை முடுக்கிலும் சேதமாகிவிடாமல் பேணிக்காக்கப் பட்டு வந்தது.

Koviloor Digital Library

நம் சான்றோருக்கு நன்கு தெரியும் – இந்த ஒழுக்கம் எங்கேனும் சிதையும்போதுதான் எல்லாவித தரக்குறைவான குணங்களும் தலைதூக்க ஆரம்பித்து, தீயவர்கை ஓங்கி, கலாசாரம் சீரழிவதும், அமைதிகுலைவதும் நிச்சயமாய் நேர்ந்து மனிதனில் தரவீழ்ச்சி துவங்கிவிடும் ஆபத்து விளைந்துவிடும் என்று!

அதனால்தான் இச்சீரிய தத்துவத்தைச் சிதைய இடங்கொடாமல் ஒவ்வொருவரும், அரசன் முதல் ஆண்டிவரை சிரமேல்தாங்கிப் பேணி வந்தனர்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் "பிறன் இல் விழையாமை" தவத்தை வலியுறுத்தும் முகமாய் திருக்குறள் மறையில் ஒரு அதிகாரத்தையே பத்துப்பாடலில் வடித்து பறைசாற்றுகிறார். இத்தவச்சிறப்பினுக்கு "பேராண்மை" எனும் விருதையும் வழங்கிப் போற்றிப் பேசியிருக்கிறார்.

இப்படிக் கண்ணும் கருத்துமாய் ஒழுக்கம் எந்த இடுக்கிலும் குன்றிவிடாமல் கண்காணிப்புடன் வாழ்ந்த போது, நம்மில் அவ்வப்போது யாரும் காணாமல் அந்தரங்கமாய் ஒழுங்கீனத்தில் திளைக்க முற்பட்டதன் விளைவாக, ஒரு சிலரின் தன்முனைப்புத் துடிப்புக் கட்டுக்கடங்காமல் "திமிராக" மாறி ஆட்டம் போட ஆரம்பித்தது.

Koviloor Digital Library

இந்தச் சமயத்தில்தான் அந்நியர் நம் நாட்டுச் செல்வங்களில் மோஹம் கொண்டு வியாபாரம், நயவஞ்சகம், போர் இவை மூலம் நம்முள் ஊடுருவி ஆக்கிரமிக்கத் தொடங்கினர்.

முன்னம் குறிப்பிட்டபடி தடம் புரண்டு போன அந்தச் சிலர் தம்மையொத்த பலவீனங்கொண்ட அநேகமனேகம் மனிதர்களை இச்சகம் பேசித் தம் வஞ்சக வலையில் சிக்கவைத்து அன்னிய நாட்டினருடன் கூட்டுச் சேர்ந்து, நம்மவர்களில் பெரும்பான்மையினரைக் கொத்தடிமையாக்கி, நம் தாய்க்குலத்தில் பலரையும் அன்னியனுக்குத் தாரமாக்கி, தாம் மட்டும் அநேகம் சலுகைகளையும், பதவியையும் பெற்று அன்னியனை ஆள்வோனாக ஏற்றுக் கொண்டனர்.

அராஜகம் அரங்கேற்றம் கண்டது.

நல்லவர்களைச் சிறகொடித்தது.

வல்லவர்கள் சிறுபான்மையினராயினர். ஆயினும் சீறி எழுந்தனர். வஞ்சகத்திற்கும் அராஜகத்திற்கும் இடையே சிக்கி வீரமரணம் எய்தினர்.

வல்லவர்கள், நல்லவர்கள் எண்ணிக்கை வறட்சியடையலாயிற்று.

Koviloor Digital Library

அன்னியன் தந்த பதவியிலிருந்தோர் தம்மை இம்மண்ணின் மைந்தனைவிட உயர்வாகப் பிரகடனப்படுத்திக் கொண்டு அன்னியனின் கலாசாரத்தில் உள்ள தீயவைகளையும் ஒவ்வாதவைகளையும் இறக்குமதி செய்து தம்மில் சங்கமித்துக் கொண்டு ஒரு போலி வாழ்க்கையை விஸ்தரிக்கச் செய்து நிரந்தரப்படுத்தி ஒரு கலப்படக் கலாசார அலங்கோலத்தை நிலைநாட்டியும் விட்டனர்.

அன்று நாட்டைக் காட்டிக்கொடுத்த வஞ்சகர் கூட்டம்தான் காலப்போக்கில் தம்மீது சந்தர்ப்பத்திற்கேற்ற சாயத்தை அவ்வப்போது பூசிக்கொண்டு, தான்தோன்றிகளாய் வளைய வந்தவாறு, எதிர்ப்படும் ஏமாளிகளையும், எளியவர்களையும், தமக்கடங்கக்கூடிய அடுத்தபடியில் உள்ளவர்களையும் தமது சாஹஸத்தாலும், வன்முறையாலும் தம்முடன் ஐக்கியப்படுத்திக்கொண்டு, வெவ்வேறு சமூகவிரோதச் சக்திக் குழுக்களாக தம்மை விஸ்தரித்துக் கொண்டு நமது எல்லாப் பாரம்பர்ய மரபுகளையும் கொச்சைப் படுத்தி, எல்லாவற்றின் மதிப்புக்களையும் உருமாற்றிக் குழப்பியவாறு இந்தச் சமூகத்தை என்றைக்குமே மீள முடியாத பள்ளத்தை நோக்கி நெட்டித்தள்ளிக் கொண்டிருக்கிறது.

Koviloor Digital Library

ஆனால் இத்தீயசக்திகள் வெற்றியடையப் போவதே இல்லை. சத்தியமும் தர்மமும்தான் வெற்றிபெற்று இவர்களைத் திருத்தி நல்லவர் கூட்டத்தைப் பெருக்கி பொற்காலத்தைப் படைக்கப்போகிறது.

அந்த நாள் விரைவில் உருவாவதற்கு இறைவழிபாட்டுடன் எல்லா முயற்சிகளையும் ஒழுக்கத்தின், சத்தியத்தின் அடிப்படையில் அமைத்து இயங்கி நம்பிக்கையுடன் செயல்பட இப்போதிருந்தே தொடங்குவோம்.

முதலில் மூத்த தலைமுறையினர் தம்மில் ஒழுக்கத்தை இன்றியமையாத் தேவையாக ஸ்திரப்படுத்திக்கொண்டு அந்நிலை இளைய தலைமுறைகளுக்கும் வாழையடி வாழையாகத் தொடர அயராது பாடுபடுவோமாக.

இளைய தலைமுறை இப்போதிருந்தே மற்ற எல்லா மயக்கத்தினையும் உதறிவிட்டு –

அம்மயக்கங்களாவன:-

விளம்பர உத்தி அலைகள் மூலம் நட்சத்திர மாகிவிட்ட – நாட்டுக்கோ, மக்களுக்கோ எந்தவித சீரிய தொண்டையும் செய்து வரலாற்றில் இடம் பிடிக்காத கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள் இவர்கள் பின்னே ஒடுவது – ஒரு மயக்கம்.

Koviloor Digital Library

நாடு கடனாளியாக மூழ்கிக் கொண்டிருக்கும் கட்டத்தில் ஆக்கப் பணிகளான உற்பத்தி, கல்வி இவற்றில் முழுமூச்சாக ஈடுபடாமல், உழைப்பு நேரத்தை வீணடிக்கும் கேளிக்கை, விளையாட்டுக் காட்சிகளில் நேரத்தைப் பாழடிப்பது – ஒரு மயக்கம்.

நட்சத்திரங்கள், எந்தப்புது நவீன உற்பத்திக்கும், விளம்பரத்தில் 'போஸ்' கொடுத்து பணத்தைச் சுருட்டிக் கொள்வதை உணராமல், அவர்கள் எந்தக் கட்டத்திலும் உபயோகப் படுத்தாத, ஆனால் சிபாரிசு செய்பவைகளைக் கைக்கொள்வது – ஒரு மயக்கம்.

நட்சத்திரங்களின், நடை, உடை, பாவனை, சிகையலங்காரம் ஆகியவைகளால் தம்மையும் அலங்கரித்துக் கொண்டு, கூலிங்கிளாஸையும் மாட்டிக்கொண்டு மேலேபார்த்தவாறே நடந்து செல்வது – ஒரு மயக்கம்.

சில வக்ர அலங்காரங்களைக் காப்பியடித்து மூக்குக்குத்திக் கொண்டும், லோலாக்கு அணிந்து கொண்டும், உலக மஹாவில்லானைப் போல் பவனி வர ஆசைப்படுவது – ஒரு மயக்கம்.

நம் நாட்டு இளநீர், பதனீர், மோர் இவற்றின் பெருமையையும், உரமான தன்மையையும் உணர

Koviloor Digital Library

மறுத்து, Straw 'உறிஞ்சு – குழல்' மூலம் நவீன (?!) பானங்களை பிறர் பார்த்து மெச்சுவார்கள் என எண்ணிக் கொண்டு காசையும் உடல் திடத்தையும் வீணாக்கும் சபல புத்தி – ஓர் மயக்கம்.

அரசியல் கட்சிகளின் தரத்தை ஆராய்ந்தறியும் திறமற்றபோக்கில், வெறும் கோஷங்களின் ஓசை தரும் பரபரப்பிலே அரசியல் கட்சிகளின் பின்னே கண் மூடித்தனமாய் ஓடுவது – ஒரு மயக்கம்

பெண்களை கண்யமாகப் பார்க்கத் தெரியாத விலங்கியல்போடு பெண்களைக் காணும் இடங்களில் கிண்டலடிப்பது – ஒரு மயக்கம்.

> விலங்குகள் மன்னிக்க! உங்களிடம் மனிதனிடம் இல்லாத ஒரு சிறந்த சீலம் உண்டு. பெண் விலங்கு கர்ப்பமாயிருந்தால் எந்த ஆண்விலங்கும் அணுகாது என்பது தான் அது.

கோஷ்டி சேர்ந்துவிட்டால், சிந்தனைக்கு ஓய்வு கொடுத்துவிட்டு, மனம் போன போக்கில் எந்த நல்லதையும் கேலி செய்வது, விமர்சனம் செய்வது – ஒரு மயக்கம்.

Koviloor Digital Library

பெரியவர்கள் எதைச் சொன்னாலும், உதாசீனப் பார்வை ஒன்றை வீசுவதுதான் 'ஹீரோத்தனம்' என எண்ணுவது – ஒரு மயக்கம்

கேலி, கிண்டல், வம்பு செய்ய எதுவும் கிடைக்காவிட்டால் அரட்டையாவது அடித்துப் பொழுது போக்க நினைப்பது – ஒரு மயக்கம்.

கேளிக்கைகளில், அதிலும் கீழ்த்தர–மானவற்றில் மூழ்குவது – ஒரு மயக்கம்

போதைக்கடிமையாதல் – ஒரு மயக்கம்.

இப்படியாக எல்லா மயக்க உணர்வுகளுக்கும் நிரந்தரச் சாவுமணி ஒன்றை ஓங்கி அடித்து விட்டு ஹரிஹர், புக்கர், குருநானக், மராட்டிய சிம்மம் சிவாஜி, விவேகானந்தர், மஹாத்மா காந்தி, நேதாஜி, நேருஜி, பாரதி, கட்டபொம்மன், ஊமைத்துரை, அரவிந்தர், திலகர், கோகலே, ரவீந்திரநாத் டாகூர், அன்னை தெரஸா, ஜான்ஸி ராணி, லட்சுமிபாய், சகோதரி நிவேதிதா, அன்னிபெஸன்ட் அம்மையார், அரவிந்தாச்ரமம் அன்னை, ராணிமங்கம்மா, வேலு நாச்சியார் இன்னும் ஏனைய மஹாத்துக்கள் வாழ்ந்து காட்டிய வழியிலே, அவர்கள் போதித்த நெறியோடு புதுயுகம் சமைக்க, நம் வாரிசுகள் முன் வரவேண்டும். இன்று அப்புதுயுகத்தைத் தோற்றுவிக்க முக்கியத் தேவை –

Koviloor Digital Library

"சுயக்கட்டுப்பாடு" எனும் அஹிம்சா ஆயுதந்தான் !

சமரச உரை

சமாதானம் நிலைத்து சுபீட்சம் பெருக, ஏமாற்றி பாதிப்பை உண்டாக்கியோருக்கும், ஏமாந்து பாதிப்பை அடைந்தோர்க்கும் இடையே சமரசமேற்பட்டு இருசாராரும், (பாதிப்புக்குள்ளான பெரும்பான்மை மக்களும் பாதிப்பை விளைத்த சிறுபான்மையினரும்) சமாதானமாக – மன்னித்தோம், மறந்தோம் எனும் கோஷங்களோடு – புதுயுகம் சமைக்க இணைந்து செயல்பட வேண்டி, இணைக்கும் மடல் இது.

நூலில் பரவலாக விரவியிருக்கும் குற்றச்சாட்டுகள் மிகைப்படுத்தப்படாமல் கண்ணியமான முறையில் வேகத்தையும், அழுத்தத்தையும் கட்டுப்பாட்டினுள் கொணர்ந்து, வருங்கால சந்ததிகளுக்கு வழிகாட்டியாக சுடர் விட்டுப் பிரகாசிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதால், இரு சாராரும் தமது வருங்கால சந்ததிகளின் உயர்வான சீரிய வாழ்வை முன் நிறுத்தி, எவரும் பழி எண்ணங்களையோ, பகை எண்ணங் களையோ மனதில் இடம் பெற விடாமல், வர இருக்கும்

Koviloor Digital Library
பொன் நாட்களை மனக்கண்ணால் கண்டு களிப்புற்று ஒருவருக்கொருவர் நேசக்கரம் நீட்டி இணைந்து, யாவரும் "சுயக்கட்டுப்பாடு" பாதையைப் பின்பற்றி புதுயுகம் சமைக்க ஆயத்தமாகுமாறு பணிவன்போடு வேண்டிக் கொள்கிறேன்.

ஏமாறுவோர் இருந்தால்தான் ஏமாற்றுவோர் பெருகுவார்கள். ஏமாறவும் வேண்டாம், ஏமாற்றவும் வேண்டாம். அன்பையே கொடுத்து அன்பையே பெற்று அறவாழ்வு வாழ்ந்து வாய்மை பளிச்சிட நிமிர்ந்து நில்லுங்கள்.

இன்று காணும் விதவிதக் கேளிக்கை காட்சிகளில் என்னென்னவோ வக்ரங்கள் இடைவெளி விடாமல் தோன்றி, அவை நம்மால் வெகு ஸஹஜமாய் நினைக்கக்கூடிய இடத்தை, மூளைச்சலவை செய்யும் உத்திகளால், பிடித்துக்கொண்டு விட்டது. முதிர்ந்தவர்களின் நிலைமையே இவ்வாறானால், சிறார்களாக இருக்கும் நாளையத் தலைமுறை, முன்னம் குறிப்பிட்ட அலங்கோலங்களின் தாக்கத்தால், எவ்வாறான குடிமகனாக வார்க்கப்பெறுவர் எனும் அச்சம் நிறைந்த கவலை நம் ஒவ்வொருவரையும் ஆக்கிரமித்து, நம்மை உருப்படியாகச் செயல்படத் தூண்ட வேண்டும்!

Koviloor Digital Library

சுயக்கட்டுப்பாடு உங்களை நிச்சயம் நிமிர்த்தி வைக்கும். அதன் பின் எக்காரணத்திற்காகவும் வளைந்து விடாதீர்கள். சுயக்கட்டுப்பாட்டிலேயே நிரந்தரமாய் நிலைத்து நில்லுங்கள்!

ஸத்யமேவஜயதே!

வந்தே மாதரம்.

சுயக்கட்டுப்பாடு

சுயக்கட்டுப்பாடு என்பது ஒழுக்கம் எனும் தத்துவத்தின் ஒரு அம்சந்தான் என்றாலும் இன்றையச் சூழலுக்கு அதைத் தனித்தலைப்புக் கொடுத்து உரமூட்டி ஒரு "ஸத்யாக்ரஹ" வேள்வித்தரத்திற்கு உயர்த்திக் கையாண்டு அதன் முழுப் பயனை ஈட்ட வேண்டிஉள்ளது. அதன் சக்தியை முதலில் ஆராய்வோம்.

உண்மையாகவே நம்மிடம் தவறில்லாத கட்டத்தில் நம் அன்பர் ஒருவரால் அநியாயமாய் ஏசப்படும் போது என்ன செய்கிறோம். அவருடன் பேச்சை நிறுத்தி, விலகி விடுகிறோம். பின்னர் காலப்போக்கில் நம் தூய்மையை உணரும் அந்த நபர் வலியவந்து தவறுக்கு வருந்தி மன்னிப்புக் கோரி சமரசமாகி மீண்டும் மகிழ்ச்சியை நிலைநாட்டுகிறார். சில கட்டங்களில் உண்ணாவைமயையும் கடைப்பிடித்து, தடம்

Koviloor Digital Library

புரண்டோரை வெற்றி கொள்கிறோம். மஹாத்மா காந்தியடிகள் இவ்வஹிம்சா வழியான “சுயக்கட்டுப்பாட்டினை” அவ்வப்போது கையாண்டு தம் பலத்தை இமயமென ஆக்கிக்கொண்டுதான் நம் இந்தியச் சுதந்திரப்போரில் வெற்றி வாகை சூடினார்.

இன்று ஒவ்வொரு தனிமனிதனும் ஒரு காந்தியாகி அநியாயத்தை, அக்ரமத்தை, அராஜகத்தை, கொலைகளை, கற்பழிப்புக்களை, கொள்ளைகளை இன்னும் ஏனைய ஆரோக்யமற்ற அலங்கோலங்களை, ஆபத்துக்களை, தம் தம் “சுயக்கட்டுப்பாடு” என்ற ஆயுதத்தால் அமைதியாக முற்றுகையிட்டு இம்மண்ணை விட்டே புறமுதுகிட்டோடச் செய்யவேண்டும்.

ஒரு பண்டம் அநியாயமாக விலை ஏறுகிறதா? அதைப்புறக்கணித்து அது இல்லாமல் வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

ஒரு பொருள் வாழ்க்கைக்கும் ஆரோக்கியத் திற்கும் ஊறுவிளைவிக்கிறதா? அதை அடி யோடு ஒதுக்கி அதற்குச் சமாதிகட்டவேண்டும்.

ஒரு கொள்கை வெறும் ஏமாற்றத்தையே வழங்கி வருகிறதா? அதையும் நல் வாழ்க்கைக்குப் பகை எனும் தெளிவோடு விலகி

Koviloor Digital Library

அக்கொள்கையை அனாதையாக்கிப் பின் அவரவர்தம் நந்நெறியிலேயே ஊன்றி நிமிர்ந்து நிற்கப் பழகவேண்டும்.

இதேபோல் சமூக விரோதியாக உலாவரும் நபர்களையும் விட்டு அறவே விலகி அவர்களைத் தனிமைப்படுத்தித் தம் தவறை உணர்ந்து தம்மைத் திரும்பவும் சமூகத்தின் நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளத் தவமிருக்கச் செய்யவேணும்.

அவசியமென்றால் இதை மகனுக்குத் தந்தையும் அல்லது தந்தைக்கு மகனும், மனைவிக்குக் கணவனும், கணவனுக்கு மனைவியும், நண்பனுக்கு நண்பனும் இச்சுயக்கட்டுப்பாடு ஆயுதத்தை தாட்சண்ய மின்றி, சமூகத்தின் நலனை வேண்டி, கையாள வேண்டும்.

இன்னும் எதையெதையோ இச்சுயக்கட்டுப் பாட்டு ஆயுதத்தால் வெற்றிகாணலாம். ஏன் சுயக்கட்டுப்பாட்டோடு இயங்குகிறாய் எனக் கைது செய்யமுடியாது, அடக்க முடியாது.

முயற்சி தளராத இவ்வளவு சுலபமான கையாளுகையோடு, இவ்வாயுதத்தை உபயோகிக்கும் இவ்வுத்தியை இன்றே ஏன் தத்து எடுத்துக் கொள்ள கூடாது?

Koviloor Digital Library

மேலே சொன்னவைகளைச் சாத்தியமாக்கவே இந்த வழிபாட்டுத் தொகுப்பு. யாவரும் ஆண், பெண், முதியோர், இளைஞர், படித்தவன், பாமரன் என்ற பாகுபாடின்றி ஒரு இணையிலா மாபெரும் சக்தியாக உருவாகி வெற்றிபெற இம்முயற்சியினை முழுமனதுடன் மேற்கொள்வோமாக !

இத்தோத்திரத்தைக் கையாள்வதற்கான தகுதி:–

இன, மத, ஜாதி வேறுபாடில்லாமல், இன்றைய அவலப் போக்கினைக் கண்டு இதயம் வெதும்பி, மனம் திருந்தி, இறைவனை நோக்கிச் சரணடையும் மனப்பாங்கு ஒன்றுமட்டும் தான். இதை ஏற்கும் எவரும் இத்தோத்திரத்திரட்டினை ஓத முழுத்தகுதி உள்ளவர்தாம்.

நன்மனம் படைத்த சிந்தனாவாதிகள் இதன் பயனைப் புரியாதோருக்கு எடுத்துக் காட்டி யாவரையும் இதனில் சங்கமமாகச் செய்வதோடு "சுயக்கட்டுபாடு" எனும் தத்துவத்தின் அறை கூவலையும் தம்தம் பாணியிலே விளக்கி விதைத்தும் விட வேண்டும்.

Koviloor Digital Library

அறிவால் நிறைவோம்!

நெறியால் நிமிர்வோம்!

அன்பால் உறைவோம்!

அறத்தால் உயர்வோம்!

இந்த நான்கு 'ஓம்'களும் நம் பண்டைய பாரம்பர்ய மரபார்ந்த வாழ்க்கை மண்டபத்தின் நான்கு தூண்கள்!

வரவேற்புரை

பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ யாவரையும் பரிவுடன் வரவேற்கிறேன்.

இறையுணர்வு ஒழுக்கத்தை ஊக்குவிக்கும்.

ஒழுக்கம் நம்மை நேர்மையில் பிணைக்கும்.

நேர்மை ஆக்கபூர்வமான செயல்பாட்டினைத் தூண்டும்.

ஆக்கபூர்வமான செயல்பாடு சுபீட்சத்தை ஈட்டும்.

சுபீட்சம் அன்பை வளர்க்கும்.

அன்பு அமைதியை நிலைக்கச் செய்யும்.

எல்லா மதங்களினுடைய, சித்தாந்தங்களினுடைய, சாராம்சமே இதுதான்.

Koviloor Digital Library

தொடரும் தோத்திரத்திரட்டு மனிதனின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி மேன்மையை அடையச் செய்யும். இதையே கூட்டுப் பிரார்த்தனையாக நிகழ்த்தினால் இன்றையக் கேடுகளிலிருந்து சமுதாயம் விடுபட்டு நிச்சயம் நல்லன எல்லாம் தடையின்றி நடந்தேறும்.

இவ்வாறான வெற்றியை இன்றையச் சமுதாயம் எதிர்கொள்ள, நான் அடுத்தடுத்து சந்தித்து வரும் ஆன்மீகப் பெரியோர்கள் தம் ஆசிகளை வாரி வழங்கியவாறு என்னை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள் எனும் உண்மையை இவண் பணிவுடன் ப்ரகடனப்படுத்திக் கொள்கிறேன்.

ஓர் வேண்டுகோள்

ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது வக்ரமான 'ஹாய்', 'வாவ்' எனும் கூச்சல்களை உதறிவிட்டு, ஒருவர் "வந்தேமாதரம்" எனக் கை உயர்த்தவும், மற்றவர் "ஸத்யமேவ ஜயதே" என உற்சாகத்துடன் கூவிக் கைதூக்குங்கள்! தமிழில்

வணக்கம் தாய்மைக்கே!
இணக்கம் வாய்மைக்கே!

என்றாகலாம்.

Koviloor Digital Library

வாய்மையே ஆண்மை
இசைவாய்க் கேண்மின்

ஒய்ந்திருப்பதும், ஏய்ப்பதும்,
ஆண்மையல்ல
சோம்பேறித்தனம்
போக்கிரித்தனம்

பொய்சொல்லலும் திரித்துக்கூறலும்
வாய்மையல்ல
அயோக்கியத்தனம்
குள்ளநரித்தனம்

பெண்ணைப்பார்த்து இளிப்பதும் கேலிசெய்வதும்
ஆண்மையல்ல
பேடித்தனம்
காலித்தனம்

சுரண்டுவதும் சூறையாடுவதும்
வாய்மையல்ல
கயமைத்தனம்
அரக்கத்தனம்

மிரட்டுவதும் அடிதடி செய்வதும்
ஆண்மையல்ல
அற்பத்தனம்
அடாவடித்தனம்

Koviloor Digital Library

வாக்கொன்று சொல்லி வேறொன்றைச் செய்வது
வாய்மையல்ல
நம்பிக்கைத்துரோகம்
நச்சுத்தனம்.

தான்வாழத் தன் கிளைவாழ தகாதன செய்தல்
ஆண்மையல்ல
சின்னத்தனம்
அசுரத்தனம்

செய்த தவறை நிறம்மாற்றிச் சிறப்பெனல்
வாய்மையல்ல
வெளிவேஷம்
முழுமோசம்

வாய்மை என்பது வேறெதுவோ இல்லை!
மாசில்லா எண்ணங்கள் மனத்தே மலர்வது!
சொல்லும் செயலும் ஒன்றேயாவது!
யாரும் ஒப்ப நன்றே செய்வது!
உள்ளத் தோன்றலை ஒளியாமல் சொல்வது!
வீரம், என்றும் நேர்மையின் பக்கம்!
யாரும் நம்மவர் எனல் சமநோக்காம்!
ஊரும் வீடும் பொறுப்பில் ஒன்றாம்!
சீரும் சிறப்பும் யார்க்கும் பொதுவாம்!
நேர்மை, உண்மை, கருணை, வீரம்,
சகிப்பு, தியாகம், பொறுமை, அடக்கம்,
பண்பு, பாசம் பரிவுடனொற்றமை,
யாவும் வாய்மைப் பரிமாணங்கள்!

Koviloor Digital Library

வாக்குறுதி

பொருள், புகழ், பெருமை, பாராட்டு இவைகளில் எதையும் கருதி என்னை இப்புனிதப்பணியில் ஈடுபடுத்திக் கொள்ள வில்லை. என்னையுமறியாமல் ஒரு தீவிர உந்தலின் அடிப்படையிலே பேரார்வத்துடன் என்னை இதன் கண்பிணைத்து அர்ப்பணித்துக் கொண்டுள்ளேன். இம்மஹத்தான வேள்வியின் மூலம் கிடைக்கவிருக்கும் நற்பேற்றினை விட இம்முயற்சி வெற்றியாகி உலகமும் மனித சமுதாயமும் அடையவிருக்கும் மேம்பாட்டினைக் கண்டு மனநிறைவடையவே பெரிதும் விழைகிறேன் எனும் உண்மையை இவண் பதிவு செய்து உறுதி எடுத்துக் கொள்கிறேன்.

த்ரிசக்தி பாததூளி

T.V. கல்யாண்

கட்டணமின்றி இலவசமாய் நடைபெறும் நூலகங்களுக்கு இந்நூல் பிரதி அன்பளிப்பாய் வழங்கப்பெறும்.

Koviloor Digital Library

அறிக்கை

55 வருட தேவி உபாஸனை
45 ஆண்டு ஆழ்ந்த ஆராய்ச்சி
35 வருட தீவிர சிந்தனை
25 ஆண்டு கடும் முயற்சி

இவற்றின் விளைவாய் ஒரு நூதன சிகிச்சை மூலம், மனித மனத்தை அமைதியில் தவழவும், தர்மம் சத்தியம் இவற்றிலே திளைக்கச் செய்யவும் ஓர் மாபெரும் செயல்பாட்டினை இந்நூலில் உள்ள நூதனத் தோத்திரத் திரட்டின் வாயிலாய் நடைமுறைப் படுத்த விரதம் பூண்டுள்ளேன்.

தேவி கட்க மாலா மண்டலியும்
தேவி பாததூளிப் பாசறையும்
நம் இயங்குதல்களை அடையாளம் காட்டப்
பயன்படுத்தப்படும் பெயர்களே தவிர இவை
நிறுவனங்கள் அல்ல. எனவே
புகழ் விரும்பிகளும்
பதவி மோகம் உள்ளோரும்
பணதாகம் உள்ளோரும் பகல் கனவுகளுடன்
இங்கு வர முயற்சி செய்ய வேண்டாம்.

(முதல் பாகம் முற்றும்)

Koviloor Digital Library

உ

ஸ்ரீமாத்ரேநம:

(இரண்டாம் பாகம்)

தீர்வு

புருஷார்த்தம் - அர்த்தம் (பொருட்பேறு)

நூதன தோத்திர திரட்டு

புதிய வழிபாட்டு தொகுப்பு அறிமுகம்

கலியின் வேகம் நிறைந்த வாழ்க்கையில் – ஒன்றையொன்று சார்ந்த இறையியலையும் (நிவ்ருத்தி) உலகியலையும் (ப்ரவ்ருத்தி) இரு கோடுகளாக்கி ஒன்றையொன்று ஒட்டாமல் இயங்க விட்டுவிட்டோம். இந்தத் தவறின் விளைவுதான் இன்றைய அவல நிலை. இறையியலை உலகியலிலும், உலகியலை இறையியலிலும் லயப்படுத்தி, சமரசமாக்கி, இணைத்தும் விட்டால் வாழ்க்கை பூரணமாகி விடும் – அதாவது இரண்டு கோடுகளையும் இணைத்து ஒரு வட்டமாக்கி விட்டால் அது

"பூரணம் ஆகிவிடாதா!"

Koviloor Digital Library

வழிபாட்டு தொகுப்பு

அறிமுகம் துவக்கம்

அள்ளக் குறையாச் செல்வமாய் தந்நிறைவு (சுபீட்சம்), சாந்தி (அமைதி) இரண்டும் நிலைக்க, இறையியல் உலகியல் இரண்டினையும் இணைத்துச் சான்றோர், கடைப்பிடித்து வெற்றி கண்ட செயல்முறைதான் இறை வழிபாடு.

இறையுணர்வு நமது நடப்பில் முதலிடம் பெற்றால்தான் வாழ்க்கை இன்பமயமாகவும் இன்னலற்றதாகவும் அமையும். இது என்றும் எங்கும் மாறுபடாத நியதி.

இம்மாபெரும் அடிப்படையை நன்கு வேரூன்றச் செய்து முழுப்பயனை அடைய வைக்கவேண்டியவர் பெற்றோர்.

பிற்காலத்தில் பாசத்தோடு பராமரிக்கப் பெறும் பெற்றோர்தான் இக்கடமையை முழுமையாய் நிறைவேற்றியவரென அடையாளம் காணலாம்.

மற்றவர்கள் பெற்றுப் போட்டுவிட்டு எவ்வெவ்வாறோ வாழ்ந்து முடிக்கும் விலங்கியல்பினராவர். இன்று இவ்விலங்கியல் பினர் எண்ணிக்கை மிகமிக அதிகமாகியுள்ளது. பரிசீலித்துப் பரிகாரம் காணவேண்டிய கட்டத்தை எட்டிவிட்டோம்.

Koviloor Digital Library

ஒவ்வொருவரும் உடனே பொறுப்போடு செயல்பட ஆரம்பிக்க வேண்டும். அதற்கு இறைச்சக்தியைச் சரணடைய வேண்டும். எளிதாய் வெற்றியடையலாம்.

இறைவன் தந்துள்ள உலகத்தில் யாவும் உள்ளன. தேவைக்கேற்ப அடைந்து கொள்ள வாய்ப்புக்களும் விரிவாகவே உள்ளன. அடைவதற்கான பொறுப்பைத்தான் ஒழுக்கம் புண்படாமல் சரிவர நிறைவேற்ற வேண்டும். பொறுப்பை நிறைவேற்றாமல் வாழ நினைப்பது திருட்டுச் செயல். பொறுப்பு என்பது ஒரு சுமையே அல்ல. மிகச் சுலபமாக, உத்திரவாதமான மகிழ்ச்சியை மட்டுமே அளிக்க வல்லதுதான் பொறுப்பைச் சரிவர நிறைவேற்றும் செயல்.

பொறுப்பு உடல் போன்றது. ஒழுக்கம் உடலில் உயிர் போன்றது.

பொறுப்பின் அங்கங்கள் (உறுப்புக்கள்) ஆவன :–

- உண்மையையே கடைபிடித்தல் ;
- திறனுக்குரிய வேலையைச் செய்தல் ;
- அடுத்தவருடைய நல்ல அம்சங்களைப் பின்பற்றுதல் ;
- தேவைக்கு மீறி ஆசைப்படாமலிருத்தல் ;
- கிடைப்பது எதுவாயினும் வரவேற்று மனநிறைவெய்தப் முயற்சி செய்தல்;

Koviloor Digital Library

- ✦ பிறர் எவ்வாறு நம்மிடம் பரிவு காட்டவேண்டுமென்று எதிர்பார்க்கிறோமோ அதே அளவில் பிறரிடம் நாமும் பரிவுடன் பழகுதல் ;
- ✦ பெரியோர் சொல்படி நடத்தல் ;
- ✦ பிறர்க்குக் கேடு செய்யாமலும், நினையாமலும் இருத்தல் ;
- ✦ தீயவற்றை அறவே விலக்குதல் ;
- ✦ நல்லனவற்றை எங்கும் எப்போதும் எதிலேயும் நிலைபெறச்செய்து பாதுகாத்தல் ;
- ✦ இயன்றவரை அடுத்தவர்க்கு உதவுதல் ;
- ✦ பகட்டான வாழ்வை வெறுத்து எளிமையாய் வாழ்வதில் பெருமிதம் கொள்ளுதல் ;
- ✦ சமுதாயத்தை ஒரே குடும்பமாய்ப் போற்றி ஒழுகுதல் ;
- ✦ இறையிடம் நீங்கா நம்பிக்கை வைத்தல் ;

(இடைக்குறிப்பு :— மனிதனின் இவ்வாறான பாரம்பர்ய மரபான "பொறுப்பை"த் தமது வாரிசுகளில் வலியுறுத்தி நிலைபெறவைக்கத் தவறிய பெற்றோர்தான் இன்று அனாதை இல்லங்களில் அகதிகள் போல வாழ்கிறார்கள் என்பது இன்றைய வரலாற்று ஏட்டில் பதிவாகிக் கொண்டிருக்கும் அவமானச் சின்னம்.)

Koviloor Digital Library

அன்றைய குருகுல பாடம்
மாதாவும் பிதாவும் முன்னறி தெய்வம்
இன்றைய வியாபாரக்கல்வி விளைவு
மாதாபிதாகதி முதியோர் இல்லம்
(அனாதை இல்லம் ?)

முன்னம் குறிப்பிட்டவாறு முழுப்பொறுப்புடன் ஒவ்வொருவரும் இயங்குவது எனும் நிலை புலருமானால் வாழ்க்கையில் துன்பம் எவ்வாறு இடம் பெற இயலும் ?

எளிமையும் மனிதாபிமானமும் ததும்ப நாகரிகமாக வாழ்ந்த சிந்தனைச் செல்வர்கள் நம் சான்றோர். பரிணாம வளர்ச்சியில் சிறந்த படைப்பு மனிதப்பிறவி என உணர்ந்த அவர்கள், மனிதப் பிறவியின் இலக்கை நிர்ணயிக்க, படைப்புக்களின் இயல்பை நுணுக்கமாய் ஆய்ந்து, பரிணாம வளர்ச்சியில் மனிதப் பிறவியே முடிவான தலையாய படைப்பு எனக் கணித்து, படைப்பின் அடிப்படையான மூலத்தையும் படைப்பின் குறிக்கோளான நோக்கத்தையும் நிர்ணயிக்கும் முழுமுயற்சியிலிறங்கி – எவ்வித முரண் பாட்டுக்கும் இடமேயிராத சரியான சமரச முடிவை வரையறுத்து, ப்ரபஞ்சத்தைத் தர்மகர்த்தா நிலையிலிருந்து வழுவாத வகையில் வழி நடத்திச் செல்லப் படைக்கப்பட்டவன்தான் மனிதன் எனும் முடிவோடு –

Koviloor Digital Library

ப்ரபஞ்சத்தில், படைப்புக்களின் இயல்பினை தோன்றல், வளர்தல், மறைதல் என்றும் படைப்புக்களின் குறிக்கோள் "பயன்படுதல்" "பயன்பயத்தல்" என்றும் உணர்ந்து –

அவைகளைப் பராமரிப்பதும், பயனைப் பங்கீடு செய்வதும், மறைவது திரும்பத்தோன்றி ஈடு செய்ய வழிவகைகளைக் கடை பிடிப்பதும், எங்கும் எவ்வித குறைபாடும் முரண்பாடும் நேராமல் தவிர்ப்பதும், அமைதி எந்த இடத்திலும் சிதறாமல் பாதுகாப்பதும்தான் மனிதப் பிறவியின் பயனான தர்மகர்த்தா நிலை என அறுதியிட்டு –

எல்லாக் கண்டுபிடிப்புக்களையும் செய்யுளாக வடித்து அவைகளைத் தொகுத்து மறைகளாக்கி மேலும் மேலும் கிடைக்கும் கருவூலங்களை இணைத்தவாறு – சிந்தனையின் மேல்தளங் களுக்குச்சென்று –

தத்துவங்களையும் அதன் மூலங்களையும் பரிசீலித்து, யாவற்றையும் சமரசம் பிறழாமல் வழிநடத்திச் செல்லும் திறன், "ஒலி" அலை களைக்கையாளும் விஞ்ஞானத்தால்தான் இயலுமெனக்கணித்து, "ஒலி" அலைகளை ஆக்கப் பணிக்கும் அமைதிகாக்கும் திறத்திற்கும் இசைவாகப் பயன்படுத்தி வெற்றி கண்டபின் –

Koviloor Digital Library

உலகின் வாழ்க்கைத் தரம் எவ்வித இடையூறுக்கும் இலக்காகாமல் செம்மையாய் நிலைக்க "ஒலி" அலைகளை எவ்வெவ்வாறு எந்தெந்தக் காலங்களில் கையாண்டு வெற்றி பெறமுடியும் என போதிக்கும் முகமாக "மறை" களையும் அதன் கிளை நூல்களையும் வெளியிட்டுவிட்டு, தொடர்ந்து வரலாற்றில் இடம்பெறும் வளர்ச்சி, நெருக்கடி, மோதல், தொய்வு, தேய்வு, புனரமைப்பு இவைகளை ஆராய்ச்சி பூர்வமாய் விமர்சித்து–

எங்கே தவறு நேர்ந்தது, தவறு நேராமல் எவ்வாறு தவிர்த்திருக்கலாம், நேர்ந்த தவறைச் சரிசெய்ய என்னவழி, இனிதவறு நேராமலிருக்க என்ன செய்யவேண்டும், எவ்வாறு உலகில் தந்நிறைவையும், அமைதியையும் அவ்வப்போது தவறுக்காளாகி விபத்துக்களுக்கிலக்காகாமல் பாதுகாப்பது என்பதையெல்லாம் பாடங்களாக படைத்துத்தந்து –

தேவைக்கும், நெருக்கடிக்கும், ஏற்ப எவ்வாறு "ஒலி" அலைகள் கைகொடுக்கும். அவற்றை எப்படிக் கையாள்வது, வெற்றி பெறுவது என்றெல்லாம் விஞ்ஞான ரீதியாய் வரையறுத்துத் தந்தவைகளில் –

இன்றைய நெருக்கடிகளுக்கு முழுமையான

Koviloor Digital Library

தீர்வு – "தேவீகட்கமாலா" தோத்திரந்தான் என அதன் பலச்ருதியிலிருந்து அறுதியிடமுடியும்.

இவ்வரிய சக்திவாய்ந்த தேவீகட்கமாலா தோத்திரத்தை தினந்தவறாமல் பெண்மணிகள் தேவீ ஸந்நிதிகளில் கூட்டு வழிபாடாக ஒதவேண்டும். அகண்ட பாரத "தேவி கட்கமாலா" மண்டலியால் வெளியிடப்பட்டிருக்கும் "தேவி கட்கமாலா" அன்றாட வழிபாட்டு வேள்வி நூல்களில், எவ்வாறு தினந்தவறாமல் மாது சிரோன்மணிகளால் அம்பிகை ஸந்நிதியில் நடத்தப்படவேண்டும் என **Vol-I, Vol-IIல்** விளக்கமாகக் காணலாம்.

பலச்ருதியின் ஸாரம்

இம்மஹத்தான மாலா மந்திரம் மாபெரும் ஸித்திகளைத் தரவல்லது. இதை எப்போதும் கையாண்டு பயனடைவதோடு, முழுமுயற்சியாய் பின் சொல்லப்படும் நெருக்கடிக் காலங்களில் பெண்மணிகள் தேவீ ஸந்நிதிகளில் ஆங்காங்கு கூட்டு வழிபாடாக நிகழ்த்தி வர வேண்டும்.

- ✦ அரசனுக்கு ஆபத்து வரும்போதும்–
- ✦ அரசாங்கத்தில் குழப்பங்கள் நேரும்போதும்–
- ✦ நாட்டில் கலகங்கள் தோன்றும் போதும்–
- ✦ போர்முளும் போதும்–

Koviloor Digital Library

- ✦ கொள்ளையர் கொடுமை, வன்முறையின் ஆர்ப்பாட்டம் விரிவாகும்போதும்–
- ✦ மித்திரபேதம், நம்பிக்கைத் துரோகம் பரவலாகும் போதும்–
- ✦ பெருந்தீ, பெருவெள்ளம், பேய்மழை, சூறாவளி, புயல், பூகம்பம், வறட்சி ஆகிய துர்ப்பிட்சங்கள் நேரும் போதும்–
- ✦ அம்மை, வாந்திபேதி, காலரா ஆகிய கடும் நோய்கள் பரவும் போதும்–
- ✦ பேய் பிசாசுகளின் தொல்லை, ஏவல் பில்லி சூன்யங்களின் ஆதிக்கம், துராசாரங்களின் பெருக்கம் இவற்றால் மக்கள் பீதிக்காளாகி நிவர்த்திக்காக ஏங்கித் தவிக்கும் போதும்–
- ✦ இன்னும் ஏனைய துர்நிமித்தங்கள் அதிகரிக்கும் போதும்–

இந்த தேவீ கட்க மாலா வழிபாட்டினை, சமய ஸஞ்சீவியாய்க் கைக்கொண்டு எதையும் தவிர்த்துத் தற்காத்துக் கொள்ளலாம் என மறைகள் உத்திரவாதமளிக்கின்றன.

பாலை மந்திரத்தைப் பற்றி ப்ரபலமாய் நிறையவே பேசக் கேட்டிருக்கிறோம். அந்த பாலா மந்திரம்தான் இந்த கட்க மாலா மந்திரத்திற்கு பீஜம்–சக்தி–கீலகமாக அமைக்கப் பட்டுள்ளது–அதாவது நிச்சய வெற்றியை விதைப்பது, பயிர்

Koviloor Digital Library

செய்வது, அறுவடை செய்து கொள்வது.

இந்த பாலாமந்திரத்தைத்தான் பதினெட்டு ஸித்தர்களும் உபாசனை செய்து ஸித்தி பெற்று ஸர்வேச்வரனுக்கு இணையான ஆற்றலை யடைந்து–நம் மண்ணின் அநேகம் புண்யத் தலங்களில் ஆதாரசக்தியாய் உறைந்துகொண்டு இன்றும் ஒளிவீசிக்கொண்டிருப்பதை–இன்று நம்மிடையே உலவும் அநேகம் மஹான்களும் ஞானிகளும் தரிசித்து அந்த சித்தர் பெருமக்களின் ஆணையையும் அருளையும் பெற்று–இன்று கட்டுக்கு மீறி வளர்ந்து அட்டகாசம் செய்து ஆர்ப்பரிக்கும் தீய சக்திகளின் முற்றுகைக் கிடையே தேவைகள் எதுவும் ஸ்தம்பித்து விடாமலும் சீர்செய்ய முடியாத அளவு அனர்த்தங்கள் நேர்ந்து விடாமலும், கண்காணித்து வருகிறார்கள் எனும் உண்மையை பக்திப் பாதையில் உள்ள சிந்தனாவாதிகளால் மட்டுமே உணரமுடியும்.

இந்த சித்தர் பெருமக்கள்தான் நம் கலாசாரத்தின் காவலர்கள். ஆயகலைகள் அறுபத்தி நான்கின் கருவூலப் பெட்டகங்கள்.

சாத்திரமென்ன, மருத்துவமென்ன, வாழும் முறை என்ன ? வாழும் வகை என்ன ? வேண்டும் துணை என்ன ? உலகியலில் இறையியலின்

Koviloor Digital Library

பங்கென்ன என்றெல்லாம் நாம் வியக்கத்தக்க தூய தமிழிலே எண்ணிறந்த ஆயிரமாயிரம் பாடல்கள் மூலமாய் என்றும் நமக்குத் துணை நிற்க வழி செய்து வைத்துள்ளார்கள்.

ஆனால், இந்நூற்றாண்டில் என்ன செய்து வைத்தோம். வெண்ணையை வைத்துக் கொண்டே நெய்க்கு அழும் முட்டாள் தனத்திற்கு ஒரு படி மேலே போய், வெண்ணையை மூலையில் எறிந்துவிட்டு சுண்ணாம்பை உருட்டிக் கையில் வைத்துக் கொண்டு நெய் கிடைக்கும் எனக் கனவு காண ஆரம்பித்துவிட்டோம்.

நமது கருவூலங்களைக் கறையானுக்கு விருந்தாக்கிவிட்டு, மேலை நாட்டு மொழியையும், கலாசாரத்தையும், விஞ்ஞானத்தையும் வர வேற்று அரவணைத்து ஆதரித்தவாறே—

பழைய அடிமைத்தனத்திலிருந்து மீண்ட நாம், ஒரு புதிய அடிமைத் தளையில் வீழ்ந்து, தரம் தாழ்ந்து, தகைமையிழந்து, நம்மை மீட்டுக் கொள்ளும் வகையறியாது மேலும் மேலும் செய்த தவறையே புதிய புதிய கோணங்களில் விரிவுபடுத்திக் கொண்டே போகிறோம். இப்போதேனும் விழித்துக்கொண்டு முழுமூச்சாய் முயன்று விடுவித்துக் கொள்ளாவிட்டால், கடந்த அநேகமநேகம் நூற்றாண்டுகளில் நேர்ந்த

Koviloor Digital Library

அடிமைத்தனத்தைவிட, மீளவே முடியாத ஒரு புதிய கோரமான அடிமைத் தனத்தில் அமிழ்ந்து போவோம். அப்புறம் மீட்சியே இராது. காட்சிதான் மிச்சமாயிருக்கும்.

இவ்விபத்து நேர வாய்ப்பே வராமல் முழுமையாய்த் தவிர்ப்பதற்கு, சக்தி – அம்சமான கட்கமாலா துதி அருமருந்தாகும். (இது தோத்திரத்திரட்டில் இரண்டாவது கட்டம்) இம்மருந்திற்கு அனுபானமாக (கூடச்சேர்த்துச் சாப்பிடும் கூட்டுமருந்தாக) தொடர்வது சிவ – சக்தி அம்சமான "மாத்ருகாபைரவதசகம்" (இது தோத்திரத்திரட்டின் மூன்றாவது கட்டம்)

காலம் போற்றும் தர்மகர்த்தாவாக உயர்வதற்கு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு நிதிகளும் கிடைக்க வேண்டும். அவைகளைத் தட்டாமல் தயங்காமல் கை–கூடவைக்கவே இந்நூதன தோத்திரத்திரட்டு.

முதலில் காப்பு! நம்முயற்சியில் எவ்விதத் தீயசக்தியும் ஊடுருவ இடமிராமல் காக்கும் .

தொடர்வது குருவணக்கம். குருவின் ஆசிமட்டும் ஒரு முயற்சிக்குச் சரிவரக் கிடைத்துவிட்டால் நிச்சயவெற்றிக்கு எவ்வித தாமதமும் தடங்கலும் இராது.

Koviloor Digital Library

பின்னர் "கணபதி துதி" – எல்லாம் வல்ல இறைவனே த்ரிபுரஸம்ஹாரத்திற்குப் புறப்படுமுன் இவரைப் பூசித்துவிட்டுத்தான் ஆயத்தப்பட்டார். தடைகளைத் தவிடு பொடியாக்குவதில் அத்துணை வல்லவர் வேழமுகக்கடவுள்.

அடுத்தது, அறிவுத் தெய்வம் ஆறுமுகப்பா. வேலுண்டு பயமில்லை என்பது நம் தமிழ் மண்ணின் தொன்மையான கோஷம். தந்தைக்கே பிரணவப்பொருளுரைத்தவன் செந்தமிழ்க் குமரன். இக்குமரனின் நவவீரர்களே போதும், நம்மை முற்றுகையிட்டுள்ள அவலங்களை அழிக்க!

முடிவாக! "நவ கோள் திரட்டு". நாளும் கோளும் நம் வாழ்வை நடத்திச்செல்லும் சக்கரங்கள். இவை நமக்கு நற்றுணையாக வேண்டும். பகைவர் புறமுதுகிட்டோடுவர். வெற்றி நம் நீங்கா நண்பனாகிவிடும்.

இனி இந்நூதனத்தோத்திரத்திரட்டில் – முதலாவது ஷோடசலக்ஷ்மி தோத்திரம். அருட்செல்வமும். பொருட்செல்வமும் செறிய வாழவைக்கும். இங்கு வரையறுத்துள்ள பதினாறு பேற்றினையும் அடைந்து இனிதே வாழ்ந்துகொள்ள நாமும் ஒரு பதில் உறுதிதர வேண்டும். அதாவது நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு பேற்றினையும் எவ்வாறு அறம்

Koviloor Digital Library

பிறழாமல் கையாள்வோம் எனும் உறுதி மொழிதான் அது. ஒவ்வொரு இலக்குமியின் செய்யுள் முடிவிலும் அவ்விளக்கத்தைக் காணலாம்.

இரண்டாவது – கட்கமாலா தோத்திரம். இத்தோத்திரத்தின் அளவிடற்கரிய சக்தியினை முன்னம் விரிவாகவே விளக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேலும் ஒரு சீரிய விளக்கம் தொடர்கிறது. இவ்விளக்கம் உடனடியாகத் தெளிவாய்ப் புரியாவிட்டாலும் கையாளுகை முதிர்ச்சிபெறும் போது மிக நன்றாக விளங்கும். பிறர்க்கு விளக்கும் பேராற்றலும் கை வரும்.

மேலை நாட்டு மேதைகளையும் விஞ்ஞானிகளையும் அதிசயிக்க வைத்து பிரமிப்புக்காளாக்கிய நமது பாரதத்தின் பொக்கிஷமாம் ஸ்ரீ சக்ரத்தின் தத்துவமும் , எளிய விளக்கமும் இங்கு இடம்பெறுகிறது. நம் பாரதநாட்டின் தொன்மையிலும் தொன்மையான சக்தி உபாஸனையின் ஸித்தாந்தப்படி ஆக்க அலைகள் அடுக்கடுக்காய் ஊற்றெடுக்கும் கோடுகளும், ஸந்திகளும், கோணங்களும் ஒரு விஞ்ஞான முழுமையுடன் அமைந்துள்ள ஸ்ரீசக்ரம், இறைச்சக்தி, தான் பிரபஞ்சமாக இயங்கத் துவங்குமுன்பு ஏற்றுக்கொண்ட சூக்கும வடிவமைப்பு.

Koviloor Digital Library

இதே சூக்கும வடிவமைப்பின் விரிவாக்கம் தான் நாம் காணும் இந்த அண்ட சராசரங்களின் ஆதாரம்.

இதே சக்திமிக்க ஸ்ரீசக்ரம்தான் மனிதனுடைய இயக்கத்திற்கும் ஆதாரமாய் அவனது சூக்கும உடலாய் அமைக்கப்பட்டது.

யாவற்றையும் ஒரு வரையரைக்குள் அடக்கி இயங்க வைக்கும் திறனுடன் தோற்றுவிக்க இறைச்சக்தி, முதலில் தான் ஒரு ஸ்ரீசக்ரமாய் அமைந்து கொண்டது.

தோற்றுவிக்கப்பட்ட யாவும் இம்மி பிசகாமல் கணித்த வரையறைக்குட்பட்டு இயங்க ப்ரபஞ்சத்திற்கு அதே ஸ்ரீசக்ரம் ஆதாரமாய் அமைக்கப்பட்டது.

இறையின் திட்டத்தைச் சார்ந்தும், பிரபஞ்சத்தின் நல்லியக்கத்திற்குத் துணை போகவும் ஆதாரமாய் இயங்க மனிதனின் சூக்கும உடல் ஸ்ரீ சக்ரவடிவாக அமைக்கப்பட்டு–

அதன் ஒவ்வொரு கோணத்திலும், தளத்திலும், ஸந்தியிலும், முக்கிய கேந்திரங்களிலும் "கட்கமாலா" தேவிகள் பிரதிஷ்டை பெற்று, மனிதன் ப்ரபஞ்சத்தின் தர்மகர்த்தாவாக இயங்க எவ்வாறெல்லாம் செயல்படுகிறார்கள் எனும் அரிய இரகசியம், கட்கமாலாவின் அந்தந்த

Koviloor Digital Library

தேவிகளின் பெயருக்கெதிரே விளக்கப்பட்டிருக்கிறது. அதைப் படிக்கும்போது மனிதப் பிறவியின் மாண்பு நன்கு புரியும். இவ்வுண்மையை சரிவரப்புரிந்து கொள்ளாமல் அயல் நாட்டுக் கலாச்சார மோஹத்தில் சிக்கி நம் மாண்புகளை தான்தோன்றித்தனமாக வாழ்ந்து கரைபடிய வைத்துள்ளோம் எனும் தெளிவு பிறந்து, இப்போதிருந்தே அந்த கரையை நீக்க, நம்முள் இறைச்சக்தியினை சீர்படுத்தி, செம்மைப் படுத்தித் திரும்பவும் அதன் மாண்பு கொழிக்கும் சீரிய தரத்திற்கு உயர்த்தி, நாம் வரலாற்று நாயகனாக நடமாட வேண்டும் எனும் தரமான, உண்மையான தாகமும், தீவிரமும்– ஒவ்வொருவருள்ளும் தளிர்விடும்! கிளைக்கும்! "ஆல்" எனப்பரவும்! பாரதம் பழம்பெருமையினை மீட்கும்.

மூன்றாவது – மாத்ருகாபைரவதசகம். இன்றைய வாழ்க்கையை முழுமையாக நீதிக்குப்புறம்பாய் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் – அருவெறுப்பூட்டும்– ஆட்டம் போடும்– அலங்கோலங்கள், ஆபாசம் ததும்பும் ஆர்ப்பாட்டங்கள், உயிர்குடிக்கும் போதைச் சந்தை, அடுத்துக்கெடுக்கும் ஆட்கொல்லிகள், இரட்டைவேடப் புல்லுருவிகள், உத்திரவாதமில்லா வாழ்வினை விஸ்தரிக்கும் வன்முறை வெறியாட்டம் ஆகியன அறவே அழிந்து, சுபீட்சமும், சுதந்திரமும், சாந்தியும் திரும்ப

Koviloor Digital Library

அதனதன் மாண்புமிகுபேராசனத்தமர்ந்து நம்மை அரவணைத்துக் காக்க, அந்த அந்த அதிகாரத்தை இறைவன் வகுத்தபடி நிறைவேற்றும் பைரவரும், யோகினியும் நமது சரணாகதியால் கனிந்து மனமுவந்து துணைநிற்கப் போகின்றனர். பாரதப் பெருமக்களை திரும்பவும் உலகத்தின் முதல்தரக் குடிமகனாக்கப் போகின்றனர்.

நான்காவது – நவ துர்கா துதி. இத்தோத்திரத் தையும், அதன் விளக்க உரையையும் ஒரு முறை படித்தாலே போதும்! நெஞ்சு நிமிரும் – நம்பிக்கைதுள்ளும் – ஒளி மேலும் பிரகாச மடைவது புலனாகும் – சுமை நீங்கி இலேசாகி விட்ட அமைதியின் சுவைததும்பும் மகிழ்ச்சி அரவணைத்துப்பரவும். நாம் நமது உண்மையான நாமாக நிமிர்வோம்! நமது சந்ததியினர் நம்மிலும் சீரியோராக, வரலாற்று நாயகர்களாக, அமைதியின் காவலர்களாக புகழ் ஈட்டும் நிலைக்கு நிச்சயம் உயர்வர்! இது இறைவனின் திருவுள்ளம்!

எனவே ஒவ்வொருவரும் முதலில் இறைச்சக்தியை நிரம்ப அடைவதற்குப் பாடுபடத் துவங்கவேண்டும்.

நமது அயரா முயற்சியின் மூலம் அந்த "இறைச்சக்தி" நம்மில் பெருகப்பெருக அவரவர்

Koviloor Digital Library

வாழ்க்கையில் சுவையும் இன்பமும் கூடிக்கொண்டே இருக்கும். இப்பேற்றினை எளிதாய்ச் சாதித்துக் கொள்ளவே இந்நூதன ஆனால் தொன்மையான தோத்திரத்திரட்டு.

யாவரும் எவ்விதத் தயக்கமுமின்றி பின்பற்றிப் பயனடையலாம்.

இத்திரட்டில் காணும் தோத்திரங்களும், அதன் நூதன வடிவமைப்பின் மூலங்களும் பாரம்பர்ய மரபு பிறழாத புனிதம் தாங்கியவை. இன்றைய கலிதோஷத்தை வேரறுத்து எல்லா நன்மைகளையும், இணையிலா மேன்மை களையும் வாரி வழங்க வல்லது. நம்பிக்கையுடன் ஈடுபடுங்கள்.

பேறு பதினாறும் பெற்றுப் பெருவாழ்வை ஈட்டிக்கொள்ளுங்கள்.

உடல், உடை, உள்ளம் இவற்றைத் தூய்மையாய் ஆக்கிக்கொண்டு, அவரவர் வீட்டுக்குரிய மரபுச் சின்னங்களையணிந்து, இயன்றவரை மனதை அலையவிடாமல் கட்டுபடுத்தி, தோத்திரங்களை நிறுத்தி நிதானமாய் ஓதுங்கள். நல்ல முன்னேற்றத்தை எட்டி விடலாம்.

இறைமேல் ஆணை !

Koviloor Digital Library

உச்சரிப்பு வழிகாட்டி

(தோத்திர எழுத்துக்களின் அடியில் எண்கள் அச்சிடப்பட்டுள்ளன. அந்தந்த எண்ணைக் கொண்ட எழுத்துக்கள் எவ்வாறு உச்சரிக்கப்பட வேண்டும் என எடுத்துக்காட்ட முதலில் எண் கொண்ட எழுத்தையும், அதன் எதிரே உள்ள வார்த்தையில் அதன் உச்சரிப்பைச் சுட்டிக்காட்டும் எழுத்தை அடைப்பானுள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதையும் கவனித்துப் பழகிக் கொள்ளுங்கள்.)

எண் இடப்படாத எழுத்தை அதன் இயல்பான உச்சரிப்பாய்க் கொள்க.

எழுத்து – உச்சரிக்க வேண்டிய விதம்

க – பக்(க)ம்

க2 – ப(க்க)ம்

க3 – சிங்(கம்)

க4 – மென்மையான (க்க) ஆக உச்சரிக்க

ச – மச்(ச)ம்

ச2 – ம(ச்ச)ம்

ச5 – (ச)ந்தை,

Koviloor Digital Library

ஜ – (ஜ)ல்லிகட்டு

ஜ2 – (ஜ்ஜ) என உச்சரிக்க.

ட – கட்(ட)ணம்

ட2 – க(ட்ட)ணம்

ட3 – கட்டி(ட)ம்

ட4 – மென்மையான (ட்ட) ஆக உச்சரிக்க

த – மத்(து)ளம்

த2 – ம(த்த)ளம்

த3 – பந்(து)யம்

த4 – மென்மையான (த்த) ஆக உச்சரிக்க

ப – கப்(ப)ல்

ப2 – க(ப்ப)ல்

ப3 – கம்(ப)ம்

ப4 – மென்மையான (ப்ப) என உச்சரிக்க

ரு – ப(ரு)வம்

ரூ – மேலே உள்ள (ரு) உச்சரிப்பையே நீட்டுதல்

Koviloor Digital Library

காப்பு

குும் குருப்யோ நம:
கம் கணபதயே நம:
தும் துர்காயை நம:
வம் வடுகபைரவாய நம:
யாம் யோகிநீப்யோ நம:
க்ஷம் க்ஷேத்ரபாலாய நம:
ஸம் ஸமஸ்த தேவதாப்யோ நம:

மேலே வரிசைப் படுத்தப்பட்டிருக்கும் தேவதைகள் ஒவ்வொன்றும் மரபுப்படி காலச்சக்ரத்தின் ஒவ்வோர் அம்சத்தைக் கண்காணிக்கும் பொறுப்பை வகித்து நம்மை அரவணைத்து வழிநடத்தும் சக்திகள்.

குரு–ஆசான், இவர் துணையின்றி எதையும் முழுமையாய்ப் புரிந்து கொள்ள இயலாது. இவரது வழிகாட்டுதலால்தான் உண்மையை அதன் முழுபரிமாணத்தில் காணமுடியும்.

கணபதி – இவரது துணையின்றி எந்தத் தடையையும் உடைக்க முடியாது.

துர்க்கை – இவரது துணையின்றி தீயசக்திகளை அடக்கி ஆள இயலாது.

வடுகபைரவர் – இவரது கடுமையான கண்காணிப்பார்ந்த கட்டுக்கோப்பான காவல் பணியின் துணையின்றி தீயசக்திகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த இயலாது.

Koviloor Digital Library

யோகினி – பைரவருடன் சேர்ந்து தீயசக்திகளை அடக்கி ஆளும் பெண் சக்தி.

க்ஷேத்ரபாலர் – எல்லைக்காவல் சக்தி

ஸமஸ்த தேவதைகள் – இன்றியமையாத வெவ்வேறு பொறுப்புக்களை நிறைவேற்றும் சக்திகள்.

குருவணக்கம்

உள்ளுறை ஒளியாய் ஒயாத்துணையாய்
உண்மையை ஒலித்து உரமாய் நடத்தும்
உன்உரை சார்ந்தே என்செயல் ஒழுக
உன்னடி சேர்ந்தேன் தஞ்சம் குருவே.

நம் உள்ளுணர்விலே கலந்து துணைநிற்கும் சக்திதான் ‘குரு’ எனும் திவ்யாம்சம்! எந்த ஒரு எண்ணம் தோன்றினாலும் உடனே சரி அல்லது தவறு என்று உணர்த்தி நம்மைச் சரியாக நடக்கத் தூண்டும் பெருந்துணை. இதனைச் சார்ந்து இயங்கும் பேராற்றல் கைவந்துவிட்டால் சமுதாயத்திற்கு இன்றியமையாத சான்றோனாக உயரலாம். அன்றி ஆணவத்தின் அடிமையாக, உள்ளிருந்து வரும் கட்டளைகளைக் கவனியாமலோ, புறக்கணித்தோ நடக்கும் ‘திமிர்’ வலிவாய் இடம் பெறுமானால், அந் நபரால் சமூஹத்தின் அமைதி குலையும். ஆக்கப்பணிக்கு இடையூறு நேரும்.

Koviloor Digital Library

கணபதி துதி

குறைபோக்கித் தடைநீக்கி
குணநலனெல்லாம் தேக்கி
இறையருள் இசைவாய்க் கூட்டி
இன்பம்சேர்க்கக் கணபதியே போற்றி!

கணபதியின் பெருமையை சொல்லில் புரிய வைக்கத் தேவையில்லை. யாவரும் நன்கறிவர். குருவின் கட்டளைகளைப் புறக்கணிக்கும் அவசரப்புத்திக் காரர்களுக்குத் தடைகளைத் தோற்றுவித்து அவர்கள் தவறையுணர்ந்து திருந்தி நல்வழிக்கு வந்து சேர உதவும் பெரும் சக்தி.

அறிவுத்தெய்வம் ஆறுமுகப்பா

அறிவுக்கறிவு நீ
அறம் பொருள் இன்பம் நீ
அறமும் அறிவும் இணைந்த
அருஞ்செயலாற்றப் பணி!

குருவின் மூல வடிவம். தவறை இனங்கண்டு விலகும் திண்மை கிடைத்தபின் அறத்தைப் புண்படாமல் காக்கும் பேராற்றலைத் தரும் 'மூல அறிவு'.

Koviloor Digital Library

நவகோள் திரட்டு

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்
வியாழன் வெள்ளி சனி ராகு கேது
ஞால நலன்காக்கும் நவ கோள் தேவே
நயந்து நின்றோம் நும் அருள் வேண்டி!

நவகோள் பற்றி விவரிக்கத் தேவையே இல்லை. அவரவர் கர்மவினைக் கேற்ப நன்மை, தீமைகளை அனுபவமாக்கும் – இயற்கையின் எல்லா இயக்கங்களுக்கும் துணை போகும் – இன்றியமையாச் சக்திகள் இவர்கள்.

உ

லக்ஷ்மி–நாராயணாம்சம்

முதலாவதாக ஷோடச லக்ஷ்மீ தோத்திரம். இவண் பதினாறு இலக்குமிகள் அவரவர் நாராயணாம்சத்துடன் முறைப்படி இணைத்துப் பிரார்த்தித்து துதிக்கப்படுகின்றனர். நம் தமிழ் மரபு அறுதியிடுவது பேறுபதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்தலாம். அதாவது பதினாறு இலக்குமிகள். இதை சக்திச் செல்வர்கள் கவிகாளமேகமும், அபிராமிபட்டரும் அறுதியிட்டுள்ளனர்.

ஸ்ரீரஸ்து சுபமஸ்து ஆரோக்யமஸ்து

அர்த்தம் – பொருட்பேறு

ஷோடச லக்ஷ்மி தோத்திரம்

Koviloor Digital Library

1. ஸௌபாக்யலக்ஷ்மி

ஊழ்வினை செய்வினை சார்ந்துருவாகுந்நல்
ஊழ்வினை செறியும் நன்றே ஆற்ற
வாழ்வு நலம்பெற வரந்தரவேணும்
கேசவப்ரிய ஸௌபாக்யலக்ஷ்மீ

ஸௌபாக்யம் என்பதை "நல்ஊழ்" என்று பேசுகின்றனர் கவிகாளமேகமும் அபிராமி பட்டரும். இதேபோல் இதில் காணப்படும் பதினாறு இலக்குமிகளையும் அவரவர்க்குரிய தமிழ்ச் சொல்லால் குறிப்பிட்டுள்ளனர். அச்சொல் அந்தந்தச் செய்யுளின் ஆரம்ப வார்த்தையாக வருவதைக் காணலாம்.

ஊழ்வினை காரணமே நாம் பிறவி எடுப்பது. பிறப்புக்களில் நிறைய குறைகளுடனே பிறப்பது முற்பிறவிகளில் செய்த தீவினையின் விளைவு. குறையின்றி மகிழ்ச்சியாக வாழ்வோர் முன்னம் ஈட்டிய நல்ஊழ்வினைக் குரியவராவர்.

மாம்பழம் வேண்டுவோர் வேம்பை விதைத்தால் என்னவாகும்?

எனவே நல்வாழ்வு வேண்டுவோர் தீவினையை விலக்கி நல்வினைகளையே ஆற்றவேண்டும். தவறினால் அடுத்ததாக ஓர் அவலப்பிறவிதான் நேரும்.

Koviloor Digital Library

விதைப்பது எதுவோ அதுதான் விளையும் எனும் தெளிவு கைவரப்பெற்றோர் தவறு செய்ய அஞ்சும் இயல்பினை அடைவர். சமூகத்திற்கு இன்றியமையாத நல்லவனாக உயர்வர்.

இவ்வுண்மையை மனத்திருத்திக் கொண்டு விழிப்புடன் செயல்படுவோமாக. நிச்சயம் மேன்மை பெறுவோம்.

2. வித்யாலக்ஷ்மி

கல்விக் கடல் கரை காண்பது ஞானம்
உள்விதை உணர்ந்தே உரு ஒளிமேவும்
நல்வழிக் கல்வி நிறைந்திடச் செய்வாய்
நாராயணப்ரிய வித்யாலக்ஷ்மீ

முன்ஊழ்வினையின் பயனை அனுபவிக்கப் பிறவி நேர்கிறது. அதன் துன்பப் பகுதியைக் குறைத்து இன்பப்பகுதியை நேர்மையாகப் பெருக்கிக்கொண்டு நல்வாழ்வு வாழக் கல்வியின் துணைவேண்டும். அதற்குத் துணைபுரியக் கூடிய கல்விதான் உண்மையான கல்வி. அன்றி போட்டி, பொறாமை, தன்னலம், சூழ்ச்சி, இரட்டைவேடம் இவற்றை ஊக்குவிக்கும் கல்வி, கல்வியே அல்ல; சமூகத்தின் ஆணி வேரையே அழிக்கக்கூடிய ஆட்கொல்லி. இறையுணர்வை புறக்கணித்து, சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளை

Koviloor Digital Library

ஊக்குவித்து, பலப்பல வர்க்கங்களாகப் பிரித்து, இரட்டைவேடமிட்டுச் சுரண்டுவதையே குறிக் கோளாக்கிக் கொண்டு ஸமுதாயப்ரக்ஞையே அற்ற இதயமில்லா அரக்கர்களாக உருவாக்க வல்ல கல்வி நம் பாரம்பர்யத்திற்கு நஞ்சு. இந்நச்சுக் கலவாத ஆரோக்கியமான, முன்னேற்றத்தை மட்டுமே போதிக்கும் புதிய கல்வி முறை ஒன்று தோன்றவேண்டும் என பிரார்த்திப்போமாக!

3. மேதாலக்ஷ்மி

அறிவுச்சுடர் அறம் சார்ந்தே விளங்கிச்
செறிவுடனே பிறர் கண்ணீர் துடைத்துத்
தரமாய் வாழத் தருவாய் வரமே
மாதவப்ரிய மேதாலக்ஷ்மீ

கல்வியால் வருவது அறிவுச்செல்வம். அந்த அறிவுச்செல்வம் அறிவு குறைவாயிருப்போருக்கு ஒளிதரும் விளக்காக வேண்டும். பிறர் துயர்போக்க, குறைபோக்க, நம் அறிவுச் செல்வம் பயன்படவேண்டும். அதுதான் நாம் உண்மையாய் கற்றதன் பயன். இத்தகைய பாங்குள்ளோர்தான் சான்றோராக மலர்கின்றனர். கணக்கெழுதப் படித்தவன் பொய்க் கணக்கெழுதக் கூடாது. சட்டம் படித்தவன் பொய்வழக்கிற்கு வக்காலத்து

Koviloor Digital Library

வாங்கக்கூடாது. பொறியியல் படித்தவனும், வியாபாரக்கல்வி பயின்றோனும் கலப்படத்தில் இறங்கக் கூடாது. அதிகம் படித்தவன் இரட்டைவேடத்தைக் கையாண்டு மற்றவரையும் பின்பற்றச் செய்யக் கூடாது. மருத்துவம் படித்தவன் நோயை நீட்டிக்கும் உத்திகளைப் புகுத்தி கொள்ளைப்பணம் ஈட்டக் கூடாது.

காசு சம்பாதிக்க, எவனும் தான் கற்ற கல்வியை விலைமாதின் தரத்திற்குத் தாழ்த்தி விடக்கூடாது. கலைஞர்களுக்கும் இது பொருந்தும்.

கலைஞர்பெருமக்கள் என்னதான் உயர்ந்த கருத்துக்களை கேளிக்கை மூலம் பரப்பி வலியுறுத்தினாலும் அவ்வுயர் கருத்துக்களை அவர்களும் தங்கள் வாழ்வில் பொறுப்புடன் கடைப்பிடிக்காவிடில் அவர்களது “நற்கருத்து – வலியுறுத்தல்” குறைப்பிரசவங்களாகவே முடிந்து குறிக்கோள் கானல் நீராகிவிடும். இன்று இதுதான் கண்கூடாக நடைபெறுகிறது.

4. தனலக்ஷ்மி

தனமாம் அணிமணி பொன்னும் வெள்ளியும்
கனமாய் மனைமாடு கன்று வாஹனம்
இனமாய் எமக்குற வரந்தர வேணும்
கோவிந்தப்ரிய மாதனலக்ஷ்மீ

Koviloor Digital Library

தனம் என்பது ஒவ்வொருக்குமே இன்றியமையாத ஒன்று. அது நேர்வழியால் சேர்ந்தால்தான் சமுதாயத்திற்கு நன்மை பயக்கும். வியர்வை சிந்த நேர்மையாய்ச் சம்பாதித்த தனத்தைக் கொண்டு எவனும் சூதாடமாட்டான், போதைக் கடிமையாக மாட்டான், விலைமாதிடம் போக மாட்டான், வன்முறைக்குத் தீனி போடமாட்டான்.

குறுக்கு வழியில் அடாவடி செய்து சேர்க்கும் பணம்தான் மேற்சொன்ன தீயவழிகளில் கொண்டுபோய்ப் பிணைக்கும். உறவையும் பந்தத்தையும், பாசத்தையும், நன்றியையும் மறக்க வைக்கும். தன்னலமிக்க அரக்கனாக ஒருவனை உருவாக்கும்.

பொருட்செல்வம் (தனம்) சேரச்சேர ஒருவனிடம் கொடை எண்ணமும் வளர்ந்து கொண்டே இருக்க வேண்டும். எப்படி மண்ணும் அதன் வளங்களும் பொதுவுடைமையோ அதே நியதிதான் ஒருவனது தேவைக்கு அதிகமாக சேரும் செல்வங்களுக்கும் பொருந்தும். பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதிவரை இந்நியதி தனவந்தர்களால் ஆர்வத்துடன் கடைப்பிடிக்கப்பட்டுவந்தது. அன்னதான சத்திரங்கள், கல்வி பயில நன்கொடை, நெருக்கடிகளுக்கு நிதி, பொருளுதவி என தான

Koviloor Digital Library

தர்மங்கள் தவழும் வாழ்க்கையை செல்வச் சீமான்கள் விரும்பி உவந்து நடத்திவந்தனர். மேற்சொன்ன செய்தி இன்று வரலாற்றின் வாயிலாகக் கூட அறியவாய்ப்பில்லை. அத்துணை சுயநலவேங்கையாக மனிதன் மாறியுள்ளான். இவ்வுண்மை இளைய தலைமுறையை உசுப்பி விட்டு சீரமைப்பைத் தூண்ட வேண்டும்.

5. ஸௌந்தர்யலக்ஷ்மி

அழகே நாணும் எழில் தரும் ஆற்றலுன்
விழிகளின் வீச்சில் களிநடம் புரியும்
அழகின் முழுமை பரிவாய் தருவாய்
விஷ்ணுப்ரிய மாஸௌந்தர்யலக்ஷ்மீ

எது இருந்தாலும் வாழ்க்கையைச் சுவைக்க அழகு வேண்டும. அழகு என்பது சதை, தோல் மூடிய உடலல்ல. உள்ளத்தில் சத்தியமும், பேச்சில் கனிவும், நடப்பில் நேர்மையும் அணுகுமுறையில் தூய அன்பும் கலந்த தோற்றம்தான் ஒருவனை பளிச்சென்று ஒளிவீசச் செய்யும். அவனை யாவரும் வரவேற்பர். அவன் சொல்லை மதிப்பர். இதுதான் அழகின் முழுமை.

Koviloor Digital Library

6. ஆரோக்யலக்ஷ்மி

நோயின்மை செல்வத்துள் சீர்மிகுஞ்செல்வம்
தாயுன் மைவிழி தண்மையில் ஒளிரும்
நோயற்ற மாவீர்ய வாழ்வே தருவாய்
தன்வந்தரி ப்ரிய ஆரோக்யலக்ஷ்மீ

எல்லாம் இருந்தாலும் செம்மையாய்ச் செயல்பட நோயின்மை என்ற அரிய செல்வம் நம் இருப்பில் இருக்க வேண்டும். இல்லையேல் வாழ்வு சுவைகுன்றிப்போய்ச் சுமையாகிவிடும். நாம் காணும் நோக்காட்டின் உடமையாளர்கள் அவர்கள் முன்னம் ஆற்றிய தீவினையால் ஈட்டிய பரிசுக்காளானவர்கள். எனவே தீவினைச்சாயல் கூடஇல்லாத நல்வினைகளையே நாட்டமாக்கிக் கொண்டு வாழும் அறிவு ஜீவிகளாக மலர்வோமாக.

7. கீர்த்திலக்ஷ்மி

புகழ் தரும் போதையது புரையோடிப் போகாமல்
இகழேதும் தீண்டாத மங்காப் புகழ் சேர்த்து
மகிழ்வாய் நீள்காலம் மறவாப் புகழ் தருவாய்
த்ரிவிக்ரம ப்ரியே கீர்த்திலக்ஷ்மீ

எவ்வளவுதான் சிறப்பாக வாழ்ந்தாலும் வரலாற்றில் இடம்பெறும் விதமாய்ச்

Koviloor Digital Library

சாதனையாளனாகப் புகழ்சேர வாழ முயற்சிப்பதே சாலச்சிறந்தது. எந்தப் புகழும் கரைபடியாததாக, எவரும் ஆமோதிப்பதாக, சமுதாயம் நன்றியுடன் நினைவுபடுத்திக் கொள்வதாக அமைவதே "அமரத்வம்" பெற்றதாக ஆகும். அவ்வாறான ஒரு புகழை ஈட்ட இன்றைய ஒவ்வொரு இளைஞனும், இளைஞியும் ஒரு ஆணையை மேற்கொண்டால் நம் இந்திய மண் உண்மையான சொர்க்க பூமியாக நிர்மாணம் பெற்றுவிடும்.

8. ஸந்தானலக்ஷ்மி

நன்மக்கள் கலிதீர்க்கும் குலம்காக்கும் நலமோடு
பொன்மக்களெனவே பெருமையாய் வாய்த்திட
மண்மக்கள்தனை நீ வாழ்த்தியருள் தேவீ
வாமனப்ரியே ஸந்தானலக்ஷ்மி

பிறந்த வம்சத்திற்குக் கிடைத்துள்ள புகழை அதிகப்படுத்த முடியாவிட்டாலும், இருக்கும் அளவு சிதைந்துபோகாத தரத்திலே நிலைக்க, நேர்மையாய் வாழ்ந்து காட்டும் ஆற்றல் படைத்த வாரிசுகளே உருவாக வேண்டும். தம்முயற்சியால் தம்முன்னோரின் புகழை மிஞ்சக் கூடிய வகையில் வாழ்ந்து காட்டக்கூடிய மக்களைப் பெற்றோரே உண்மையான பாக்யசாலி களாவர். அப்படி ஒரு பாக்யவானாக ஒவ்வொருவரும் உலவ நாம் பிரார்த்திப்போமாக!

Koviloor Digital Library

9. புஷ்டிலக்ஷ்மி

இளமையெனும் தேனூறும் நற்கனிச்சோலை
வளமையாய் வனப்புடன் ஒளிவீசிச் செழித்து
உளமாற உனைப்போற்றும் நன்மதியை தருவாய்
ஸ்ரீதரப்ரியே மாபுஷ்டிலக்ஷ்மீ

நமக்குக் கிடைத்த எதுவும் பொலிவுடன் துணைநிற்க நம் எண்ணங்களில் நீங்கா இளமை தேங்கி நிற்க வேண்டும். இப்பேறு ஏற்பட நல்லோரிணக்கமும் தீயதை நினைக்கவே கூசும் நல்லியல்பும் நிச்சயம் துணைபுரியும். தேவையானவை நம்பிக்கையும், இறைப்பற்றுமே. இவ்விரண்டையும் கைக்கொள்வதற்கு பணச் செலவில்லையே. நல்ல உள்ளமும் பேரார்வமும் போதுமே. யாவரும் பார்த்துப் பிரமிக்கும் நாயகனாக உலாவருவோர் இந்நற்பேற்றினுக்கு உடமையாளர்களே.

10. தான்யலக்ஷ்மி

நெல்லும் நவநலனும் நிறைந்தோங்கித் தழைக்க
அல்லும் பகலும் அயராதுழைக்கும் நன்மக்கள்
நல்லதோர் நிறைவான வாழ்வுபெற வேண்டும்
ருஷிகேசப்ரியே ஸ்ரீ தான்யலக்ஷ்மி

Koviloor Digital Library

இன்று நாம் காணும் கண்கூடு (யதார்த்தம்) உழைப்பாளிதான் அதிகம் பட்டினியாலும், வஞ்சத்தாலும் வாடிய பயிராய் நிலைகுலைந்து நிற்கிறான். தன் ஏழ்மையை, ஏமாற்றத்தை மறைக்க போதைக்கடிமையாகி நடைப்பிணமாக, உணர்ச்சியின்றி, உழைக்கும் இயந்திரமாக வளைய வந்து கொண்டிருக்கிறான். இன்றுவரை தோன்றிய எந்த மஹாபுருஷனின் முயற்சியும் இச்சாமானியர்க்கு ஒரு உத்திரவாதமான நல்வாழ்வை அமைத்துத்தர இயலவில்லை. இனியேனும் அவர்கள் நல் வாழ்வின் காற்றைச் சமஉரிமையுடன் சுவாசிக்கும் நற்பேறு கனிய வேண்டும் என பிரார்த்திப்போமாக!

11. வீரலக்ஷ்மி

வலிமையாம் உடல்வலி நெஞ்சுரம் நேர்மை
எளிமை தயை பண்பு சேர்ந்தவோர் வீரமாய்
வலிவோங்கி வன்முறை வீழவேவரம் தா
பத்மநாபப்ரியே வீரலக்ஷ்மி

வீரம் என்பது அடுத்தவனை பயப்படுத்து வதற்கோ, அடித்துப் பிடுங்கிக் கொள்வதற்கோ, பெண்களின் இயலாமையை சாதகமாக்கிக் கொண்டு சோரம் செய்வதற்கோ ஆன பேறு அல்ல. தீமையை அழிக்க, அராஜகத்தை அடக்க,

Koviloor Digital Library

அடாவடியை ஒடுக்க, வன்முறையை வீழ்த்த, அமைதியை எங்கும் காக்கத் துணைநிற்கும் வரப்பிரஸாதம்தான் வீரம் என்பது. இத்தகைய வீரம் தன் முழுப் பரிமாணத்தில் நம் இளைஞர் சமுதாயத்திற்கு இனிதே கைவர வேண்டும் எனப் பிரார்த்திப்போமாக!

12. தைர்யலக்ஷ்மி

துணிவுக்குத் துணையாகும் அறம் நெறி தெளிவு
பணிவுங்கனிவுமதில் பழுதிலா பலம் சேர்க்க
பணிவோம் உனைப்பிரியோம் எமை நீங்காதிரு
தாயே
தாமோதரப்ரியே தைர்யலக்ஷ்மீ

ஒரு நாணயத்தின் ஒரு பக்கம் வீரம் என்றால் அதன் மறுபக்கம் ஒளிர்வது துணிவு. துணிவு என்பது பதட்டத்திற்காளாகாது. திமிர்ப்பாங்கு இராது. இரக்கம் இழையோடும். நேர்மையும் நெறியும், அறமும், நிதானமும் ஒளிவீசும். மனிதனின் நீங்காச் செல்வமாக இது அமைந்துவிட்டால் எல்லாச் செல்வங்களுக்கும் அவன் இருப்பிடமாகி விடுவான்

இப்படிப்பட்ட பேற்றை உடமையாக்கிக் கொண்ட செம்மல்களால் நம் இளைஞர் சமுதாயம் நிறையட்டும் எனப் பிரார்த்திப்போமாக!

Koviloor Digital Library

13. விஜயலக்ஷ்மி

வெற்றிவேண்டும் பகை தோன்றா நலன்வேண்டும்
எற்றிசை செல்லினும் ஏற்றமே வேண்டும்
பற்றிடும் பதமலர் துணைநிற்க வேண்டும்
புருஷோத்தம ப்ரியே விஜயலக்ஷ்மீ

வீரம், துணிவு இவை நிச்சயமாய் வெற்றியை ஈட்டித்தரும். ஆனால் உண்மையான வீரமும் துணிவும், ஜயமே தரும் விஜயலக்ஷ்மியின் கருணையால், ஈட்டிய வெற்றியோடு நிற்காமல் நேசக்கரம் நீட்டிப் பகை மீண்டும் துளிர்விடாமல் அமைதியை நிலை நிற்கச் செய்து மறவாப்புகழ் ஈட்டிவிடும். இதுதான் இறைச்சக்தியின் வரப்ரஸாதத்தால் கிடைக்கும் வெற்றியின் மஹிமை. இம்மாபெரும் பேற்றினைப்பெற இறைச்சக்தியிடம் பற்றுநீங்காத சரணாகதி செய்வோமாக.

14. ஆயுர்லக்ஷ்மி

வாழ்நாள் நீட்டி வரம் கேட்கும் எம்வாழ்வில்
ஊழ்நாள் குறுக்கிட்டுக் குறுகாத நலமோடு
பாழ்நாளே இன்றிப் பார்த்தருள வேணும்
ஜனார்த்தன ப்ரியே ஆயுர்லக்ஷ்மீ

உண்மையான இறைப்பற்று, வாழ்நாளில் ஊழ்வினை காரணமாய் நேரும் கண்டங்கள்

Koviloor Digital Library

(உயிர்க்காபத்து) தலைக்குவந்தது தலைப்பாகையோடு போன கதையாகி முழுமையான வாழ்நாளைத்தரும். இவ்வளவு எளிதான உத்தியைக் கைக்கொண்டு வாழ்வில் ஒரு நாள் கூடப் பாழாகாமல் விழிப்புடன் செயல்பட்டு ஏன் நல்லவனாகவும் வல்லவனாகவும் வாழ்ந்து வரலாற்றில் இடம் பெறக்கூடாது?

15. போகலக்ஷ்மி

நுகர்ச்சிகள்யாவும் சுவையாய் முழுமதியாய்
இகழ்ச்சியே இன்றி இன்பமே சுரப்பதாய்
மகிழ்ச்சியேமேவும் மாண்புடன்தருவாய்
மதுசூதன ப்ரியே போகலக்ஷ்மீ

நம் முன்வினைப்பயன் குறுக்கிட்டு நாம் அனுபவிக்கும் இன்பங்களை முழுமையாய்ச் சுவைக்கவிடாமல் செய்யும். அப்போது ஆத்திரத்திற்காட்பட்டு மமதையுடன் ஆட்டம் போட்டு அந்த இன்பத்தையே துன்பமாக மாற்றும் துர்ச்சம்பவம் நேரும். ஆனால் நீங்கா இறைப்பற்றுள்ளோர்க்கு குறுக்கீடுகளே இராது. குறுக்கீடுகளைத்தரும், அவர்தம் முன்வினை, அவரைக்கண்டு பொறாமைப்படுவோரைச் சென்றடைந்துவிடும். அவர்கள் சுவைக்கும்

Koviloor Digital Library

நுகர்ச்சி முற்றும் முழுமையானதாகக் கனியும். பின் ஏன் இறைப்பற்றில் முழுநம்பிக்கை வைக்காமல் அவதியுறவேண்டும்?

16. சாந்திலக்ஷ்மி

பொறுமையினைச் சிறுமையென எண்ணாத மனமும்
வறுமையிலும் செம்மைதனைக் காணுமோர் தரமும்
உரிமையாய் எமக்காக்கி உரம் சேர்க்க வேணும்
வாஸுதேவப்ரியே சாந்திலக்ஷ்மி

பொறுமை கடலினும் பெரிதென்பர். அதாவது கடலைவிட ஆழமாயும் அதிகப்பரப்புள்ளதாகவும் திகழ்வது பொறுமை எனும் பேராற்றல். எது வரினும் பொறுமையாய் வரவேற்று அதனையும் இறைவனின் பிரசாதமாய் அங்கீகரித்துவிட்டால் துன்பமும் இன்பமாகிவிடும். இங்கேயே ஸ்வர்க்கத்தை அனுபவிக்கலாம். பொறுமை, துணிவு இவை இரண்டையும் இறைக்கருணையால் கைவரப்பெற்றவர்தான் மக்களை வழிநடத்திச் செல்லும் ஆற்றல்மிக்க சான்றோராக உயர்வர். அமைதியை நிலைக்கச் செய்வர். எனவே முழுநேர "அமைதி விரும்பி"யாய் இளைஞர் சமுதாயம் மலர்வதாக!

Koviloor Digital Library

17. ஆதிலக்ஷ்மி

முழுமுதல் நீயே மதிமுக மாயே
அயன் அரி அரன் இணை யாவர்க்கும் தாயே
மழுமழை மண் கால் வெளியாய் மலர்ந்தே
வளர்பிறை தேய்பிறை வடிவதை ஏற்றாய்
விழியாலண்ட மனைத்தும் சமைத்தாய்
ஆக்கி ஆட்டி அழித்தே மகிழ்ந்திடவே
அழியாநிதியே முழுமை வடிவே
பேறுபதினாறும் அளிப்பாய் ஆதிலக்ஷ்மி

நாம் இதுவரை கண்ட பதினாறு பேற்றினையும் நமக்காகவே படைத்து நம் இறைப்பற்றுத்திறனுக்கேற்ற அளவில் அடைந்து கொள்ளும் வாய்ப்பினை எங்கும் உலவ விட்டிருக்கிறாள், அன்னை பராசக்தி!

அவள் தாளே சரணம் என்றிருப்போர்க்கு வரும் நாளெல்லாம் பொன்னாளே!

மரபுகளாலும் விதவித ஸித்தாந்தத்தை பின்பற்றிப் போகும் சுவையாலும் வேறுபட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், இறை உணர்வால் ஒன்றுபட்டு அன்பால் பிணைந்து ஒருவருக்கொருவர் இன்றியமையாதவராக வாழ்வதே வேள்வி! இதை சாதிக்க இறையின் கருணை கைவருவதாக!

ஓம் சாந்தி!

Koviloor Digital Library

மோக்ஷம் - வீடுபேறு

கட்கமாலா

(சக்தியம்சம் நம்முள் இறைச்சக்தியை வளர்த்துக்கொண்டே போகும்)

அஸ்ய ஸ்ரீ தேவி கட்கமாலா ஸ்தோத்ர மஹா மந்த்ரஸ்ய

ஆதிநாத ஸதாசிவ ருஷயே நம:

பங்க்திம் சந்தஸே நம:

பரா ஆதிசக்தி தேவதாயை நம:

ஐம்–பீஜம், க்லீம்–சக்தி: ஸௌ– கீலகம்

ஸர்வ ஸித்தெள விநியோக:

ஹ்ராம் அங்குஷ்டாப்யாம் நம:

ஹ்ரீம் தர்ஜனீப்யாம் நம:

ஹ்ரூம் மத்யமாப்யாம் நம:

ஹ்ரைம் அனாமிகாப்யாம் நம:

ஹ்ரௌம் கனிஷ்டிகாப்யாம் நம:

ஹ்ர: கரதலகரப்ருஷ்டாப்யாம் நம:

ஹ்ராம் ஹ்ருதயாய நம:

ஹ்ரீம் சிரஸேஸ்வா:

ஹ்ரூம் சிகாயை வஷட்

ஹ்ரைம் கவசாய ஹூம்

Koviloor Digital Library

ஸ்ரீ மாத்ரே நம:

ஸ்ரீ சக்ரம், மஹாமேரு இரண்டும் ஒன்றுதான் ஸ்ரீ சக்ரம் என்பது வரை கோடுகளால் மஹாமேருவின் அமைப்பை இரட்டைப் பரிமாணத்தில் காட்டுவது. மஹாமேரு முப்பரிமாண வடிவத்தில் ஒளிர்வது.

சிலா மேருவை உச்சியிலிருந்து பார்த்தால் ஸ்ரீ சக்ரம் தெரியும். ஸ்படிக மேருவானால் அடிப்பக்கத்திலிருந்து பார்த்தாலும் ஸ்ரீ சக்ரம் தெரியும்.

இம்மஹா அமைப்பில் இருக்கை பெற்றுள்ள சக்திசமூகத்தின் நாமங்கள் (பெயர்கள்) அடங்கிய தோத்திரந்தான் தேவிகட்கமாலா.

எதிர் பக்கத்தில் உள்ளது ந்யாஸம். இதை முதலில் ஓதி நம்மைச் சுற்றி அரண் அமைத்துக் கொள்கிறோம்.

(பின்னர் த்யானம். ப்ரதான மூர்த்தியின் வர்ணனை; இதை ஓதி அதன் உருவத்தை மனக்கண்ணால் கண்டு, அரணுக்குள் வரவேற்று நம் எதிரே ஆசனத்திலமர்த்திப்பின் பஞ்ச பூஜைமூலம் ஆராதித்துவிட்டு கட்கமாலா நாமாவளியை ஓதத் தொடங்க வேண்டும்.

Koviloor Digital Library

ஹ்ரெளம் நேத்ரத்ரயாய வெளஷட்

ஹ்ர: அஸ்த்ராய பட்

பூர்புவஸ்ஸுவரோம் இதிதிக்பந்த: (நம்மைச் சுற்றி விரலால் சொடுக்கி ஓர் அறண் அமைத்தல்)

(த்யானம்)

ஸதா ஷோடச வர்ஷாட்யெள கலாஷோடச மண்டிதெள
த்ரிபஞ்ச ரூப விபவெள த்ரிபஞ்ச வர்ண மந்திரெள
ஆனந்தோல்லாஸ மஹிதெள பஞ்சப்ரம்ஹாஸனஸ்திதெள
ஜகத: பிதரெள வந்தே ஸ்ரீ காமேச்வர தம்பதீ

(பஞ்ச பூஜை)

லம் – ப்ருத்வ்யாத்மிகாயை கந்தம்கல்பயாமி நம:

ஹம் – ஆகாசாத்மிகாயை புஷ்பம் கல்பயாமி நம:

யம் – வாயவ்யாத்மிகாயை தூபம் கல்பயாமி நம:

ரம் – அக்ன்யாத்மிகாயை தீபம் கல்பயாமி நம:

வம் – அம்ருதாத்மிகாயை அம்ருதமஹா நைவேத்யம் கல்பயாமி நம:

ஸம் – ஸர்வாத்மிகாயை தாம்பூலாதி ஸமஸ்தோப சாரான் கல்பயாமி நம:

Koviloor Digital Library

இத்தோத்திரம் வெறும் பெயர்களைக் கொண்ட தொகுப்பல்ல. ஆதிகுரு ஸதாசிவ ருஷி, நமக்காக மந்த்ரத்திண்மை பொதிந்த ஒலிகளைக் கொண்ட அக்ஷரங்களால் தொகுத்த சக்தி வாய்ந்த நாமங்கள். அந்நாமாக்களில் இழையோடும் உயிரோட்டத்தைச் சரிவரப்புரிந்து ஸ்வாதீனப் படுத்திக் கொண்டும் விட்டால் ஒவ்வொருவரும் ஒரு நடமாடும் சக்தி நிலையமாகி விடலாம்.

பரவலாக நடமிட்டு யாவரும் கையாண்டு உணர்ந்து அனுபவித்து வர வேண்டிய இந்த உண்மையை "இரகசியம்" என்ற சிவப்பு நாடாவால் கட்டிப்போட்டு, முடக்கிவைத்து வெளிச்சத்திற்கு வரவிடாமல் ஏன் தடுக்கப்பட்டுள்ளது என்பது புதிராக இருக்கிறது.

இப்போதாவது இந்நூல்வாயிலாய் அவ்விஞ்ஞான உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்து பரந்து நிறைந்து ஆர்வமும் ஊக்கமும் உள்ளோருக்குக் கைகொடுக்கப் போகின்றனவே; இதுவே நம் சந்ததிகளின் பாக்கியந்தான்.

Koviloor Digital Library

ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஓம்



1. நமஸ்த்ரிபுரஸுந்தரி
2. ஹ்ருதயதேவி
3. சிரோதேவி
4. சிகாதேவி
5. கவசதேவி
6. நேத்ரதேவி
7. அஸ்த்ரதேவி
8. காமேச்வரி
9. பகமாலினி
10. நித்யக்லின்னே
11. பேருண்டே
12. வன்ஹிவாஸினி
13. மஹாவஜ்ரேச்வரி
14. சிவாதூதி
15. த்வரிதே
16. குலஸுந்தரி
17. நித்யே

Koviloor Digital Library

1 (முக்கோணத்தின் நடுவட்டத்தில்) த்ரிபுரஸுந்தரிக்கு நமஸ்காரம்.

2 முதல் 7 வரை (நடுவட்டத்தைச்சுற்றிலும் ஆறு அங்க தேவிகள். இவர்கள் நம் இயக்கத்தில் உள்ள காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்சர்யம் எனும் ஆறு குணங்களுக்கும் அதிகாரிகள்.

8 முதல் 22 வரை 15 நித்யா தேவிகள். இவர்கள் பிரதமை முதல் அமாவாசை வரை திரும்ப பிரதமை முதல் பௌர்ணமி வரை இரண்டிரண்டு திதிகளுக்கு அதிதேவதைகள். 23 மஹா நித்யை மஹாத்ரிபுரஸுந்தரியேதான் (43) அணிமாஸித்தே என ஆரம்பிக்கும் நாமாவிலிருந்து மஹா மஹா ஸ்ரீ சக்ர நகர ஸம்ராஞி என முடியும் நாமாவரை அதனதன் தெளிவான அர்த்தம் விவரிக்கப் பட்டுள்ளது. இவ்வளவு சக்திதத்துவங்களும் தேவைக்கேற்ப ஆங்காங்கு செயல்பட்டுத்தான் ப்ரபஞ்சத்தின் இயக்கமும் தனிமனிதனின் இயக்கமும் செம்மையாய் நடந்தேறுகின்றன. இச்சக்திகள் ஸ்ரீசக்ரத்திலும் ப்ரபஞ்சத்தின் இயக்கத்திலும், நம்முள்ளும் நடமிடுவதை உணர, காண, அடிக்கடி ஆழ்ந்து படியுங்கள். பெயர்களை ஓதும்போது அர்த்தத்தை நினைவிருத்தி வழிபடுங்கள்.

Koviloor Digital Library

18. நீலபதாகே

19. விஜயே

20. ஸர்வமங்களே

21. ஜ்வாலாமாலினி

22. சித்ரே

23. மஹாநித்யே

24. பரமேச்வரபரமேச்வரி

25. மித்ரீசமயி

26. ஷஷ்டீசமயி

27. உட்டீசமயி

28. சர்யாநாதமயி

29. லோபாமுத்ராமயி

30. அகஸ்த்யமயி

31. காலதாபனமயி

32. தர்மாசாரமயி

33. முக்தகேசீச்வரமயி

34. தீபகலாநாதமயி

35. விஷ்ணுதேவமயி

குருமண்டல



தேவிகள்

Koviloor Digital Library

(எதிர்பக்கத்தில் பரமேச்வர – பரமேச்வரி முதல் அடுத்தபக்கத்தில் ஸ்ரீராமானந்தமயிவரை குருமண்டல தேவிகளின் ஆராதனம். எதிரே நடுவில் உள்ள முக்கோணத்திலும் அதன் மேலே உள்ள விபூதிப்பட்டை போன்ற மூன்று கோடுகளிலும் தான் அவர்களது வாஸம்.

(இங்கு ஒவ்வொரு பக்கத்திலும் ஸ்ரீ சக்ரத்தின் பாகங்கள் தனித்தனியாய் அச்சிடப்பட்டுள்ளன. அவைகளையும் தக்க பெரியோரை அண்டி புரிந்து கொள்வது மிக லாபகரமாக அமையும். பின்னர் தேவிகட்கமாலா பாகம் I பாகம் II இரண்டினையும் த்ரிசக்திபதிப்பகத்தாரிடமிருந்தோ ஆசிரியரிட மிருந்தோ வாங்கிப் படித்து மேதாவிலாசத்தைப் பெருக்கிக்கொள்ளலாம்.)

Koviloor Digital Library

36. ப்ரபாகரதேவமயி
4 3
37. தேஜோதேவமயி
3
38. மனோஜதேவமயி
3
39. கல்யாணதேவமயி
3
40. ரத்னதேவமயி
3
41. வாஸுதேவமயி
3
42. ஸ்ரீராமானந்தமயி
3
43. அணிமாஸித்தே
3 4
44. லகிமாஸித்தே
3 4
45. மஹிமாஸித்தே
3 4
46. ஈசித்வஸித்தே
3 4
47. வசித்வஸித்தே
3 4
48. ப்ராகாம்யஸித்தே
3 4
49. புக்திஸித்தே
3 4
50. இச்சாஸித்தே
3 4
51. ப்ராப்திஸித்தே
3 4
52. ஸர்வகாமஸித்தே
3 4
53. ப்ராம்ஹி
3

த்ரைலோக்ய



Koviloor Digital Library

43. அணுஅளவுக்கும் சுருங்கும்திறம்.

44. பஞ்சினும் இலேசாய் ஆகும் திறம்.

45. விரும்பிய அளவுக்கு பெரிதாகும் திறம்.

46. தலைமை வகிக்கும் திறம்.

47. கட்டுப்படுத்தி அடக்கும் திறம்.

48. எதையும் அடையும் திறம்.

49. நுகர்தல் திறம்.

50. விரும்பியதை சாதிக்கும் திறம்.

51. நினைத்தமாத்திரம் எங்கும் போய்ச்சேரும் திறம்.

52. எக்காரியத்திலும் வெற்றிபெறும் திறம்.

53. ச்ருஷ்டி திறம்.

Koviloor Digital Library

54. மாஹேச்5வரி
55. கௌமாரி
56. வைஷ்ணவி
57. வாராஹி
58. மாஹேந்த்3ரி
59. சாமுண்டே3
60. மஹாலக்ஷ்மி
61. ஸர்வஸம்க்ஷோபி4ணி
62. ஸர்வவித்3ராவிணி
63. ஸர்வாகர்ஷிணி
64. ஸர்வவச5ங்கரி
65. ஸர்வோன்மாதி3னி
66. ஸர்வமஹாங்குசே5
67. ஸர்வகே2சரி
68. ஸர்வபீ3ஜே
69. ஸர்வயோனே
70. ஸர்வத்ரிக2ண்டே3
71. த்ரைலோக்யமோஹன சக்ரஸ்வாமினி

மோஹன



சக்ரம்



Koviloor Digital Library

54. ஆளுகை திறம்.
55. இளமை திறம்.
56. செல்வாக்கைப்பெறும் திறம்.
57. பிடிவாதமாய்ச் சாதிக்கும் திறம்.
58. போட்டியிட்டு வெற்றிபெறும் திறம்.
59. தீயவற்றை ஒடுக்கும் திறம்.
60. மகிழ்ச்சியைப் பரப்பும் திறம்.
61. கிளர்ந்தெழும் திறம்.
62. விரட்டியடிக்கும் திறம்.
63. நாடிவரச்செய்யும் திறம்.
64. வசப்படுத்தும் திறம்.
65. மதியை மயக்கும் திறம்.
66. தடுத்து இழுக்கும் திறம்.
67. காற்றெனக் கடுகிடும் திறம்.
68. விதைக்கும் திறம்.
69. விளைக்கும் திறம்.
70. காரியத்தின் திட்டம், செயல், விளைவு மூன்றினையும் ஆளும் திறம்.
71. மூவுலகையும் மோஹிக்கவைக்கும் திறம்.

Koviloor Digital Library

ஸர்வாசாபரிபூரக



சக்ரம்

72. ப்ரகடயோகினி
73. காமாகர்ஷிணி
74. புத்த்யாகர்ஷிணி
75. அஹங்காராகர்ஷிணி
76. சப்தாகர்ஷிணி
77. ஸ்பர்சாகர்ஷிணி
78. ரூபாகர்ஷிணி
79. ரஸாகர்ஷிணி
80. கந்தாகர்ஷிணி
81. சித்தாகர்ஷிணி
82. தைர்யாகர்ஷிணி
83. ஸ்ம்ருத்யாகர்ஷிணி
84. நாமாகர்ஷிணி
85. பீஜாகர்ஷிணி
86. ஆத்மாகர்ஷிணி
87. அம்ருதாகர்ஷிணி
88. சரீராகர்ஷிணி
89. ஸர்வாசாபரிபூரகசக்ரஸ்வாமினி

Koviloor Digital Library

72. வெளிப்படையாய்க்காணும் உருவ அமைப்பைத் தோற்றும் திறம்.
73. ஆசை கொள்ளும் திறம்.
74. கூர்ந்தறியும் திறம்.
75. தன்முனைப்புத் திறம்.
76. செவியால் கேட்டறியும் திறம்.
77. தொடுகை உணர்வால் அறியும் திறம்.
78. பார்வையால் அறியும் திறம்.
79. சுவைத்தறியும் திறம்.
80. நாசியால் நுகர்ந்தறியும் திறம்.
81. கவர்ந்திழுக்கும் திறம்.
82. நெஞ்சுரத்திறம்.
83. அனுமானித்தும், நினைவாலும் அறியும் திறம்.
84. பெயரால் அறியும் திறம்.
85. எதிலும் அதன் மூலத்தை அறியும் திறம்.
86. எதிலும் அதன் ஆதாரத்தை அறியும் திறம்.
87. ஸாரத்தைக் கைக்கொள்ளும் திறம்.
88. முழுஉடலையும் சரிவர இயக்கும் திறம்.
89. எல்லாத் தேவைகளையும் பூர்த்தியாக்கிக் கொள்ளும் திறம்.

Koviloor Digital Library

90. குப்தயோகினி
91. அனங்ககுஸுமே
92. அனங்கமேகலே
93. அனங்கமதனே
94. அனங்கமதனாதுரே
95. அனங்கரேகே
96. அனங்கவேகினி
97. அனங்காங்குசே
98. அனங்கமாலினி
99. ஸர்வஸம்க்ஷோபணசக்ரஸ்வாமினி
100. குப்ததரயோகினி
101. ஸர்வஸம்க்ஷோபிணி
102. ஸர்வவித்ராவிணி
103. ஸர்வாகர்ஷினி
104. ஸர்வாஹ்லாதினி
105. ஸர்வஸம்மோஹினி
106. ஸர்வஸ்தம்பினி
107. ஸர்வஜ்ரும்பிணி

ஸர்வ ஸம்க்ஷோபண



சக்ரம்

ஸர்வ ஸௌபாக்யதாயக



சக்ரம்

Koviloor Digital Library

90. மறைந்துறையும் திறம்

91. சொல்லாலும் சைகையாலும் உணர்த்தும், உணரும் திறம்.

92. ஆய்ந்து புரிந்து ஏற்கும் திறம்.

93. உடலால் இயங்கும் திறம்.

94. வேண்டாதவற்றை வெளியேற்றும் திறம்.

95. இன்பத்தைத் துய்த்து மகிழும் திறம்.

96. விலக்கும், எதிர்நடவடிக்கை எடுக்கும் திறம்.

97. மதிப்பைப் பெறும் திறம்.

98. பற்றறுக்கும் திறம்.

99. கிளர்ந்தெழவைக்கும் திறம்.

100. கண்டறிவதற்குக் கடினமாக்கிக் கொள்ளும் திறம்.

101. கலகம் செய்யும் திறம்.

102. துரத்திச் செல்லும் திறம்.

103. தன்பக்கமிழுக்கும் திறம்.

104. மகிழவைக்கும் திறம்.

105. மயக்கும் திறம்.

106. திகைக்க வைக்கும், சிக்கவைக்கும் திறம்.

107. விடுவிக்கும் திறம்.

Koviloor Digital Library

108. ஸர்வவசங்கரி

109. ஸர்வரஞ்ஜினி

110. ஸர்வோன்மாதினி

111. ஸர்வார்த்தஸாதினி

112. ஸர்வஸம்பத்திபூரணி

113. ஸர்வமந்த்ரமயி

114. ஸர்வத்வந்த்வக்ஷயங்கரி

115. ஸர்வஸௌபாக்யதாயக சக்ரஸ்வாமினி

116. ஸம்ப்ரதாயயோகினி

117. ஸர்வஸித்திப்ரதே

118. ஸர்வஸம்பத்ப்ரதே

119. ஸர்வப்ரியங்கரி

120. ஸர்வமங்களகாரிணி

121. ஸர்வகாமப்ரதே

122. ஸர்வது:க்கவிமோசினி

123. ஸர்வம்ருத்யுப்ரசமனி

124. ஸர்வவிக்னநிவாரிணி

125. ஸர்வாங்கஸுந்தரி

ஸர்வார்த்த
ஸாதக



சக்ரம்

Koviloor Digital Library

108. கவர்ந்திழுக்கும் திறம்.
109. விரும்ப வைக்கும் திறம்.
110. அளவுகடந்து மோஹிக்கச்செய்யும் திறம்.
111. எதையும் அடைந்துகொள்ளும் திறம்.
112. எல்லாச் செல்வங்களையும் சேகரிக்கும் திறம்.
113. மந்திரங்களைக் கையாண்டு பயனடையும் திறம்.
114. இருமை உணர்வை ஒழிக்கும் திறம்.
115. எல்லா நன்மைகளையும் குறைவற அடையும் திறம்.
116. இயல்டாகச் செயல்படும் திறம்.
117. எல்லாவற்றையும் ஸாதிக்கும் திறம்.
118. எல்லாச் செல்வங்களுக்கும் அதிபதியாகும் திறம்.
119. யாவர்க்கும் இனியவனாகும் திறம்.
120. எதையும் நன்மையாகவே முடிக்கும் திறம்.
121. எல்லாவிருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்ளும் திறம்.
122. எந்த துக்கத்தையும் நிவர்த்திக்கும் திறம்.
123. எவ்வித மரணபயத்தையும் விலக்கும் திறம்.
124. எல்லாத் தடைகளையும் தகர்க்கும் திறம்.
125. எழில் கொழிக்க வைத்துக்கொள்ளும் திறம்.

Koviloor Digital Library

126. ஸர்வஸௌபாக்யதாயினி

127. ஸர்வார்த்தஸாதகசக்ரஸ்வாமினி

128. குளோத்தீர்ணயோகினி

129. ஸர்வக்ஞே

130. ஸர்வசக்தே

131. ஸர்வைச்வர்யப்ரதே

132. ஸர்வஞானமயி

133. ஸர்வவ்யாதிவிநாசினி

134. ஸர்வாதாரஸ்வரூபே

135. ஸர்வபாபஹரே

136. ஸர்வானந்தமயி

137. ஸர்வரக்ஷாஸ்வரூபிணி

138. ஸர்வேப்ஸிதப்ரதே

139. ஸர்வரக்ஷாகரசக்ரஸ்வாமினி

140. நிகர்ப்பயோகினி

141. வசினி

142. காமேச்வரி

143. மோதினி

ஸர்வா ரக்ஷகா



சக்ரம்

Koviloor Digital Library

126. எல்லாநன்மைகளையும் ஈட்டிக்கொள்ளும் திறம்.
127. எல்லாச் செல்வங்களும் கொழிக்க வாழும் திறம்.
128. குலத்தை உயர்த்தும் திறம்.
129. முழுமையான புலமை பெறும் திறம்.
130. எதையும் சாதிக்க வல்ல திறம்.
131. எல்லாச்செல்வங்களையும் விரிவாக்கும் திறம்.
132. எதையும் பற்றி முழுமையாய்த் தெளியும் திறம்.
133. நோயெதிர்ப்புத் திறம்.
134. எதையும் தனக்காதரவாக்கிக்கொள்ளும் திறம்.
135. எல்லாப் பாபங்களையும் நசிக்கச் செய்யும் திறம்.
136. எதிலுமுறையும் ஆனந்தகனத்தில் ஒன்றி விடும் திறம்.
137. எதிலும் பாதுகாப்பு அம்சத்தை வலுப்படுத்தும் திறம்.
138. விரும்பியதை விரும்பியவாறே அடையும் திறம்.
139. பாதுகாப்பு அம்சத்தை நிரந்தரமாக்கும் திறம்.
140. இனிப்பிறவா நிலையை வசமாக்கும் திறம்.
141. தன்னடக்கத் திறம்
142. ஆசையை அடக்கும் திறம்.
143. மனநிறைவாய் இருக்கும் திறம்

Koviloor Digital Library

144. விமலே
145. அருணே
146. ஜயினி
147. ஸர்வேச்வரி
148. கௌளினி
149. ஸர்வரோகஹரசக்ரஸ்வாமினி
150. ரஹஸ்யயோகினி
151. பாணினி
152. சாபினி
153. பாசினி
154. அங்குசினி
155. மஹாகாமேச்வரி
156. மஹாவஜ்ரேச்வரி
157. மஹாபகமாலினி
158. மஹாஸ்ரீஸுந்தரி
159. ஸர்வஸித்திப்ரதசக்ர ஸ்வாமினி
160. அதிரஹஸ்யயோகினி
161. ஸ்ரீ ஸ்ரீ மஹாபட்டாரிகே
162. ஸர்வானந்தமயசக்ரஸ்வாமினி
163. பராபரரஹஸ்யயோகினி

ஸர்வ ரோகஹர



சக்ரம்

ஆயுதங்கள்

ஸர்வஸித்திப்ரத



சக்ரம்

ஸர்வானந்தமய



சக்ரம்

Koviloor Digital Library

144. தூய்மையாய் இருக்கும் திறம்.
145. வருமுன் அறிதல் திறம்.
146. வெற்றிபெறும் ஆற்றல் திறம்.
147. எதையும் தனக்கடங்க வைக்கும் திறம்.
148. பிறவிப்பயனை ஈட்டும் திறம்.
149. பிறவிப் பிணிஉட்பட எல்லாப் பிணிகளையும் போக்கிக் கொள்ளும் திறம்.
150. தன்னை மறைத்துப் பழகும் திறம்.
151. தேவியின் அம்பை வணங்குதல்.
152. தேவியின் வில்லை வணங்குதல்.
153. தேவியின் பாசக்கயிற்றை வணங்குதல்.
154. தேவியின் அங்குசத்தை வணங்குதல்.
155. மோக்ஷத்தை விரும்பித்தியானிக்கும் திறம்.
156. ஸம்ஸாரத் தளையை உடைக்கும் திறம்.
157. மாயையைச் சரணடைந்து விடுதலை பெறும் திறம்.
158. பெற்ற விடுதலையை சுவைக்கும் திறம்.
159. எல்லாஸித்திகளும் மோக்ஷஸாதனமே எனத் தெளியும் திறம்.
160. தனது தனித்தன்மையை அழித்து விடும் திறம்.
161. யாவற்றுக்கும் மேலான இடத்திற்கு வந்து சேர்ந்து இளைப்பாறும் திறம்.
162. நிர்விகற்பச் சமாதி திறம்
163. மூலத்தில் போய் ஒன்றிவிடும் திறம்.

Koviloor Digital Library

164. த்ரிபுரே
165. த்ரிபுரேசி
166. த்ரிபுரஸுந்தரி
167. த்ரிபுரவாஸினி
168. த்ரிபுராஸ்ரீ
169. த்ரிபுராமாலினி
170. த்ரிபுராஸித்தே
171. த்ரிபுராம்ப
172. மஹாத்ரிபுஸுந்தரி
173. மஹாமஹேச்வரி
174. மஹா மஹாராக்ஞி
175. மஹா மஹாசக்தே
176. மஹாமஹாகுப்தே
177. மஹாமஹாஞப்தே
178. மஹாமஹானந்தே
179. மஹாமஹாஸ்பந்தே
180. மஹாமஹாசயே
181. மஹாமஹாஸ்ரீசக்ரநகரஸம்ராக்ஞி

நமஸ்தே த்ரி: ஸ்வாஹா ஸ்ரீம் ஹ்ரீம் ஐம் ஓம்

Koviloor Digital Library

மூலத்தில் ஒன்றியபின் அதன்
பெருமையைச் சுவைத்தல்:—

164. முப்புறத்திலும் உலவும் தேவி
165. முப்புறத்திற்கும் தலைவி
166. முப்புறத்திற்கும் அழகூட்டுபவள்
167. முப்புறத்திலும் வசிப்பவள்.
168. முப்புறத்தின் செல்வம்.
169. முப்புறத்தையும் மாலையாயணிந்தவள்.
170. முப்புறத்திலும் ஸித்திவடிவிலிருப்பவள்.
171. முப்புறத்திற்கும் அன்னை.
172. முப்புறத்திற்கும் அப்பாற்பட்டவள்.
173. மஹத்தினும் மஹத்தானவள்.
174. மஹத்துக்கெல்லாம் பேரரசீ.
175. மஹத்திற்கெல்லாம் சக்தி அளிப்பவள்.
176. இரகசியத்திலும் அதிஇரகசியமானவள்.
177. மஹா அறிவினுக்கும் மேலான பேரறிவானவள்.
178. மஹத்தான ஆனந்தகனமானவள்.
179. மஹத்தினுக்கும் மஹத்தானதாய் விரிபவள்.
180. மஹத்தினுக்கும் மஹத்தானதாய் நிலைத்தவள்.
181. மஹத்தினும் மஹத்தான ஸ்ரீ சக்ரநகர ஸாம்ராஜ்யத்தின் பேரரசீ

உனக்கு நமஸ்காரம். மீண்டும் நமஸ்காரம்.

மும்முறை உனக்கே நமஸ்காரம். கடைசி நமஸ்காரத்திற்குப்பின் ஞானி எழுந்திருப்பதே இல்லை. பரம்பொருளில் கரைந்து போயிருப்பான். (முப்புறம் என்பது விழிப்பு, கனவு, உறக்க நிலைகள்)

Koviloor Digital Library

சிவ – சக்தியம்சம்

தர்மம் - அறப்பேறு

மாத்ருகாபைரவ தசகம்

இன்று நம் வாழ்வை முற்றுகையிட்டு ஆக்கிரமித்துள்ள தீயசக்திகள் அழிந்து நாடும் வீடும் சமூகமும் செழிப்புறும், அமைதி நிலைக்கும்.

1. காக்க! காக்க! ப்ராஹ்மீ மாதா உடனான
அஸிதாங்க பைரவர் விரைந்து காக்க!
இன்றுலகில் எரிமலையாய்
மன்னுயிரை மாய்த்துவரும்
வன்முறைக் கலாசாரம் ஒழித்துக் காக்க!

உடனடியாய் மறைந்தொழிய வேண்டியது வன்முறைக் கலாச்சாரம்தான், இதை வேரோடு நீக்கா விட்டால் கூடிய சீக்கிரம் உலகம் பூண்டோடு அழிந்துவிடும். இந்த அவலங்களை நிறுவி நடத்துவோரும் இறைவனால் படைக்கப்பட்ட மனிதர்தாம். அவர் தம் அமைப்பிலும் இறைச் செல்வங்களான அன்பு, தயை, நீதி, உண்மை இடம் பெற்றுள்ளன. காலத்தின் கோலத்தால் நம்பிக்கையை முற்றும் இழந்த, நற்சிந்தைத் திறம் உலர்ந்து போன இந்த ஜீவர்கள், தாம் என்ன செய்கிறோமென்று புரியாமலே தீய சித்தாந்தங்களின் மாயையால் கவர்ந்திழுக்கப்பட்டு வன் முறையை அறுதியான

Koviloor Digital Library

தீர்வாக நம்பிக் கெட்டவர்கள். இறைப் பிரார்த்தனையில் நம் ஆழம் அதிகரிக்க அதிகரிக்க இவர்கள் வன்முறையில் நம்பிக்கையை இழந்து விடுவார்கள், இவர்களுக்கு அந்த வாழ்க்கை கசந்து விடும். மனிதாபிமானத்திற்கு ஏங்கித் தம் கொடிய போக்கை உதறி விட்டு நல்—வாழ்க்கைக்கு நிச்சயம் திரும்பி விடுவார்கள்.

2. காக்க! காக்க! மாஹேசீ மாதா உடனான
குருமஹா பைரவர் பரிந்து காக்க
இன்றுலகில் கடலரிப்பென கபடமாய் நாட்டை நாடு
சுரண்டும் சூழ்ச்சியதை போக்கி காக்க!

நாட்டுக்கு நாடு பகை. தன்னுருமோஹத்தில் திளைப்பு. தம்மிடம் பிறர் கையேந்தி வாழ வேண்டும் என்கிற மமதை. வாழ்க்கையின் அர்த்தத்தைச் சுவைக்க நேரமே இல்லாமல் போட்டியிலும், பொறாமையிலும், பயத்திலும் அழுந்திய நிலை. இயற்கை இவர்களை ஒரு முறை பஞ்சத்தில் புரட்டியெடுத்தால் போதும், இவர்கள் தன்னிடம் வந்து கையேந்த வேண்டும் என ஆசைப்பட்ட நாடுகளே பகையை மறந்து மனிதாபிமானத்தோடு வலிய வந்து உதவி தந்து இவர்களைத் தலைகுனியச் செய்யும். ஆனால் அவ்வித விபத்து நேராமலேயே, நம் பிரார்த்தனையின் அழுத்தம் ஏதோ ஒரு

Koviloor Digital Library

விதத்தில் பாதித்து இவர்களைச் சமாதானத்திற்கு ஏங்குவோராக மாற்றி விடும். பின்னர் இவர் பகை மறப்பர். நேசக் கரம் நீட்டுவர். உலகில் அமைதி அரசோச்சத் துவங்கும்.

3. காக்க! காக்க! கௌமாரீ மாதா உடனான
   சண்டமாபைரவர் சடுதியில் காக்க!
   இன்றுலகில் கூற்றுவனாய் அபரிமித ஆயுதங்கள்
   ஆர்த்தெழும் கேடுதனை வீழ்த்திக் காக்க!

இந்த ஆயுத உற்பத்திப் போட்டி அடி முடி இல்லாத ஒன்றாகப் பரிணாமமடைய ஆரம்பித்து விட்டது. இந்த ஆயுதப் பெருக்கால் ஒருவரை யொருவர் பயத்தோடும் சந்தேகத்தோடும் அணுக முடியுமே அல்லாமல் நிறைந்த மனத்தோடு பரிமாறிக்கொள்ள என்றுமே இயலாது. ஒரு நாள் இவர்களையறியாமலே திடீரென ஒரு தவறு நேர்ந்து கிடங்கிலுள்ள அத்தனை ஆயுதங்களும் ஒட்டு மொத்தமாய் இயங்கி வெடித்துச் சிதற, செய்வதறியாமல் திக்கித்து நிற்பர். அப்போது மனமாற்றம் வரும். இப்படி ஒரு விபத்தினால் தான் மாற்றம் வரவேண்டுமென்பதில்லை. இவர்களது தொலைநோக்கற்ற போக்கால் விண்ணில் இடம் பெற இருக்கும் புதுவிதக் கதிரலைகளால் இவர்களுடைய ஆயுதங்கள் இயக்கத்திறனை அடியோடு இழக்க நேரும். அப்போது மனம் மாறுவர். இதுவும் நம்

Koviloor Digital Library

பிரார்த்தனையின் அழுத்தத்தால் நடக்க இருக்கும் ஒன்றே.

4. காக்க! காக்க !வைஷ்ணவீ மாதா உடனான
க்ரோதமாபைரவர் கடுகிக் காக்க!
இன்றுலகில் பேயாடும் லஞ்ச வஞ்ச வழிப்பறி
அடாவடி அத்தனையும் அடக்கிக் காக்க!

அட்டைதான் இரத்தத்தை உறிஞ்சி வாழும். மனிதன் அப்படி வாழக் கூடாது. இவனது பெண்டு பிள்ளை சுற்றங்களின் இரத்தத்தை மற்றவர் உறிஞ்சி வாழும் நாள் வந்து விடுமோ எனும் அச்சம் இனி ஒவ்வோர் தவறு செய்தவர் உள்ளத்திலும் தோன்றும். தூக்கமின்றித் தவிப்பர். எப்போதும் பயங்கரக் கற்பனைகள் இவர்களை முற்றுகையிட்டவாறிருக்கும். நிம்மதியின்றி அலைபாய்வர். பைத்தியமும், நொண்டியும் குருடு மாகக் குழந்தைகள் பிறக்கும். ஏதேனும் விபத்தில் இவர்களே முடமாவர் அல்லது ஞாபகச் சக்தியையே இழப்பர். இந்தத் தீய வர்க்கம் நலிய ஆரம்பிக்கும். ஆனால் இந்த அவலங்கள் நேர்வதற்கு முன்பே நமது பிரார்த்தனா பலம் இவர்களைத் திருத்தி நல்இயக்கங்களில் இவர்களைப் பங்கேற்க வைக்கும். இப்படிப்பட்ட அதிசயங்கள் நாம் கண்கூடாகக் கொஞ்ச நாளில் காணப் போகும் ஒன்று தான்.

Koviloor Digital Library

5. காக்க! காக்க! வாராஹி மாதா உடனான
உன்மத்த பைரவர் உவந்து காக்க!
இன்றுலகில் பெருநோயாய் உயிர்குடிக்கும்
போதைப் பொருள்
பெருஞ்சந்தையதை தீய்த்துக் காக்க!

வாழ்க்கையின் வண்ண ஜாலங்களை அனுபவித்து மகிழாமல் ஏதோ மாயத்தில் சிக்கி உருத்துப்போன உடலுடன் நடைப்பிணமாக நடமாடும் போதை வெறியர்களை உருவாக்கும் பாபம் சிசுக் கொலையை விடக்கொடியது. தன் சதையையே தின்று பசியாறும் செயலுக் கொப்பானது. இதே போதைப் பொருளின் கொடுவிதியாய் இவர்கள் கண்ணெதிரேயே இவர்களின் பெண்டு பிள்ளைகளை அலங்கோலப்படுத்தும் காட்சிகள் அரங்கேறும் போது இவர்களும் தம் தவறுக்கு வருந்துவர். ஆனால் அவ்வித அலங்கோலங்கள் அரங்கேறு முன்பே நம் பிரார்த்தனா பலம் இவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சிந்திக்க வைக்கும். போதை வகைகள் புறங்காட்டி ஓடிவிடும். அப்புறம் வாழ்க்கை இன்பமயம்தான்.

Koviloor Digital Library

6. காக்க! காக்க! மாஹேந்த்ரீ மாதா உடனான
கபாலமாபைரவர் வேகமே காக்க!
இன்றுலகில் பெரும்புயலாய் வீசும் பொய்மாயமதன்
ஆதிக்கம் அதனை விரட்டிக் காக்க!

பொய்! பொய்! பொய்! எங்கு பார்த்தாலும் பொய்! மறதிக்கு இலக்கே ஆகாத உண்மை, இந்தப் பொய்யின் முழுநேர ஆதிக்கத்தால் நினைவுக்கே வரமுடியாத தொலைவுக்குத் தள்ளப்பட்டு விட்டது. உண்மையின் உறவு இன்றி எந்தச் செயலும் முழுமை பெறாது, பயன் தராது. பொய்யிலே வாழ்வோர் சித்தப் பிரமை பிடித்துச் சீரழிவர். இவர்களின் சந்ததிகளோ இவர்களையும் மிஞ்சிய பொய்யர்களாய் உலா வந்து இவர்களையே திக்குமுக்காட வைத்து முக்காடிடச் செய்வர். ஆனால் அதற்கு முன்னமேயே நம் பிரார்த்தனைச் சூட்டின் வெப்பம் இவர்களைப்புடமிட்ட பொன்னாக மாற்ற ஆரம்பித்து விடும். கற்பனையல்ல, காலம் நம் முயற்சிக்குத் தர இருக்கும் பரிசு இது.

Koviloor Digital Library

7. காக்க! காக்க! சாமுண்டமாதா உடனான
பீஷணமாபைரவர் வீறுடன் காக்க!
இன்றுலகில் தொடர்கேடாய் தாய்க்குலம்
எதிர்கொள்ளும்
அவலங்கள் யாவும் அழித்துக் காக்க!

பெண்ணிலிருந்தே பிறந்து விட்டு பெண்ணையே சீரழிவுக்கு விற்கும் கயமைத் தனம் மனிதனில் எவ்வாறு குடியேறியது? அவள் தந்த பால்தான் இவனை வளர்த்தது. அவள் போட்ட பிச்சையில் இவன் ஆட்டம் போடுகிறான். அடீ, வாடீ, போடீ என்கிறான். அதட்டி, மிரட்டி அடிபணியச் செய்கிறான். இவன் சகோதரிக்கு இந்தக் கதி நேர இவன் சகிப்பானா? பெண் என்றால் கொத்தடிமையா? தனக்கென்று இதயம் இல்லாத இயந்திரமா? போகப் பொருளா? இவன் வீட்டுப் பெண்களின் கற்புதான் இன்றியமையாததா? மற்ற வீட்டுப் பெண்களின் கற்பு, சந்தைப் பொருளா? இப்படிப்பட்டவர்கள் எப்படி உருவானார்கள். நல்லோரின், வல்லோரின் மெத்தனத்தால்தான்! பெண் இனமே! நீங்கள் சிந்தும் மௌனக் கண்ணீர் சாபமாக மாறவேண்டாம். யாவரையும் திருத்தும் நல்லாசியாக மலரட்டும். உங்கள் தவம் உலகத்தை உயர்த்திவிட வழி செய்யட்டும்.

Koviloor Digital Library

8. காக்க! காக்க! மாலக்ஷ்மி மாதா உடனான
ஸம்ஹார பைரவர் கனிந்து காக்க!
இன்றுலகில் நற்சூழல்தனை நஞ்சாக்கும் நாசம் செய்யும்
அறிவீனம் தன்னை நீக்கிக்காக்க!

சூரியனின் கதிர்வீச்சு "ஒஸோன்" கூரையால் வடிக்கட்டப்பட்டு ஆக்கபூர்வ அமைப்புடன் பூமியில் வந்து சேர்வதால் இங்கு உயிரினம் நிலைபெற்று வளைய வருகிறது. நமது கண் மூடித்தனமான போக்கால் காட்டை அழிப்பதும் சூழலில் ஒவ்வாமையைக் கலக்கும் நச்சுப்புகையை வாகனங்கள், உற்பத்திக் கேந்திரங்கள் இவைகளிலிருந்து வெளிப்படும் கழிவுகள் மூலம் சேர்ப்பதும் மிகமிக ஆபத்தான அளவில் அதிகரித்துள்ளது. நமது எவ்வித விஞ்ஞானத் திறனும் இயற்கையின் சீற்றத்தை எதிர்கொள்ள எவ்வகையிலும் பயனற்றது. இப்படியே போனால் பூமி வெகு சமீபத்திலேயே அழிந்துவிடும். இந்த அபாயத்தைத் தவிர்க்க உலகமே விரைவில் நிமிர்ந்தெழப் போகிறது. ஆனால் அதற்கு முன்னரே நம் பிரார்த்தனை மனிதனில் மனமாற்றத்தைத் தோற்றுவித்து விடும்.

Koviloor Digital Library

9. காக்க! காக்க! வடுகபைரவீ உடனான
வடுகமாபைரவர் வலியக் காக்க!
இன்றுலகில் மனித இனம் போடுமிரட்டை வேடத்
தாழ்மையதைத் தகர்த்துக் காக்க!

ஆப்பைப்பிடுங்கும் குரங்குத்தனம் மனிதனில் ஆசைக்கடிமையாகும் போதே கலந்து போயிற்று. இரட்டைவேடத்தால் இவன் சாமர்த்தியமாய் ஏமாற்றி விட்டதாக நினைக்கிறான். அடுத்தவனும் இவனைப்பற்றி அதேபோல் எண்ணுகிறான். என்ன மதியீனம்! யாரிடம் யார் ஏமாந்தார்கள்? இவனே இவனை ஏமாற்றிக்கொண்டது தான் மிச்சமாயிற்று! பொய் முகத்தை நரம்பு புடைக்க எவ்வளவு நேரந்தான் நிலைக்க வைக்க முடிகிறது? ஒரு கட்டத்தில் கலைந்து போகிறது. தோல்வி வந்து தழுவிக்கொள்கிறது. இறைவனிடமே இரட்டைவேடமிடத் துணிவு கொண்டு விட்டான், மனிதன். இவனை யார் திருத்த முடியும்? இவன் வீழ்ச்சியேதான் அதைச் செய்யும்! அப்படியாக வேண்டாமே. முன்னமேயே திருந்தலாம். முடிவெடுங்கள். இறைச்சக்தி கைகொடுக்கும். பிரார்த்தனை இயக்கமும் துணை நிற்கும்.

Koviloor Digital Library

10. காக்க! காக்க! ஆனந்த பைரவியுடன்
ஆனந்த பைரவர் அன்புடன் காக்க!
இன்றுலகில் அறமோங்கி யாவர்க்கும் சுபம்
எங்கும் சாந்தியென
மங்களமெலாம் தந்து காக்க!

என்ன தான் தவறினாலும் அமைதியையே விரும்புகிறோம், நல்லதையே விழைகிறோம். இது தவறல்ல. ஆனால் தவறுசெய்து விட்டோம். திருந்த வேண்டும் என நெஞ்சார நெகிழ்ச்சியுடன் உணர்வதே வேள்வி. இந்த வேள்வி ஒவ்வொருவரின் மனத்தையும் நிறைக்கும்போது இறைவனின் கருணை வெள்ளம் மடை திறந்தாற்போல் பாய்ந்துவரும். அப்புறம் எதற்குத் தான் இங்கு பஞ்சம்? விழித்தெழுங்கள்! தீயதை விரட்டி விட்டு இம்மேம்பாட்டை நாம் எட்ட வேண்டாமா? நமது சந்ததிகளுக்கு தெய்வீக ஜீவநதிபாயும் இன்ப புரியாய் இப்பூமியை அமைத்துத் தரவேண்டாமா? ஒருங்கிணை வோம்! இறைவனைச் சரணடைவோம்! எல்லாக் கறையினையும் போக்கி நல்ல கரையினைச் சேர்வோம்!

வாழ்க இறைவன் பெருமை!
மீள்க மாளா நலன்கள்!

Koviloor Digital Library

காமம் - இன்பம்

நவதுர்கா துதி

(சக்தியின் உக்ராம்சம் – காலங்காலமாய்த் தீயவற்றை ஒடுக்கிச் சமுதாயத்தைக்காத்து ரக்ஷித்து வரும் தொன்மைமிகு தோத்திரப் புதையல். இன்றைய நெருக்கடியில் உடன் கைகொடுக்கக்கூடிய அருமருந்து)

1 ஜயந்தீ மங்களா காளீ பத்ரகாளீ கபாலினீ
துர்கா க்ஷமா சிவா தாத்ரீ ஸ்வாஹா ஸ்வதா
நமோஸ்துதே

ரூபம் தேஹி ஜயம் தேஹி யஸோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவீ ஸர்வ பூதேஷு சக்திரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

வெற்றியே வடிவான ஜயந்தியாகவும்
நல்லன எல்லாவற்றையும் எங்கும் நிகழ்த்தும் மங்களையாகவும்
பகையை உள்ளே புகவிடாமல் விரட்டியடிக்கும் காளியாகவும்

Koviloor Digital Library

தீயவைகளை எப்போதும் துரத்தி அழிக்கும் பத்ரகாளியாகவும்

அஞ்சாநெஞ்சத்தை ஊக்குவித்து உரமாக்கும் கபாலினியாகவும்

துன்பங்களையெல்லாம் துடைத்தொழிக்கும் துர்கையாகவும்

குறைபோக்கிக் குணம்தந்து அரவணைக்கும் க்ஷமாவாகவும்

அன்பைப் பரவச் செய்யும் சிவை ஆகவும்

நல்வளங்குன்றாத வாழ்வை அளிக்கும் தாத்ரீ ஆகவும்,

நாங்கள் ஆற்றும் வேள்விகள் மூலம் தேவர்களை நன்கு திருப்தியடையவைத்து எமக்கு ஆதரவாய் இயங்கத் துணை நிற்கும் ஸ்வாஹா தேவியாகவும்

எம் முன்னோர் கடைத்தேற நாங்கள் செய்யும் கர்மங்களின் பலனை அவர்க்குச் சேர்ப்பித்து அவர்களது ஆசி எமக்கு துணைநிற்க உதவும் ஸ்வதா தேவியாகவும்

உள்ள உம்மை வணங்குகிறோம் –

வரவேற்பையே பெறும் வடிவு தா
முயற்சி யாவினுக்கும் வெற்றி தா
மதிப்பையே பெறும் மாண்பு தா
மீண்டும் துளிர்க்காமல் பகையை அழி

Koviloor Digital Library

யாவற்றுள்ளும் "ஆற்றல்" வடிவாய் இருக்கை கொண்டவளே உன்னை வணங்குகிறேன்.

உன்னை வணங்கினேன், உன்னை வணங்குகிறேன், உன்னையே எப்போதும் வணங்குவேன், நீயே புகலிடம்.

2. ஞானினாமபி சேதாம்ஸி தேவி பகவதி ஹிஸா
பலாத் ஆக்ருஷ்ய மோஹாய மஹாமாயா ப்ரயச்சதி
ரூபம் தேஹி ஜயம் தேஹி யசோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவி ஸர்வ பூதேஷு ப்ராந்திரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

தவவலியால் தெளிவெய்தி விவேகத்தை வசமாக்கிக் கொண்ட ஞானிகளைக்கூட, உனது திட்டத்திற்கேற்ப இயங்குவதற்கு மிக வலுவான உனது மாயாசக்தியால் மோஹத்தில் ஆழ்த்தி, ஆணவமாய்ச் செயல்பட வைக்கும் பேராற்றல்மிக்க பெரும் விபூதிகளுக்கிருப்பிட மான பகவதீ!

வரவேற்பையே பெறும் வடிவு தா
முயற்சி யாவினுக்கும் வெற்றி தா
மதிப்பையே பெறும் மாண்பு தா
மீண்டும் துளிர்க்காமல் பகையை அழி

உன்திட்டத்தையொட்டியே எதையும் இயங்க வைத்து, புரியாததைப் புரிந்தது போலும், புரிந்ததைப் புரியாதது போலும் கணக்கிட்டு

ஏதையும் நான் செய்கிறேன் எனக்காகச் செய்கிறேன் எனும் முழுஅறியாமையில் யாவரும் இயங்க, "மயக்க" வடிவாக யாவருள்ளும் நிலைபெற்றிருப்பவளே!

உன்னை வணங்கினேன், உன்னை வணங்குகிறேன், உன்னையே எப்போதும் வணங்குவேன், நீயே புகலிடம்.

3. துர்கே ஸ்ம்ருதா ஹரஸி பீதிமசேஷ ஜந்தோ:
ஸ்வஸ்தை: ஸ்ம்ருதா மதிமதீவ சுபாம் ததாஸி
தாரித்ர்ய துக்கபயஹாரிணி காத்வதன்யா
ஸர்வோபகாரகரணாய ஸதார்த்ரசித்தா
ரூபம் தேஹி ஜயம் தேஹி யஸோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவி ஸர்வ பூதேஷு புத்திரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

துன்பத்தில் துதித்தால் அபயம் தந்து ஆதரித்தும் இன்பத்தில் துதித்தால் இனியவனாகும் நன்மதியைத் தந்தும் – வறுமை, துக்கம், கவலை, பயம் இவைகளை அழித்தொழித்தும் – எப்போதும் அரவணைக்கும் கனிந்த உள்ளம் கொண்டவர் உன்னையன்றி வேறு யாருண்டு?

வரவேற்பையே பெறும் வடிவு தா
முயற்சி யாவிலுக்கும் வெற்றி தா
மதிப்பையே பெறும் மாண்பு தா
மீண்டும் துளிர்க்காமல் பகையை அழி

Koviloor Digital Library

யாவருள்ளும் செயலாக்கத்திற்கு திட்டம் தீட்டும் "புத்தி" வடிவில் நன்கு ஒளிர்பவளே.

உன்னை வணங்கினேன், உன்னை வணங்குகிறேன். உன்னையே எப்போதும் வணங்குவேன், நீயே புகலிடம்.

4. ஸர்வ மங்தள மாங்தள்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரயம்புகே தெளரி நாராயணி நமோஸ்துதே
ரூபம் தேஹி ஜயம் தேஹி யசோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவீ ஸர்வ பூதேஷு ச்ரத்தாரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

நல்லனவெல்லாம் கொழிக்கும் நல்லியல் நிலையமே!

அன்பே!

அனைத்து நலனும் தரவல்ல திறமே!

புகலிடமே!

முக்கண்ணாளே, பொன்னிறத்தாளே!

திருமால் தன்மை யொளிர்திருவே உனை வணங்கினேன்

வரவேற்பையே பெறும் வடிவு தா
முயற்சி யாவினுக்கும் வெற்றி தா
மதிப்பையே பெறும் மாண்பு தா
மீண்டும் துளிர்க்காமல் பகையை அழி

Koviloor Digital Library

யாவருள்ளும் செயல்பாட்டை ஊக்குவிக்கும் "பொறுப்புணர்வாக" நடமாடும் வடிவே

உன்னை வணங்கினேன், உன்னை வணங்குகிறேன். உன்னையே எப்போதும் வணங்குவேன், நீயே புகலிடம்.

5. சரணாகததீனார்த்த பரித்ராண பராயணே
ஸர்வஸ்யார்த்தி ஹரேதேவி நாராயணி நமோஸ்துதே
ரூபம் தேஹி ஜயம் தேஹி யசோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவி ஸர்வ பூதேஷு வ்ருத்திரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

அடைக்கலம் தேடி அண்டிவரும் பாமரனைப் பரிவுடன் காத்தருளும் இயல்பினளே! எத்துயரையும் எரித்துவிடும் தேவீ! நாராயணீ! நமஸ்கரிக்கிறேன்.

வரவேற்பையே பெறும் வடிவு தா
முயற்சி யாவினுக்கும் வெற்றி தா
மதிப்பையே பெறும் மாண்பு தா
மீண்டும் துளிர்க்காமல் பகையை அழி

யாவருள்ளும் "செயல்பாடு" (உழைப்பு) வடிவில் நிலை கொண்டவளே.

உன்னை வணங்கினேன், உன்னை வணங்குகிறேன். உன்னையே எப்போதும் வணங்குவேன், நீயே புகலிடம்.

Koviloor Digital Library

6. ஸர்வஸ்வருபே ஸர்வேசீ ஸர்வசக்தி ஸமன்விதே
பயேப்யஸ்த்ராஹிநோதேவி துர்கே தேவி நமோஸ்துதே
ரூபம் தேஹி ஜயம் தேஹி யசோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவி ஸர்வ பூதேஷு துஷ்டிருபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

யாவுமான வடிவினளே
யாவற்றுக்கும் தலைவியே
எல்லா ஆற்றல்களுக்கும் இருப்பிடமே
எந்த பயத்திலிருந்தும் விடுவிக்கும் இறைவி!
துர்கா தேவீ
நமஸ்கரிக்கிறேன்.

வரவேற்பையே பெறும் வடிவு தா
முயற்சி யாவிலுக்கும் வெற்றி தா
மதிப்பையே பெறும் மாண்பு தா
மீண்டும் துளிர்க்காமல் பகையை அழி

யாவருள்ளும் "த்ருப்தி" (மனநிறைவு) வடிவிலே நிறைபெற்றுள்ள முழுநிலவே

உன்னை வணங்கினேன், உன்னை வணங்குகிறேன். உன்னையே எப்போதும் வணங்குவேன், நீயே புகலிடம்.

Koviloor Digital Library

7. ரோகானசேஷானபஹம்ஸி துஷ்டா
ருஷ்டாது காமான் ஸகலானபீஷ்டான்
த்வாமாச்ரிதானாம் நவிபந்நராணாம்
த்வாமாச்ரிதாஹ்யாச்ரயதாம் ப்ரயாந்தி
ரூபம் தேஹி ஜயம் தேஹி யசோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவி ஸர்வ பூதேஷு க்ஷமாரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

எம் செயல் உன்னை மகிழ்வித்தால் எமது எல்லா நோய்களையும் நாசம் செய்வாய்.

எம் செயல் உன்னைக் கோபம் கொள்ளச்செய்தால் எமது எல்லா அபிலாஷைகளையும் தகர்த்து விடுவாய்.

உனைச் சரணடையும் நல்லவர்களையோ வல்லவர்களாக்கி மற்றவர்களுக்கு அவர்கள் அடைக்கலம் தரும் பேற்றையும் அளித்து விடுவாய்.

வரவேற்பையே பெறும் வடிவு தா
முயற்சி யாவினுக்கும் வெற்றி தா
மதிப்பையே பெறும் மாண்பு தா
மீண்டும் துளிர்க்காமல் பகையை அழி

யாவருள்ளும் "பொறுமை" எனும் பேராற்றலாக மிளிர்ந்தவாறு எதுவும் கட்டுக் குள்ளடங்கி இருக்க, நிலைகொண்டவளே.

Koviloor Digital Library

உன்னை வணங்கினேன், உன்னை வணங்குகிறேன். உன்னையே எப்போதும் வணங்குவேன், நீயே புகலிடம்.

8. ஸர்வா பாதாப்ரசமனம் த்ரைலோக்யஸ்யாகிலேச்வரி
ஏவமேவத்வயாகார்யம் அஸ்மத்வைரி விநாசனம்
ரூபம் தேஹி ஜயம் தேஹி யசோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவீ ஸர்வ பூதேஷு தயாரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

மூவுலகிலுமுள்ள எல்லோருடைய துன்பங்களையும் போக்கியருள்வாய்.

எங்கும் நீக்கமற நின்றொளிரும் இறைவீ

எமது பகையாவும் புறமுதுகிட்டோடச் செய்வாய்!

வரவேற்பையே பெறும் வடிவு தா
முயற்சி யாவினுக்கும் வெற்றி தா
மதிப்பையே பெறும் மாண்பு தா
மீண்டும் துளிர்க்காமல் பகையை அழி

யாவருள்ளும், (அன்பைத்தேடும், அன்பைத் தரும் பரிவர்த்தனைக்காதாரமான) "தயை" வடிவாக நன்கு நிலை பெற்றுள்ளவளே!

உன்னை வணங்கினேன், உன்னை வணங்குகிறேன். உன்னையே எப்போதும் வணங்குவேன், நீயே புகலிடம்.

Koviloor Digital Library

9. நமோதேவ்யை மஹாதேவ்யை சிவாயை ஸததம் நம:
நம: ப்ரக்ருத்யை பத்ராயை நியதா: ப்ரணதாஸ்மதாம்
ரூபம் தேஹி ஜயம் தேஹி யஶோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவி ஸர்வ பூதேஷு மாத்ருரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

வணங்குகிறேன் தேவீ

மஹாதேவி

சிவனிணை பிரியாத சிவையே! எப்போதும் உன்னை வணங்குவேன்.

வணங்குகிறேன்.

யாவற்றுக்கும் மூலமே! வணங்கினேன்.

மங்களவடிவே

உன்னை வணங்குவதற்கே எனது உயிர்!

வரவேற்பையே பெறும் வடிவு தா
முயற்சி யாவிலுக்கும் வெற்றி தா
மதிப்பையே பெறும் மாண்பு தா
மீண்டும் துளிர்க்காமல் பகையை அழி

யாவற்றையும் உய்விக்கும் "தாய்" வடிவாய் நிலைகொண்டவளே

உன்னை வணங்கினேன், உன்னை வணங்குகிறேன், எப்போதும் உன்னையே வணங்குவேன், நீயே புகலிடம்.

இரண்டாம் பாகம் முற்றும்

Koviloor Digital Library

அறிவிப்பு!

நூலின் இரண்டாம் பாகமாக அமைந்துள்ள **"நூதனத் தோத்திரத்திரட்டின்"** முதல் படிவம், தோத்திரங்களை மட்டும் கொண்டதாக 32 பக்கங்களுடன் வெளிவந்துள்ளது.

இரண்டாம் படிவம், தோத்திரங்களையும் அதன் விரிவான விளக்கங்களையும் தாங்கி 80 பக்கங்கள் கொண்ட புத்தகமாக அச்சேற உள்ளது.

மேலும் மூன்று படிவங்களும் அடுத்தடுத்து எல்லா இந்திய மொழிகளிலும் வெளிவரும்!

– ஆசிரியர்

ஓம் சிவம்!

சுபமஸ்து!!

Koviloor Digital Library

மூன்றாம் பாகம்

புருஷார்த்தம் - காமம் (இன்பப்பேறு)

ஆய்வும் தீர்வும்

Human Resource Development என்ற சொற்றொடரை, மனிதவள மேம்பாடு எனும் வார்த்தைகளால் அலங்கரித்து இதற்கென ஒரு துறை, மந்திரி என என்னென்னமோ செய்து கொண்டிருக்கிறார்கள். இதனால் காலம், பணம், விரயத்தைத் தவிர எந்தவித மேம்பாட்டையும் எட்டியதாகக் கணிக்க இயலாது. அப்படி இந்தத் துறையின் அபரிமிதச் செலவினாலும் முயற்சியினாலும் செயல்பாட்டாலும் உண்மையிலேயே உருப்படியான முன்னேற்றம் ஏற்பட்டிருப்பின் இன்று கோரதாண்டவமாடும் வன்முறைக் கலாசாரத்தை அழித்திருக்க முடியும். வன்முறைக்கெதிரான ஆக்கச்சக்தி வலுப்பெற்று எங்கும் சமாதானமும் சுபீட்சமும் நிலை பெற்றிருக்க முடியும். இவை நடந்தனவா? இல்லையே.

Koviloor Digital Library

மேலே வர்ணிக்கப்பட்ட 'ஏட்டு சுரைக்காய் பொம்மாலாட்டம்' ஒரு கேலிகூத்து. இறக்குமதி செய்யப்பட்ட அந்நிய ஜனநாயக அரிதாரம் பூசிய கோமாளி முகம்.

மனித வளம், அதாவது மனித சக்தி மஹத்தான வலிவுடையது. இதை நன்குணர்ந்திருந்த நம் முன்னோர், குருகுல அமைப்பை நிறுவி, தீர்க்க தரிசனத்துடன் அவரவருள்ளே ஒளிரும் மனித சக்தியைப் பேணி, கண்காணித்து, உரமூட்டிச் செம்மையாய் வளர்த்து, மனித சக்தியை உலக நன்மைக்கு ஆதாரமாவதற்கு அஸ்திவாரமாக அமைத்தார்கள். இம்மாபெரும் சக்தியின் சாதனை முத்திரைகள்தான் நாம் இன்று காணும் பிரமிக்க வைக்கும் மஹத்தான நினைவுச் சின்னங்களும், நிர்மாணங்களும், மாபெரும் அனைத்து உலக அதிசயங்களும். இதில் இருபதாம் நூற்றாண்டின் அதிசயம் என்று எதுவும் இடம் பெறவில்லை, அணு ஆயுத உற்பத்தியைத் தவிர. அணுவின் ஆற்றலைக் கொண்டு என்னென்னவோ ஆக்கப்பணிகளைச் சாதித்திருக்க வேண்டிய மனிதன் முதலில் அணு குண்டைத்தான் கண்டுபிடித்து உலகெங்கும் அச்சம் நிரந்தரமாய்க்

Koviloor Digital Library

குடியேறி நிலைக்க வாய்ப்பை உண்டாக்கினானே தவிர அணுசக்தியின் ஆற்றல் எவ்வித ஆக்கத் துறையிலும் இணைந்து இடம் பெற்று மனிதனுக்கு நற்பயனை அளிக்கும் இடத்திற்கு வரக்கூடிய அந்தஸ்தைப் பெறவேயில்லை. மனிதவளம் (மனிதசக்தி) என்பது எண்ணிறந்த பரிமாணங்களைத் தன்னுள் அடக்கியது.

சான்றாக, கடுமையான தவத்தின் முடிவிலே ஒருவன் இறைவனுக்கு அடுத்த இடமான இறைவனின் பிரதிநிதி நிலைவரை அநேகம் நிலைகளைச் சொந்தமாக்கிக் கொண்டு— வெறுமையிலிருந்து எந்தப்பொருளையும் வரவழைத்துக் காட்டலாம், அவற்றை வந்த விதமாகவே மறைந்து போகவும் செய்யலாம், பிறர் நோயைத் தன் பார்வையாலேயே போக்கலாம், தீராத நோயெனில் அதை தான் தன் ஆன்மீக சக்தியால் தன்னில் வரவழைத்துத் தேக்கி அனுபவித்துத் தீர்க்கலாம், எதையும் வருமுன் அறியலாம், வர இருப்பவை தீமையானால் அதன் வேகத்தைக் குறைத்து, ஜீவராசிகளற்ற வறண்ட இடங்களுக்குத் திசை மாறச் செய்து பேராபத்தைத் தவிர்க்கலாம், எவரையும்

Koviloor Digital Library

செயலிழக்க வைக்கலாம், மனமாற்றமடையச் செய்யலாம், பகையை மறக்க வைக்கலாம். மனிதர் எதிர்மறையானத் தரவீழ்ச்சியில் இறங்காமல் இருந்தால், அன்பைச் சரளமாக பரவவிடலாம். கூடுவிட்டுக் கூடு பாயலாம், கோள்விட்டுக் கோள்களுக்குச் செல்லலாம், திடீரென மறையலாம், வேறு இடத்தில் தோன்றலாம், ஒரே நேரத்தில் பல இடங்களில் தோன்றலாம்– இப்படி என்னென்னவோ அமானுஷ்யமான அதிசயங்களை நிகழ்த்தலாம்– வித்தைகாட்டவோ வேடிக்கைக்காகவோ அல்ல– உண்மையாகவே நியதியின் தேவைக்கிணங்கிய நிலையில்தான் இவ்வளவும் சாத்தியம். பின் ஏன் இன்றைய அராஜகங்கள், அக்கிரமங்கள், ஆபத்துக்கள், வன்முறைகள் கட்டுக்கடங்காமல் கோர தாண்டவமாட முடிகிறது எனும் தர்க்க ரீதியான கேள்விக்குப் பதில் – மனிதன் தன் தரவீழ்ச்சியாலும், திமிர்ப் போக்காலும் தேடிக்கொண்ட ஆபத்துக்கள் இவை. இவன் திருந்தினாலொழிய விமோசனமே கிடையாது. ஆயினும் நல்லவர்களுமல்லவா இப்பேரிழிவு, அழிவு நிலைகளால் அவதிக்கு

Koviloor Digital Library

ஆளாகிறார்கள் எனும் எதிர்க்கேள்விக்குப் பதில்– அந்த நல்லவர்கள் அவசியத்தேவை ஏற்பட்ட நேரங்களில் தீரர்களாக, வீரர்களாக, மானிகளாக, தியாகிகளாக நிமிராமல், தட்டிக் கேட்க வேண்டியதைத் தட்டி கேட்காமல் மெத்தனமாயும், பயந்தாங்கொள்ளிகளாவும், இறையிடம் அரைகுறை நம்பிக்கை கொண்டவர்களாகவும் சந்தர்ப்பவாதப் போக்கை நொண்டிச் சமாதானமாகக் கைக்கொண்ட வர்களாகவும் தரம் தாழ்ந்து போனதற்காக அவர்களும் அத்துன்பத்திற்கு ஒரளவு பங்காளிகளாக வேண்டியதுதான்.

Do or Die என்பார்களே அதாவது தீயவை தலைதூக்கினால் அழித்தொழி அல்லது அழிந்து போ என்பதை நினைவு கூறவேண்டும். எதிரியைப் போரில்தான் அழிக்க வேண்டுமா ? போர் இல்லாத காலத்தில் அவனை வளரவிட்டு உரமேற இடங்கொடுக்கலாமா ? எப்போதும் கண்காணிப்பும் களையெடுப்பும் (தீயதை அழித்தல்) நடந்தவாறுதானே இருக்க வேண்டும். அப்போது தானே நல்ல பயிர் (நல்லவை) செழித்து வளர்ந்து தன்னிறைவும் அமைதியும் நிலைக்க

Koviloor Digital Library

முடியும்? இன்று யாரேயாயினும் சரி ஏன் தவறு செய்கிறாய் என்று கேட்டால் எவன்தான் தவறு செய்யவில்லை என பட்டென்று எதிர்க்கேள்வி பிறக்கிறது! பின் எப்படி நாம் சுபீட்சத்திற்கும், அமைதிக்கும், பாதுகாப்புக்கும் அருகதையாக முடியும்?

ஓர்
நுண்ணிய ஆய்வும்
உலகியல் தீர்வும்

மீளவே முடியாத ஒருமாபெரும் புதைமணல் வெளியை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது மதிப்புள்ள மாண்புமிக்க எல்லாத்தரத்திலும், இன்று தாழ்ந்துபோயிருக்கும் மனிதஇனம்.

இந்த பயணத்தை இந்த இடத்திலேனும் தடுத்து நிறுத்திவிட்டு, ஒரு புதிய, பழுதுபுக இடமில்லா வாழ்க்கை முறையை நிர்மாணித்து முடித்து அதன் கண் மனிதவர்க்கத்தை கொண்டு போய்ப் பிணைப்பதுதான் நமது இன்றைய அவசரக்கடமையாய் நேர்ந்துள்ளது. இனியும் மெத்தனமாய் இருந்தோமானால் மனிதவர்க்கம் அந்தப் புதைமணல் வெளியில் போய் விழுந்து மறைந்தே போகும்.

Koviloor Digital Library

இறைவன் அழகிய உலகைப் படைத்து, அதை நமது தேவைகள் யாவற்றையும் குறைவறப் பூர்த்திசெய்து மகிழ்ச்சியையே தரவல்ல மாளிகையாகவும், பண்ணையாகவும், அமைத்துள்ளான்.

இந்த பூமியை ஒரு காமதேனுவாக, கற்பக தருவாக இயங்கும் வகையில் சமைத்துள்ளான். எதை வேண்டி முறையாய்ப் பாடுபட்டாலும் பூமி அதை நமக்கு வாரி வாரி வழங்கிக்கொண்டே இருக்கிறது. இந்த பூமிக்குள்தான் எத்தனை எத்தனை அற்புதங்கள், அள்ளக் குறையாத, அள்ள மாளாத செல்வங்களாய்ப் புதைந்துள்ளன!

இந்த உலகத்தின் இயக்கத்திலேதான் எத்தனை மஹத்துவங்கள், ஆச்சர்யங்கள், அதிசயங்கள், நுணுக்கங்கள், இயங்குதிறன்கள், புதிர்கள், பயன்கள், அபாயங்கள் ஊடுருவியுள்ளன!

உயிர்ச்சக்தி ஊடுருவும் ப்ராணவாயுவை உள்ளடக்கிய பஞ்ச பூதமெனப்படும் ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் இந்த ஐந்து மூலங்களை தோற்றுவித்து அவைகளின் வித வித விகிதாச்சாரக் கலவையால் என்னென்ன அதிசயங்கள் தோற்று விக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

உயிர்கள் தோன்ற, தோன்றிய உயிர்கள் வாழ, வாழ்ந்த உயிர்கள் மடிய, மடிந்த உயிர்களின் எச்சங்கள் மாய்ந்து போன நிலையில் எவ்வித இழப்பையும் ஏற்படுத்தாமல் அடுத்த பரிணாமத்தை அடைந்து காலச்சக்கரத்தின் சுழற்சியில் சங்கமமாகி, வரலாற்று நதி வற்றாமல் வளர்ந்து கொண்டே போக அங்கங்களாக இயங்கும் அதிசயம், மனிதனின் எந்த விஞ்ஞான முன்னேற்றத்தால் சாதிக்க இயலும்? இவனது அதிகபட்சத் திறன் இந்த அதிசயத்தின் தன்மையையும் மூலத்தையும் ஆராய்ந்து விளக்கமுடியும். அதுவும் இவனால் முழுமையாய் இயலாது. இவன் விளக்கிச் சென்றதை பிற்காலத்தில் வரும் வேறொருவன் மாற்றிச் சொல்வான். அல்லது விளக்கவிட்டுப் போனவைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவான்.

எந்த விஞ்ஞான முன்னேற்றமும், எந்த விஞ்ஞானியின் மேதாவிலாஸமும் எந்த ஒரு புது மூலப் பொருளையும் தோற்றுவிக்கப் போவதில்லை.

ஆனால் இறைவனோ அவனது நிகரற்ற,அளவிட முடியாத ஸாம்ராஜ்யமான பிரபஞ்சத்தின் இயக்க வினோதத்திலே நம் அறிவால் நாம் இதுவரை புரிந்து கொண்டுள்ள வட்டத்திற்கு அப்பால் என்னென்ன

Koviloor Digital Library

வினோதங்கள், புதிர்கள் புதுமைகள் நடமாட வாய்ப்பளித்துள்ளானோ? யாரால் கணிக்க இயலும்?

இறைவனால் தோற்றுவிக்கப்பட்டு வழக்கில் உலவும் மூலப்பொருட்களைக் கொண்டுதானே நம் விஞ்ஞானம் புதுப்புது படைப்புக்களைக் கண்டு பிடித்து உருவாக்கி மார்தட்டிக்கொள்கிறது? இறைவனைப்போல் இந்த விஞ்ஞானத்தால் வெறுமையிலிருந்து எதையாவது தானே தோன்றிவிடச் செய்ய முடியுமா? முடியாது! நிச்சயமாக முடியாது!! ஒரு நாளும் முடியப்போவதுமில்லை!!!

உண்மை இவ்வாறாக இருக்கையில் ஏன் இந்த விஞ்ஞான வளர்ச்சியின் வேகத்தால் இறுமாப்பு? நான்தான் வல்லரசு என்று ஒருவன் சொல்லிக் கொள்கிறான். ஆனால் உள்ளுக்குள்ளே தன் போட்டியாளன் தன்னைவிட முன்னேறி இருப்பானோ என்ற பயம், சந்தேகம். அந்தப் போட்டியாளன் நிலையும் இதே குழப்பமான தன்மையதுதான்.

ஆனால் விஞ்ஞானத்தால் சாதிக்க முடியாமல் திகைத்து நின்று போகும் கட்டத்திற்கு அப்பால் சென்று, ப்ரபஞ்சத்தில் வழக்கிலிருக்கும் பொருள்களின் துணை ஏதுமின்றி வெறுமையில்

Koviloor Digital Library

இருந்து ஒரு புதியதைத் தோற்றுவிக்க மெய் ஞானத்தால் தான் முடியும். மெய்ஞானத்தையே மூச்சுக் காற்றாய், உணவாய், வாழ்வாய் அமைத்துக்கொண்ட மெய்ஞானியால் முடியும்.

ஆனால் மெய்ஞானி அப்படி ஒரு செயலை நிகழ்த்த விழைவானா? மாட்டான்! ஏன்? இவன்தான் தனக்கென்று தனித்துவம் இல்லாதவனாயிற்றே, தன்முனைப்பை வேரோடு அழித்தவனாயிற்றே. நான், எனது, ஸங்கல்பம், விகல்பம் எனும் வேற்றுமைகளையெல்லாம் தனது தவவலியால் மாய்த்து விட்டுத் தன்னிலிருந்து எதுவும் வேறுபட்டதல்ல, தானே தான் யாவுமாக உள்ளேன் எனும் பேருண்மையின் ப்ரக்ஞையில் (உணர்வில்) தன்னைச்சற்றும் எஞ்சாத நிலையில் கரைத்துவிட்டு உயிர் ஒட்டிக்கொண்டிருப்பதால், பரம்பொருளில் ஒன்றிய நிலையில் உலவுபவனாகிவிட்டானே! அப்புறம் இவன் ஏன் எதையும் பற்றிச் சிந்திக்கப் போகிறான்? அப்படி இவன் எதையாவது சிந்திக்க நேர்ந்தால் அது இறைவன் அப்போது சிந்திக்கும் எண்ணமாயிருக்கும். இவன் இறைவனில் ஒன்றியவன்தானே – அதனால் அந்த எண்ணத்தை இவன் கவனிப்பான். கவனித்த பின் அத்திட்டத்தின் செயலாக்கத்தில் இவனுக்கும் பங்கு தரப்பட்டிருந்தால் அந்தப் பங்கை 'ஈச்வர ஸங்கல்பப்படி' நிறைவேற்ற

Koviloor Digital Library

முனைவான். கடமையை முடித்துக்கொள்வான். அன்றி அத்திட்டத்தில் இவனுக்குப் பங்கில்லை என்றிருக்குமானால் இவன் அத்திட்டத்தின் தொடர் நிகழ்ச்சிகளை ஒரு காட்சியாய் கண்டு இறைவனது லீலையின் விநோதங்களை ரசித்து மகிழ்வான். இது தான் எதிலும் ஊடுருவி ஒளிரும் மெய்ஞானத்தின் தன்மை! மாட்சிமை!

இன்று மார்தட்டிக் கொள்ளும் விஞ்ஞான முன்னேற்றத்தின் கணக்கிற்கு உட்படாத அநேகமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே, வரலாறுகள் கூறும் அநேகமனேகம் கலாசாரங்களின் தோற்றத்திற்குப் பல காலம் முன்னேயே, விஞ்ஞானத்தின் எல்லையை எட்டி முடித்து விட்டதை இறைவன் ப்ரபஞ்சத்தின் படைப்பிலும், நடப்பிலும் நிரூபித்து உள்ளான்.

பஞ்ச பூதங்களின் படைப்பென்ன? ஒவ்வொன்றிலும் மற்ற நான்கின் உள்ளடக்கம் என்ன? இவ்வைந்தின் அளவில் எதுவும் குறைந்து போகாத தன்மையுடன் பரிணாமச் சுழற்சியில் இணைந்து மிளிர்வதென்ன? ஐந்து பூதங்களும் ஒன்றையொன்று சார்ந்து உதவுவதென்ன? உதவி பெறுவதென்ன? ஐந்து பூதங்களையும் வெவ்வேறு விகிதாச்சார கலவையிலே இணைய வைத்து புதுப்புதுப் படைப்புகள் விளைந்து விரிந்து கொண்டே போவதென்ன?

Koviloor Digital Library

அவையவற்றிற்கு உயிரோட்டத்தை வெளிப் படையாகவும், மறைமுகமாகவும் உள்ளுரை வாகவும் ஒளிர வைத்த விந்தைதான் என்ன? அவை வளரும் வினோதமென்ன? பின் அவை மாய்ந்து மறைந்து உருமாறி வேறொன்றாய்ப் புலர்வதென்ன? நெருப்புச் சக்தியால் மேகங்கள் உருவாவதென்ன? புயல் சூறாவளி என்றெல்லாம் காற்றால் அவை வெவ்வேறு இலக்குகளுக்கு ஓட்டிச் செல்லப்படுவதென்ன, மேகங்கள் நீர்த்தண்மையைப் புணர்ந்தவுடன் மழையாவ தென்ன? மழை விழுந்த மலை அந்நீரை வழியவிடுவதென்ன? வழிந்த நீர் காற்றின் வேகத்தையும் சேர்த்துக் கொண்டு நதியாய் மாறுவதென்ன? மழை நதியாகி, வழியிலெல்லாம் பயன்தந்தவாறே ஓடித் திரும்ப மேகமாகப் பரிணாமமடையக் கடலைப் போய் அடைவதென்ன? பெய்த மழை நீர்தேக்கங்களோடு நிலத்தடி நீராகி சேமிப்பாவதென்ன? மழையாகப் பிறந்த நீர் மண்ணில் சங்கமமான பின் என்னென்ன தாவரங்கள், செடிகள், கொடிகள், புற்கள், பூண்டுகள் பிறக்கின்றன. அவை, உயிரினம் வாழ எப்படியெல்லாம் மூலப் பொருளாகின்றன? அதே தாவரங்கள் மழை நீரைத் தடுத்துப் பிரித்து பல்வேறு இடங்களுக்கு செலுத்தும் வினையினை மலையின் துணையுடன் ஆற்றும் வினோதமென்ன?

Koviloor Digital Library

உயிரினங்கள் ஒவ்வொன்றும் உலகில் வாழ்க்கை இயந்திரம் சீராக இயங்க என்னென்னவோ விதங்களில் பங்கேற்கின்றன, விளையாற்றுகின்றன!

இன்னும் – கோளங்கள் என்ன? அக்கோளங்கள் அந்தரத்திலே சுழல்வதென்ன? சுழன்று கொண்டே விதவித சக்திகளை மற்ற கோளங்களுக்கு அனுப்பியவாறே திரும்பத் தமக்குத் தேவையான வேறுவிதச்சக்திகளை அவைகளிடமிருந்து பெறுவதென்ன? ஒன்று தேய்ந்து மறைந்து போவதென்ன? வேறொன்று உருவாகி இவ்வட்டத்தில் இணைந்து அங்கமாவதென்ன?

இன்னும் இந்த வினோதங்களை மேன்மேலும் விவரித்துக் கொண்டே போனால் முற்றுப் புள்ளிக்கு வராமல் வளர்ந்தவாறிருக்கும். எனவே விஷயத்தைத்தொட, சற்று வர்ணனைக் குறைப்பை மேற்கொள்வோம்.

உயிர்ப் பிறப்பு எத்துணை அதிசயமானது? எவ்வளவு விநோதத்தையும் விந்தையையும் உள்ளடக்கியது? ஒவ்வொரு இனத்தின் கருவும் ஒரு அணுவின் அளவை விடச் சிறியதாய் தன்னுள் அந்த இனத்தின் முழுத் தோற்றத்தையும் குணத்தையும் புதைத்து வைத்திருந்து

Koviloor Digital Library

படிப்படியாய் தந்தையைப் போலவோ தாயைப் போலவோ அல்லது அதன் முன்னோரில் யாரையோ போலவோ உருவாகிப் பிறந்து வளர்ந்து வாழ்க்கைச் சுழற்சியில் இணைந்து கொள்ளும் அதிசயம்தான் என்ன?

இனி – மனிதன் எவ்வளவு உன்னதமான படைப்பு? இவன் இயக்கத்திலே எத்தனை எத்தனை நுண்–இரகசியங்கள் புதைந்துள்ளன!

இவனது பூதஉடலின் இயக்கத்தில் தான் எத்தனை வித ரசாயனக் கலவைகள், எத்தனை வித மின் – உந்துதல்கள், எத்தனை வித இயந்திர இயல்புகள், எத்தனை வித கொள்ளல் – தள்ளல்கள், வளர்ச்சி – தேய்வுகள் – புனர் வளர்ச்சிகள்? இடையில் நோய்வாய்ப்பட்டால், இவனது நடவடிக்கையை எதிர்பாராமலேயே உடலில் அமைத்து வைத்துள்ள சம்பந்தப்பட்ட சக்திகள் ஒன்று கூடி சிகிச்சை நடவடிக்கைகளை மேற்கொண்டு முந்தைய ஆரோக்ய நிலையை மீட்டு ஸ்திரப்படுத்த இவனது மூளைப்பகுதியால் உந்தப்பட்டு எவ்வாறெல்லாம் தாமே இயல்பாய்ச் செயல்படுகின்றன?

அடுத்து இவனது உடலமைப்பு எவ்வளவு பிரமிக்க வைக்கும் தன்மையுடையது? இந்த

Koviloor Digital Library

உடலும் இதன் இயக்கமும் மூளையின் ஒத்துழைப்புடன் எதை எதையெல்லாம் சாதித்து முடிக்கிறது?

வருமுன் காக்கிறது, எதிர்கொள்வதைச் சமாளிக்கிறது, நடந்ததை நன்கு நினைவிருத்தி எச்சரிக்கையாயிருக்கிறது, நினைவுகளையும், நடப்புக்களையும், யதார்த்தங்களையும், ப்ரத்யக்ஷங்களையும், அனுமானங்களையும் கற்பனைக் கூடத்தில் சோதனை செய்து விடாமுயற்சியுடன் சமரசங்கண்டு என்னென்ன புதுமைகளைக் கண்டு பிடித்து வாழ்க்கையின் சாத்தியக்கூறுகளை விஸ்தரித்துக் கொண்டே போகிறது?

நுண்கலைகளென்ன, மென்கலைகளென்ன, பொறியியல் கலைகளென்ன, மின் இயல் கலைகளென்ன, மருத்துவக்கலைகளென்ன, மனஇயல் கலைகளென்ன, கேளிக்கைக் கலைகளென்ன, இன்னும் உடல் உயிர் இயற்கை இணைப்பை ஆய்ந்து ஆன்மாவை அறியும் கலைகளென்ன, மேலும் இவ்வளவினின்றும் தன்னை முழுமையாக விடுவித்துக் கொண்டு எங்கும் நிறைந்த தன்மையை எட்டுவதென்ன? இப்படியெல்லாம் எத்தனையோ பரிமாணங்களை ஸ்வாதீனப் படுத்திக்கொண்டு சத்தியஒளி வீசும் ஆக்கக்கலைகளை தலைமுறைதோறும்

Koviloor Digital Library

கண்டுபிடித்து அறிமுகப்படுத்திக்கொண்டே போகும் மனிதன் ஏன் கூடவே அசத்திய நாற்றம் வீசும் அழிவுக்கலைகளையும் கண்டு பிடித்து நடமாட விடுகிறான்?

ஆசை தோன்றினால் அடக்கக் கற்றுக் கொண்டவன் பின்னர் ஏன் ஆசையை அடக்க விரும்பாமல் நெஞ்சிலே தேக்கி அதை வளர இடங்கொடுத்து வெளியே ஆசையை அடக்கியவன்போல் பொய்முகம் காட்ட ஆரம்பித்தான்?

பொய் முகம் விலைபோக ஆரம்பித்தபின் ஏன் அந்த ஆசையைப் பேராசையாக வீங்க இடங்கொடுத்தான்?

பேராசை, குறளி – உத்திகளை ஈன்றது

பொய், சூழ்ச்சி, நயவஞ்சகம், நம்பிக்கைத் துரோகம், அடாவடித்தனம், வன்முறை, படுகொலை இவைகள் அந்தக் குறளி – உத்திகளின் பரிமாணங்களாயின.

மனிதனின் ஆணவம் வரம்பு மீறி செயல்படத் தொடங்கியது. விளைவு? இயற்கையின் அன்புத்தத்துவம் இரண்டு கூறாகப் பிரிக்கப்பட்டு சுயநலமுனைப்பிலே மூழ்கி

Koviloor Digital Library

தமர் – பிறர்

நண்பன் – பகைவன்

பிரிவு தோன்றியது.

இயற்கையின் அமைதித் தத்துவமும் இரு கூறாக்கப்பட்டு

போர் – சமாதானம்

வென்றவர் – தோற்றவர்

என்ற இரட்டைகள் தோன்றின.

இயற்கையின் அறிவுத் தத்துவமும் இருகூறாக்கப்பட்டு. அறியாமை மேலோங்கி

மெய்– பொய்

நம்பிக்கை – அவநம்பிக்கை

இரட்டைகள் இடம் பெற்றன.

அறமும் இரு கூறாக்கப்பட்டு

தர்மம் – அதர்மம்

விவேகம் – மூடநம்பிக்கை

இரட்டைகளும் வழக்கில் இடம்பிடித்தன.

அன்பு, அறம், அறிவு, அமைதி இவைகளுக்கு மாற்று நிலைகளே கிடையாது. இவைகள் இயற்கையின் நிரந்தர பரிமாணங்கள்,

Koviloor Digital Library

இவைகளைக் கூறுபோடவோ, உருமாற்றவோ இயலாது.

உண்மை இவ்வாறாக இருக்க மனிதன் தனது ஆணவத்தை அடக்கி ஆக்கப்பணிக்கு அர்ப்பணிக்காமல், ஆணவத்தைச் சுயநலத்திற்கு அஸ்திவாரமாய் அமைத்துக்கொண்டதால் உண்மைகள் இவனுக்குக் கசப்பாகத் தோன்ற ஆரம்பித்தன.

அந்தக் கசப்பினால் இவன் உண்மைகளை ஊமையாக்க ஆரம்பித்தான். பின்னர் அதுவும் போதாதென்று உண்மைகளை இருட்டடிப்புச் செய்யவும் ஆரம்பித்தான். இவனது நாவன்மை பொய்யைத் தோற்றுவித்தது. கதிரவனைக் கவ்வும் இருளெனப் பொய் படர்ந்து, விரிந்து, பரந்து ஒரு நிரந்தர இடத்தையே பிடித்துக்கொண்டு விட்டது.

எல்லா உண்மைகளுக்கும் ஒரு மாற்றுருவு கற்பிக்கப்பட்டு அவைகள் இரட்டையும் ஆக்கப்பட்டு எதற்கும் ஒரு எதிர்மறைத் தத்துவம் நிறுவப்பட்டது. இதிலே வேடிக்கை என்னவென்றால், மனிதன் தன் நாவன்மையால் எதிர்மறையை உண்மையாகவும், உண்மையை எதிர்மறையாகவும் மாற்றிப் புரட்டிப் பேசி எது உண்மை என்கிற அடையாளமே மறைய ஆரம்பித்துவிட்டது. இதேபோல் இயற்கையான

Koviloor Digital Library

எல்லாப் பொருளையும் இனம் மாற்றிப் புணர்ச்சி செய்வித்து, செயற்கையான பலப்பல மாற்றங்களுக்கும் உட்படுத்தி, கண்டுபிடிப்பு என்ற பெயரால் புதுப்புது அவலங்களையும், ஆபத்துக்களையும், அழிவுகளையும், மீள முடியாப்படுகுழிகளையும் மனிதன் நாளுக்கு நாள் அறிமுகப்படுத்தலானான்.

முன்னம் ஒரு நூற்றாண்டுக் கால அளவில் நேர்ந்த தரவீழ்ச்சி படிப்படியாக துரிதமாகி இன்று அந்த ஒரு நூற்றாண்டுத் தரவீழ்ச்சி அளவு ஒரு ஆண்டிலேயே நேர்ந்து விடும் வேகத்தை எட்டிவிட்டது.

அன்பை அன்பினால்தான் பெறமுடியும் என்ற நியதியைத் தூக்கியெறிந்துவிட்டு இன்று அன்பை விலைகொடுத்து வாங்கி விடலாம் எனத் தாழ்த்தப்பட்டுவிட்டது.

நம்பிக்கையை வாய்மையால்தான் நிலைநாட்ட முடியும் என்ற நிலைபோய் நம்பிக்கையும் விலைபொருளாக்கப்பட்டுவிட்டது.

அறம் எங்கோ போய் முடங்கி விட்டது!

நாவன்மையால் எந்தச் செயலையும் இதுவும் அறம்தான் எனச் சாதிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள், விலைகொடுத்து வாங்கும் வியாபார

Koviloor Digital Library

உத்திகளால் நிலையாக்கப்பட்டுள்ளது

அமைதி? அது ஏட்டுச் சுரைக்காயாகி விட்டது.

அஹிம்சை? அது முயல்கொம்பாகிவிட்டது

அறிவு? அதன் காவலனான ஸத்தியத் திடமிருந்து (வாய்மை) பிரிக்கப்பட்டு ஒரு விலை மாதாக வெறியாட்டமாட வழி வகுக்கப் பட்டுவிட்டது.

தேவைக்கேற்ப உற்பத்தியை விஸ்தரித்து, விநியோகித்து, சேமித்து வைத்துக்கொள்ளும் திறனை ஊக்குவித்துத் துணை நிற்க, இறைவன் மனித இயக்கத்தில் ஆறுவித விஷ உணர்வுகளைக் கலந்துள்ளான். அவை,

- காமம் (ஆசை)
- க்ரோதம் (கோபம்),
- லோபம் (கஞ்சத்தனம்)
- மோஹம் (இச்சை அல்லது மயக்கம்)
- மதம் (நான் எனும் முனைப்பு)
- மாத்சர்யம் (பொறாமை) ஆகியன.

இவை மனித இயக்கத்தில் மருந்தெனப் பயன்படவேண்டி இணைக்கப்பட்டவை.

Koviloor Digital Library

ஆசை இருந்தால்தான் செயல்படத்தோன்றும், ஆனால் அந்த ஆசை உணர்வைக் கட்டுப்பாட்டில் வைத்து இயங்குவதுதான் நியதி. இந்தக்கட்டுப்பாட்டை மீறி ஆசை பெருகுமானால் பேராசை வளரும், அறிவு மங்கும், நியதி மீறப்பட்டு நீதி புறக்கணிக்கப்படும். சூழ்ச்சி, நயவஞ்சகம், அடாவடித்தனம் இவை நடைமுறைக்கு வந்துவிடும்,

கோபம் இருந்தால்தான் வேகம் வரும். ஆனால் இதையும் கட்டுப்பாட்டுக்குள்ளேதான் நிறுத்த வேண்டும். இதை வளர விட்டால் கொலைவரை கொண்டு போய்விடும். இந்தக் கோப உணர்வை அடக்கி ஆளப்பழகிய மனிதன் அபரிமித ஆற்றலுக்குச் சொந்தமாகிறான்.

கஞ்சத்தனம் இருந்தால்தான் சேமிப்புத் திறனும், தேவையைக் குறைத்து சிக்கனத்தைக் கைக்கொண்டு எளிமையாய் வாழும் தரமும் நிலவும். இதை வரையறையின்றி வளரவிட்டால் தானும் வாழாமல் பிறருக்கும் வாழ இடந்தராமல், பண்டமும் பாழாகும் அவலத்தைச் சேர்க்கும். இந்த உணர்வை அளவோடு பயன்படுத்தினால் சமுகத்தின் பொருளாதாரம் சீரழியாமல் காக்கப்பெறும்.

இச்சை அல்லது மயக்கம் ஏற்பட்டால்தான் பந்த உணர்வு தோன்றும். இதைக் கட்டுப்படுத்தி

Koviloor Digital Library

இயங்காவிட்டால் எதுவும் தனக்கே முழுமை யாய்ச் சொந்தமாக வேண்டும் எனும் ஆக்கிரமிப்பு உணர்வு மேலோங்கும். அப்போது பகையுணர் வுக்கு வாய்ப்பு மலியும் அல்லது பிறர் நம்மை நேசிப்பதற்குப் பதில் வெறுப்புக் கொள்ள நேரும்.

நான் எனும் முனைப்புத்தான் சாதனைக்கு அஸ்திவாரம். ஆனால் அதே சமயம் தன் திறத்தின், தரத்தின் அளவை நன்கு அறியாமல் அந்த முனைப்பில் மூழ்கினால் அறிவு வெகுவாக மழுங்கிவிடும். இயலாமை காரணமாய் ஆத்திர உணர்வு மேலோங்கும். சாதனை நடவாது. வேதனை தனக்கும் பிறர்க்குமாகப் பயிராகும்.

பொறாமை, போட்டி உருவிலே, அடுத்தவனின் இலக்கைத் தானும் எட்ட வேண்டும் எனும் அளவுக்கு லாபமானதுதான். அந்த அளவை மீறினால் இந்த உணர்வும் சூழ்ச்சி, வஞ்சகம் வெகுவாக மலிய வாய்ப்பை வளர்க்கும்.

இம்மாதிரி அந்த ஆறு விஷ உணர்வுகளையும் கட்டுக்குள் வைத்து வாழும் தீரனாக மனிதனை உருவாக்கத்தான் குருகுலவாசம் எனும் பனிரெண்டு வருடப்பயிற்சி அறிமுகப் படுத்தப்பட்டது.

இந்தப் பனிரெண்டு வருட பயிற்சியில் திறத்தை விட தரத்தைப் புகட்டிக்

Koviloor Digital Library

கண்காணிக்கும் அம்சம்தான் ப்ரதானமாக மேற்கொள்ளப்படும்.

திறம் ஒருவனது அமைப்பிலுள்ள ஆற்றலைப் பொறுத்தது. ஆனால் தரமோ ஒருவனைப் புடமிட்டுப் பதப்படுத்துவதிலே புதைந்துள்ளது.

குருகுலவாசத்தில் யாவரும் சமமே. தனிச்சலுகை இடம்பெறாது. கண்டிப்புக்கும், கண்காணிப்புக்கும் எவரும் உட்பட்டேயாக வேண்டும். பாகுபாட்டிற்கு வழியே இல்லை. புடமிட்ட பொன்னெனத்தான் ஒவ்வொருவரும் வெளியேறுவர்.

பாசத்தைப் பிரிந்து கட்டுப்பாட்டிலேயே வாழ்ந்த காரணத்தால் இவர்களுக்கு எவரைக் கண்டாலும் பாசமும் பரிவும்தான் தோன்றும். விஷ உணர்வுகள் மருந்தாக மாறிவிட்டிருக்கும். ஒவ்வொருவரும் அமைதி விரும்பியாய், ஆக்கத்தில் ஊக்கமுள்ளவராய், நல்ல குடிமகனாய், சிறந்த மனிதராய்த் திகழ்வர்.

இதுவரை சொன்ன ஆறு விஷ உணர்வுகள் தவிர மனித அமைப்பில் ஒரு முக்குணக்கலவை சேர்க்கப்பட்டுள்ளதைக் கவனிப்போம்.

இம்மூன்றின் பெயர், ஸத்வ குணம், ரஜோகுணம், தமோகுணம் என்பன.

Koviloor Digital Library

ஸத்வ குணம் உத்தமத் தன்மையானது. இதன் அடையாளம் – சாந்தம், தெளிவு, விழிப்புடன் செயலாற்றல், பரபரக்காமல் ஆனால் அளவான வேகத்தில் இயங்குதல், எவர் சொல்வதையும் கூர்ந்து கவனித்தல், மதித்தல் ஆகியன.

ரஜோகுணம் மத்தியமத் தன்மையது. இதன் அறிகுறி – வேகம், பரபரப்பு, துடிப்பு, முழுச் சக்தியையும் ஊக்கிச் செயலாற்றுதல், பிறர் சொல்வதைக் கேட்டுப்பின் தன் முடிவிலேயே இயங்குதல் ஆகியன.

தமோ குணம் கடைத் தன்மையது. இதன் இயல்பு – சோம்பல், அதிக உறக்கம், எதையும் சீர்தூக்காமை, எவர் சொல்லையும் கேளாமை, செயல்படுவதைச் சுமையாய் எண்ணல், மனம்போகிறபடி இயங்குதல் ஆகியன.

ஒவ்வொருவருள்ளும் இந்த மூன்றுவிதக் குணங்களும் வெவ்வேறு அளவில் கலக்கப்பட்டு இம்மூன்றில் ஏதோ ஒரு குணம் முனைப்பாய் இருக்கும் நிலை நிறுவப்பட்டுள்ளது.

இதனால் அவரவர் அந்தந்தக் கலவை அளவுகளைச் சார்ந்து இயங்கும் தரத்தினராய் உருவாவர். இருந்தும் குருகுலவாசத்தில் இந்தக் குணக்கலவையின் தராதரத்தைக் கண்டறிந்து இயன்றவரை ஒவ்வொருவரையும் பயனுள்ள

Koviloor Digital Library

நல்ல மனிதனாக உருவாக்கும் முழுமுயற்சி மேற்கொள்ளப்பட்டு இந்தத் தராதரத்தின் கண் ஒரு வித சமரசநிலை ஸ்திரப்படுத்தப்பெறும். அந்த சமரசப்பக்குவம் கைவந்த காரணத்தால், பின்னர் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரம்சத்தில் தனித்தன்மை கொண்ட சிறந்த மனிதனாகவே வாழ்வர்.

அன்றைய மனிதனின் விசேஷ மென்னவென்றால், எதையும் பற்றி ஒரு நல்ல மாணாக்கனுடைய தன்மையில் அறிய முற்படுவான். பெரியோருக்கு மதிப்புத் தந்து வினயத்துடன் அவர்களுக்குப் பணிவிடை செய்து அவர்கள் கூறும் அறிவுரையை சிரமேல் தாங்கி சிறிதும் வழுக்கலின்றி வாழும் தன்மையைச் சொந்தமாக்கி கொண்டவனாயி ருந்தான். ஒவ்வொருவனும் அமைதி நிறைந்த நெஞ்சுடன் தனக்குரிய தனி மதிப்போடு திருப்தியாய் வாழ்ந்தான். வாழ்க்கை, பிரச்சினையாகவே இராது. எப்போதாவது சிக்கல் ஏதேனும் நேருமாயின் பெரியோரைத் துணை கொள்வான். சிக்கல் சிதறி ஓடிவிடும்.

அன்று வாழ்ந்த மனிதனுக்கு மானம்தான் பெரிது. கூச்சல், குழப்பம், மனஉளைச்சல் இவையெல்லாம் அவனுக்கு ஒவ்வாமைகள். எவ்வளவு பெரிய இன்னல் வரினும் தளர்ந்து

Koviloor Digital Library

விடாமல் அநாயாசமாகச் சகித்துக் கொள்வான். பொறுமை அவனது பெருமை. அமைதி அவனது குறிக்கோள். அன்பும் அறமும் அவனது இருகைகள். அறிவும் அஹிம்சையும் அவனது வாழ்க்கையைச் சமரசத்தில் நடத்திச் செல்லும் இருகால்கள்.

அன்று வாழ்ந்த மனிதன் சுதந்திர உணர்வுடன் இயங்குவதைத் தான்தோன்றித்தனம் எனக் கணித்தவன்.

சுதந்திரம் என்பது என்ன?

சுதந்திரமா ? என்ன அது ? ஏன் அது ? யாருக்கு சுதந்திரம் ? யாரிடமிருந்து சுதந்திரம் ? எதற்காக சுதந்திரம் ? சுதந்திரம் என்றால் என்ன ? எளிதில் விளக்க முடியாது.

இதைப் பற்றி வாய்கிழியக் கூச்சலிட்டு ஆறவாறமிடும் அரசியல்வாதிகளாலோ மேடைப் பேச்சாளர்களாலோ என்றைக்குமே விளக்க முடியாது. ஏன் என்றால் இவர்கள் கானல் நீரைப் பருக வேண்டும் என்கிறார்கள். முதலில் சுதந்திரம் என்ற சொல்லுக்கு இவர்கள் தரும் விளக்கம் என்ன ?

தனக்குத் தேவை என்று நினைப்பது எவ்வித நிபந்தனையுமின்றி வசமாகிவிட வேண்டும்.

Koviloor Digital Library

அப்படி வசமாவதில் இயல்பான தாமதமோ சங்கடங்களோ அளவுக்குறைவோ நேரும் போது சுதந்திரம் பாதிக்கப்பட்டு விட்டது எனக் கூக்குரலிடுகிறார்கள்!

ஒன்றின் சுதந்திரம் பறிக்கப்படும் போதுதான் வேறொன்றின் தேவை பூர்த்தியாகும் என்பது இயற்கையின் நியதி. இதை எந்தக் கோஷத்தாலும் போராட்டத்தாலும் மாற்ற இயலாது.

மாறாக இயற்கையின் நியதிக்குக் கட்டுப்பட்டு நமக்குச் சுதந்திரமாக நம்மிடமுள்ள ஒன்றைக் கொடுத்து விட்டு அதற்கு பிரதியாக மற்றொன்றிடமிருந்து அதன் இசைவுடன் நமது தேவையைப் பெற முயற்ச்சிப்போமானல் வாழ்க்கை வெற்றியாக அமையும். இயற்கை ஏற்றுக்கொள்ளும். அமைதி எங்கும் நிலவும்.

நம்மிடம் நமது பிறப்புரிமையாக அமைந்துள்ள சுதந்திரம், நம்மைச் சூழ்ந்துள்ளவைகளில் தன்னலம் கருதாது பிரதி பலனாக எதையும் எதிர்பார்க்காமல் அன்பு செலுத்தும் திறம் தான்.

இதேபோல் மற்றொன்றும் தன்னலம் கருதாமல் நம்மிடம் அன்பு செலுத்தும் போது அதனால் நமது தேவையும் நம்மால் அதன்

Koviloor Digital Library

தேவையும் எந்த நிபந்தனைக்கும் உட்படாமல் பூர்த்தியாகும்.

இதுதான் உண்மையான சுதந்திரம். அல்லாத எதுவும் தன்னலத்தந்திரம். இந்தத் தன்னலமற்றச் சுதந்திரப் பரிவர்த்தனைதான் ஒழுக்கம் என்பது.

இந்த ஒழுக்கத்தை தாய் தன் சேய் மாட்டுச் செலுத்தும் அன்பிலே முழுமையாக தரிசிக்கலாம்.

அதுதான் பிறப்புரிமையாக நமக்குக் கிடைத்திருககும் அன்பு செலுத்தும் சுதந்திரம்

தனிமனிதனின் சுதந்திரம். சமூகத்தால் கண்காணிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படும் ஒன்று.

தட்டிக்கேட்க யாருக்கும் உரிமை இருக்கக்கூடாதென எண்ணுபவன்தான் சமூக விரோத சக்தியாய் உருவெடுப்பான்.

உரிமை தனிமனிதனுக்கு சொந்தம். சுதந்திரம் மக்கள் சார்ந்த சமூகத்திகத்திற்குச் சொந்தம்.

பெருக்கெடுத்து ஒடும் ஆறு (கரைக்கு கட்டுப்பட மாட்டேன் என்று) சுதந்திரம் கொண்டாடினால் கரை உடைந்து ஊரே வெள்ளத்தில் மூழ்கி விடாதா!

கடல் சுதந்திரம் கொண்டாடினால் கடல் சூழ்ந்த மண் நீரில் அமிழ்ந்து போகாதா!

Koviloor Digital Library

கதிரவன் சுதந்திரம் கொண்டாடினால் இருள் சூழ்ந்து விடாதா!

மழை சுதந்திரம் கொண்டாடினால் வெள்ளக்காடாக அல்லது வரண்ட நிலமாக பூமி ஆகிவிடாதா!

வேறு எதுவும் சுதந்திரம் பாராட்டக் கூடாது, கட்டுக்குள் இருக்க வேண்டும்! ஆனால் மனிதன் எந்த கட்டுப்பாட்டையும் ஏற்க மாட்டான். சுதந்திரம் கோரி ஆர்ப்பாட்டம் செய்து எதையும் சிதைப்பான், அழிப்பான்; என்ன அறிவீனம்! என்ன திமிர்ப்போக்கு!

ஒரு ஆண் பல பெண்ணைத் தொடலாம் – இது ஆணின் சுதந்திரம் ஆகிவிடுமா? ஒரு பெண் பல ஆணை தொட்டால் அதற்குக் கேட்கவே கூசும் கெட்ட வார்த்தையை சொல்வான். ஆண் தனக்கு சுதந்திரம் என எண்ணுவதையொட்டி பெண்ணும் எண்ணினால் என்னவாகும்?

பெண் மலடாக இருந்தால், வம்சம் விருத்தியாக ஆண் மறுதாரம் கொள்ளலாம்! ஆண் மலடாக இருந்தால் பெண்ணும் அதே நடைமுறையை மேற்கொள்ள ஆணாதிக்கம் இடந்தருமா?

இல்லறத்தின் இலக்கணத்தைத் திரித்து, கொச்சைப்படுத்தி பெண்ணைக்கட்டிப்போடுவது

Koviloor Digital Library

நியாயம் என்றால், ஆணையும் சோரம் போகவிடாமல் கட்டிபோடுவது எந்த வகையில் அநீதியாகும்?

இருவருக்கும் ஒரே நீதியானால் ஏற்கலாம், தலை வணங்கலாம்.

வணங்க தலை இருக்கிறது! வணங்குவதற்கு எங்கே இருக்கிறது நீதி? சமநீதி?

அன்றைய நல்லவன் உரிமைக்கு சுதந்திரம் பாராட்டமாட்டான். உரிமை சமூகத்தால் கண்காணிக்கப்படும் ஒன்றாக அன்று ஒளிர்ந்தது. உரிமையை விட உழைப்பைப் (கடமையை) பெரிதாக மதித்தான். உரக்கப் பேசுவதை தரங்குறைந்ததாக எண்ணினான். ஒத்த வயதினருடன் விளையாட்டாய் பொழுது போக்கும் போது, அங்கு பெரியோர்கள் யாருமிரா மலிருந்தால் மட்டுமே உரக்கப் பேசினான். கோபப்படுவதைக் கோழைத்தனமாக நினைத்தான். வம்பையும் வீம்பையும் வேம்பென வெறுத்தான். வன்முறையை ஒடுக்கும் வீரனாக உலவினான். தரக்குறைவான எண்ணங்களை விஷமெனத் தள்ளினான். அந்நியப் பெண்ணை நிமிர்ந்து பார்ப்பதைக் தரங்கெட்ட செயலாய் நினைத்தான். சுதந்திரத்தை விடக கட்டுப்பாடு எவ்வளவு ஆரோக்யமானது என்பதை நன்கு அறிந்திருந்தான். மானம்,

Koviloor Digital Library

மரியாதை, நேர்மை, நாணயம், ஒழுக்கம், தியாகம், அன்புப்பரிவர்த்தனை இவற்றைவிட மதிப்புக்குரியது வேறெதுவுமில்லை எனும் சித்தாந்தத்தில் திளைத்து சிறப்பெய்தினான்.

சுதந்திரத்தைச் சிந்திப்பதற்கு மட்டுமே கைக்கொண்டான். சிந்தித்துக் கிடைத்த ஸித்தாந்தத்தை எல்லோருடனும் பகிர்ந்து கொண்டான். யாவரும் ஒன்று கூடி செயல்பட்டனர். செயல்பாட்டிலே சிக்கல் வந்தால் வேறொருவன் சிந்தித்து விடை கண்டான். அதன்படி மாற்று ஏற்பாடுகள் இசைந்து மேற்கொள்ளப்பட்டன.

ஒவ்வொருவரின் தரமும், திறமும் அவரை அறிந்த மற்றவர்க்கு நன்கு தெரியும். ஆகவே அவரவர் திறனுக்கேற்ற பணி அவரவர்க்கு ஒதுக்கப்பட்டது. இன்று போல் பிரச்சாரம் செய்து பலம் சேர்த்துத் தலைமை பெறும் உத்திகள் அன்று கிடையாது. அப்படி ஏதேனும் தலை தூக்கினால் சமூகம் அதைப் பார்த்துக் கைகொட்டி சிரித்திருக்கும்.

புகழுக்குரியவை பாராட்டப் பெற்றன. இகழ்ச்சிக்குரியவை வெறுத்து ஒதுக்கப்பட்டன. யாவரும், தன்னை, தான் சார்ந்து வாழும் சமூகத்தின் அங்கமாகவே உண்மையாய்க் கருதி

Koviloor Digital Library

இயங்கினர். சமூகத்தை ஒரு கூட்டுக்குடும்பக் கண்ணோட்டத்துடன் அரவணைத்தவாறு வாழ்ந்தனர்.

அன்றைய மனிதனின் சமூகம் ஒரு கூட்டுக் குடும்பத்தைப் போன்ற உணர்விலே இயங்கியது.

ஆக்கச் சிந்தனைகள் ஊற்றெடுத்தன. சிந்தனைப் புதையல்கள் வெளிச்சத்துக்கு வந்தன. செயலாக்கம் பரவலாயிற்று. கண்டுபிடிப்புக்கள் கனிந்தன. வாழ்க்கையில் சுவை கூட ஆரம்பித்தது.

பிறப்பின், இருப்பின், இறப்பின் இரகசியங்கள் தேடப்பட்டன. ஆராயப்பட்டன. ஸித்தாந்தங்கள் மேல் ஸித்தாந்தமாக ப்ரகடனப்படுத்தப்பட்டன. முந்தியது சொல்லாததைப் பிந்தியது சொல்லியது அல்லது மாற்றிச் சொல்லியது அல்லது மறுத்துச் சொல்லியது.

அவரவர் தமக்குப் பிடித்த ஸித்தாந்தத்தின் பின்னே சென்றார்கள். ஒரே சமூகம் பல கிளைகளாகப் பிரிந்து இயங்கலாயிற்று. இடம் பெயர்ந்து வெவ்வேறு இடங்களுக்கு ஒத்த மனத்தினருடன் குழாம், குழாமாகப் பிரிந்து சென்றனர். ஆங்காங்கு உள்ளதை ஆராய்ந்து, அறிந்து, உழைத்துச் சீரமைப்புச் செய்து எல்லைகளை நிர்மாணித்துக் கொண்டனர். மனிதன் என்ற பொது வட்டம் மாற்றப்பட்டு இனம்

Koviloor Digital Library

என்ற தனி வட்டம் உருவாயிற்று. அந்தந்த இனத்தின் சிந்தனைத்திறன், சுவைத்திறன், செயல்திறன், இவை சேர்ந்து கலாசாரங்கள் உருவாகலாயின.

இயற்கையின் புதிர்த்தன்மை மனிதனைத் திகைக்க வைக்கும் போதெல்லாம் தனக்கும் மேலே ஒரு சக்தி இயங்கி கொண்டிருப்பதை மனிதன் உணரலானான். அதைப் பற்றிய அறிவை அடைய முழு முயற்சியை மேற்கொண்டான்.

மஹாபுருஷர்கள் தோன்றினர். மதங்கள் தோற்றுவிக்கப்பட்டன. ஆங்காங்கு உள்ளவர் அந்த அந்த மதத்தினரானார்கள்.

இப்படி இனம், மதம் எனத்தோன்றி ஆங்காங்கு இன்னும் சிறுசிறு வட்டங்களாக ஜாதிகள் வழக்கில் இடம் பெற்றன.

அவரவர் தம் இனம்தான் உயர்ந்தது, தன் மதம்தான் மேலானது, என்றெல்லாம் புதிய பாகுபாடுகளை வலியுறுத்த முனைந்தனர்.

போட்டி தோன்றியது, வளர்ந்தது, சர்ச்சைகள் பிறந்தன, வேறுபாடுகள் கிளைத்தன. பகைக் கண்ணோட்டம் முளைவிட்டது. பலம் திரட்டப் பட்டது, ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பலப் பரீட்சை மூலம் அடக்குமுறைக்கு வித்திடப்பட்டது.

Koviloor Digital Library

பலங்குறைந்தவர் பலமிக்கவருக்கு அடங்கி வாழப்பழகிக் கொண்டார்கள். ஆனால் இயலாமையால் நேர்ந்துவிட்ட சிறுமை நெஞ்சினுள்ளே நஞ்சாகத் தங்கிப் பழி வாங்கத் துடிக்கலாயிற்று.

படைதிரட்டல், போர்த் தந்திரங்கள், போர்முறைகள், ஆகியவை விரிவும் வலிவும் பெற்றன.

போர்கள் மூண்டன. வெற்றி தோல்விகள் வழக்கமாயின, போலிச் சமாதான உடன்படிக்கைகள் வாடிக்கையாயின. ஒப்பந்த மீறல்களும், அதனால் சர்ச்சையும், மறுபடியும் அப்போதைக்குச் சமாதானமும் எனக் காலச் சக்கரம் சுழன்று கொண்டே போகலாயிற்று. முதலில் ஒரே சமூகமாக வாழப் பழகிய மனிதன் பின்னர், தமர்—அன்னியர், நண்பன்—பகைவன் என இரு கூறாகப் பிரிந்தபின் ஒரு மூன்றாம் வகை தோன்றி உருப்பெற்று வளரலாயிற்று.

இந்த வகை, கோழைத்தனம் மிகுந்து, கபடத்தனத்தில் கைதேர்ந்து, சுயநலமிக்கதாய், ஓர் அடி வருடியாய், சந்தர்ப்பவாதியாய், தன் உள்கிடக்கையை சாமர்த்தியமாய் மறைக்கத் தெரிந்த சிறந்த வேடதாரியாய், உள்ளே எல்லா நச்சுத்தன்மைகளையும் தேக்கியதாய், தான்வாழ

Koviloor Digital Library

எதையும் செய்யத் தயங்காத குள்ளநரியாய் வாழ்ந்து கொள்ளத் துவங்கியது.

இவர்கள்தான், நச்சுமனம் படைத்த நம்பிக்கை துரோகிகள் எனும் மூன்றாம் வகையினர். இத்தரத்தவர் இருதரப்பிலும் இருந்தனர். இவர்கள்தாம் எவருடைய வீழ்ச்சிக்கும் அஸ்திவாரமாய் அமைந்தனர்.

இந்த வகையினர் தோன்றாதிருந்திருந்தால் இன்று நேர்ந்துள்ள அபாயநிலை இவ்வளவு சீக்கிரம் வந்திராது. இன்னும் பல ஆயிரம் ஆண்டு களுக்குப் பின்னரே வந்திருக்கும்.

இந்த வகையினரை அடையாளம் காண்பது வெகு சிரமம். எப்படியோ தாம் சார்ந்துள்ளவனை விட அதிக செல்வாக்குடன் இருப்பர். எப்படியெனில் தனது எல்லா உடமைகளிலும், உறவுகளிலும், லஜ்ஜையின்றி மேலே உள்ளவனுக்கு ஆதிக்கம் அளிப்பர். மேலே உள்ளவன் இவனைத்தான் நம்புவான். கீழே உள்ளவன் இவனைத்தாண்டித் தனியே மேலே உள்ளவனிடம் தொடர்பு கொள்ளமுடியாத வகையில் தங்கள் இடத்தை ஸ்தாபித்துக் கொண்டு ஆட்டம் போடுவர்.

Koviloor Digital Library

இப்படிப்பட்ட ஒரு வகையினர் தோன்றியது தான் மனிதனின் பெரிய துர்பாக்கியம்.

வரலாறு இவர்களை பச்சோந்தி, புல்லன், புல்லுருவி, கோடரிக்காம்பு, குள்ளநரி, அழிவின் பிரதிநிதி, தன்பெண்டிரைப் பணயம் வைத்தேனும் தன்னை மேம்படுத்திக் கொள்ள அலையும் பெருஞ்சுயநலவாதி, உடனிருந்தே கொல்லும் வியாதி என்றெல்லாம் வர்ணித்து அடையாளம் காட்டுகிறது.

இன்றைய பத்திரிகைகள் இவர்களைத்தான், சமூக விரோத சக்திகள், ஆள்காட்டிகள், குண்டர்கள், அடியாட்கள், ஜால்ராக்கள், புரோக்கர்கள், கங்காணிகள், தரகர்கள், ஆதாயத்திலே கண்ணாயிருக்கும் விசுவாசமாறிகள், கோள்மூட்டுபவர்கள் எனப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

இப்படிப்பட்டவர்களை ஆய்ந்தெடுத்து, ஊக்குவித்து, வளர்த்து, பெரும்பான்மையின ராக்கித் தொண்டர்களென்ற அடையாளத்துடன் தன்னைச் சுற்றி அரணாக அமைத்துக்கொண்ட சாகசக்காரர்களைத் தலைவர்களாகப் பெற்றுள்ள இன்றைய மனிதனின் நிலையை என்னென்று வர்ணித்துத்தான் பரிதாபப்படுவது?

Koviloor Digital Library

பகைவன் எவ்வளவோமேல். அவனை வெளிப்படையாகவே காண்கிறோம். அவன் நம்மை எதிர்ப்பான் என்பதை எதிர்பார்த்தே செயல்படுவோம்.

ஆனால் இந்த உடனிருந்தே கொல்லும் பொய்முகத்தானை எவ்வாறு அடையாளம் காண்பது? எப்போது முதுகிலே குத்துவானோ? இவன் எப்போது எதைச் செய்து யாரை அழிப்பானோ என எவ்வாறு கணிப்பது? இவனை மேய்க்கும் தலைவனும் அவனுக்குமேல் அந்தஸ்துள்ளவனிடம் இதே பொய்முகத்தானா கத்தானே இயங்குவான்? அந்த அந்தஸ்துள் ளவனும் என்று அவனால் வீழ்த்தப்படுவானோ? எப்படிக் கணிப்பது?

ஆக இந்த இனம் எந்த உருப்படியான ஆக்க வேலையிலும் பங்கு கொள்ளாமல், ஒருவன் செல்வாக்கு ஓங்கியதும் அவன் மற்றவனை வீழ்த்துவது, பிறகு வீழ்த்தப்பட்டவன் எவ்வாறெல்லாமோ தன் செல்வாக்கை மீட்டுத் தன்னை வளர்த்துக் கொண்டு முன்னவனை வீழ்த்துவது, இதற்கிடையில் வேறெருவன் இதே உத்திகளில் மஹாவல்லவனாக வளர்ந்து இருவரையும் விழ்த்துவது, வீழ்ந்த இருவரும் பேரம்பேசி சமாதானமாகி, கைகோர்த்து புதியவனை வீழ்த்திவிட்டுப்பின் பங்கு போடுவதில்

Koviloor Digital Library

இவர்களுக்குள் சர்ச்சை முற்றிப் பிரிந்து, மறுபடியும் புதியவன், தான் இழந்த இடத்தை, பிரிந்தவன் ஒருவனின் கூட்டுடன் மீட்பது என்றெல்லாம் ஒரு சொக்கட்டான் ஆட்டத்தை நிலையாக நிரந்தரமாக நிலைக்க வைத்துவிட்டது.

எங்கு திரும்பினாலும், ஊழல், லஞ்சம், வஞ்சம், வன்முறை, அராஜகம், பொய், அடாவடித்தனம், கயமைத்தனம் இவை கட்டவிழ்த்து விடப்பட்டுக் கோர தாண்டவம் புரியும் காடாக நாடு மாற்றப்பட்டு விட்டது.

இவர்களால் ஆளப்படும் மனிதன் முதுகெலும்பற்றவனாக, மானமிழந்தவனாக, பரிதாபத்துக்குரியவனாக, ஆனால் நெஞ்சிலே நம்பிக்கை ஒளி மட்டும் அணைந்துவிடாமல் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு பொறுமையாக வாழ்ந்து, வளையவந்து, கடமையை ஆற்றியவாறே காலச்சக்கரத்துடன் சுழன்று கொண்டிருக்கிறானே! இவனுக்கு என்ன வழி? இதுதான் இங்கே அவசரமான கேள்வி?

இவன் வீடு, நாடு, குடும்பம், வாழ்க்கை இவைகளைப் பெரும் பொறுப்பு மிகுந்த சுமையாய்க் கருதி 'எவ்வாறேனும் வாழ்ந்து தானே ஆகணும்' எனும் இயந்திரகதியைப்

Koviloor Digital Library

பின்பற்றியவாறு, நெஞ்சில் கனவுகளை நிறைத்துக்கொண்டு நிராசையை நனவாய் வைத்துக் கொண்டு பொய் வாக்குறுதிகளை நம்புவதைப் பொழுதுபோக்காய் அமைத்துக் கொண்டு கடிகாரத்துடன் ஒடிக்கொண்டே இருந்துவிட்டு ஒரு நாள் தீடீரென நின்று போய்விடுகிறான்.

மனிதனில் இவன்தான் பெரும்பான்மை யினன். இவர்களால்தான் வாழ்க்கை இயந்திரம் நிற்காமல் இயங்கிக் கொண்டிருக்கிறது. இவனிடம் உள்ளது ஓயா இயக்கமும், சிந்திக்க ஒய்வில்லா வாழ்க்கையும், இன்றைய ஜனநாயக யுகத்தில் நம்பி மோசம்போகும் ஒட்டுரிமையும்தான்.

இவன்தான் சாமானியன் எனப்படும் அப்பாவி. இவனின்றி வாழ்க்கை இயந்திரம் இயங்காது, ஆனால் இவனுக்கு ஏன் நியாயமான வாழ்க்கை மறுக்கப்படுகிறது ?

சிறுபான்மையினனான ஆளும் வர்க்கமோ பெரும்பான்மையினனான இந்தச் சாமானியனுக் காகவே தம் வாழ்வை அர்ப்பணித்துள்ளோம் என்று பறைசாற்றி பிரச்சாரம் செய்து, போஸ்டர் ஒட்டி, பாராட்டு விழாக்களும், பிறந்த நாள் கொண்டாட்டங்களும், அயல்நாட்டுப்

Koviloor Digital Library

பயணங்களும், சிகிச்சைகளும், பத்திரிகைகளில் வண்ணப் போட்டோக்களும், வானொலி, தொலைக் காட்சிகளில் ஒயாமல் உரை நிகழ்ச்சிகளுமாக, சொல்லுக்கும் செயலுக்கும் எந்தவிதத் தொடர்புமில்லாமல் இயங்கியவாறு தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் செழிப்புடன் வளர்த்து வாழவைத்து விரிவாக்கிக் கொண்டே போகிறது. அன்று மனித மாமிசத்தை உண்ணும் காட்டுமிராண்டியாக வாழ்ந்த மனித இனத்திற்கும் இன்று மக்களின் வாழ்க்கையைப் பறித்து உண்டு கொழுத்து உலுத்தர்களாய் உலவும் இந்தச் சமூகத் துரோகிகளுக்கும் என்ன அதிக வித்தியாசம்?

இவன் கைவசம் என்னென்ன உத்திகள் திரண்டுள்ளன? இவன் நாள்தோறும் என்னென்ன உத்திகளை உற்பத்தி செய்தவாறு வளர்ந்து கொண்டே போகிறான்? இவன் நாவிற்கு விவஸ்தையே கிடையாது. இவன் சொன்ன சொல்லின் ஒசை அடங்கு முன்பே சொன்னதை மாற்றிப் பேசுகிறான். கையாலாகாத கூட்டமும் சிந்திக்கும் ஆற்றல் மரத்துப் போய்க் கேட்டுக்கொண்டே இருக்கிறது.

தாய் நாட்டின் பொருளாதாரம், தாய்நாட்டின் கலாச்சாரம், தாய் நாட்டின் பெருமை, தாய் நாட்டின் பாதுகாப்பு, இவைகள் சீரழிந்து சிதைந்து

Koviloor Digital Library

போகுமளவுக்கு இவன் இரட்டை வேடந்தாங்கி இயங்குகிறானே, பெற்ற தாய் இவனை மன்னிப்பாளா? தான் வாழப் பிறரை அழவைக்கும் காளானன்ன இவன் சுமையை இயற்கை தாங்குமா?

அதர்மத்தின் ஆட்சியை நிறுவி நிலைக்க வைக்க இவன் செய்யும் ஆர்ப்பாட்டங்களை தர்மம் எவ்வளவு காலம்தான் சகித்துக்கொள்ளும?

காலம் இவர்களுக்கான கல்லறையைக் கட்டி முடித்தாகி விட்டது. இனி இவர்கள் மீதான குற்றப்பத்திரிக்கையைப் படித்துவிட்டு இவர்களை அந்த கல்லறையில் கொண்டு போய் போட்டு மூட வேண்டியதுதான் பாக்கி.

அப்படி இதை நாம் உடனடியாகச் செய்யாவிட்டால் இவர்கள் நம்மையும் தம்மையும் முதலில் சொன்ன புதை மணல் வெளியில் கொண்டு போய்ச் சேர்த்துவிடுவார்கள். அப்புறம் யாருமே இருக்கமாட்டோம்.

ஆகவே இவர்களுக்கு முடிவு கட்டும் வேலைக்கு முதற்கட்டமாக இவன் செய்துள்ள குற்றங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவோம்

Koviloor Digital Library

மக்களின் உரிமையைப் பாதுகாத்து ஒழுங்காகப் பங்கீடு செய்து வந்த சமூக அமைப்பை, இறக்குமதியான கலாசாரங்கள், ஸித்தாந்தங்கள் இவைகளை அறிமுகப் படுத்தியதன் மூலம் குலைத்தான். அது போதாதென்று சுயநலக் கும்பலைப் பயிர்செய்து வளர்த்துத் துணை சேர்த்துக் கொண்டு அந்த மாண்புமிகு சமூக அமைப்பைக் கரையானாய் அரித்து உளுத்துப் போக வைத்தான்.

நல்லவர் எண்ணிக்கை நலிந்து தீயவர் எண்ணிக்கை பெருகிட, ஆபாசக் கேளிக்கைகளை அறிமுகப்படுத்தினான். சூதாட்டப் பங்குகளைப் பரவலாக்கினான்.

சுயபுத்தி மழுங்கி சொன்ன சொல்கேட்டு ஆடும் குரங்காக மாற்ற, போதைப் பொருள்களை உற்பத்தி செய்து தாராளமாக நடமாட விட்டான்.

குருகுலவாச முறையைக் கொச்சைப் படுத்திப்பேசி மக்கள் மனத்தில் ஐயப்பாட்டைப் புகுத்தி அம்மாசில்லா முறையை மக்கிப்போகச் செய்தான்.

இவனிடம் தீர்க்க தரிசனம் இல்லாததால் தீர்க்க தரிசிகளை சமூகவிரோதிகளாகத் திரித்துக் காட்டி அவர்களை அவ்வப்போது ஒழித்து வந்தான்.

Koviloor Digital Library

பேச்சிலும், எழுத்திலும், கருத்திற்குப் பதில் கவர்ச்சியும், பொருளுக்குப் பதில் மருட்சியும் குழைத்துக் கலந்து குழப்பத்தை நிலைபெற வைத்தான்.

மனிதனை மனிதன் அழிக்க ஆண்டுதோறும் புதுப்புது ஆபத்தான நவீன ஆயுதங்களையும், விஷம் கக்கும் குண்டுகளையும் கண்டுபிடித்து அறிமுகப் படுத்திக் கொண்டே போனான்.

விசுவாச மாற்றம் என்பதை அதர்மத்திற் கெதிராக எடுக்கும் நடவடிக்கையாக இராமல் சுய ஆதாயத்திற்காக அவ்வப்போது மாற்றி மாற்றி அணிந்து கொள்ளும் அங்கியாக மாறச் செய்தான்.

பொய் பேசுவதை ஒரு சிறந்த சாஸ்திரமாக உயர்த்தி வைத்தான் .

உத்தமியாய், பதிவிரதையாய் அந்தப்புரத்தில் கொலுவிருந்த பாலுணர்வை கலைப் படைப்புக்கள் எனும் பெயரிலே முச்சந்திக்குக் கொண்டு வந்து ஏலம் கூவி இழிவு படுத்தினான்.

பாலுணர்வைப் பக்குவமறிந்து பொறுப்புடன் கையாளும் பாங்கைப் புதைத்துவிட்டு, கட்டுப்பாடில்லாமல் கண்டபடியெல்லாம் இயங்க வாய்ப்பை வளர்த்துக் கருக்கொலைகளை, கருத்தடை உத்திகளைத் திணித்தான்.

Koviloor Digital Library

கலகக்காரர்களுக்கும், போக்கிரிகளுக்கும், ஜேப்படிக்காரர்களுக்கும், கொள்ளைக் காரர்களுக்கும் வழக்கு நேரங்களில் உதவிசெய்து அவர்களைத் தேவையான காலங்களில் கையாட்களாக பயன்படுத்திக் கொண்டான்.

பேச்சிலே பெண்ணுக்குச் சுதந்திரம், நெஞ்சிலே பெண்ணைக் கெடுக்கத்தாகம், மேடையிலே பெண்ணுக்குச் சம உரிமை கோஷம், வீட்டிலே பெண்ணுக்கு கொத்தடிமைக் கோலம், எழுத்திலே பெண்ணைக் காக்கும் வீரம், நடப்பிலே பெண்ணைக் கடத்தும் சோரம் என்றெல்லாம் இவன் போடும் இரட்டைவேடம் இவனுக்கே யமானாய் வரப்போகுது பாடம்!

காவல் துறையைக் கைம்பெண்ணாக்கி கைப்பிடித்துக் கொண்டான் கலகம் நிலைக்க!

நீதியும் விலைபோகும் பொருளாய் மாறி,

நன்னெறியாவும் நிலைகெட்டோட,

நின்றான் துணையாய் நிதியின் செருக்கால், நன்றென்று ஒன்று எங்கும் இல்லை.

இனியும் அடுக்க ஏடும் எழுத்தும்

அள்ளக்குறையா அடுக்காயிருக்கு

Koviloor Digital Library

எனினும் இதுவே போதும் இவனை

என்றும் இறந்த நிலையில் வைக்க!

இந்தத் தீயவர்களின் வெற்றிகளைக் கண்டு பலவீன மனமுள்ள நல்லவர்களும் காசாசையினால் உந்தப்பட்டு இந்தக்கும்பலின் உத்திகளைத் தாமும் பின்பற்றலானார்கள்.

- பொய் வழக்காடும் வக்கீல்கள்,
- பொய்க் கணக்கெழுதுவதில் வல்லவர்கள்,
- மனிதாபிமானமேயில்லாத பணம் பிடுங்கி மருத்துவர்கள்,
- கள்ளச்சந்தை பெருச்சாளிகள்,
- கலப்பட சிகாமணிகள்,
- கடத்தல் மன்னர்கள்,
- நாட்டின் ரகசியங்களைக் களவாடி விற்கும் கயவர்கள்,
- கூலிக்குக் கொலை செய்பவர்கள்,
- கள்ள நோட்டடிப்பவர்கள்,
- கருப்புப் பண முதலைகள்,
- பெண்ணை வைத்து பணம் பண்ணுபவர்கள்,
- பெண்களை கடத்தி அயல் நாட்டில்விற்போர்,
- பேனாவால் பெண்களைத் துகிலுரித்துக் காட்டும் எழுத்து – மாமாக்கள்,

Koviloor Digital Library

✣ கலை என்ற பெயரிலே எந்தவித அலங்கோலத்தையும் கடும் போதையூட்டும் தரத்துடன் பரவவிடும் கலைப்படைப்பாளிக் குண்டர்கள்

✣ கற்பனை செய்யவே கூசும், பச்சைத்தனமான, இரட்டைப்பொருள் ஒசையுள்ள வார்த்தைகளைச் செருகிப் பாடலை வடிக்கும் கவி (கபி ?) ப்புல்லுருவிகள்,

✣ பெண்கள் பார்த்தால் குமட்டும் அளவுக்கு – ஏன், கண்ணியத்தைப் பேணும் ஆண்களும் – தலைகுனியும் அளவுக்கு ஆபாசம் ததும்பும் கேவல அசைவுகளையும், குலுக்கல்களையும் திணித்து நடனக்காட்சிகளை நிரப்பும் நடனக் கோமாளிகள்,

✣ பெண்களின் கவர்ச்சியினை வியாபாரப் பொருளாக நினைத்து, விளம்பரத்திற்கு அந்த அம்சங்களை, தூரிகையாலும், காமிராவின் கோணங்களாலும், மிகைப்படுத்தி வெட்ட வெளிச்சமாக்கி பிழைக்கும் ஓவியத்தரகர்கள், புகைப்படக்கலைக் கசடர்கள், என நச்சுக் காளான்களாக நாடு முழுவதும் இவர்கள் பெருகலாயினர்.

பட்டியலிட இன்னும் எவ்வளவோ வெட்கக் கேடுகளும், பேராபத்துக்களும் உள்ளன. அதிகம் சொல்லிக் கொண்டே போனால் குறிக்கோள்

Koviloor Digital Library

பின்தள்ளிப் போய்விடுமே எனும் அச்சம் தோன்றியது. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பது முதுமொழி.

உதாரணத்திற்கு, உடமையாளர் அறியாமலே மனித உறுப்பைச் சூறையாடி விற்பது,

அயல் நாட்டு வாழ்க்கையிலிருந்து இங்கு அவ்வப்போது வந்து இங்குள்ள பெண்ணை மணந்து கொண்டுபோய் அங்கு விவாகரத்து செய்து விட்டு, அப்பெண்ணை வேறொருவனுக்கு விற்றுவிட்டு, மறுபடி வேறு பெயரோடு புதுமாப்பிள்ளையாக இந்தியா வந்து அதே கயமைத்தனத்தைத் தொடர்வது போன்றனவாம்!

முக்கியக்குறிப்பு : ஆணோ பெண்ணோ எவரையும் சோரம்போக ஊக்குவித்து மாளாத தாகத்தை ஊற்றெடுக்க வைக்கும் "கலைவெறி" அடுக்குமா ? கலை என்ற சொல்லுக்குத் தமிழில் "அழி" என ஒரு பொருள் தொனிக்குமே அவ்வித ஒரு முடிவு, அலங்கோலங்களையும், அவலங்களையும் கடும் தொற்றுநோய் எனப்பரவவிடும் எல்லாக் கலைகளுக்கும் நடந்து முடியட்டும் எனப் பிரார்த்தித்தல் நேர்மைவிரும்பி எவருக்கும் உடன்பாடாகத்தானே இருக்க வேண்டும் ?

Koviloor Digital Library

மேற்கோள்

சமரச சன்மார்க்க சங்கச் சான்றோராம்
தவத்திரு இராமலிங்க அடிகளரின் வாக்கு!

"கலை உரைத்த கற்பனையே
நிலையெனக்கொண்டாடும்
கண்மூடிவழக்கமெலாம்
மண்மூடிப்போக!"

இதுவரை பட்டியலிடப்பட்ட, இன்னும் பட்டியலில் சேராத ஏனைய தீயவர்கள் எவரையும் யாரும் திருத்தி நல்வழிக்குக் கொண்டு வரமுடியாது. இந்தத் தீய வர்க்கம் மேலும் மேலும் வளர்ந்து கொண்டுதான் போகும்.

பணம் எனும் தத்துவத்தில் ஆதிக்கம் பெற்றிருக்கும் அசுரபலத்தை ஒடுக்கி, கருப்புப் பணத்தை ஒழித்து, நெறியான உழைப்பாலல்லாது வேறு வித ஏமாற்று வழிகளில் பணத்தைச் சம்பாதிக்க முடியாத கட்டுப்பாட்டை அமலுக்குக் கொண்டு வந்து, வங்கிகளைத் தவிரத் தனியாரோ, தனிநபர்கள் கூட்டாக நடத்தும் நிறுவனமோ பணத்தை வட்டிக்கு விடுவதைத் தடைசெய்து, குற்றங்கள் உடனுக்குடன் கண்டுபிடிக்கப்பட்டு, சிபாரிசுகளின் குறுக்கீடுகளுக்கு வழியே விடாமல், அப்போதைக்கப்போதே வழக்கு நடத்தி

Koviloor Digital Library

உடனடியாய்த் தண்டனையும் நிறைவேற்றப்பட்டு, போர்க்கால நெருக்கடி தோரணையில் அரசு யந்திரத்தை மக்கள் வலியுறுத்தி இயங்க வைத்து வெற்றி காண்பார்களேயானால் இந்தத் தீய சக்திகள் வலுவிழந்து மறையத் துவங்கும் வாய்ப்பு நேரலாம். இதையார் செய்வது? எப்படிச் செய்வது?

இன்று உலகத்தின் போக்கை எப்படி வேண்டுமானாலும் தம் செல்வாக்கால், பண பலத்தால், படைபலத்தால் கட்டுப்படுத்தக் கூடிய அந்தஸ்தில் இருக்கும் வல்லரசுகளால்தான் செய்ய முடியும்?

முன் சொன்ன அவல நிலைகள் இவ்வளவு தூரம் வலுப்பெற்றுள்ளதில் இவர்களும் தெரிந்தும், தெரியாமலும் பங்கேற்றிருக்கின்றனர். அதற்குப் பிராயச்சித்த நடவடிக்கையாய் இவர்கள் முழு மூச்சுடன் சீரழிவைத் தவிர்த்து சீர்திருத்தத்தை அமல்படுத்த உடன் செயலில் இறங்கவேண்டும்.

முதலில் அமைதிப் புனரமைப்புத் திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும். சிறந்த மேதைகள், செம்மையான சிந்தனாவாதிகள், தீர்க்க தரிசன ஆற்றல்படைத்த வல்லவர்கள், இவர்களை ஒவ்வொரு நாட்டிலிருந்தும் ஆய்ந்தெடுத்து ஒன்று சேர்க்க வேண்டும். அவர்களிடம் திட்டத்தை

Koviloor Digital Library

விவாதிக்க வேண்டும். திட்டத்தின் நிரந்தர வெற்றிக்கான சாத்தியக் கூறுகளை நன்கு கண்டறிந்து தொகுக்க வேண்டும், அதைத் தெளிவாகப் பிரகடனப்படுத்தி உலகின் மக்கள் யாவரையும் இந்தப் புனரமைப்புத் திட்டத்தில் ஆர்வம் கொள்ளச் செய்ய வேண்டும்.

இத்திட்டத்தின் அமைப்பில் எல்லா நாடுகளும் சம அந்தஸ்துள்ள உறுப்பினராக வேண்டும்.

இந்த அமைப்புக்கு விசேஷ அதிகாரம், தனிநீதிமன்றம், தனிக் காவல்துறை, என்றெல்லாம் தோற்றுவித்து இந்த அமைப்பின் கிளைகள் நாடுதோறும் நிலைபெற வேண்டும்.

அந்தந்த நாட்டிலுள்ள இக்கிளைகளுக்கு அதன் செயலாக்கத்தில் அந்தந்த நாட்டு அரசாங்கம் பூரண ஒத்துழைப்புத் தந்து இயங்கும் நியதி அமலுக்கு வரவேண்டும்.

நீதிக்குப் புறம்பான எந்தச்செயலும் உடனுக் குடன் கண்டிக்கப்பட்டு ஒழிக்கப்படவேண்டும்.

உரிமைப் போராட்டம் என்ற பெயரிலே ஆர்ப்பாட்டங்கள் நடத்தி பொதுச் சொத்துக்களை அழிப்பதும், மக்களின் அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதையும் தேச விரோதம் எனப் பிரகடனம் செய்து தடைப்படுத்த வேண்டும்.

Koviloor Digital Library

போர்கள் தவிர்க்கப்படவேண்டும். இதில் வல்லரசுகள் கௌரவப்பிரச்சினை நுழைய இடம் விடாமல் கண்காணிக்க வேண்டும்

விலை மதிப்பில்லா அமைதி எங்கும் நிலவ அவரவர்கள் தங்கள் கௌரவத்தைப் பெரிதாக எண்ணாமல் இந்தத் திட்டத்தில் தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த வல்லரசுகள், தாம் எப்படிப்பட்டவர்கள், தமது பொறுப்பு எவ்வளவு பெரியது, உலக மக்கள் இவர்களது வல்லமையின் உதவியை எதிர்பார்ப்பது எவ்வளவு நியாயமான உரிமை என்றெல்லாம் ஒரு தர்மகர்த்தா நிலையில் தம்மை இருத்திச் சிந்தித்துத் தீர்வு காண வேண்டிய கடமையில் உள்ளவர்கள். இதை இவர்கள் செய்யாவிடில் யார்தான் செய்வார்கள்?

இவர்களிடம் இந்த தர்மகர்த்தா செயல்பாட்டை எதிர்பார்த்துத்தானே இறைவன் இவர்களை வல்லரசாக்கியுள்ளான். இறைவனின் இந்த எதிர் பார்ப்பை இவர்கள் நிறைவேற்றத் தயங்கலாமா?

சிந்தனைக்கு

சுபீட்சம் (துந்நிறைவு) என்பது என்றுமே கைக்கு எட்டாத கனியாக, கானல் நீராக இருந்து வருவது கண்கூடு. சுபீட்சத்தை நோக்கி செல்கிறோம் எனும்

Koviloor Digital Library

கோஷம் தான் என்றுமே எங்குமே பரவலாக இருந்து வந்திருக்கிறது.

சுபீட்சம் என்பது வறலாறுகளில் எந்த நாளிலோ நிலவிய ஒரு கடந்த கால நிகழ்ச்சியாக மேற்கோள் காட்டப்படுகிறது.

இன்னும் அதே சுபீட்சமே வருங்காலக் கனவாகவும் தீட்டிக் காட்டப் பட்டு வருகிறது.

சுபீட்சம் ஒரு நிகழ்கால நடைமுறையாக என்றுமே இருந்ததாக ஏற்றுக் கொள்ள இயலாது!

நம் நேரத்தை கடந்தகால வறலாற்று சம்பவங்களை எண்ணி ஏங்குவதிலோ அல்லது பெருமை கொள்வதிலோ செலவிடுகிறோம்.

இடையே அதனின்று நேரத்தைப் பெயர்த்தெடுத்து எதிர்கால கற்பனைகளில் உலவ விட்டு விரையமாக்குகிறோம்.

இந்தப் போக்கிலே நிகழ்காலத்திற்கென்று நம்மிடம் போதிய நேரமே இல்லாமல் செய்து, சரிவரச் செம்மையாய் செயல்படாமல் உழன்று வாழ்க்கையில் பற்றாக்குறையை நிரந்தரம் ஆக்கியவாறு, சுபீட்சத்தை கனவுநிலையிலேயே நிலை பெற விட்டு விடுகிறோம்.

Koviloor Digital Library

கடந்த காலம், படிப்பிணைக்கு உதவும் குறிப்பேட்டு அந்தஸ்தில் கொஞ்சம் எட்டி வைக்கப்பட வேண்டும்.

எதிர்காலம், அது வரும்போது அப்போதையச் சூழலுக்கேற்பக் கவனிக்கப்பட வேண்டிய "பெண்டிங் ஃபைல்" நிலைக்குத் தள்ளி வைக்கப் பட வேண்டும்.

நிகழ்காலம், முழுமையாகச் செயல்பட்டு முடிக்க வேண்டிய பட்டியலைக் கொண்ட அன்றன்றைய நாட்குறிப்பாக மலர்ந்து, வளர்ந்து, செயலாகி, அறுவடையாகி, எதிர்காலத்திற்கு அஸ்திவாரமாக அமைந்து விட வேண்டும்.

அப்போது சுபீட்சம் ஒரு நிரந்தர யதார்த்த நிலைக்கு உயர்ந்து விடும்.

அதாவது கவலை புக இடமில்லாத தன்நிறைவு நிகழ்கால நடைமுறையாக – மலர்ந்து விடும் – கனிந்து விடும் – நலமெல்லாம் நிறைந்து விடும்!

வாய்மையே வெல்க!
ஆக்கமே வளர்க!
நேர்மையே நிலைக்க!
அமைதியே நிலவ!

Koviloor Digital Library

காலம் மாற வேண்டும்
ஞாலம் தேற வேண்டும்
வாய்மை ஒலிக்க வேண்டும்
நேர்மை நிலைக்க வேண்டும்

இம்மூன்றாம் பாகத்தின் தாக்கம் நம் இளைய தலைமுறையை வேகமாய்ச் சென்றடைந்து அவர்களை மாபெரும் செயல்வீரர்களாக கர்மயோகிகளாக, பொற்காலம் சமைத்து முடிக்கும் பேராண்மையாளர்களாக உருவாக்க வேண்டுமென்பதே நம் ஒவ்வொருவரின் பிரார்த்தனையாக, தவமாக ஒலிக்க வேண்டும், ஒளிர வேண்டும்!

(மூன்றாம் பாகம் முற்றும்)

ஓம் சிவம்!
சுபமஸ்து!!

Koviloor Digital Library

புருஷார்த்தம் - மோக்ஷம் (வீடு பேறு)

வரப்ரசாதம்

இன்றைய இளைஞர் சமுதாயத்திற்கு உரமூட்டும் முயற்சியாக வெளிவந்துள்ள இந்நூல், தர்மம் (அறம்) அர்த்தம் (பொருள்) காமம் (இன்பம்) மோக்ஷம் (வீடு) என நான்கு புருஷார்த்தங்களை பிரதிபலிப்பதாக அமைந்து யாவருக்கும் நன்மையையும் மேன்மையையும் அளிக்க வல்லது என உறுதியாக நம்பலாம். தேவை– ஊக்கமும், ஈடுபாடும், நம்பிக்கையும் தான். நுலைப்படித்து முடிக்கும் போது ஒவ்வொருவர் உள்ளத்திலும் மேற்குறிப்பிட்ட தகுதிகள் ஊற்றெடுத்து அவரவரது முயற்சியை இறையருளால் திருவினையாக்கும். திண்ணமாய் நல்லனயாவும் நடந்தேறும்!

பரம்பொருளை, ஆதிமூலத்தை, எளிதாகத் தொடர்பு கொள்ள உருவ வழிபாடு (ஸகுண உபாசனை) முனிவர் பெருமக்களால் நிறுவப்பட்டு, வழி வழியாகக் கடைபிடிக்கப்பட்டு வருவது நாம் யாவரும் அறிந்த ஒன்றுதான்.

Koviloor Digital Library

அப்படி ஈடுபடும் வழிபாட்டிலே இறைவனை, மாதாவாக, பிதாவாக, குருவாக, எஜமானனாக, கணவனாக, தோழனாக எனப் பலவிதமாகவும் உறவை நிறுவி, பக்தி செய்து மனநிறைவடைந்து இறுதியில் பரம்பொருளில் கரைந்துபோன எண்ணிறந்த மஹான்களையும் ஞானிகளையும் சித்தர்களையும், பக்தர்களையும் பக்தைகளையும் ஈன்றெடுத்த நம் பாரதப் பெருநாட்டில் சக்தி உபாசனை மூலம் தெய்வத்தை அன்னையாக வழிபட்டுச் சிறப்பெய்தி வருவது பரவலான ஒரு மரபு. அதனடிப்படையில் யாவரும் பயனடைந்து மகிழ வேண்டி இந்நான்காம் பாகத்தில் அன்னை தரிசனம் ஓர் வரப்பிரசாதமாக இங்கே ஸமர்ப்பிக்கப்படுகிறது!

வாருங்கள்! அன்னையை நெஞ்சார தரிசித்து அடைதற்குரிய நான்கு விதச் செல்வங்களையும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்து வரலாறு படைப்பீர்களாக என்று உளமாற வாழ்த்துகிறேன்!

காப்பு

ஓமெனும் ஒலியுமாய்
ஒளியுமாய் உற்றதோர்
உத்தமா உமைசுதா
உம்தாள் எமைக்காக்க

Koviloor Digital Library

ஒடுமெண்ணங்கள் ஒன்று கூடி நின்றன
உற்ற சலனமோர் உந்தலாய் மாறியது
உண்டா உருவம் தெய்வத்திற்கு
உண்டென்றால் உடன் காணவேண்டும்
பலர் சொல்லுறாருண்டென்று
சிலர் சொல்லுறாரில்லையென்று
படித்ததெல்லாம் கேட்டதெல்லாம்
பாடிப்பார்த்தால் புரியவில்லை
புரியச் சொல்வோர் யாருமில்லை
புரிந்து கொள்ளத் துடித்திடுறேன்
பின்னும் பின்னும் தோண்டித்துருவிப்
போம் வழியும் படியவில்லை
பார்த்தவர் பகர்ந்ததில்லை
பார்க்காதோர் பலவும் சொன்னார்
பார்க்க முடியுமென்றால்
பாங்குடன் அதனமைப்புமென்ன
பாசியா பால்வண்ணமா
பத்மமா அலைகடல் நீலமா
பேரிருளா பொன்னிறமா அல்ல
பலவண்ணக் கலவையுமா

Koviloor Digital Library

கண்ணுண்டா கனவுருவுண்டா
கவினழகாய்க் காணுமா
குளிருமா ஒளிருமா கூப்பிட்டாலது பேசுமா
என்னைப் போலிருக்குமா
அன்னை போலிருக்குமா
அப்பன் போலிருக்குமா
யார் போலேதானிருக்கும்
தாகம் மாறி ஏக்கமாகி
ஏமாற்றமோவென எண்ணினால்
ஆனந்தபைரவர் நினைவது
ஆதாயமாய்த்தான் வந்தது
அவ்வப்பனை நினைத்தங்கலாய்க்க
ஆசுதோஷியவரிரக்கம் கொண்டார்
ஆனால் போ இவர்கள் கூடவெனத்
தன் கணங்களைத் துணையாய்த் தந்தார்
மட்டுமல்ல மனமுவந்து
மாண்புகள் பல கூட்டிவைத்தார்
மறுகணம் ஜகன்மாதா முன்னே
மழலை நான் வந்து சேர்ந்தேன்
என்ன ஒளி என்ன ஒளி எங்கணுமே ஒளிமயமே
என்னைச் சுற்றி தேவதைகள்
எள்புகவும் இடமில்லை
என்னுளம் இலேசாகி என்னுடல் பாகாகி

Koviloor Digital Library
இன்பம் இனியும் தாளேன்
எனுமோர் உச்சக்கட்டம்
என்னயிது எங்குற்றோம்
ஏன் நிற்கிறோமென்று தோன்ற
எதிரே ஊடுருவிய பார்வை
தாய் திருமுன்னைத் தான் கண்டது
தண்டனிட்டு வீழ்ந்தேன் நான்
தளர்ந்துடல் மெழுகாச்சு
எனை மறந்தேன் வினை மறந்தேன்
வினாடிகளும் பறந்தோடின
இனியும் வாளாவிருந்தால்
எப்போ காண்பதென் தாயை
எனுமெண்ணம் எழுந்திடவே
கண் திறந்தேன் தலை நிமிர்ந்தேன்
ஆஹா என்ன இது ஆனந்தச் சிவப்பு நிறம்
இனிய இரத்தினக்கம்பளம்
அதனடுவே யோரொளிவட்டம்
ஈதென்ன மின்னும் துகள்கள்
அம்பிகையின் பாத தூளிகள்
ஆழ்ந்து நோக்கப் பாதுகையது
ஆதாரமாயவள் பாதத்திலே
அதன் மீதழகிய கால் விரல்
நகங்களில் மருதோன்றிப் பூச்சு
அதைத் தாண்டியடுக்கடுக்காய்
செவ்வொளி சிந்தும் வெள்ளி மெட்டி

Koviloor Digital Library
சிவப்பின் வகை சூழ்ந்ததாலே
சிவந்ததோ வெள்ளியும் நாணி
நிமிர்ந்த பார்வையது நிலைத்தது புறங்கால் மீது
ரோஜாமலரில் மாலை வெயிலா
இல்லையில்லை – மஞ்சள் பூச்சு
மூச்சையடக்கு அதுபட்டுக்
கன்றிவிடும் தளிர்ப்பாதம்
காப்புங்கொலுசு மெழிலைக்
கொள்ளையடித்ததெங்கே
கொள்ளைப் பேறல்லோ சேர்ந்தயிடம்
கொள்ளைக்கேதங்கேவேலை
ஜரிகைக் கரை சிவப்புப்பட்டு
அலையலையாயதன் மடிப்பு
ஆர்ப்பரித்தன்னை உடலை
ஆலிங்கனம் செய்யும் சேலை
நிமிர்ந்தாலிடது முழந்தாளை
வலது காலதனால் மோதி
மாண்புறச் சிங்காதனத்தேயன்னை
தனி வீராசனத் திருந்தாள்
வலக்கை ஐம் மலர்க்கணை தாங்க
இடக்கரம் கரும்பு விற்றாங்கிற்று
விரலெல்லாம் மோதிரங்கள்
அணிவளைகளோ விதவிதங்கள்
நிமிரும் பார்வை நடுவே நோக்க
நீள்மாலை நல்மணியணிகளும்

Koviloor Digital Library

நிறம்பலமின்னும் நறுமணப் பூமாலையும்
நலமாய்த் தாய்மை மேடுகள் மீதுற
நவிலவாயின்றி நாக்குழற நின்றேன் நான்
பக்தரைக் காக்கவென்று
பணிரெனக் கைக்கொன்றாய்
பாசமொருபுறமங்குச மறுபுறங்கண்டு!
இன்னும் நிமிர்ந்தால் ஈர்க்குது நம்மை
இன்பமாய்க் கழுத்தின் இரேகைகள் மூன்று
இது தானிலக்கியங்கள் முழங்கும்
இலக்கண சாமுத்திரிகையோ
இங்குமே அணிகளும் அளவில்லை ஈடில்லை
இட்டாச்சுக் காட்டுவதாய்
இமைத்தொளி கொட்டுதல்லோ
தூக்கிய பார்வை திக்கித் திகைக்குது
தனியெழிலாய் துடியழகாய்
தாடை முகவாய்க் கட்டு
தளிர்மை செழுமை சிந்த
தனி அந்தாதி பாடுது
மணமொன்று வீசி மனத்தையிழுத்தது
மெல்லும் வாயதிலே மாண்பு பலசேர்ந்த
மாயத்தாம்பூலரசம் மதிமயக்க கண்டவுடன்
மன்னன் காளமேகம் பெற்ற
மாண்பை நினைத்தேங்கினேன் நான்
வாளிப்பாய் வாயது மெல்ல
மாட்டலுந் தாடங்கமும்

Koviloor Digital Library

நத்தும் முத்தும் நல் பேசரி புல்லாக்கும்
நளினமாயசைந்தசைந்தே நடம் பலபுரிந்திட
கொவ்வைப் பழ உதடு
கன்னங்கள் சுழியிடவே
குறுநகை யொன்றினைக்
கும்மாளமாயுதிர்த்திடவே
இடைவெளியது மலர இனிய பல் வரிசை
முத்தை இரத்தத்தில்
தோய்த்ததாய்த் தோற்றியதே
நாசி கண்டோம் செவிகள் கண்டோம்
நளினம் சேர் விதங்கள் கண்டோம்
நாவினிக்கப் பாடிவைக்க
நாடிமேலே பார்வை சென்றால்
நாவடைத்து நிற்கலானேன்
நிலைக்குத்துக் கருவிழிகள் கண்டு
என்னஇது எவரேனும்
மதுவை மிகப்படைத்தனரோ
மதுவுக்கேதத் தகுதி
மாதாவையே மயங்கச்செய்ய
இல்லையில்லை இதுவேறு
இச்சமயமன்னையுள்ளம்
இனிதாய் சாக்ஷாத்காரமதில்
இரண்டறவே கலந்துளதாம்
இப்போதிமை மூடித்திறக்க
அங்கோரசைவுஅவ்விழிகளிலே

Koviloor Digital Library

அப்பா புருவம் என்ன நேர்த்தி
இரப்பையும் இளப்பமாமோ
அசைவிழி ஸாக்ஷி நிலைசுட்ட
அசைந்ததுவே சிரப்ரதேசம்
அசைவால் மகுட மணிகளொலிக்க
அதனடுவே இளமதியுமின்ன
அலையலையாய்க் கூந்தல் சுருள்
அந்தமிகு நெற்றியை வருட
அன்னை முகத்திலோராழ்ப்ரகாசம்
அரவணைக்கும் நல்மந்தஹாஸம்
ஏனவ்வாறென்றெண்ணினால்
ஒஹோ ஒருவன் சாக்ஷாத்கார
வாயில்தனைக் கடந்து விட்டான்
அன்னையும் ஸாக்ஷி ஆகி நின்றாள்
பின்னும் அப்பார்வை மாறி
பிரேரணையாய் தோன்றுவதேன்
அதுதான் மஹாமாயாவிலாஸம்
அவள் நடத்தும் லீலாவினோதம்
என் பின்னேயோர் சலசலப்பு
புகவழியும் விரிந்தகல
புதுக் கூட்ட வரிசையொன்று
பணிவாய் முன்னே படர்ந்தது
நவரத்தினங்கள் வந்தன
அன்னை மேனியொளி பெற்றன

Koviloor Digital Library

வண்டு வரிசை வந்தது
விழியொளியை வாரிச் சென்றது
எட்பூக்கள் வந்தன
நாசி நளினத்தைப் பெற்றன
குவளை மலர் வந்தது
செவியழகையேந்திச் சென்றது
கமுல் கூட்டம் வந்தது
கன்னக் கழிக் கவர்ச்சி யேற்றது
மல்லிமொக்கு வந்தது
பல்எழில் பாங்கை யேற்றது
இப்படியே என்னென்னவோ
வந்து கொண்டேயிருந்தன
ஏற்றமிகு எழிற்சிறப்பை
ஏந்தியேந்திச் சென்றன
வரிசையின்னும் ஓயவில்லை
வளர்ந்துவரும் படைப்பினிலே
தினந்தினமும் புதுப்புது
படைப்புக்கள் புலர்வதால்
அன்னையவள் நினைத்துவிட்டாள்
அவைகளும் வந்துபோக வென்று
ஆனபடியினாலே நயமாய்
அழகெல்லாம் இங்கே சேர
அவை அவை அங்கே போய்
ஆனமட்டும் அள்ளி வந்து

Koviloor Digital Library

யாவர்க்கும் பயன்படவே
ஊக்கமுடன் உழல்வதாலே
பார்க்குமிடமெல்லாம்
பராசக்தி அம்சமதாய்
பார்க்கத் தெளிந்திடுவோம்
பாரில் புகழ் எய்திடுவோம்
பாடிடுவோம் ஆடிடுவோம்
பண்புள்ள பங்காளிகளாய்
புதைத்திடுவோம் பகையதனை
புகுத்திடுவோம் ஏற்றம் தனை
என்றும் சிந்தை அவளுக்காக
எஞ்சுமெண்ணம் பிறருக்காக
என்றெல்லாமாகி விட்டால்
நன்றெல்லாம் நாமாவோம்

அனுபந்தம்

என்னதான் அன்னை
உரு ஆயிரங்கள் கண்டாலும்
அதிலேயோர் நிறைவில்லை
அமைதி மனம் பெறவில்லை
மித்தையிலே மனங்குலவி
சத்தியத்தை மறந்ததன்றே
மாயையின் லீலையென்றால்
தோற்றமெலாம் மாயைதானே

Koviloor Digital Library

கண்ணில் தட்டும் கனமெலாம்
கற்பனையதைத் துண்டிவிட
ஒட்டுமொத்த எழிலுருவாய்
அதை ஆக்கியதும் கற்பனையே
ஆகவே காலந்தோறும்
கணக்கிலா மாற்றமெய்தி
மனோவியாபாரம் தந்த
மட்டிலா மயக்கந்தானே
தெய்வத்திற்குச் செயலேது
குணமேது உருவுமேது
என்றெல்லாம் சிந்தித்து
இன்னும் உள்ளே போகப்போக
கண்டதெலாம் மறக்கலாச்சு
காணாத அது உணர்வாச்சு
அவ்வுணர்விலும் நானுண்டே
அதுவுமழிய வேண்டாமோ
எனுமெண்ணம் எழுந்தபின்னே
அது இது நானெல்லாம் போச்சு
ஆழங்காண ஆழியுட்சென்ற
உப்புச்சிலை கதியாச்சு!

ஓம் சிவம்!
சுபமஸ்து!!

Koviloor Digital Library

முடிவுரை

தற்காலத்தில் நடைமுறையிலிருக்கும் எல்லா ஸித்தாந்தங்களையும் பாரபட்சமின்றி ஏற்றுக் கொண்டு அதன்கண் ஒரு சமரச நோக்கைப் பொருத்தி விடைகாண முயற்ச்சித்தால் – ஓயாத ஆராய்ச்சிக்கும், சர்ச்சைக்கும், மறுப்புக்கும் காலங்காலமாக, இடமளித்துக் கொண்டே போகும் – "இறைவனைப் பற்றி அறுதியிடல் கருத்தை" – இங்கே எடுத்துக்கொள்ள வேண்டிய ஒரு கட்டாயம் – இந்நூலில் பரவலாகச் சுட்டிக் காட்டப்படும் ஏனைய கருத்துக்கள் மூலம்– ஏற்பட்டுள்ளதை சிந்தனாவாதிகள் ஏற்றுக் கொள்வர் எனும் நம்பிக்கையுடன், இங்கு சில வரிகளை இணைக்க விழைகிறேன்.

இதனை 'தான் தோன்றித்தனம்' என்றோ 'அதிகப்பிரசங்கித்தனம்' என்றோ கருதித் தள்ளிவிடாமல் அறிஞர் பெருமக்கள் தயை கூர்ந்து இன்னும் மேலும் மேலும் என்ன சிந்தனைகள் கிடைக்கும் என ஆழ்ந்து முனைந்தால் அதிசயமான முன்னேற்றம் ஏதேனும் உருவாகலாமோ எனும் பேராசைதான் இதனை நான் இணைப்பதன் நோக்கம்.

Koviloor Digital Library

இன்றுவரை நமக்குக் கிடைத்துள்ள ஏனைய வேத, இதிஹாஸ, வரலாற்றுப் பொக்கிஷங் களிலிருந்து – அறுதியிட்டுச் சுட்டிக் காட்டும் வகையில் – இறைவனுக்கு எந்த ஒரு உருவமும், செயல்பாடும், பெயரும், காணக்கிடைக்கவில்லை என்பதுதான் கலப்படமில்லாத, அப்பட்டமான உண்மை என நம்பியாக வேண்டியிருக்கிறது.

இறைவனுக்கு – உருவமில்லை, குணமில்லை, செயலில்லை – எந்தவிதத் திட்டமுமில்லை, மனம் என்ற ஒன்று இல்லை – எண்ணம் (நினைத்தல்) என்ற ஒரு போக்கு இல்லை – நினைவு (ஞாபகம்) என்ற திறனில்லை – என்றெல்லாம் அறுதியிட்டுவிட்டு –

இறைவனை – அன்புமயமானவன் – அறிவுமயமானவன் – எங்கும் நிறைந்தவன் – எனினும் எதிலும் ஒன்றாதவன் – என்றெல்லாம் இறைவனுக்கு இலக்கணங்களை வகுத்துள்ளதை ஏற்றுக் கொள்வோமானால் – இறை என்பது தானன்றி வேறொன்றில்லாத ஒரே மாபெரும் சக்தி என்றும் – தோன்றிய, தோன்றும், தோன்றப்போகும் யாவும் அதனில் முன்னம் லீனப்பட்டிருந்தவை (ஐக்கியமாக, இரண்டற, பிரித்து அடையாளம் காண முடியாத நிலையில் இருந்தவை) என்றும் –

Koviloor Digital Library

பின்னர், எவ்வாறு அவை தோன்ற நேர்ந்தன எனும் கேள்விக்கு விடைதேடித்தான் எல்லா சித்தாந்தங்களும் அலைந்து விட்டு, மேலெழுந்த வாரியாகக் "கடவுளை, கண்டவரில்லை, – கண்டவர் விண்டதில்லை" என முடித்துக் கொண்டு நின்று விட்டன.

இதுவரை ஒப்பற்ற சான்றோன் எனத்தகும் எத்தனையோ சிந்தனைச் செல்வர்கள் விடை தேடித்தேடி இளைத்து முடிவாய்க் குறையாக விட்டுச் சென்றுள்ளதாகத்தான் அறியக் கிடைக்கிறது.

பின் என்னதான் முடிவு என்றால், விடையில்லாத கேள்வியை 'கானல் நீரை' நோக்கி நாம் செல்லச்செல்ல அதுவும் நம்மை விட்டு முன் இருந்த அதே இடைவெளியோடு நகர்வதை ஒப்பிட்டுக் கொண்டு, நிரந்தரமாகத் தேடிக் கொண்டே இருக்க வேண்டியதுதான், இயற்கை வகுத்துள்ள 'அறுதி' எனக் கொள்ள வேண்டியுள்ளது.

எதுவும் எதனுடனும் இணையாமல் அது அதுவாக இருக்கையில் சலனமே இருப்பதில்லை. அமைதிதான்.

Koviloor Digital Library

ஒன்றோடொன்று உரசினால், இணைந்தால் – செயல்பாடு நேர்கிறது – பரிணாமம் எனும் பின் விளைவு தோன்றுகிறது – பின்னர் அதுவே அடுத்த விளைவுக்குக் (பரிணாம நிலைக்கு) காரணமாகி அடுத்த காரியத்தைத் (செயல்பாட்டினை) தூண்டியவாறு எந்தக் காரியமும் (செயல்பாடும்) அடுத்த செயல்பாட்டினுக்கு காரணமாக அமைந்து – காரியம் – காரணம் – பின்னர் காரியம் – என இடைவிடாத் தொடர் நிகழ்ச்சிகளாக நிகழ்வதுதான் உலகியல்வாழ்க்கை என்றாகிறது!

பின் ஏன் வாழ்க்கை – முரண்பாடுகள் நிறைந்ததாக – துன்பங்களும், துயரங்களும், வேதனைகளும் இணைந்ததாக நடைபெறுகிறது, எனும் கேள்விக்கு –

எதனை விதைக்கிறோமோ அதனைத்தானே அறுவடை செய்ய முடியும் – விதைப்பதில் தவறு நேராமல், சுயநலம் கலவாத பொது நலம் இழையோடும் பொறுப்போடு, இயற்கையின் இயல்பினுக்கு நன்கு இசைந்து, எண்ணம், செயல், இணைந்ததாக அமைந்தும் விட்டால் – முரண்பாடுகள் எந்த இடத்திலும் இடம்பெறமுடியாது – துன்பங்கள் எதனிலும்

Koviloor Digital Library

ஊடுருவ முடியாது, எனத் தற்போதைக்கு விடையாக ஏற்றுக்கொள்வோமேயானால் –

ஆணவத்தோடு அலையும் இன்றைய மனிதனால் மேற்சொன்ன வகை செயல்பாடு நடவாதாகையால் அவன் திருந்தினாலொழிய விமோசனமே கிடையது என்றுதான் அறுதியிட வேண்டியுள்ளது.

நிறைவான இறைவனைப் பற்றி ஆராயப் புகுந்துவிட்டு குறைவான மனிதனைப் பற்றிப் பேசுமிடத்திற்கு தடம் மாறிவந்து விட்டோம். விட்ட இடத்திற்கே திரும்பச் செல்வோம்.

இறை – அன்புமயமானது! (இது மனிதனின் கலப்பட அன்பு அல்ல)

இறை – அறிவுமயமானது! (இது மனிதனில் இணைக்கப்பட்ட ஆறாவது அறிவல்ல)

இறை – ஆற்றல் மயமானது! (இது மனிதனின் கட்டுக்குள் அடங்கிய ஆற்றலல்ல)

அன்பு என்பது எதுவுமே கலவாத முழுமையான மகிழ்ச்சி வெள்ளமாகும். இந்த அன்பு நான், எனது என்னும் எண்ண மாயையிலே நாம் எதனிடமோ எதிர்பார்ப்புடன் செலுத்தும் செயல், எதிர்ச்செயல் எனும் கலப்படங்களுக்கு இலக்காகிவிட்ட

Koviloor Digital Library
உணர்ச்சி அல்ல. மேற்சொன்ன (இறை) ஆனந்த (மகிழ்ச்சி) வெள்ளத்திலிருந்து கொஞ்சம் எடுத்து அதில் மேலே சொன்ன கலவைகளைக் குழைத்து மனிதன் செயல்படுவதுதான் காரியமாக, பின்னர் காரணமாக, அதன் பின்னர் அதுவே காரியமாக எனச் சங்கிலித் தொடராய் விளைகிறது.

இதே நிலைதான் அறிவு விஷயத்திலும். அதே (இறை) அறிவு வெள்ளத்திலிருந்து கொஞ்சம் எடுத்து முன்னம் கூறியது போல் கலப்படம் செய்து இயங்குதல். இதுவும் காரிய காரணத் தொடரை விரிவுபடுத்தும்.

இறையின் ஆற்றல் மயமான அம்சத்திலும் மனிதனின் இதே நடப்புத்தான் காரிய, காரணத் தொடரை விரிவாக்கிப் பரவலாக்கும். இந்தக் காரண காரியத்தொடர், இறைவனின் எந்த விதப் பங்கேற்புக்கும் இடமின்றி, மனிதனின் ஆணவம், சுயநலம் இவற்றின் கலப்படச் செயல்பாடுகாளல் – விரிவடைந்து கொண்டே போய் –

மனிதனின் தரவீழ்ச்சியால், இனியும் இத்தொடர் நீடிக்கக் கூடாதென்ற கட்டத்தை எட்டும்போது – காரிய காரணத்தொடர் – முரண்பாடு, ஆபத்து, தாளாமை, நிலைகளை அடைந்து – வாழ்க்கைச் சக்கரம் அறுதியான முடிவெய்தி –

Kovilpor Digital Library

யாவும் முன்னமே வினைப்பட்ட நிலையிலே இருந்த "இருப்பான" நிலைக்கேகி, செயலற்ற, சலனமற்ற, ஓசையற்ற அப்பட்டமான அமைதியில் இறை தன்னில் தானே "இருப்பாகி" குறிப்பிட்டகாலம் கழிந்த பின் –

இறையில் வினைப்பட்டுள்ள காரிய காரணத் தொடர் முதிர்ச்சி நிலைஅடைந்து (விதை முதிர்ந்தால் முளை விடும்தானே ?) – திரும்பவும் இன்மையிலிருந்து – ச்ருஷ்டி இடம்பெறுகிறது எனும் ஒரு கணிப்புத்தான் அதிகபட்சம் இதுவரை மலர்ந்துள்ள, ஸித்தாந்தங்களின் வாயிலாகக் கிடைக்கும்.

எனவே இறைத் தன்மை என்பது கலப்படமற்றது. இன்பமயமானது. தான் எதிலும் கலந்து கொள்ளாமலே எதற்கும் இடம் தந்து எதுவும் நடபெற இடமளிப்பது என்றாகலாம்.

ஆக, மனிதன் தன்னைச் செம்மையான ஒழுக்கக்கட்டுப்பாட்டில் பிணைத்துக் கொண்டு தன் சூழலிடம் சுயநலம் பேணாமல் பொது நலத்தை முன்வைத்து மகிழ்ச்சி பொங்க அன்பு ததும்பச் செயல்பாடுவானேயானால் –

Koviloor Digital Library

இந்தக்காரிய காரணத்தொடர், இடர்பாடற்ற, இன்பமே ததும்பும் வாழ்க்கையை மனிதனுக்கு அமைத்துக் கொடுத்துக் கொண்டே போகும் என்பது தெளிவாகிறது.

ஆனால் முன்னம் நடத்தி முடித்த வினைகளின் தாக்கம் கணக்குத் தீர்ந்தாக வேண்டும்.

அந்தக் கணக்கு தீரும் வழி – மனிதன் தன் தவறையுணர்ந்து, ஆர்வத்துடன் களையெடுத்து, மனந்திருந்தி அன்பிலே மட்டும் திளைப்பவனாக மாறி, பூர்வ வினைகளின் தாக்கம் தீரும் வரை சகிப்புத் தன்மையுடன் உரமானவனாக வாழ ஆரம்பித்தால் – இவ்வாறான இணையற்ற வேள்வியின் பரிணாமமாக அன்பு, அறம் மலிந்த இன்பமயமான அமைதி தவழும் வாழ்க்கை விளையும் என்பதுதான் ஏற்கக் கூடிய சித்தாந்தம் ஆகலாம் என எண்ணுகிறேன்.

இப்படியாக நன்மையே விளையும் செயல்பாடு, எங்கும் எவ்வாறேனும் நடந்தேறவேண்டும் என ஆழ்ந்து யாவரும் ஒன்று கூடிப் பிரார்த்தித்தால் அதுவே ஒரு புனரமைப்பினுக்குத் தொடக்கமாக அமையும் என்பதே என் நெஞ்சார்ந்த விழைவு!

நூலகம், கோவிலூ
R65

Koviloor Digital Library

என்னவோ சொல்லவந்து, எதையோ சொல்லி முடித்திருந்த போதிலும், நல்லவை தான் வெளிவந்துள்ளன எனும் மன நிறைவை இப்போதைக்கு ஏற்றுக்கொள்வோம்! ஆனால் தேடல் தொடரட்டும்.

"எளியேன்"
T.V. கல்யாண்

"பிரார்த்தனை"

இறைவா! உன்னுடைய பிரதிநிதியாய் அறங்காவலனாக உலகை நடத்திச் செல்ல வேண்டிய மனிதன் சாத்தானின் கூலிப்படையாய் அரக்கத்தனமாக அழிவைநோக்கி உலகை இழுத்துச் செல்கிறானே – இவனை நல்வழிப்படுத்த உடனே ஒரு அவதாரத்தை அனுப்பி வைத்துக் காத்தருள்வாயாக! இதுவே எம் இப்போதைய வேண்டுகோள்!

(நான்காம் பாகம் முற்றும்)

ஓம் சிவம்!
சுபமஸ்து!!

கோவிலூர்
A.N